## சாண்டில்யன்




# ராஜ்யஸ்ரீ

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : டிசம்பர், | 1984 |
| இரண்டாம் பதிப்பு | : பிப்ரவரி, | 1986 |
| மூன்றாம் பதிப்பு | : பிப்ரவரி, | 1988 |
| நான்காம் பதிப்பு | : ஜூன், | 1990 |
| ஐந்தாம் பதிப்பு | : ஜூன், | 1993 |
| ஆறாம் பதிப்பு | : ஜூன், | 1997 |
| ஏழாம் பதிப்பு | : ஏப்ரல், | 2000 |
| எட்டாம் பதிப்பு | : ஜூன், | 2004 |


**Copyrights with the Author**


**திருநாவுக்கரசு தயாரிப்பு**

**விலை : ரூ.60.00**

| | |
|---|---|
| Title | : **RAJYASHREE** |
| Subject | : Historical Novel |
| Language | : Tamil |
| Author | : **SANDILYAN** |
| Edition | : Eighth Edition, June, 2004 |
| Pages | : 312 + 4 = 316 |
| Price | : **Rs.60.00** |
| Published by | : **VANATHI PATHIPPAKAM**<br>13, Deenadayalu Street,<br>Thiyagaraya Nagar, Chennai - 600 017. |

Typeset at : Saguram Graphics Chennai - 24

Printed at : Novena Offset Printing Co., Chennai-5. ☎ 28446891, 28446166


# முன்னுரை

முன்னுரை என்பது ஆசிரியரின் இதயத்தைத் திறந்து காட்டும் கருத்துரை; வாசகரை நூலுக்குள் அழைத்துச் செல்லும் ஆரம்பக் கட்டுரை; குறிப்பிட்ட கதைக்குக் கொடுக்கப்படும் விளக்க உரை என்றும் சொல்லலாம். சாதாரண கதைகளுக்கு இவை பொருந்தும். சரித்திரக் கதையாயிருந்தால் இவற்றுடன் சரித்திர அஸ்திவாரமும் சேரும். சரித்திரக் கதை என்பது சரித்திரம், கதை இரண்டு அம்சங் களைக் கொண்டதாகையால், கதையில் சரித்திரம் எது, கதை எது. இரண்டும் எப்படி இணைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் விவரிக்க வேண்டியிருக்கும். ஓர் ஆசிரியன் எழுதும் சரித்திரக் கதை சரித்திரத்தின் முழு ஆதரவைப் பெறாவிட்டாலும் சரித்திரத்தால் புறக்கணிக்கப்படாதிருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

கால் பங்கு சரித்திரத்தை வைத்தும் சரித்திரக் கதை எழுதலாம். முக்கால் பங்கு சரித்திரத்தை வைத்தும் கதை எழுதலாம். சரித்திரத் தோடு கதை இழைந்து ஓடுகிறதா என்பதுதான் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம். இந்தக் காரணங்களால் சாதாரண கதையைவிடச் சரித்திரக் கதையை எழுதுவது மிகக் கடினமான பணியாகிறது.

'ராஜ்யஸ்ரீ' கதை சம்பந்தப்பட்ட வரையில் அத்தகைய கடினமான பணி எதுவும் கிடையாது. சரித்திர ஆதாரங்களைத் தேட வேண்டிய அவசியமில்லை. 'ராஜ்யஸ்ரீ'யின் வாழ்க்கையே ஒரு சரித்திரக் கதை. நூற்றுக்குத் தொண்ணூற்று எட்டு சதவிகிதம் இதில் சரித்திரந்தான், அந்தச் சரித்திரத்தைச் சுவைபடக் கூறவே சில நிகழ்ச்சிகளையும் இரண்டு மூன்று பாத்திரங்களையும் சிருஷ்டித்திருக்கிறேன்.

வடபுலச் சக்கரவர்த்தி ஹர்ஷனுடைய அவையிலிருந்த வனான பாணபட்டன், அவன் இயற்றிய 'ஹர்ஷன் சரித்திர'த்தில்

ராஜ்யஸ்ரீயின் இன்பமும் துன்பமும் கலந்த சரித்திரத்தை விரிவாக எழுதியிருக்கிறான். தவிர இக்கதைக்கான சரித்திர அமைப்புகள் ஆசிரியர் வின்சென்ட் ஸ்மித் எழுதிய இந்தியாவின் புராதன வரலாற்றிலும் விரிவாகக் காணப்படுகின்றன.

இந்தக் கதையில் பிரபாகரவர்த்தனன், மகாராணி யசோவதி, ராஜ்யவர்த்தனன், சசாங்கன், தூதனான ஸம்வாதகன், உபாத்தியாயர் கம்பீரன் ஆசார்ய பண்டி எல்லோருமே சரித்திரத்தில் வாழ்ந்தவர்கள். சோதிடர்கள், ராஜ்யஸ்ரீயின் பணிப்பெண்கள் முதலானோர் கற்பனைப் பாத்திரங்கள்.

“ராஜ்யஸ்ரீ”யின் கதை முழுமையாக சரித்திரத்தின் அஸ்தி வாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. காதலுக்கும் ஏனைய சிந்தனை களுக்கும் உரிய பல நிகழ்ச்சிகளை இணைத்து சரித்திரமென்னும் எலும்புக்கூட்டுக்குக் கதையெனும் சதையும் உணர்ச்சியாகிற ரத்தமும் சேர்த்து உயிர் கொடுக்க முயன்றிருக்கின்றேன்.

இது ‘சாவி’யில் தொடர்கதையாக வந்தபோது வரவேற்ற தமிழர்கள் இதைப் புத்தக வடிவத்திலும் வரவேற்பார்களென்பதில் ஐயமில்லை. இதைத் தொடர்கதையாக வெளியிட்ட ‘சாவி’ ஆசிரியருக்கும், புதக வடிவில் கொண்டுவரும் வானதி அதிபர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

சாண்டில்யன்


BIBLIOGRAPHY

The Early History of India - *by Vincent A. Smith*

Harsha Charitra - *by Bana.*

Harsha - A Political study - *by D. Devahuthi*

Travels and Life of Hiuen Tsang - *by Beal*

Records of the western words - *by Hiuen Tsang*

Deeds of harsha - *by Professor Vasudev S. Agarwala*


# ராஜ்யஸ்ரீ

## 1

## சூரிய நமஸ்காரம்

புஷ்பபூதியின் குலத்தோன்றலும், சிவபக்தனென்று பாண மகாகவியால் பாராட்டப்பட்டவனும், ‘ஹூணர் களாகிய மான்களுக்கு சிங்கம்’ என்று பிரசித்தி பெற்றவனு மாகிய பிரபாகரவர்த்தனன் ஸ்தானேசுவரத்தின் தனது பெரிய மாளிகையின் உப்பரிகையிலிருந்து அருகாமையில் ஓடிக் கொண்டிருந்த யமுனா நதியையும், உப்பரிகைக்கு மேலே பறந்துகொண்டிருந்த சூரியன் கொடியையும் பார்த்துப் பெருமை முகத்தில் விரிய, அது உதடுகளையும் ஆக்ரமிக்க, வீரப் புன்முறுவலொன்றைத் தனது இதழ்களில் தவழவிட்டுக் கொண்டான். சூரியன் உதயமாகும் சமயமாகி விட்டாலும் தேகநிலை காரணமாக வழக்கமாகச் செய்யும் சூரிய நமஸ்காரத்தைச் செய்ய இயலாத காரணத்தால் முதலில் இதழ்களில் அரும்பவிட்ட புன்னகையில் சிறிது துயரத்தையும் கலந்துகொண்டான். ஆனால் அந்தத் துன்பம் விநாடியில் மறைந்து மீண்டும் மகிழ்ச்சி ரேகை படர்ந்தது ஸ்தானேசுவர மன்னன் வதனத்தில். அவன் சூரிய நமஸ்

காரத்துக்காகவே, சிருஷ்டித்திருந்த அற்புதமான நந்த வனத்தையும் அதன் ஒரு புறத்திலிருந்த நாலைந்து பட்டுக் கூடாரங்களையும் நோக்கி அவற்றை விட்டுச் சற்றுத் தள்ளி யிருந்த பங்கஜ வாவியையும் அதன் நடுவிலும் பக்கங்களிலும் இருந்த இமாலயப் பாறைகளையும் நோக்கினான்.

அந்தச் சமயத்தில்தான் ஒரு பட்டுக் கூடாரத்திலிருந்து அவனது இளைய மகன் ஹர்ஷவர்த்தனன் வெளியே வந்து சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் கீழ்த்திசையை நோக்கினான். அதுவரை சூரியோதயம் ஆகவில்லை என்பதால் சிறிது திருப்தியுடன் தலையை அசைத்துவிட்டுத் தூரத்தில் தாமரைகள் தலையசைத்துக் கொண்டிருந்த வாவியை நோக்கி நடந்தான். அதன் கரையை அடைந்ததும் சற்று உட்கார்ந்து அதன் நீரை மெல்லத் தொட்டுப் பார்த்தவன் லேசாகத் தனக்குள் நகைத்துக் கொண்டான். இமயமலைப் பனிக்காற்றின் விளைவாக அவன் கையை அடியோடு மரக்கச் செய்துவிட்ட அந்த நீரில் மீண்டும் கையையும் காலையும் விட்டுப் பரீட்சை பார்த்த ஸ்தானேசுவர இளவரசன், "உடல் மரத்துப் போனாலும் நீராட வேண்டி யதுதான். சூரியன் உதிக்கும் வேளை நெருங்கிவிட்டது. சூரியனைக் காலையும் மாலையும் உபாசனை செய்துதானே என் அண்ணனைப் பெற்றார் என் தந்தை! அவர் இட்ட பணியை, கடமையை, நான் எப்படிப் புறக்கணிக்க முடியும்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்ட ஹர்ஷ வர்த்தனன் மெல்லத் தனது மேலாடையைக் களைந்து அருவி யின் கரையில் வைத்தான். இடையில் மட்டும் ஒரு சிறு துணியை உடுத்தி வாவிக்குள் மூழ்கத் திட்டம் செய்து கொண்டான்.

சூரியோதயம் சில நாழிகைகளே இருந்த அந்தச் சமயத்திலும் அந்தப் பகுதியில் உறையும் குளிர் எங்கும் பரவி நின்றது. மிகவும் வேகமாக அடித்த காற்றுக்கூட பனிகளின்



மீது தவழ்ந்து இறங்கியதால் சில்லென்று ஹர்ஷன் உடலைத் தொடர்ந்து தடவியது. பிரபாகரவர்த்தனின் இரண்டாவது மகனான ஹர்ஷவர்த்தனனுக்கு அப்பொழுது வயது பதினைந்தையே தாண்டியிருந்தாலும் சுமார் இருபது வயது மதிக்கக்கூடிய திடசரீரத்தை அவன் பெற்றிருந்தான். நல்ல திண்மை பொருந்திய முழவு தோள்களும், சதை கெட்டிப் பட்டு நீண்டு இருந்த உரம்மிக்க கைகளும், எலும்பு எங்கும் தெரியாத, ஆனால் சதைப்பிடிப்பு அதிகமில்லாமல் அளவுடன் சமமாகப் படர்ந்து கிடந்த விசால மார்பும், அதிகமாக சிறுக்காத இடையும், நீண்ட உரமுள்ள ஆடுசதை களுடன் கூடிய இரும்புக் கால்களும், சிங்கத்தின் தலையைப் போல் லேசாக அகன்றமிர்ந்த தலையும், திட்டமான வதனமும், மெல்ல முளைக்கத் துவங்கிய சிறு மீசையும், தலையில் அரண்மனைப் பணிமக்களால் வெட்டி விடப் பட்ட குழலும், அவனை அந்தச் சூழ்நிலையில் ஒரு தேவ புருஷனைப்போல் காட்சியளிக்கச் செய்தன. இடையில் சிறு துணியைத் தவிர வேறு எதுவும் இல்லாமல் எழுந்து நின்ற ஹர்ஷன் சற்று தூரத்திலிருந்த வீரன் ஒருவனைச் சைகை காட்டி அழைத்துத் தனக்குப் புத்தாடைகளைக் கொணருமாறு கட்டளையிட்டவன், திடீரென்று ஏதோ யோசித்து, "இரு நீ வேண்டாம், ராஜ்யஸ்ரீயையே கொண்டு வரச் சொல்" என்று கட்டளையைச் சிறிது மாற்றினான்.

பிறகு குளிரைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் வாவி நீரில் இறங்கி மூழ்கிவிட்டான். முதலில் அவனை உறைத்து விட இருந்த பனிநீரில் இருமுறை அவன் புரண்டதும் சற்று உடல் பதப்பட்டுவிட்டதால் தனது அழகிய உடலைத் தேய்த்துவிட்டுக் கொண்டான் நீண்ட இரு கைகளாலும். அதற்குள் அவன் உடை ஒன்றை வாளின் நுனியில் கொண்டு வந்த வீரன், "பிரபு! இதை இளவரசியார் உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள்" என்று வாளை நீட்டினான்.

அருவியில் எழுந்து நின்று உடலைத் துவட்டிக் கொண்ட ஹர்ஷன், "ஏன் அவளால் வரமுடியவில்லையா?" என்று கேட்டான்.

வீரன் தலையை ஒருமுறை தாழ்த்திப் பணிந்தான். "குளிர் அதிகமாகிறதாம்" என்று கூறினான்.

ஹர்ஷன் புன்முறுவல் கொண்டான். "இந்தக் குளிரைத் தாங்க முடியாதவள் வாழ்க்கையின் கஷ்டங்களை எப்படித் தாங்கப் போகிறாள்?" என்று தனக்குத்தானே பேசிக் கொண்டான் புன்முறுவலின் ஊடே.

பிறகு வாளின் நுனியில் வீரன் நீட்டிய உடையை இடையில் அணிந்துகொண்டு, ஈர உடையைப் பிழிந்து பக்கத்தில் வைத்து உட்கார்ந்த ஹர்ஷன் மெல்லச் சூரிய கிரணங்கள் தலை காட்டுவதையும் தாமரை மொட்டுக்கள் மலரத் தொடங்கி விட்டதையும் உணர்ந்ததால், உடையுடன் பலாச இலைகளில் தங்கை ராஜ்யஸ்ரீ அனுப்பியிருந்த விபூதியை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டு தனது கண்களைக் கதிரவன் உதய திசையை நோக்கி உயர்த்தி ஆதித்ய ஹ்ருதயத்தை முணுமுணுக்கத் துவங்கினான். ஒருமுறை மந்திரங்களை ஓதியபிறகு நெடுஞ்சாண் கிடையாக நந்தவனத் தரையில் விழுந்து நமஸ்காரம் செய்தான். இப்படிப் பதினொரு தடவை சூரிய நமஸ்காரம் செய்து எழுந்து சூரியரச்மிகளை நன்றாகப் பார்த்த ஹர்ஷவர்த்தனன் சிவபக்தனின் மகனாயிருந்தாலும் சூரியனின் மத்திய மண்டலத்தில் உறையும் மகாவிஷ்ணுவையும் துதித்தான். அடுத்து எதிரேயிருந்த செடிகளில் சிவந்தும் மஞ்சளுமாகக் காட்சியளித்த புஷ்பங்களை எடுத்துச் சூரிய பகவானை நோக்கித் தூவினான். அடுத்து பிரார்த்தித்தான், "பகவானே! சூரியனே! எங்கள் குலத்தைக் காப்பாற்று. நோய்வாய்ப் பட்டிருக்கும் என் தந்தையைக் காப்பாற்று. சதா போரில்



ஈடுபட்டிருக்கும் எனது அண்ணனுக்கு வெற்றியை வழங்கு. அவன் நலமாகத் திரும்பி வர அனுக்கிரகம் செய்" என்று.

இப்படித் துதி முடிந்ததும் தனது கூடாரத்திற்குச் செல்லத் திரும்பினான். திரும்பியதும் தனது தங்கை ராஜ்யஸ்ரீ சிரித்துக்கொண்டு எதிரே நிற்பதைக் கவனித்தான். அந்த விடியற்காலை நேரத்தில் அந்த நந்தவனச் சூழ்நிலையில் பருவம் முற்றாத நிலையிலும் முற்றியது போலவும் செழித்த புஷ்பம் போலவும் தெரிந்த ராஜ்யஸ்ரீ தேவலோகத்திலிருந்து இறங்கிவந்த அப்சரப் பெண்ணைத் தோற்கடிக்கும் எழிலுடன் விளங்கினாள். அவள் அழகிய சிவந்த வதனம் பனியின் வெளுப்புடன் மஞ்சள் மலர்களின் மஞ்சளையும் இணைத்துக்கொண்டு பத்தரை மாற்றுத் தங்கம் போல் ஜொலித்தது. பருவம் முற்றுப்பெறாத காரணத்தால் அவள் சிற்றிடையில் இறுகக் கட்டியிருந்த பாவாடை அவள் பாதங்களைத் தங்கள் சரிகைத் தலைப்பால் தொட்டு மூடிவிட்டாலும், செஞ்சாந்து பூசிய விரல்கள் தாமரை தளங்கள் போல அழகுடனும் மென்மையுடனும் விரிந்து நின்றன. அவள் சற்று அசைந்தபோது அவள் மார்பைத் தழுவி நின்ற மேலாடையும் அசைந்து, பருவத்தை எட்டிப் பார்த்த மொட்டுகளை அசைக்க முடியாததால் சில இடங்களில் ஏறி நிற்கவும் சில இடங்களில் சரியவும் முற்பட்டு, சரிந்ததாலேயே இணையற்ற லாவண்யப் பகுதி களை வெளிப்படுத்தவே செய்தன. அவள் சந்திரவதனமும் கன்னங்கரேலென்ற குழல்களும், தலையில் தூக்கத்தின் விளைவாக நகர்ந்து தொங்கிய சுட்டியும், கலைந்த நிலை யிலும் ஒரு கவர்ச்சியைக் காட்டின. அவள் பருவமடையா விட்டாலும் கன்னிப்பருவ முதிர்ச்சியிலேயே பருத்துவிட்ட பின்னெழில்களும் பார்க்கும் யாரையும் உன்மத்தம் கொள்ளும்படி அமைந்திருந்தன. அவள் தமையனை நோக்கிச் சிரித்துக்கொண்டு வந்தபோது சிரிப்பு, வாவி நீரின்

சலசலப்பாயிருந்தது - புஷ்டியான கன்னத்தில் குழிகள் விழுந்தன. கருவண்டுக் கண்கள் இரண்டு கருப்பு விற்களுக்குக் கிழே விஷமமாகப் பார்த்தன.

தங்கையின் இந்த அழகைக் கண்டு வியந்த ஹர்ஷன் 'ராஜ்யஸ்ரீ" என்று அழைத்தான்.

"என்ன அண்ணா?" அவள் மிக மதுரமாகப் பேசினாள்.

"இப்பொழுதுதான் உறக்கம் விழித்ததா?" என்று ஹர்ஷன் கேட்டான்.

"ஆம் அண்ணா" என்றாள் ராஜ்யஸ்ரீ மெல்ல நகைத்து.

"எப்பொழுது சூரிய நமஸ்காரம் செய்யப் போகிறாய்?" என்று வினவினான் ஹர்ஷன்.

"நீராடியதும்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதை அவள் தீர்மானிக்கு முன்பாக ஹர்ஷன் அவளை ஒரே தூக்காகத் தூக்கி வாவியின் உறைகுளிர் நீரில் அங்கிருந்த தாமரைகளுடன் இன்னொரு தாமரையாக அமிழ்த்திவிட்டு, "சீக்கிரம் நீராடு, உன் ஆடைகளைப் பணிப்பெண் கோண்டு வருவாள்' என்று கூறிவிட்டுக் கூடாரத்தை நோக்கி நடந்து விட்டான்.

ஒருமுறை குளிரால் நடுங்கினாள் ராஜ்யஸ்ரீ. பிறகு உடலைத் தேய்த்துச் சூடு செய்துகொண்டதாலும் கதிரவன் தனது கிரணங்களைத் தனது குலமகளுக்கு இதமாயிருக்கும் படி செய்ய நீரில் பாய்ச்சியதாலும், சிறிது சமாளித்துக் கொண்ட அரசகுமாரி மெள்ளத் தனது உடலைத் தேய்த்து நன்றாக நீராடினாள். சிறிது நேரத்துக்கெல்லாம் பணிப் பெண் கொணர்ந்த மஞ்சள் கலந்த வாசனைப் பொடியை உடலில் தேய்க்க மேலாடையைச் சிறிது நெகிழ்த்திக் கொண்டாள். உட்கார்ந்த நிலையில் காலையும்



எதிரேயிருந்த சிறு பாறையில் நீட்டி அழகிய தொடைகளை வாசனைப் பொடி கொண்டு தேய்த்தாள். உருண்டு வாழை மரத் தண்டைப் போலிருந்த அந்தப் பருவத் தொடைகளைக் காற்றில் அலைந்த வாவி நீர் ஆவலுடன் தழுவியதாலும், நன்றாக விழுந்த சூரிய கிரணங்களாலும் அவை உயிருள்ள தங்க வாரைகள் போல் பிரகாசித்தன. அந்த அழகை யமுனையிலிருந்து வாவியில் பாய்ந்த கால்வாய் கண்டது. கதிரவன் கண்டான். புஷ்பச் செடிகளும் கண்டன. கண்டது இவை மட்டுமல்ல. அங்கு நீர் குடிக்க வந்த இரண்டு மான்களும் காட்டுக்கிடாக்களும் கவனித்தன. ஒரு யானையும் இரண்டு புரவிகளும்கூட எங்கிருந்தோ கட்டுத்தறித்து வந்து அந்த அழகியை உற்று நோக்கின. நோக்கிய மற்ற விலங்குகள் எதுவும் செய்யவில்லை. யானை மட்டும் அவளிருந்த இடத்தை அணுகி வாவி நீரைத் துதிக்கையில் உறிஞ்சி அவள்மீது நீர்வீழ்ச்சிபோல் வார்க்கத் துவங்கியது. ஆனந்தமாக நீராடினாள் ராஜ்யஸ்ரீ. சற்று நேரத்துக்கெல்லாம் ஆடையுடன் வந்த பணிப்பெண், "அரசகுமாரி! சீக்கிரம் ஆடையணிந்து வாருங்கள், அரசர் கட்டளை" என்றாள்.

"என்ன விசேஷம்?" என்று கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

"தெரியவில்லை. யாரோ ஒரு தூதன் வந்திருக்கிறான்" என்றாள் பணிப்பெண்.

ராஜ்யஸ்ரீ அவசர அவசரமாக ஆடையணிந்து ஓடினாள் அண்ணன் கூடாரத்தை நோக்கி. அவளை அழைத்துக்கொண்டு ஹர்ஷன் விரைந்தான் அரண் மனைக்கு. அங்கு காத்திருந்தது சுபச் செய்தி. ஆனால் அது எத்தனை ஆபத்தான செய்தி!

2

# சந்திரனுக்கு ஒரு கேள்வி

**தூ**தன் யாரோ வந்திருப்பதாகவும் தந்தை அவசரமாக அழைப்பதாகவும் செய்தி வந்த மாத்திரத்தில் ஹர்ஷனும் ராஜ்யஸ்ரீயும் புத்துடையணிந்து அரண்மனையின் பிரதான கட்டிடத்தை நோக்கி ஓடிய அவசரத்தில், தான் சூரிய நமஸ்காரம் செய்யாததை நினைத்த அரசகுமாரி தமையனைப் பார்த்துச் சொன்னாள், "அண்ணா! பணிப் பெண் அழைத்த அவசரத்தில் நான் கதிரவனை வணங்கவுமில்லை, ஆதித்யஹ்ருதய துதியைச் சொல்லவும் இல்லையே? இது நமது குல வழக்கத்துக்கு மாறானது இல்லையா?" என்று.

வீரனான ஹர்ஷன் நகைத்தான். "ராஜ்யஸ்ரீ, உன் குலம் மாறக்கூடியது - திருமணம் ஆனதும் வேறு குலத்தவளாகி விடுவாய். ஆகையால் இந்தக் குலத்தின் பழக்கத்தை ஒருநாள் விடுவதால் நஷ்டம் ஏதுமில்லை" என்று சொல்லவும் செய்தான் நகைப்பின் ஊடே.

ராஜ்யஸ்ரீ அவன் சந்துஷ்டியில் கலந்துகொண்டாள் இல்லை. "அண்ணா! திடீரென நான் சூர்ய நமஸ்காரத்தைக் கத்தரித்துக்கொண்டு ஓடுவது அபசகுனமாகத் தெரிகிறது. கதிரவனுக்கு நான் செய்த அபசாரமாகவும் தெரிகிறது" என்றாள், கவலை பாய்ந்த குரலில்.



ஹர்ஷன் தனது நடையை தளர்த்தித் தங்கையின் அருகில் வந்து அவள் தோளை ஆறுதலாகப் பிடித்து "அடீ பைத்தியக் காரி! நீ கதிரவனை வணங்காததில் அபசாரமுமில்லை. ஆபத்துமில்லை. உண்மையாக நீ சூர்ய நமஸ்காரம் செய்வது தான் தவறு. பெண்கள் மந்திரங்களை உச்சரிப்பதை சாஸ்திரமோ, பழக்கமோ அனுமதிக்கவில்லை" என்று அவளுக்குத் தைரியம் சொன்னான்.

ஆனால் அண்ணாவின் ஆதரவுச் சொற்களை ராஜ்யஸ்ரீ ஏற்றாள் இல்லை. "அண்ணா! பெண்களுக்கு உதவாத மந்திரத்தைத் தந்தை சொல்லிக் கொடுப்பாரா?" என்று வினவினாள், அப்பொழுதும் கவலை பாய்ந்த குரலில்.

"நமது தந்தை புரட்சிக்காரர். அவர் சொல்வதையெல்லாம் வேதவாக்காக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒருவேளை இப்படி ஏன் இருக்கக்கூடாது? நீ இத்தனை நாள் சூரிய நமஸ்காரம் செய்ததற்குத் திருமணம் கிட்டி வருகிறதோ என்னவோ? தூதன் அதற்காகத்தான் வந்திருக்கிறானோ என்னமோ?" என்ற ஹர்ஷவர்த்தனன் "ராஜ்யஸ்ரீ வீணாகக் காலம் கடத்தாதே, பெண் கேட்க வந்திருப்பவன் ஓடிவிடப் போகிறான்" என்று வேடிக்கையாகப் பேசியதன்றி, தங்கையின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு அரண்மனைக்குள் பின்வழியாக நுழைந்தான்.

அன்று ஹர்ஷன் வேடிக்கையாகப் பேசிய பேச்சு எத்தனை உண்மையென்பதையும், அத்துடன் ராஜ்யஸ்ரீயின் கவலைக்கும் எத்தனை ஆதாரமிருந்தது என்பதையும் அண்ணன், தங்கை இருவருமே உணராவிட்டாலும், சரித்திரம் உணர்த்திவிட்டதைப் பிற்காலத்தில் இருவருமே உணர்ந்தார்கள். இருவரும் பலமுறை அந்த ஒருநாள் நிகழ்ச்சியைப் பற்றிச் சிந்திக்கவும், சிந்தித்து மன நெகிழ்ச்சியடையவும் செய்தார்களானாலும், அன்று அதைப்பற்றி அதிகமாகச் சிந்தித்தார்களில்லை. தங்கையின்

கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு, உப்பரிகைப் படிகளில் ஏறிச் சென்றான் ஹர்ஷன்.

அவர்களிருவரும் முதல் உப்பரிகைக்கு வந்ததும் அங்கு அவர்களை வரவேற்ற முதல் மந்திரி ஹர்ஷனை நோக்கி, "இளவரசரே! தாங்கள் மட்டும் தந்தையின் அறைக்கு வந்தால் போதும். இளவரசி அவர்கள் அறைக்கு செல்லட்டும்" என்றார்.

மந்திரியின் சொற்களைக் கேட்ட ராஜ்யஸ்ரீ வியப்பின் வசப்பட்டுச் சில விநாடிகள் ஸ்தம்பித்து நின்றாள். "என்னையும் வரச் சொன்னதாகத்தானே பணிப்பெண் சொன்னாள்?" என்று கேட்டாள் அவள்.

"அது முதல் கட்டளை" என்றார் மந்திரி.

"ஏன் கட்டளையை மாற்றிக்கொண்டார்?" என்று வினவினாள் ராஜ்யஸ்ரீ.

"உங்கள் நலனை முன்னிட்டுத்தான்" என்ற முதல் மந்திரி, "அரசகுமாரி! நீங்கள் அந்தப்புரம் செல்லுங்கள். இளவரசர் மட்டும் என்னுடன் வரட்டும்" என்று கூறிவிட்டு ஹர்ஷன் பின்தொடர இரண்டாவது உப்பரிகைக்கு செல்லும் படிகளில் ஏறிச் சென்றார்.

அவர்கள் செல்வதைப் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் நின்ற அரசகுமாரி அரண்மனையின் மேற்குப் புறத்திலிருந்த அந்தப்புரத்தை நோக்கி நடந்தாள். அந்தப்புரத்தில் தனது அறையை அடைந்ததும் பணிப்பெண் ஒருத்தியை அழைத்து, "நீ போய் அரசர் தனி அறையில் வந்திருப்பது யார் என்பதை அறிந்து வா" என்று அனுப்பிவிட்டு, சந்தேகங்கள் பல சிந்தனையைச் சிதைக்க தனது அறையிலிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தாள்.

தந்தை முதலில் ஏன் வரச் சொன்னார்? பிறகு ஏன் கருத்தை மாற்றிக்கொண்டார்?" என்று திரும்பத் திரும்ப



எண்ணிப் பார்த்தும் விடை கிடைக்கவில்லை அவளுக்கு. சிறிதுநேரம் கழித்து வந்த பணிப்பெண்ணும் அவள் மனத்துக்குச் சாந்தியளிக்கும் செய்தியை கொணர்ந் தாளில்லை. "அம்மணி! அரசர் அறைக்கதவுக்கு முன்னால் காவலிருக்கிறது. அறையின் அருகில் யாரும் அனுமதிக்கப் படவில்லை. என்னைக்கூடக் காவலன் திருப்பி அனுப்பி விட்டான்" என்று கூறிவிட்டாள்.

'அப்படி என்ன அத்தனை முக்கிய தூது? வந்திருப்பவன் யார்? என்ன காரியமாக வந்திருப்பான்?' என்று பல வினாக்களை எழுப்பிக் கொண்ட ராஜ்யஸ்ரீ கடைசியில் எப்படியும் வந்திருக்கும் தூதனைப் பார்த்துவிடுவதென்ற முடிவுக்கு வந்து பணிப் பெண்ணை அழைத்து 'வந்திருக்கும் தூதன் யாராயிருந்தாலும் அவ ன் திரும்பு முன்பு அவனை என்னிடம் அழைத்து வா" என்று உத்தரவிட்டாள். அது எத்தனை தவறான உத்தரவு என்பதை அன்று அவள் புரிந்து கொள்ளவில்லை. அரசர் அறையில் அன்று விவாதமே தன்னைப் பற்றியதுதான் என்பதையோ, வந்தவன் சாதாரண தூதன் அல்ல என்பதையோ, அவள் புரிந்து கொள்ள வில்லை. ஆகையால் தவித்தாள்; அரசர் அறையின் தூது மர்மத்தைப் புரிந்துகொள்ள.

அவள் இப்படி அந்தப்புரத்தின் தனி அறையில் தவித்துக் கொண்டிருந்த சமயத்தில், மிக உஷ்ணமான விவாதம் அரசர் அறையில் நடந்துகொண்டிருந்தது. தனது அரியாசனத்தில் அமர்ந்திருந்த பிரபாகரவர்த்தனர் எதிரே இன்னொரு ஆசனத்தில் அமர்ந்துகொண்டிருந்த வாலிபனை நோக்கி, "தேவகுப்தா! இந்தத் திருமணம் சாத்தியமல்ல. ஆகையால் மறந்துவிடு" என்று திட்டமாகச் சொன்னார்.

மகாவீரனான மஹாசேனகுப்தன் மகனும், குப்த ராஜ்யத்தின் அடுத்த வாரிசுமான தேவகுப்தன் கண்களில் ஒரு

விநாடி விபரீத ஒளியொன்று தோன்றி மறைந்தது. சுளித்த புருவங்கள் நிமிர்ந்தன. "தானேசுவர சக்கரவர்த்தி! ஏன் முடியாது? நமது இரு குடும்பங்களுக்குள் கொள்வதும் கொடுப்பதும் ஏற்கெனவே நடந்திருக்கிறது. தங்கள் மனைவியார் பெரிய ராணிகூட குப்த வம்சந்தானே?" என்று கேட்டான்.

தேவகுப்தன் பார்வையில் தோன்றி மறைந்த விபரீத ஒளியைத் தந்தையின் அரியாசனத்தின் பக்கத்தில் நின்றிருந்த ஹர்ஷன் கவனிக்கவே செய்தானாதலால் தேவகுப்தனை தீவிரமாக ஆராயவும் முற்பட்டான் தனது கண்களால். தேவகுப்தன் திடகாத்திரனாய் நல்ல உயரத்துடனிருந்தான். ஏற்பனவே பல போர்களைக் கண்ட அவன் கைகளில் கத்திக் காயங்களின் தழும்புகளும், வேல்களும் அம்புகளும் பாய்ந்த காயச் சின்னங்களும் இருந்ததால் அவன் மகாவீரனென்பதை யும் ஹர்ஷன் உணர்ந்துகொண்டான். அவன் முகம்கூடக் கவர்ச்சியாகத்தானிருந்தது. கண்களில் மட்டும் ஒரு கொடுமை இல்லாவிட்டால் அவன் எழில் யாரையும் மயக்கும் என்பதை ஹர்ஷன் உணர்ந்து கொண்டான்.

தேவகுப்தன் கண்களும் ஹர்ஷன்மீது பதிந்தன. ஹர்ஷனின் வாளிப்பான சரீரமும், எதற்கும் வளைந்து கொடுக்கும் இடையும், உறுதியான கால்களும், நீண்ட அழகான கைகளும் வாலிபத்தின் சிறப்பை அள்ளிக் கொட்டுவதை உணர்ந்தான் தேவகுப்தன். ஹர்ஷன் கண்கள் அழகாக இருந்தாலும் அதில் ஒரு கூர்மை சதா பளிச்சிட்டதால் தானேசுவர இளவரசனுடன் அதிகமாகப் பகை வைத்துக்கொள்வது சரியல்லவென்றும் தேவகுப்தன் முடிவு கட்டினான்.

இப்படி பரஸ்பரம் எடை போட்டுக்கொண்ட அந்த இரு இளவல்களையும் மன்னரின் திட்டமான முடிவு பூவுலகத்துக்கு இழுத்தது. "தேவகுப்தா! நீ சிறந்த வீரன்.



உனக்குப் பெண் கொடுக்கப் பல அரசர்கள் முன் வருவார்கள். தவிர ராஜ்யஸ்ரீயின் திருமணம் இப்பொழுது சாத்திய மில்லை" என்றார் மன்னர்.

"ஏன் சாத்தியமில்லை?" என்று தேவகுப்தன் கேட்டான்.

"அதற்கான வயது ஆகவில்லை; வாலிபனான உன்னிடம் இதற்குமேல் சொல்வதற்கில்லை" என்றார் பிரபாகரவர்த்தனர்.

"அது மட்டும் தடையானால் நான் காத்திருக்கிறேன்" என்றான் தேவகுப்தன்.

"எத்தனை ஆண்டு காத்திருப்பாய்?" என்று மன்னர் கேட்டார்.

"எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் காத்திருக்கிறேன்." தேவகுப்தன் திட்டமாகப் பதில் சொன்னான்.

பிரபாகரவர்த்தனர் சங்கடத்தில் ஆழ்ந்தார். "அடப் பைத்தியமே! ராஜ்யஸ்ரீ ஒன்றும் அத்தனை அழகியல்ல. நீ தவம் கிடப்பதற்கு" என்றார் சிந்தனையில் ஆழ்ந்து.

"உலகத்தின் கருத்து வேறு விதமாயிருக்கிறது" என்றான் தேவகுப்தன்.

"உலகம் பல சொல்லும். அத்தனையும் உண்மையல்ல." பிரபாகரவர்த்தனர் திட்டமாகத் தெரிவித்தார்.

"அத்தனையும் பொய்யுமல்ல" என்ற தேவகுப்தன், "எதற்கும் யோசித்துப் பதில் சொல்லுங்கள்" என்று வற்புறுத்தினான்.

ஏதோ அர்த்தமில்லாமல் தலையசைத்த பிரபாகர வர்த்தனர் ஹர்ஷனை நோக்கி, "ஹர்ஷா! மகத ராஜ்ய இளவல் தங்க ஏற்பாடுகளைச் செய். சகல மரியாதைகளை யும் பெறத் தகுந்தவர். உன்னைப்போலவே இவரை நடத்து"

என்ற மன்னர் அத்துடன் பேட்டி முடிந்துவிட்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்.

தேவகுப்தனுக்குத் தனி அறை ஒழித்துவிடப்பட்டது. அன்று பகல் பூராவும் அவன் சக்கரவர்த்தியைப் போல் நடத்தப்பட்டான். அவன் எங்கு சென்றாலும் யாராவது வீரர்களும் பணிமக்களும் தொடர்ந்தார்கள். இந்த மரியாதையின் காரணத்தை மகா சூட்சுமப் புத்தியுடைய தேவகுப்தன் சந்தேகமறப் புரிந்து கொண்டான். ஆகையால், உள்ளூர நகைத்தவண்ணம் ஒரு தீர்மானத்துக்கும் வந்து இரவில் சீக்கிரமாகவே படுத்துக் கொண்டான். தன்னை யாரும் எழுப்பக்கூடாதெனக் கண்டிப்பான உத்தரவும் இட்டான்.

ஆனால் அன்று இரண்டாம் ஜாமத்தில் எழுந்து சாளரத்தின் மூலம் வெளியே எட்டிப் பார்த்தான். சந்திர வெளிச்சம் அரண்மனைச் சூழ்நிலையை மனோகரமாக அடித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது காற்றில் மிதந்து வந்தது இனிமையான கீதம். அந்தத் திசையில் நந்தவனம் இருப்பதையும், அதன் நடுவே ஒரு பெண் மயிலைப்போல் நடந்து செல்வதையும் கண்டான். ஆகவே கதவைத் திறந்து கொண்டு வாயிலில் துயின்றுகொண்டிருந்த காவலன் எழுந்திராவண்ணம் மெல்ல நடந்து படிகளில் இறங்கிச் சென்றான்.

அவன் நந்தவனத்தை அடைந்தபோது வாவிக்கரையில் உட்கார்ந்திருந்த ராஜ்யஸ்ரீ தனது கீதத்தை நிறுத்தி, சந்திரனை நோக்கிக் கேட்டாள், "சந்திரா! அவர் எப்படி இருப்பார்?" என்று.

"திரும்பினால் தெரியும்" என்றான் தேவகுப்தன் மிக மிருதுவான குரலில்.

3

# துஷ்டப் பிரபு!

தனக்குப் பின்னால் நின்ற யாரோ ஒரு புருஷன் தன்னைத் திரும்பிப் பார்க்கும்படி சொன்னதும் பெரும் திகிலுக்கு உள்ளான ராஜ்யஸ்ரீ உடனே திரும்பிப் பார்த்தாளில்லை. தானேசுவர அரண்மனைப் பெரிய காவலர் அனுமதியின்றி யாரும் உட்புக முடியாத அந்த நந்தவனத்தில் இவன் எப்படி வந்தான் என்று சிறிது சிந்தித்த பின்னர், திகிலடைந்த தனது மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு மெதுவாக எழுந்து திரும்பிய ராஜ்யஸ்ரீ, தன்னெதிரே திடகாத்திரமும் அழகும் கொண்ட ஒரு வாலிபன் நிற்பதைக் கண்டு, "யார் நீங்கள்? இங்கு எப்படி வந்தீர்கள்?" என்று வினவினாள்.

தேவகுப்தன் கண்களிலிருந்த குரூரச்சாயை மறைந்து அது இருந்த இடத்தை இன்பச் சாயை ஒன்று ஆட்கொண்டது. அவன் சொற்களும் மிக மிருதுவாக உதிர்ந்தன. "தானேசுவரச் சக்கரவர்த்தியின் திருமகளே! நீ சந்திரனைப் பார்த்துக் கேள்வியொன்று கேட்டாயல்லவா? அதன் விடை நான். குப்த ராஜ்யம் சிதைந்த பிறகு இரண்டு பிரிவாகப் பிரிந்துவிட்ட கடைசி குப்தப் பிரிவு மாளவத்தை ஆள்கிறது. அதன் வாரிசு நான். மாளவ மன்னன் மகாசேன குப்தன் மகன்.

இப்போது அந்த நாட்டுத் தூதன். உன் அடிமை" என்று புன்முறுவல் இதழ்களில் தவழப் பேசி, தலையையும் வணங்கினான்.

பிரமை பிடித்த கண்களால் ராஜ்யஸ்ரீ தேவகுப்தனை நோக்கினாள். அவன் அழகும் உயர்ந்த வீர சரீரமும் அவளைக் கவர முற்பட்டாலும், அவன் கண்களில் மறைந்து மறைந்து தோன்றிய கபடமும் குரோதமும் அவள் மனத்தில் திகிலையே உண்டாக்கியதால், "மாளவ ராஜபுத்ரரே! பெரிய வம்சத்தில் பிறந்திருக்கிறீர்கள். ஆனால் ஒரு கன்னிகை தனித்திருக்கும் நந்தவனத்தில் அவளைச் சந்திக்க முயலுகிறீர்கள். இது அரச குலத்தாருக்குத் தகாத செய்கையல்லவா?" என்று வினவினாள்.

தேவகுப்தன் தலைநிமிர்ந்து தைரியத்துடன் தன்னை நோக்கிய ராஜ்யஸ்ரீயின் முகம் கோபத்திலும் அழகாயிருப்பதைக் கவனித்தான். பிறகு லேசாக நகைத்து, "என் மனம் அப்படிச் சொல்லவில்லை ராஜகுமாரி" என்றான்.

ராஜ்யஸ்ரீ கேட்டாள்: "உங்கள் மனந்தான் உங்களுக்கு அத்தாட்சியா?"

"எல்லோருக்கும் அப்படித்தான். மனத்தினால்தான் மனித சிந்தை இயக்கப்படுகிறது. இல்லாவிட்டால் சற்று முன்பு நீ என்னைப்பற்றி நினைத்திருக்கமாட்டாய்" என்றான் தேவகுப்தன்.

"உங்களைப்பற்றி நான் நினைத்ததாக யார் சொன்னது?" ராஜ்யஸ்ரீயின் குரலில் வெறுப்பு இருந்தது.

"உன் மனத்தைக்கேள் ராஜ்யஸ்ரீ. இல்லையேல் சற்று முன்பு கேட்ட சந்திரனையே மீண்டும் கேள்" என்ற தேவகுப்தன், "தானேசுவர மன்னன் மகளே! நானாக இங்கு வரவில்லை. நீ இழுத்து வந்தாய்" என்றும் சொன்னான்.



ராஜ்யஸ்ரீ அதிர்ச்சியடைந்தாள். "நானா!" என்று அதிர்ச்சியுடன் கேட்கவும் செய்தாள்.

"உன் இனிய கீதம், உன் குரல் அழைத்தது. ராஜ்யஸ்ரீ மிக அழகியென்று உலகம் சொல்கிறது. ஆனால் அவள் ஒரு குயில் என்று சொல்லவில்லை. மயிலென்றும் சொல்லவில்லை" என்றான் தேவகுப்தன்.

"என்ன உளறுகிறீர்கள்?" என்று கேட்டாள் தானேசுவர ராஜகுமாரி.

"நீ நிற்கும் நிலை நாட்டிய நிலையாயிருக்கிறது. மயிலின் சாயல் இருக்கிறது. நீ சங்கீதம், நாட்டியம் இரண்டையும் பயின்றிருக்க வேண்டும்" என்றான் தேவகுப்தன்.

இப்படி அவன் மேன்மேலும் தன்னைப்பற்றிப் பேசுவதைக் கேட்ட ராஜ்யஸ்ரீ அவன்மீது மேலும் வெறுப்பே கொண்டாள். ஆகையால் கேட்டாள், "நீங்கள் மாளவத்துக்குத் தூதராக வந்தீர்களா?" என்று.

"இல்லை, எனக்கே தூதனாக வந்தேன்!"

"உங்களுக்கா!"

"ஆம்."

"எதற்கு?"

"ராஜ்யஸ்ரீயை மனையாளாகப் பெறுவதற்கு." இதை மிக அமைதியாகச் சொன்னான் தேவகுப்தன். ஆனால் அவன் குரலில் அமைதியுடன் விஷமமும் கலந்திருந்தது. அவனைப் பற்றிய வதந்தியெல்லாம் உண்மையாகத் தானிருக்க வேண்டும் என்று ராஜ்யஸ்ரீ முடிவுக்கு வந்தாள். ஆகவே அவனைத் தாண்டி மீண்டும் அரண்மனை செல்ல இரண்டடி எடுத்து வைத்தாள்.

தேவகுப்தன் குறுக்கே நின்று தனது இரு கைகளையும் பக்கவாட்டில் தூக்கி அவளைத் தடுத்தான். "ராஜகுமாரி! ஏன் அவசரப்படுகிறாய்?" என்றும் கேட்டான்.

குப்த ராஜபுத்ரரே! நாம் இங்கு தனிமையில் பேசுவதே தவறு. நீங்கள் என்னைத் தடுப்பது அதைவிடத் தவறு" என்றாள் ராஜ்யஸ்ரீ.

தேவகுப்தன் சற்றுக் குரூரமாகவே நகைத்தான். "ராஜகுமாரி! இதில் தவறு ஏதுமில்லை. காதலிப்பதும் மணப்பதும் அரச குல தர்மம்" என்றான் நகைப்பின் ஊடே.

"எனக்குக் காதல் என்றாலே என்னவென்று தெரியாது. பரபுருஷனுடன் தனித்துப் பேசுவது தவறென்று தெரியும். தயை செய்து வழியை விடுங்கள். நான் என் அறைக்குப் போக வேண்டும்" என்ற ராஜ்யஸ்ரீ அவனைத் தாண்டிப் போகச் சிறிது வலப்புறமாக நடந்து சென்றாள்.

அங்கும் அவளைத் தடுத்தான் தேவகுப்தன். "ராஜ்யஸ்ரீ! என்னைத் தனிமையில் விட்டுப் போகாதே" என்று கெஞ்சினான்.

ராஜ்யஸ்ரீயின் கண்கள் நெருப்பைக் கக்கின. "ராஜபுத்ரா! உங்களை இங்கு நான் வரச் சொல்லவில்லை. உங்களுக்குத் துணையிருக்கவும் நான் வரவில்லை. உங்களைப் பற்றி நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த அபவாதத்தை மெய்யாக்காதீர்கள்" என்றாள் ராஜ்யஸ்ரீ உஷ்ணமான குரலில்.

"என்ன கேள்விப்பட்டிருக்கிறாய்?" தேவகுப்தன் கேள்வியில் நிதானமிருந்தது. அந்த நிதானத்தில் மிகக் குரூரமும் கலந்து ஒலித்தது.

இரண்டையும் கவனிக்கவே செய்த ராஜ்யஸ்ரீ, "உங்களை துஷ்டப் பிரபு* என்று எல்லோரும் சொல்கிறார்கள்" என்று சொன்னாள்.

---

* Deva - Gupta of malava Known to us from Harsha's inscriptions and to be identified with the Wicked Lord of Malava - **"HARSHA - A POLITICAL STUDY"** by D. DEVAHUTI - Page - 63.



துஷ்டப் பிரபு இதைக் கேட்டதும்சிறிதும் உணர்ச்சி வசப்படவில்லை. சினத்தைச் சிறிதும் காட்டவும் இல்லை. "இருக்கலாம் ராஜ்யஸ்ரீ. துஷ்டனை நல்லவனாக்குவது பெண்களின் கையில் இருக்கிறது. உன்னை மணந்தபின் நான் உன் அடிமையாகிவிடுவேன். நீ என்னைத் திருத்து" என்ற தேவகுப்தன், "பெண்ணே! இதற்குள் அந்தப்புரத்துக்கு ஓடாதே" என்று அவள் கையைப் பிடிக்கவும் முயன்றான்.

மானைப் போல ஒரு துள்ளாகத் துள்ளிப் பின்னடைந்தாள் ராஜ்யஸ்ரீ. கன்னிப் பருவம் நீங்கிப் பூப்படையாத நிலையிலும் அவள் உணர்ச்சிகள் கொந்தளித்தன. "வேண்டாம், தொடாதே என்னை. என் தமையன் பார்த்தால் உன்னைக் கொன்று விடுவான்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

"ஹர்ஷனா? அந்தச் சிறு பிள்ளையா?" என்று நகைத்தான் தேவகுப்தன்.

"சிறு பிள்ளையா? இங்கு வந்தால் புரிந்துகொள்வாய். உன் போன்ற ஆடுகளுக்கு இளம் சிங்கம் அவன்" என்றாள் ராஜ்யஸ்ரீ, உணர்ச்சிகள் கொந்தளித்த குரலில்.

"அந்தச் சிங்கம் வரட்டும் பார்ப்போம்! இந்த துஷ்டப் பிரபுவிடம் அவன் படும் பாட்டை நீயே பார்ப்பாய்" என்றான் தேவகுப்தன்.

"சிங்கம் வந்துவிட்டது" என்று மெதுவான சொற்கள் தேவகுப்தனுக்குப் பின்னாலிருந்து ஒலித்தன.

அதைக் கேட்டதால் சரேலெனத் திரும்பிய தேவகுப்தன் தனக்குப் பின்னால் இடையில் மாத்திரம் கட்டிய மூலைக்கச்சப் பட்டாடையுடனும் அங்கி ஏதுமில்லாத திண்மையான மார்பில் புலிநகம் பதிக்கப் பெற்ற பெரும் வீரச் சங்கிலியுடனும், முகத்தில் சற்றே துளிர்த்த சினத்துடனும், ஹர்ஷவர்த்தனன் நின்றிருப்பதைக்

கண்டான். ஆனால் அதைப் பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாமல், "இளஞ் சிங்கமா?" என்று ஏளனத்துடன் வினவினான்.

இளஞ்சிங்கம் அவனுக்கு ஏதும் பதில் சொல்லவில்லை. "ராஜ்யஸ்ரீ! நீ போ அந்தப்புரத்துக்கு" என்று தங்கைக்கு உத்தரவிட்டான். ராஜ்யஸ்ரீ தேவகுப்தனிடமிருந்து சற்றுத் தள்ளிச் சென்று அந்தப்புரத்தை நோக்கி நடக்க முற்பட்டாள்.

சற்று தூரம் நடந்ததும் பின்னால் திரும்பிப் பார்த்தாள். ஹர்ஷவர்த்தனன் தேவகுப்தனைத் தனது இரு கைகளாலும் தலைக்கு மேலே தூக்கிக்கொண்டிருந்தான். பிறகு ஒரு சுழற்றுச் சுழற்றி வாவியில் எறிந்தான். 'பளேர்' என்ற சத்தத்துடன் வாவியில் விழுந்த தேவகுப்தன் கரையேறினான். கையிலிருந்த குறுவாளுடன் ஹர்ஷனை நோக்கி வந்தான்.

திகிலுடன் அதைப் பார்த்த ராஜ்யஸ்ரீ அடுத்த விநாடி நகைத்தாள். தேவகுப்தன் கையை ஹர்ஷனின் இரும்புக் கை பிடித்துக் குறுவாளை நிலத்தில் உதறியது. மீண்டும் தேவகுப்தன் தூக்கப்பட்டு வாவியில் எறியப்பட்டான். முக்கி முனகி வாவியிலிருந்து எழுந்து வந்த தேவகுப்தனை நோக்கி நகைத்தாள் ராஜ்யஸ்ரீ.

"ராஜ்யஸ்ரீ! பாஞ்சாலியும் இப்படித்தான் நகைத்தாள் ஒரு சமயம். அதன் விளைவை உலகம் அறியும். இன்று சிரிக்கும் உன் உதடுகள் வெகு சீக்கிரம் துடிதுடித்து அழும். நினைப்பில் வைத்துக்கொள்" என்று சீறிய தேவகுப்தன் ஈர உடையுடன் அரண்மனையை நோக்கி நடந்தான்.

4

# அரங்கப் போர்

தேவகுப்தனின் சீற்றம் மிகுந்த சொற்களாலும், "இன்று சிரிக்கும் உன் உதடுகள் சீக்கிரம் துடித்துத் துடித்து அழும்" என்று அவன் செய்த சபதத்தாலும் மிகவும் திகில் வசப்பட்ட ராஜ்யஸ்ரீ, அவன் அரண்மனையை நோக்கி நடந்ததைப் பார்த்துக்கொண்டே நின்றாள் நீண்டநேரம். அவன் நடையில் கோபத்தின் உறுதியும் அவமானத்தின் சலனமும் இருந்ததை அவள் கவனிக்கவே செய்தாள். உறுதியாக நடந்த கால்கள் சிறிது நேரத்திற்கொரு முறை சற்று மாற்றிப் போட்டுச் சென்றதால் நடையில் ஒரு ஒழுங்கு இல்லாததைக் கவனித்த ராஜ்யஸ்ரீ தனது தமையனை நோக்கித் திரும்பி, "அண்ணா! இவன் மிகவும் கொடியவனாகத் தெரிகிறதே!" என்று கேட்டாள், அச்சத்துடன்.

ஹர்ஷன் தனது கையொன்றைத் தங்கையின் தோள் ஒன்றின் மீது ஆதரவாக வைத்து, "ராஜ்யஸ்ரீ! இவனுக்குத் துஷ்டப் பிரபு என்ற பெயரும் உண்டு. அப்படித்தான் உத்தர பாரத நாடுகளில் அழைக்கப்படுகிறான். ஆனால் அவன் மிரட்டலை நீ பொருட்படுத்த அவசியமில்லை. தானேசுவர மன்னன் புதல்விக்குத் தீங்கு இழைத்துப் பிழைக்கக்

கூடியவர்கள் பாரதத்தில் யாருமில்லை. உனக்கு இரண்டு அண்ணன்மார் இருக்கிறார்களென்பதை மறவாதே" என்று சொல்லி அவளை மெள்ள அரண்மனையை நோக்கி அழைத்துச் செல்ல முயன்றான்.

ஆனால் ராஜ்யஶ்ரீ அசையவும் மறுத்தாள். அவள் மனத்துக்குள்ளே என்ன காரணத்தாலோ பீதி அதிகப்பட்டு அவள் உணர்ச்சிகளைப் பெரிதும் ஆட்டிக்கொண்டிருந்தது. "அண்ணா இவன் சொல்லை நிறைவேற்றுவான் என்று தோன்றுகிறது. அதிலிருந்து தப்ப முடியுமா என்று என் மனம் ஏங்குகிறது" என்றாள் ராஜ்யஶ்ரீ. அதைச் சொன்ன அவள் சுந்தர உடல் லேசாக நடுங்கவும் செய்தது.

ஹர்ஷன் சற்றுப் பெரிதாகவே நகைத்தான். "பிரபாகர வர்த்தனன் மகள் என்று கோழையானாள்? உனக்கு வாளைச் சுழற்றவும், வில்லை நாணேற்றி அம்புகளை எய்யவும் வேடிக்கைக்கா கற்றுக் கொடுத்தோம்? உன் கைகள் எங்கே போயின ராஜ்யஶ்ரீ, உன் வீரம் எங்கே போயிற்று? நீ அபலையைப் போல் அலறுவதைப் பார்க்க எனக்கே வெட்கமாயிருக்கிறது, இந்த பயத்தையும் நாளை போக்குகிறேன்" என்று தங்கையை நோக்கிப் பேசிய ஹர்ஷ வர்த்தனன் உள்ளூர ஒரு திட்டத்தையும் வகுத்துக் கொண்டான். அதன் விளைவாக ராஜ்யஶ்ரீயை அந்தப் புரத்துக்குள் அனுப்பிவிட்டுத் தான் மட்டும் தேவகுப்தன் தங்கியிருந்த அறையை நோக்கிச் சென்று அறையின் கதவை லேசாகத் தட்டினான்.

"யாரது?" தேவகுப்தன் குரல் அதட்டலுடன் ஒலித்தது, அறைக்குள்ளிருந்து.

"நான்தான் ஹர்ஷன்" என்று பதில் சொன்னான் பிரபாகரவர்த்தனன் இளைய மகன்.



இதற்குப்பிறகு அறைக்குள் மௌனம் நிலவியது சில விநாடிகள். "இங்கென்ன வேலை உனக்கு?" என்று மௌனத்தைக் கலைத்த தேவகுப்தன் கேள்வி எழுந்தது சில விநாடிகளுக்குப் பிறகு.

"முக்கிய வேலை" என்றான் ஹர்ஷன்.

"மன்னிப்புக் கேட்க வந்தாயா? அப்படியானால் சென்றுவிடு. நீ செய்த அவமரியாதைக்கு மன்னிப்புக் கிடையாது" என்றான் உள்ளிருந்தே தேவகுப்தன்.

"மன்னிப்புக் கேட்பது வர்த்தனர்கள் சரித்திரத்தில் கிடையாது. உண்மையில் மன்னிப்புக் கேட்க வேண்டியது நீதான். ஆனால் நீ கேட்காமலே மன்னித்துவிட்டேன். கதவைத் திற" என்று ஹர்ஷன் கதவைச் சிறிது வேகமாகத் தள்ளினான். உள்ளே கதவு தாளிடாதிருந்த படியால் சுலபமாகத் திறந்தது. உள்ளே சென்ற ஹர்ஷவர்த்தனன் ஈர உடையைக் கீழே போட்டுப் புத்துடையைப் பாதி அணிந்து கொண்டிருந்த தேவகுப்தனை நோக்கியதும் அங்கிருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

வியப்பும் சீற்றமும் கலந்த பார்வையை ஹர்ஷ வர்த்தனன் மீது வீசிய தேவகுப்தன் நிதானமாகவே ஆடையைப் புனைந்து கொண்டான். பிறகு ஈர ஆடையை அறையில் ஒரு மூலையில் எடுத்துப் போட்டுவிட்டு அந்த அறைப் பஞ்சணையில் உட்கார்ந்து, "இனி நீ வந்த காரியத்தைச் சொல்லலாம்" என்றான்.

ஹர்ஷன் சிறிது சிந்தித்தான். "மாளவ ராஜபுத்ரர் என்ன இருந்தாலும் இன்று தானேசுவர அரண்மனையின் விருந்தாளி. அவரை வாவியில் எறிந்தது சரிதானா என்று சந்தேகம்.." என்று இழுத்தான்.

"இதில் சந்தேகம் வேறா?" என்று சிடுசிடுத்தான் தேவகுப்தன்.

"சந்தேகமில்லை. அவசரத்தில் செய்துவிட்டேன். நான் நடந்துகொண்டிருக்க வேண்டிய முறையே வேறு" என்று ஹர்ஷவர்த்தனன் மெதுவாகப் பேசினான்.

தேவகுப்தன் முகத்தில் குழப்பம் தெரிந்தது. "என்ன முறை அது?" என்று குழப்பத்தைக் குரலிலும் காட்டினான்.

"நீங்கள் தூதர்..." என்று ஹர்ஷன் இழுத்தான்.

"ஆம். அதற்கென்ன?"

"தூதனுக்கு உரிய மரியாதையை நாங்கள் அளித்தோம். அதை நீங்கள் காப்பாற்றிக் கொள்வில்லை. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்ய நினைத்தீர்கள். அரண்மனை நந்த வனத்தில் திருட்டுத்தனமாக அரசகுமாரியைச் சந்தித்தீர்கள். அவள் செல்ல முடியாமல் வழியை மறித்தீர்கள். இதற்கு நான் உங்களை வாட்போருக்கு இழுத்திருக்க வேண்டும். தூக்கித் தண்ணீரில் எறிந்திருக்கக் கூடாது," ஹர்ஷன் குரலில் மரியாதை இருந்தது.

"இப்பொழுது புரிகிறதா?" என்று கேட்டான் தேவகுப்தன்.

"புரிகிறது" என்றான் ஹர்ஷன்.

"என்ன புரிகிறது?"

"வாவிக்கு யமுனையிலிருந்து நீர் வருகிறது."

"தெரியும்."

"அது புனிதமானது."

"அதுவும் தெரியும்."

"அப்பேர்ப்பட்ட புனித நீரில் ஒரு கயவனை எறிந்து அதை அசுத்தப்படுத்தியது தவறு என்று தெரிகிறது."

தேவகுப்தன் சினம் உச்சத்துக்குச் சென்றது. "ஹர்ஷா!" என்று இரைந்து கூவினான்.



"மற்றுமோர் அவமரியாதை. என்னைப் பெயர் சொல்லி அழைப்பது வழக்கமல்ல. இளைய மகாராஜா என்று அழைக்க வேண்டும். இந்த அவமரியாதைக்கு தானேசுவரத்தில் தூக்கு தண்டனை உண்டு" என்றான் ஹர்ஷன் பதட்டம் சிறிதுமில்லாத குரலில்.

அதற்குமேல் வார்த்தையை வளர்த்த இஷ்டப்படாத தேவகுப்தன், "ஹர்ஷா, சுற்றி வளைக்காதே. வந்த காரியத்தைத் திட்டமாகச் சொல்" என்றான் சினம் ஊடுருவிய குரலில்.

"நீ இன்று எங்கள் குலத்துக்குச் செய்த அவ மரியாதைக்கு நாளை பதில் சொல்ல வேண்டும் போர்ப் பயிற்சி அரங்கில். அரங்கில் பல நாட்டு மாணவர்கள் வாட் பயிற்சி, விற்பயிற்சி முதலிய பல போர் வித்தைகளைப் பயிலுகிறார்கள்" என்ற ஹர்ஷன், "நீ போரிட உனக்கு இஷ்டமான ஆயுதத்தைக் கையாளலாம். வாளோ சூலமோ, பரசுவோ எதை வேண்டுமானாலும் எடுத்துப் போரிடலாம்" என்றும் சொன்னான்.

ஹர்ஷன் தன்மீது சண்டையைச் சுமத்துகிறான் என்பதைப் புரிந்துகொண்ட தேவகுப்தன் உள்ளூரக் குதூகலித்தான். "நாளைக்கு ஒரு நரபலி இருக்கிறது மகாசக்தி" என்று குதூகலத்தினூடே சொல்லியும் கொண்டான். தனது வீரத்தில் தேவகுப்தனுக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அந்தச் சிறு வயதுக்குள் எத்தனையோ பேரை மாய்த்திருக்கிறான் தனது வாளால். ஆகவே மறுநாள் சண்டையைப் பற்றி உற்சாகத்துடன் பேசினான். "ஹர்ஷா! நாளைக் காலையில் வாளைக் கொண்டே போராடுகிறேன். உங்களுக்குப் போரின் தர்மம் தெரியுமென்று நினைக்கிறேன். நான் தனிமையாயிருப்பதால் உன்னை நான் கொன்றதும் எனக்குத் தீமை எதையும் விளைவிக்க மாட்டீர்களென்று நம்புகிறேன்" என்று கூறிய தேவகுப்தன் ஹர்ஷன்

போகலாமென்பதற்கு அறிகுறியாகத் தலை வணங்கினான். ஹர்ஷனும் தலைவணங்கி வெளியே சென்றான்.

மிகுந்த மகிழ்ச்சியுடன் தேவகுப்தன் அன்று படுக்கையில் படுத்தான். தனக்கு ஹர்ஷன் செய்த அவமானத்துக்கு அவனைப் பழிவாங்க சமயம் கிடைத்ததைப் பற்றி மிகுந்த மகிழ்ச்சியடைந்ததால் நன்றாகவே உறங்கினான் தேவகுப்தன். விடிவதற்குச் சற்று முன்னதாகவே எழுந்து, சீக்கிரமாகவே நீராடித் திலகமணிந்து ஆடைகளையும் அணிந்து, வாளை ஒருமுறை உருவிப் பார்த்து வீசவும் செய்தான். மிகுந்த திருப்தியுடன் தனக்கு அழைப்பு வரும் நேரத்தை எதிர்பார்த்துப் பஞ்சணையில் உட்கார்ந்திருந்தான். சூரியன் உதிர்த்த சிறிது நேரத்துக்கெல்லாம் வீரனொருவன் வந்து, "தங்களை மன்னர் பயிற்சி அரங்கத்தில் எதிர்பார்க்கிறார்" என்று அறிவிக்க, அவனைத் தொடர்ந்து சென்ற தேவகுப்தன் தானேசுவர மன்னன் பயிற்சி அரங்கத்தைக் கண்டு பிரமித்தான்.

அத்தகைய அரங்கத்தை அவன் அன்றுவரை பார்த்ததே இல்லை. நல்ல நீளமும் அகலமும் கொண்டு பெரிதாக விளங்கிய அந்தப் போர்ப் பயிற்சி அரங்கத்தில் பாரதத்தின் சகல ஆயுதங்களும், சகலவித கவசங்களும் இருந்தன." பயிற்சி அரங்கத்தில் அன்று பல தேச இளவரசர்கள் கூடியிருந்தார்கள். மகாராஜா தனிப்பட்ட ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அந்த அரங்கத்தின் தலைவனான பண்டி, தேவகுப்தனை வரவேற்று, "மாளவ ராஜபுத்ரரே! அங்கிருக்கும் இரும்புக் கவசத்தை அணிந்து கொள்ளுங்கள்' என்றான்.

"கவசம் எதற்கு?" ஏதும் புரியாமல் கேட்டான்.

"வாள் காயத்திலிருந்து பாதுகாப்பளிக்க" என்று ஏதோ புது விஷயத்தைச் சொல்வதுபோல் அறிவித்தான் பண்டி



பண்டியின் சொற்களைக் கேட்ட தேவகுப்தன் சுற்று முற்றும் நோக்கினான். அந்த அறையில் மகாராஜாவுக்குப் பக்கத்தில் ஹர்ஷன் ஆயுதம் எதுவுமின்றி நின்றிருப்பதைப் பார்த்து, "அதோ இளவரசர் கவசம் ஏதும் அணிய வில்லையே?" என்று வினவினான் வியப்புடன்.

"போரிடுபவர்கள் அணிந்தால் போதும்" என்று பண்டி மரியாதையுடன் சொன்னான்.

'இளவரசர் என்னுடன் போரிடப் போவதில்லையா?' என்று தேவகுப்தன் கேட்டான்.

"இல்லை. இளவரசரைவிடச் சிறந்த ஒரு வீரரைத் தாங்கள் சந்திக்கப் போகிறீர்கள்."

"யாரது?"

இதை அவன் கேட்ட அதே சமயத்தில் அரங்கத்தின் பக்கத்துக் கதவு ஒன்று திறக்கப்பட, உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை இரும்புக் கவசத்தை அணிந்த உருவமொன்று அரங்கத்துக்குள் நுழைந்தது. திடமாக நடை நடந்து அரங்கத்திலிருந்த வாட்களிலொன்றை எடுத்துப் பதம் பார்த்துப் போருக்குத் தயாராக நின்றது.

இந்த நிகழ்ச்சியால் பெரிதும் குழப்பத்திற்குள்ளான தேவகுப்தன், "முதலில் இவனை ஒழித்துவிட்டு, அடுத்து ஹர்ஷனிடம் வருகிறேன்" என்று உள்ளூர எண்ணிவிட்டு அங்கிருந்த இரும்புக் கவசங்களில் ஒன்றை எடுத்துத் தலையை மூடிக்கொண்டான். மார்பிலும் ஒரு கவசத்தை பண்டியே பொருத்தினான் தேவகுப்தனுக்கு.

கவசமணிந்து அரங்கின் நடுவுக்கு அவன் வந்தபோது கவசமணிந்த அந்த உருவமும் திடநடை நடந்து அவனுக்கெதிரே நின்றது. போரைத் துவக்க பண்டி சைகை செய்ததும் இருவர் வாட்களும் பயங்கரமாக மோதின. வாட்போரில் இணையற்றவனென்று பிரசித்தமான

தேவகுப்தன் முதலில் அனாயாசமாகப் போரிட்டான். திரும்பத் திரும்பத் தனது வாள் எதிரியால் தடுக்கப் பட்டதையும், மிகுந்த வேகத்துடன் அகற்றப்பட்டதையும் அவன் உணர்ந்ததும் எதிரி வாட்போரில் மிக வல்லவனென் பதைப் புரிந்து மிகுந்த எச்சரிக்கையுடன் போரிட்டான்.

அவன் கையாண்ட போர்த் தந்திரங்கள் எதிரியிடம் பயனற்றதாயின. திடீரென அவன் வாளைத் தாக்கிச் சுழற்றிய எதிரி ஒருமுறை தானும் சுழன்றபோது, எதிரியின் வாள் ஒருமுறை தேவகுப்தன் மார்புக் கவசத்திற்கும் தலைக் கவசத்துக்கும் நடுவிலிருந்த குறுகிய இடைவெளியைச் சிறிது நீக்கவும் செய்தது.

தேவகுப்தன் பிரமை அதிகமாயிற்று. இத்தகைய வீரப் போரை அவன் அதற்குமுன் கண்டதில்லை. அவன் அதைப் பற்றிச் சிந்தித்திருந்த சமயத்தில் அவன் வாள் மீண்டும் எதிரி வாளால் சுழற்றப்பட்டு அவன் கையிலிருந்து பறந்தது. மிதமிஞ்சிய பிரமிப்பாலும் அவமானத்தாலும் சுயநிலை இழந்து நின்ற தேவகுப்தனை நோக்கிய எதிரியிடமிருந்து, "போதுமா மாளவ வீரரே" என்று சொற்கள் உதிர்ந்தன ஏளனத்துடன்!

அந்தக் குரலைக் கேட்ட அவன் பிரமை வானைத் தொட்டது. உணர்ச்சி மிகுதியால் சிறிது தள்ளாடிய தேவகுப்தனை ஹர்ஷன் பிடித்துக்கொண்டான். வெற்றி யடைந்த உருவம் அதற்குமேல் அங்கு நிற்காமல் அரங்கை விட்டு வெளியே நடந்தது. சிலையென உட்கார்ந்தான் தேவகுப்தன். அன்று அடைந்த அவமானத்துக்குத் தற் கொலைதான் பிராயச்சித்தம் என்பது அவனுக்குத் தெள்ளென விளங்கியது, தன்னை எதிர்த்தது யாரென்று புரிந்துவிட்டதன் விளைவாக.

## 5

# அவள் காதலன்

பிரபாகரவர்த்தனன் அரண்மனைப் போர்ப்பயிற்சி அரங்கில் தன்னை வாட்போரில் தோற்கடித்த எதிரி கடைசியில் பேசியபோது முகக்கவசத்திற்குள் இருந்து, "போதுமா மாளவ வீரரே?" என்று உதிர்ந்த சொற்களைக் கேட்டதும் தேவகுப்தன் சுயநிலை இழந்து, அவமானத்தால் இதயம் திக்திக்கென்று அடித்துக்கொள்ள உட்கார்ந்து விட்டானென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. அந்தக் குரல் பெண் குரலாயிருந்ததாலும், தன்னைத் தோற்கடித்த பிறகு நடந்து அரங்கிலிருந்து அந்த உருவம் சென்றபோது காலில் ஏதோ சிறு சலங்கைச் சத்தமும் அவன் பாம்புச் செவியில் விழுந்ததாலும் தன்னைத் தோற்கடித்தது ஒரு பெண்ணாகத் தானிருக்க வேண்டும் என்று தீர்மானித்த தேவகுப்தன் மனநிலை தற்கொலையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ஹர்ஷன் தன்னை அவமானப்படுத்தவே தன்னை ஒரு பெண்ணுடன் போரிட விட்டிருக்கிறானென் பதை உணர்ந்ததால் அவன் மனக்கலக்கமும் அவமான உணர்ச்சியும் அவன் மனத்தை சுத்தி கொண்டு அடித்து உடைத்துக் கொண்டிருந்ததால் மெதுவாக உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்த தேவகுப்தன் ஹர்ஷனை நோக்கி

"என்னுடன் இப்போது போரிட்டது யார்?" என்று மிக அமைதியாகவே வினவினான்.

ஆனால் அந்த அமைதிக்குப் பின் பெரிய எரிமலை தேவகுப்தன் உள்ளத்தே வெடித்துக் கொண்டிருந்ததைப் புரிந்துகொண்ட ஹர்ஷவர்த்தனன், "அதைத் தெரிந்து கொள்ள என்ன அவசியம் மாளவ இளவரசரே?" என்று வினவினான்.

"இன்றைய எனது தோல்வியை இன்னொரு நாள் நான் வெற்றியாக மாற்றிக்கொள்ள வாய்ப்பு இருக்கும்" என்று தேவகுப்தன் பதில் சொன்னான்.

"இருக்காது" என்றான் ஹர்ஷன்.

"எது?"

"வாய்ப்பு!"

"ஏன்?"

"இந்தப் போருடன் உம்முடன் பொருதியவர் கடமை முடிந்துவிட்டது."

இதைக் கேட்ட தேவகுப்தன் அந்த அரங்கிலிருந்த அனைவர்மீதும் ஒருமுறை தனது கண்களைச் சுழல விட்டான். "அவமானம் சரிப்படுத்தப்படும் வரை, அல்லது இருவரிலொருவர் கொல்லப்படும் வரை இந்தப் போர் முடிந்ததாக ஆகாது. ஆகையால் பெயரைச் சொல்லுங்கள்" என்று கேட்டான் தேவகுப்தன்.

அந்தக் கோரிக்கைக்கு யாரிடமிருந்தும் பதில் வராது போகவே பிரபாகரவர்த்தனனை நோக்கிய தேவகுப்தன் "மகாராஜா! இன்று என்னைத் தோற்கடித்தது ஒரு பெண் என்பதைப் புரிந்துகொண்டேன். முன்னதாக அது ஒரு பெண் என்று தெரிந்திருந்தால் எனது வாளை உருவியிருக்க



மாட்டேன். ஆகையால் சொல்லுங்கள் மன்னவா, யாரந்த வீரப் பெண்மணி?" என்று வினவினான்.

பிரபாகரவர்த்தனன் ஹர்ஷனை நோக்கினான். ஹர்ஷன் சொன்னான், 'தேவகுப்தரே! எந்தப் பெண்ணை நேற்றிரவு நந்தவனத்தில் திருட்டுத்தனமாக நுழைந்து அவமானப்படுத்த முயன்றீர்களோ அவளேதான் இன்று உங்களுடன் போரிட்டுத் தனது அவமானத்துக்குப் பரிகாரம் செய்துகொண்டாள். ஆகையால் இந்த வீண் சண்டை இத்துடன் நிற்கட்டும்" என்றான்.

"யார்! ராஜ்யஸ்ரீயா என்னைத் தோற்கடித்தது?" என்று தேவகுப்தன் வினவினான் பெரு வியப்புடன்.

"ஆம் மாளவ வீரரே! அவளேதான்."

"அவள் வாளைச் சுழற்றும் முறையே எனக்குப் புதிதாக இருக்கிறதே!" என்ற தேவகுப்தன், "அவளுக்கு இந்த வித்தையைக் கற்பித்தது யார்?" என்று வினவினான்.

பிரபாகரவர்த்தனன் பட்டமகிஷியான யாசோவதியின் சகோதரன் மகனும், வர்த்தன குமாரர்களின் ஆசானுமான பண்டி தலைவணங்கி, "அடியவன்தான் அரச குமாரிக்கு வித்தை கற்பித்தவன்" என்றான்.

ஆஜானுபாகுவாய் வர்த்தன சகோதரர்களுக்கெல்லாம் மூத்தவனும், நெடிய உருவத்தினனும், மகாவீரனுமான பண்டியை நோக்கிய தேவகுப்தன், "நீர் அரசகுமாரிக்கு என்ன உறவு?" என்று வினவினான்.

"மூத்த சகோதரன்" என்றான் பண்டி.

"இல்லை. தாய் மாமன் மகன். அரசகுமாரியை மணக்கக் கூடிய உறவு உள்ளவன்" என்று தேவகுப்தன் விபரீதமான உட்கருத்தை வைத்துப் பேசினான்.

"தவறு. நான் அவள் மூத்த சகோதரன்."

"இல்லை."

"அப்படியானால் நான் பொய் சொல்வதாகக் கூறுகிறீரா?" என்று கேட்டான் பண்டி.

தேவகுப்தன் பண்டியின் பேச்சின் போக்கை உணர்ந்து கொண்டான். ஏதாவது ஒரு சாக்கைக் கொண்டு பண்டி தன்னிடம் போரிட முயற்சிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட தேவகுப்தன், "என்னை சண்டைக்கு இழுக்க வேண்டுமென்றால் நேராகவே பேசலாம் ஆசிரியரே! முறைப் பெண்ணுக்கு வாலிபரான நீர் எப்படி ஆயுதப் பயிற்சி அளிக்கலாம்? எதற்காக அளித்தீர்?" என்று கேட்டான்.

"மாளவ இளவரசரே! இந்த நாட்டில் பெண்களை மரியாதையாக நடத்தும் காலம் போய்விட்டது. பெண்களின் தனிமையைப் பயன்படுத்தும் கயவர்கள் நிரம்ப ஏற்பட்டு விட்டார்கள். அகவே எந்தப் பெண்ணும் தற்காத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறாள். அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி இன்றியமையாதது" என்றான் பண்டி.

பண்டி கயவன் என்று குறிப்பிட்டது தன்னைத் தானென்பதை உணர்ந்துகொண்ட தேவகுப்தன், "ஆயுதப் பயிற்சி ஆசிரியரே! உமக்குப் பதில் சொல்ல என்னால் முடியும். பதிலும் சொல்வேன் காலம் வரும்போது" என்றான் சினத்துடன்.

பண்டி முகத்தில் வருத்தத்தைப் படரவிட்டுக் கொண்டான். "காலத்துக்காக நாம் காத்திருக்க வேண்டாம். ஆனால் வேறு வழியில்லை. விருந்தினரான உம்மைக் கொல்ல மன்னர் அனுமதிக்கமாட்டார்" என்று வருத்தத்தைக் குரலிலும் காட்டிய பண்டி அங்கிருந்த மற்ற நாட்டு ராஜகுமாரர்களை நோக்கி, "உம் வாருங்கள் போர்ப் பயிற்சிக்கு. வாட்களை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான்.



சுமார் பத்து வீரர்கள் வாட்களை எடுத்துக்கொண்டார்கள். அடுத்து பயிற்சி தொடங்கியதால் தேவகுப்தனை யாரும் கவனிக்கவில்லை. மிகுந்த வெறுப்புடன் அந்தப் பயிற்சியைக் கவனித்துக்கொண்டு சில நிமிடங்கள் நின்ற தேவகுப்தன் யாரிடமும் விடைபெற்றுக் கொள்ளாமல் வெளியேற முயன்ற சமயத்தில் அரங்கத்தின் கதவைத் திறந்து கொண்டு வந்த மகாமந்திரி மன்னன் காதில் முணுமுணுத்தார். மன்னன் ஏதோ தலையசைக்கவே வெளியே சென்ற மகாமந்திரி நீண்ட நேரம் திரும்பவில்லை. பிறகு திரும்பிய போது, "மன்னவா! வந்த அரசகுமாரனைக் காணோம்" என்று சற்று உரக்கவே சொன்னார்.

இதைக் கேட்டதும் பயிற்சி அரங்கத்தில் சட்டென்று பயிற்சி நின்றது. வந்தவனைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆவலுடன் மந்திரியையும் மன்னனையும் நோக்கினார்கள் அனைவரும்.

மன்னன் முகத்தில் சிறிது அவருவருப்புத் தெரிந்தது. "எதற்காக வந்திருக்கிறான்?" என்று விசாரித்தான் மன்னன்.

"தெரியவில்லை" என்ற மகாமந்திரி காவலனொருவனை அழைத்து, "கன்னோசி அரசனை எங்கிருந்தாலும் அழைத்து வாருங்கள்" என்று உத்தரவும் இட்டார்.

அந்தச் சமயத்தில் தற்செயலாக அரண்மனை அரங்கத் தாழ்வாரக் கைப்பிடிச் சுவருக்கு வெளியே தலை நீட்டிய தேவகுப்தன், "எங்கும் தேட வேண்டாம்" என்றான்.

"ஏன்?" என்று கேட்டான் ஹர்ஷன்.

"முக்கிய வேலையாக இருக்கிறார்" என்றான் தேவகுப்தன்.

"என்ன முக்கிய வேலை?" என்று எரிந்து விழுந்தான் ஹர்ஷன்.

"இப்படி வந்து பாருங்கள் தெரியும்" என்று தேவகுப்தன் உப்பரிகையிலிருந்த தாழ்வரைக்குக் கீழே கையால் சுட்டிக் காட்டினான்.

அவன் காட்டியதைக் காண ஹர்ஷன் மட்டுமல்லாமல் மற்ற அரசகுமாரர்களும் விரைந்தனர். தாழ்வரைக் கைப்பிடிக்கு வெளியே எட்டிப் பார்த்தவர் பிரமை பிடித்து நின்றனர். அங்கு ஒரு வாலிபன் ராஜ்யஸ்ரீயின் கைகளைப் பற்றி நின்றான். இருவரும் மழிச்சி மிகுதியால் நகைத்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைச் சுட்டிக் காட்டிய தேவகுப்தன், "ஹர்ஷா! உங்கள் அரண்மனைப் பண்பாடு பிரமாதமாக இருக்கிறது. உன் தங்கைக்கு இப்படியொரு காதலன் இருக்கிறான் என்பதை முன்னமே சொல்லியிருக்கலாமே" என்று கூறிவிட்டும் ஏளனமாக நகைத்துவிட்டும் கீழே வேகமாக ஓடினான். ஹர்ஷனும் மற்ற அரசகுமாரர்களும் பிரமை பிடித்து நின்றார்கள்.

6

# ஆண்டவனைக் கேள்

தேவகுப்தன் சுட்டிக் காட்டிய காட்சியை உப்பரிகையின் தாழ்வரைக் கைப்பிடிச் சுவரிலிருந்து கண்டதால் மற்ற அரசகுமாரர்கள் பிரமை பிடித்து நின்றார்களென்றால் ஹர்ஷன் மனோநிலை விவரிக்க இயலாததாயிருந்தது. அரசகுல மகளான ராஜ்யஸ்ரீ பட்டப்பகலில் ஒரு ஆடவனின் கையைப் பிடித்து நிற்பாளென்றோ, சிரிப்பாளென்றோ சொப்பனத்திலும் நினைக்காத ஹர்ஷனுக்கு அந்தக் காட்சி அதிர்ச்சியைத் தந்ததென்றால், தனது குலத்தின் பண்பாட்டைப் பற்றியும் ரஜ்யஸ்ரீயின் நடத்தைப் பற்றியும் கேவலமாகப் பேசிய தேவகுப்தன் சொற்கள் சினத்தையும் அத்துமீறிக் கிளறவே, அவன் கீழே விரைய முற்பட்டான். அந்தச் சமயத்தில் பிரபாகரவர்த்தனன் உட்கார்ந்த இடத்திலிருந்தே விசாரித்தான். "ஹர்ஷா! என்ன விசேஷம்? ஏனிப்படிப் பதட்டப்படுகிறாய்?" என்று.

ஹர்ஷன் தந்தையிடம் விஷயத்தை உடனடியாகச் சொல்லி அவர் மனத்தைத் திகிலுக்கு உள்ளாக்க இஷ்டப்படாமல், "கீழே போய் வந்து சொல்கிறேன்" என்று கூறிவிட்டுப் படிகளை நோக்கி நடக்க மீண்டும் முனைந்தான்.

பிரபாகரவர்த்தனன் புன்முறுவல் கொண்டான். "இப்பொழுதே சொல்லிவிட்டுப் போனாலென்ன?" என்று கேட்டான் புன்முறுவலின் ஊடே

ஹர்ஷவர்த்தனன் ஒரு விநாடி சிந்தித்தான், ஒரு விநாடி சங்கடப்பட்டான், "கேட்டால் நீங்கள் மனம் தளர்ந்து விடுவீர்கள்" என்று முடிவில் சற்று மெதுவாகச் சொன்னான்.

மன்னன் லேசாக நகைத்தான், "பிரபாகரவர்த்தனா! மனத்தளர்ச்சிக்கும் எனக்கும் என்றைக்கும் சமபந்தம் இருந்ததில்லை" என்றும் சொன்னான் நகைப்பின் ஊடே

"போரில் தளர்ச்சியடைய மாட்டீர்கள் தந்தையே. ஆனால் நீங்களும் தளர்ச்சியடையும் நிகழ்ச்சிகள் உலகத்தில் உண்டு" என்று இழுத்தான் ஹர்ஷன்.

"உதாரணமாக?" என்று கேட்டான் மன்னவன். அடுத்து ஹர்ஷனும் மற்ற அரசகுமாரர்களும் அதிர்ச்சி யடையும்படியாகப் பேசினான். "ஹர்ஷா! நீ சென்று உன் தங்கையையும் அவள் வருங்காலக் கணவனையும் அழைத்து வா" என்று சொல்லி ஹர்ஷன் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையையும் அசைத்தான்.

அதைக் கேட்ட பண்டியும் மற்ற அரசகுமாரர்களும் வியப்படைந்தார்களென்றால், ஹர்ஷன் பெரிதும் சினத்தின் வசப்பட்டு, "எனக்கும் தெரியாமல் என் தங்கைக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டதா?" என்று சீறினான்.

அவன் சீற்றத்தைச் சிறிதளவும் லட்சியம் செய்யாத பிரபாகரவர்த்தனன் நிதானமாகச் சொன்னான், "தெரிவிக்க வேண்டிய சமயத்தில் தெரிவிப்பேன். அவர்கள் திருமணத்துக்கு இன்னும் சிறிது காலம் இருக்கிறது. ஏற்கனவே செய்துள்ள நிச்சயத்தை உறுதிப்படுத்த உதவி வேண்டும்" என்று.

"உதவியா! யார் உதவி?" என்று ஹர்ஷன் கேட்டான்.



"இயற்கையின் உதவி. தெய்வ சங்கல்பத்தின் உதவி" என்று மர்மமாகச் சொன்ன பிரபாகரவர்த்தனன் பண்டியை நோக்கி "பண்டி! ஆயுதப் பயிற்சி தொடரட்டும், ஹர்ஷா! கீழே வந்திருக்கும் அரசகுமாரனை என் ஆலோசனை அறைக்கு அழைத்து வா. அங்கு பிரதான அமாத்யரும் (முதன் மந்திரியும்) இருப்பார். ஆலோசனையில் நீயும் கலந்துகொள்ளலாம்" என்று இருவருக்கும் உத்தரவிட்டுப் பயிற்சி அரங்கத்தை விட்டு வெளியேறினான்.

அரசர் அப்படி உத்தரவிட்டுச் சென்றும் உடனடியாக யாராலும் அது நிறைவேற்றப்படவில்லை. பயிற்சிக்கு வந்திருக்கும் அரசகுமாரர்களை நோக்கிய பண்டி, "இன்றைக்குப் பயிற்சி போதும், உங்கள் அறைக்குச் செல்லுங்கள்" என்று கூறிவிட அரசகுமாரர்கள் கலைந்து சென்றனர்.

ஹர்ஷனும் உடனடியாக அரசர் உத்தரவை நிறை வேற்றவில்லை. அரசகுமாரர்கள் கலைந்து சென்று, பயிற்சிக்கூடத்தில் தானும் பண்டியும் தனித்திருக்கும் வரை காத்திருந்து, "ஆசார்யரே! இந்த உத்தரவை நான் நிறைவேற்ற வேண்டியதுதானா?" என்று வினவினான்.

"அரசர் உத்தரவிட்டால் சகல பிரஜைகளும் நிறை வேற்றித்தான் ஆகவேண்டும்" என்ற பண்டி, "அவர்களை அழைத்து வா ஹர்ஷா! ஆலோசனை அறைக்கு நானும் வருகிறேன். ராஜ்யஸ்ரீ விவாகத்தில் எனக்கும் பொறுப்பு உண்டு. அக்கறையும் உண்டு" என்று சொல்லிவிட்டு மன்னர் சென்ற திக்கு நோக்கி நடந்தான்.

ஹர்ஷன் சிந்தனை மேலிட்டதாலும் மனம் பெரும் குழப்பத்திலிருந்ததாலும் தேவகுப்தன் இகழ்ச்சிமொழிகள் இதயத்தை அப்பொழுதும் தாக்கிக் கொண்டிருந்ததாலும், நிதானமாகவே படிகளில் இறங்கிக் கீழே சென்றான். தரைத் தளத்தை அடைந்ததும் நந்தவனத்துக்குச் செல்லும்

சதுக்த்தின் மேடையொன்றில் ராஜ்யஸ்ரீயும் அந்தப் புதிய வாலிபனும் அக்கம் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்து ஏதோ ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததையும் கவனித்ததால் சினம் தலைக்கேற அந்த வாலிபனை நோக்கி, "யார் நீ! இங்கு என்ன செய்கிறாய்?" என்று வினவினான்.

அந்த வாலிபன் தனது அழகிய கண்களைச் சற்று உயர்த்தி, "யார்நீ? இங்கு வர உனக்கு யார் அனுமதி கொடுத்தது?" என்று வினவினான்.

இதைக் கேட்ட ஹர்ஷன் அந்த வாலிபனைக் கூர்ந்து கவனித்தான். அவன் உதடுகள் சிவந்தும் அழகாகவும் இருந்தன. கண்களில் சதா மயக்கம் தெரிந்ததால் அதிலும் கவர்ச்சி இருந்தது. அவன் தன்னை அதட்டிக் கேட்ட குரலிலும் இனிமையிருந்தது. அவன் விசாலமான முகம், நீண்ட கைகள் எல்லாவற்றிலும் ஓர் அழகு இருந்ததே தவிர வீரத்துக்கு அவசியமான கடுமையோ உறுதியோ இல்லை என்பதை ஹர்ஷன் கவனித்து, சற்று அதிருப்தியை முகத்தில் படரவிட்டுக் கொண்டான்.

அண்ணன் வந்ததுமே அந்த வாலிபனிடமிருந்து நகர்ந்து எழுந்து தலைகுனிந்து நின்றுவிட்ட ராஜ்யஸ்ரீ கண்களை நிலத்தில் ஓட்டினாலும் ஓரக்கண்ணால் ஹர்ஷனைக் கவனிக்கவே செய்தாள். அவன் முகத்திலிருந்த அதிருப்தியை அவளும் கவனித்தாளானாலும் அதிருப்திக்குக் காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை அவளுக்கு. முன்பு இரண்டொரு முறை அந்த அரசகுமாரன் வந்தபோது ஹர்ஷன் இமயமலைக் காடுகளில் வேட்டையாடப் போயிருந்தபடியால் இருவரும் சந்திக்க வாய்ப்பில்லை என்பதை ராஜ்யஸ்ரீ அறிந்திருந்ததால் முன் கோபத்தில் அண்ணன் ஏதாவது முறை கேடான நடவடிக்கைகளில் இறங்குமுன்பு அறிமுகத்தை முடித்து விட இஷ்டப்பட்ட அரசகுமாரி, "இவர்தான் என் சிறிய



அண்ணன் ஹர்ஷவர்த்தனன்" என்று கூறினாள், பக்கத்திலிருந்தவனைப் பாராமலே.

"அப்படியா?" என்று கேட்ட அரசகுமாரன், "ஹர்ஷ வர்த்தனா! இப்படி உன்னைப் பெயர் சொல்லி அழைக்க எனக்கு உரிமை உண்டு. நான் ராஜ்யஸ்ரீயை மணக்க இருப்பவன். என்னை நீ கண்டதில்லை. கேட்டிருக்கலாம். நான்தான் கிருகவர்மன். மௌகாரி வம்சத்தவன். கன்னோசியை இப்பொழுது ஆளும் அரசன்" என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்ட மௌகாரி தனது பிரதாபத்தை மேலும் சொல்லத் துவங்கி, "மௌகாரிகள் பழைய வம்சத்தினர். நெடுங்கால ராஜ பரம்பரை" என்று கூறியதைச் சகிக்காத ஹர்ஷவர்த்தனன், "ஆமாம், நீங்கள் குப்த மன்னர்களிடம் வேலையாயிருந்தது எனக்குத் தெரியும். வாருங்கள். உங்கள் இருவரையும் தந்தை அழைத்து வரச் சொன்னார்" என்று கூறிவிட்டுத் திரும்பி நடக்கலானான்.

கிருகவர்மன் ராஜ்யஸ்ரீயை நோக்கி, "ஏதோ விசேஷம் இருக்கிறது. சரி வா" என்று அவள் கையைப் பற்றப் போனான்.

"வேண்டாம். தந்தை விரும்பமாட்டார்" என்று கூறிக் கையை இழுத்துக்கொண்ட ராஜ்யஸ்ரீ ஹர்ஷனைத் தொடர்ந்து சென்றாள்.

சிறிது நேரம் காலம் கடத்திய கிருகவர்மன் வேறு வழியின்றி அவளைப் பின்தொடர்ந்தான். உப்பரிகைப் படிகளில் ஏறிய மூவரும் அரசர் அந்தரங்க அறைக்கு வந்ததும் அவர்களை அழைத்துச் செல்ல மகாமந்திரியே அறை வாசலில் காத்திருந்து தன் பின்னால் வரும்படி சைகை செய்து உள்ளே சென்றார்.

அறைக்குள் ஒரு மூலையிலிருந்த பெரிய ஆசனத்தில் தானேசுவர மன்னன் நன்றாகச் சாய்ந்து கொண்டிருந்தான்.

முதலில் ஹர்ஷன் வந்து தனது ஆசனத்தின் பக்கத்தில் நின்றதும் அடுத்து வந்த கிருகவர்மனையும் ராஜ்யஸ்ரீயையும் எதிரிலேயே நிற்க வைத்து இருவர்மீதும் நீண்ட நேரம் தனது கண்களை ஓட்டினான். பிறகு பக்கத்தில் நின்ற ஹர்ஷனை நோக்கித் திரும்பி, "ஹர்ஷா குலத்தை முன்னிட்டுத்தான் இவர்கள் திருமணத்துக்கு நான் சம்மதித்தேன். மௌகரிகள் புராதனமான வம்சத்தைச் சேர்ந்தவர்கள். மௌகாரிகள் என்ற பெயரே முகாரா என்ற சொல்லிலிருந்து வந்தது. முகாரா* என்றால் முக்கியஸ்தர் அல்லது தலைவர் என்று பொருள். அந்தப் பெயரையே ஒரு அரசன் கௌரவப் பெயராகச் சூட்டிக் கொண்டான். அவன் வமிசத்தார் மௌகாரிகள் என அழைக்கப்பட்டனர். இந்தப் பழைய வமிசத்துடன் சம்பந்தம் செய்வது நமது குல கௌரவத்தை உயர்த்தும். அதனால்தான் உன் தங்கையை இந்த கிருகவர்மன் மௌகாரிக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டேன்" என்று விளக்கினான் மன்னன்.

ஹர்ஷன் பதில் பேசவில்லை. சிறிதுநேரம் கழித்து பேசியபோது அதில் சந்துஷ்டியில்லை. "குலம் மட்டும் போதுமா ஒரு திருமணத்துக்கு!" என்று வினவினான்.

"ஏன் போதாது?" என்றுகேட்டார் மன்னவர்.

"பெரிய குலம் என்று சொல்லப்படும் இடங்களில் உபயோக மற்றவர்கள் பிறப்பதைப் பார்க்கிறோம். குருவம்சம். ஆனால் துரியோதனன் முதலிய கௌரவர்கள் ஒழுங்காக இருந்ததாகத் தெரியவில்லை" என்றான் ஹர்ஷன்.

அதுவரை வாளாவிருந்த கிருகவர்மன் முதல் முதலாகச் சினத்தை முகத்தில் காட்டினான். "எங்கள் சம்பந்தம் தேவையில்லை என்றால் இதோ நான் எனது நகர் செல்லச்

* Mukhara means leader - an ancestor was honoured with the title of Mukhara His Decedndants were called Maukharis - Devahuthi's Harsha - Page - 24.



சித்தமாயிருக்கிறேன்" என்றான். அவன் சொற்களிலும் சினம் தோய்ந்து வந்தது.

"யார் அழைத்து வந்தீர்கள்?" என்று கேட்டான் ஹர்ஷன்.

கிருகவர்மன் சுயநிலையை அடியோடு இழந்தான். எதைச் சொல்லலாம், எதைச் சொல்லக்கூடாது என்ற பகுத்தறிவை இழந்தான். "உன் தங்கை அழைத்துதான் வந்தேன்" என்று அறிவித்தான்.

"அப்படியா?" இகழ்ச்சியுடன் வந்தது ஹர்ஷன் கேள்வி.

"ஆம். அவள் எழுதின ஓலை என் கச்சையிலிருக்கிறது" என்று கிருகவர்மன் தனது கச்சையைத் தொட்டுக் காட்டினான்.

"ஒரு பெண் ஓலை எழுதுவது சரியா? அப்படியே எழுதினாலும் உடனே ஒரு ஆண்மகன் ஓடி வருவது முறையா?" என்று ஹர்ஷன் கேட்டான்.

"ருக்மணி எழுதி கிருஷ்ணன் ஓடி வரவில்லையா?" என்று கிருகவர்மன் புராணச் சான்று காட்டினான்.

"நீர் கிருஷ்ண பகவானா?" கோபச் சிரிப்புச் சிரித்தான் ஹர்ஷன்.

விவாதம் தன்னைச் சுற்றி வருவதைக் கண்ட ராஜ்யஸ்ரீ திரும்பி ஓடிவிட நினைத்தாள். அந்தச் சமயத்தில் அவள் கையைப் பற்றி நிறுத்திய கிருகவர்மன். "தானேசுவர மன்னரே, எங்கள் விவாகம் எப்பொழுது நடக்கும்? திட்டமாகச் சொல்லும்" என்று உரிமையுடன் இரைந்து கேட்டான்.

"இப்பொழுது இல்லை." திட்டமாக வந்தது மன்னன் பதில்.

"எப்பொழுது?" மீண்டும் எழுந்தது கிருகவர்மன் கேள்வி. இம்முறை அதில் சிறிது கடுமையும் இருந்தது.

"என்னைக் கேட்டுப் பயனில்லை."

"யாரைக் கேட்பது?"

"உன்னையும் என்னையும் ராஜ்யஸ்ரீயையும் படைத்த ஆண்டவனைக் கேள்" என்ற பிரபாகரவர்த்தனன் லேசாக நகைத்தார்.

# 7

## மகிழ மரத்து நிழலில்

திருமணம் எப்பொழுது என்பதை ஆண்டவனைத் தான் கேட்க வேண்டும் என்று பிரபாகரவர்த்தனன் சொன்னதன் உட்கருத்தை, பெண்ணான ராஜ்யஸ்ரீ புரிந்து கொண்டாலும், மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியாததால் வியப்பே அடைந்தனர். பெண்ணுக்குத் தந்தை குத்துக்கல் போல் உட்கார்ந்திருக்க, இந்த அல்ப விஷயத்துக்கு ஆண்டவனைக் கேட்பானேன் என்று பிரபாகரவர்த்தனன் மைத்துனன் மகனான பண்டி நினைத்தான். ஒருவேளை இவனுக்குப் பெண்ணைக் கொடுக்கத் தந்தைக்கு இஷ்டமில்லையோ என்று எண்ணமிட்ட ஹர்ஷன், 'அப்படியானால் தங்கள் அத்தனைபேர் முன்னிலையிலும் ராஜ்யஸ்ரீயைக் கைப்பிடித்து நிறுத்திய கிருகவர்மன் செய்கையை மன்னர் ஏன் கண்டிக்கவில்லை?' என்று சிந்தனையில் இறங்கினான். பிரபாகரவர்த்தனன் போக்கு கிருகவர்மனுக்கும் புரியாததால், "மன்னவா! நீங்கள் சொல்வதில் அர்த்தமிருக்கிறதா சிந்தித்துப் பாருங்கள்" என்றான்.

பிரபாகரவர்த்தனன் தன்னைக் கேள்வி கேட்ட மூவர் மீதும் தனது கண்களைச் சுழலவிட்டான். தனது கண்களை மெல்ல நிலத்திலிருந்து உயர்த்தித் தந்தையின் கண்களைச்

சந்தித்த ராஜ்யஸ்ரீக்கு அந்தக் கண்கள் நகைப்பதாகத் தோன்றவே மெதுவாகப் புன்முறுவல் கோட்டினாள். அந்தப் புன்முறுவலைக் கவனிக்கத் தவறாத தானேசுவர மன்னன் மற்ற மூவரையும் நோக்கி, "உங்களுக்குப் புரிகிறதோ இல்லையோ, ராஜ்யஸ்ரீக்குப் புரிகிறது" என்று சொற்களை உதிர்த்தான்.

"ராஜ்யஸ்ரீ எங்களைவிட புத்திசாலியா?" என்று கிருகவர்மன் வினவினான்.

"ஆம்" என்றான் பிரபாகரவர்த்தனன்.

"அப்படியென்ன பிரமாத புத்தி அவளுக்கு?" என்று மீண்டும் கேட்டான் கிருகவர்மன்.

"அவள் பெண்..." என்று இழுத்தான் பிரபாகர வர்த்தனன்.

"அதனால்...?" கிருகவர்மன் மறுபடியும் கேள்வி தொடுத்தான்.

"புருஷர்களைவிட மூன்று மடங்கு புத்தி அதிகம்" என்றான் அரசன்.

"யார் சொன்னது அப்படி?" கிருகவர்மன் கேள்வியில் சீற்றம் மிகுந்திருந்தது.

"சாஸ்திரம் சொல்கிறது" என்ற பிரபாகரவர்த்தனன் அவர்கள் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தான்.

மன்னன் சைகையைத் தொடர்ந்து பண்டியும் ஹர்ஷனும் போக முற்பட்டாலும் கிருகவர்மன் காலை எடுத்து வைக்கக்கூட மறுத்தான். "ஆண்டவனுக்கு அடுத்தபடியாக யாரைக் கேட்டால் பதில் கிடைக்கும் எங்கள் திருமணத்தைப் பற்றி?" என்று கேட்டான் மன்னனை நோக்கி.

"மகாராணியைக் கேள்" என்றான் பிரபாகரவர்த்தனன்.



"எந்த மகாராணியை?" என்று கிருகவர்மன் வினவினான்.

"எனக்கு ஒரே மனைவிதான். ராஜ்யஸ்ரீயின் தாய்." மன்னன் பதிலில் ஏளனம் ஒலித்தது.

"ராஜ்யஸ்ரீயின் தாயைப் போய் நான் கேட்க வேண்டுமா?"

"தேவையிருந்தால் கேள். இல்லை, பொறுத்துக்கொள். காலம் வந்ததும் தேதியை நான் அறிவிக்கிறேன்."

"நான் இந்த ராஜ்யத்தின் மாப்பிள்ளையாக வரப் போகிறவன்."

"ஆம்."

"நான் மாமியாரிடம் பேசினால் நன்றாயிருக்குமா?"

"ராஜ்யஸ்ரீயிடம் பேசுவதைப்போல் நன்றாயிருக்காது தான்... அவசரம் அதிகமாயிருந்தால் பேசாமல் என்ன செய்வது?" என்ற மன்னன் பெரிதாக நகைத்தான்.

அந்த நகைப்பைக் கேட்ட ராஜ்யஸ்ரீ, தனது கையை கிருகவர்மன் கையிலிருந்து விடுவித்துக்கொண்டு அந்த அறையிலிருந்து ஓடினாள் வெளியே. அவள் ஓடிய வேகத்தில் சப்தித்த அவள் கால் தண்டைகளின் பரல்கள் ஜலதரங்கத்தைத் தோற்கடித்தன. அவள் ஓடுவதைத் திரும்பி நோக்கிய கிருகவர்மன் அந்த ஓட்டத்தில் எத்தனை அழகு இருந்தது என்பதை எண்ணிப் பார்த்ததால் சீற்றத்தைப் பறக்கவிட்டான். திரும்பவும் பிரபாகரவர்த்தனனை நோக்கி, "நான் இரண்டு நாள் தங்கி உண்மையை அறிந்து போகிறேன்" என்று சொன்னான்.

"உனக்கு சகல சௌகர்யங்களையும் பண்டி செய்து கொடுப்பான்" என்று சொன்னான் மன்னன்.

அதற்குப்பிறகு அங்கு நிற்காமல் மிகுந்த ஏமாற்றத்துடனும் துயரத்துடனும் வெளிப் போந்த

கிருகவர்மன் வாயிலில் பண்டி நிற்பதைக் கண்டான். பண்டி முன்னதாக விஷயமறிந்தவன் போல், "கிருகவர்மரே, நீங்கள் தங்க அறை சித்தமாகிவிட்டது. உங்கள் புரவியையும் மெய்க் காவலையும் கவனிக்கவும் ஏற்பாடு செய்துவிட்டேன். இப்படி வாருங்கள்" என்று கூறி வழிகாட்டி அழைத்துச் சென்றான். கிருகவர்மன் மனம் ஒரு நிலையில் இல்லாததால் அவன் மௌனமாகவே பண்டியயைப் பின் தொடர்ந்ததான்.

அதே உப்பரிகையின் மற்றொரு கோடியிலிருந்த ஒரு பெரிய அறைக்கு கிருகவர்மனை அழைத்துச் சென்ற பண்டி, "கன்னோசி மன்னரே, இந்த அறை உமக்காகவே நீண்ட நாளாக சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. உமக்கும் ராஜயஸ்ரீக்குமாக இரண்டு பஞ்சணைகளும் போடப் பட்டிருக்கின்றன. அதற்கு வேளை வராததால் உம்மைத் தனித்து இந்த அறைக்குள் அனுப்ப வேண்டியிருக்கிறது. இது எங்கள் துர்ப்பாக்கியம்" என்று கூறிவிட்டு அங்கிருந்த இரு காவலரையும் பணிப்பெண்களையும் நோக்கி, "ராஜ்யஸ்ரீயின் கணவராகப் போகிறவர். அவருக்கு மனக்குறைவு ஏதுமில்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி கிருகவர்மனிடம் விடை பெற்றுச் சென்றான்.

அறைக்குள் நுழைந்த கிருகவர்மன் மனத்தை அழுத்திக் கொண்டிருந்த துயரத்துடன் பஞ்சணை முகப்பில் தொப்பென்று உட்கார்ந்தான். அவன் உட்கார்ந்ததும் அவனது பாதக்குறட்டை ஒரு பெண் அகற்றினாள். இன்னொருத்தி அவன் கச்சையிலிருந்த வாளை நீக்கி அறையின் மூலையில் சார்த்தினாள். இரு காவலரும் அவனது அங்கியைக் கழற்றினார்கள். அடுத்து பணிப்பெண் சொன்னாள். "தங்கள் நீராட்டத்திற்குப் பக்கத்து அறையிலேயே ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்று.

இத்தனை உபசாரமும் கிருகவர்மனுக்கு வேண்டி யிருந்தாலும் அவற்றை அவன் ரசிக்காமல் முகம் சுளித்தான்.



"அடுத்து வேண்டுவது என்ன என்று சொன்னால் நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறோம்" என்றாள் ஒரு பணிப்பெண் அவன் முகச் சுளிப்பைப் பார்த்து.

"எனக்கு வேண்டியதா?" என்று கிருகவர்மன் வெறுப்புடன் கேட்டான்.

"ஆம் பிரபு!" என்றாள் மற்றொரு பணிப்பெண்.

"எனக்கு வேண்டியது அரசகுமாரி, அவளை அனுப்புங்கள்" என்றான் கிருகவர்மன்.

இதைக் கேட்ட இரு பணிப்பெண்களும் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். "மாப்பிள்ளை அவசரப்படுகிறார்" என்றாள் ஒரு பணிப்பெண்.

"என்ன செய்வது? சமயம் வரவில்லை" என்று பரிகாசம் செய்தாள் இன்னொருத்தி.

"சமயம்! காலம்! இதே பேச்சு காலை முதல். என்ன சமயம் வரவேண்டும்? எதற்கு?" என்று சீறினான் கிருகவர்மன்.

இதைக் கேட்ட இரு பணிப்பெண்களும் அறையை விட்டு வெளியே ஓடிவிட்டார்கள். அங்கு பிடித்த ஓட்டத்தை ராஜ்யஸ்ரீயின் அறைக்கு வந்து நிறுத்திய பணிப்பெண்கள் அரசகுமாரியை நோக்கி, "அரசகுமாரி! மாப்பிள்ளைக்குப் பதில் சொல்ல எங்களால் முடியவில்லை, அவரை நீங்களே கவனித்தால் நல்லது" என்று ஒருமுகமாகக் கூற, அரசகுமாரி நகைத்தாள். "அந்தப் பைத்தியத்திற்கு வைத்தியம் எப்படிச் செய்வது?" என்றாள் நகைப்பின் ஊடே.

"கையால் செய்யலாம்" என்றாள் ஒரு பணிப்பெண்.

"காலால் செய்யலாம்" என்றாள் இன்னொருத்தி.

"என்னடீ சொல்கிறீர்கள்?" என்று சினந்தாள் அரசகுமாரி.

"ஏதாலும் செய்யலாம்" என்றாள் முதலில் பேசியவள்.

"ஏதாலும் என்றால்?" இரண்டாவதாகப் பேசியவள் விஷமமாகக் கேட்டாள்.

"என்னடி என்னை வம்புக்கிழுக்கிறீர்களா?" என்றாள் அரசகுமாரி.

"அரசகுமாரி, உங்களை இழுக்க கிருகவர்மன் இருக்கிறார், நாங்கள் எதற்கு?" என்ற பணிப் பெண்களைப் பிடிக்கப் போன ராஜ்யஸ்ரீ, அவர்கள் ஓடிவிடவே மீண்டும் அறையிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தாள்.

அவள் நினைப்பெல்லாம் கிருகவர்மன் மீதிருந்தது. "நான் புஷ்பவதியாகாத விஷயத்தை எப்படி அவரிடம் சொல்லுவேன்?" என்று வேதனைப்பட்டாள். "ஆனாலும் ஆண்களுக்கு அவசரம். பூவோ காயோ எப்படியிருந்தாலும் பறித்துவிட வேண்டியது" என்று சிந்தித்து லேசாக நகைத்துக் கொண்டாள். "இயற்கை பெண்களுக்குச் சூசமாகக் காட்டும் பல உண்மைகளை அவர்களுக்கு ஏன் காட்டுவதில்லை?" என்று இயற்கையை நொந்தாள். 'நான் மலராத மொட்டாயிருக்கையிலேயே என் உடலில் ஏன் இத்தனை உணர்ச்சிகள் ஓடுகின்றன?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.

இத்தகைய நினைப்பிலும் வேட்கையிலும் சிக்கித் திண்டாடிய ராஜ்யஸ்ரீ அன்று பகலில் சரியாக உணவருந்தாமலும் ஒய்வு எடுக்காமலும் பொழுதைக் கழித்தாள். இரவு நீண்ட பின்பும் அவள் வேதனை தீரவில்லை. முதல் ஜாமத்தில் சந்திரன் எழுந்த உடனேயே நந்தவனத்துக்குச் சென்று ஒவ்வொரு செடியாகக் கிள்ளிக் கொண்டும் இரண்டொரு மலர்களைப் பறித்துத் தலையில் சூட்டிக் கொண்டும் நடந்தாள். கடைசியாக நந்தவனத்தின் கோடியிலிருந்த மகிழ மரத்தை நோக்கிச் சென்று அது



அளித்த இருளில் உட்கார்ந்து மரத்தின் தண்டில் சாய்ந்து கண்களை மூடினாள்.

அந்தக் கண்களை இரு வலுவான கைகள் பொத்தின மறைவிலிருந்து. அடுத்து ராஜ்யஸ்ரீ குழந்தைபோல், தூக்கப் பட்டாள். அவளை ஆட்டுக் குட்டியைப் போல் தூக்கிக் கைகளில் கிடத்திக்கொண்ட கிருகவர்மன், "அடீ! தானேஸ்வரன் மகளே! இனி என்னை விட்டு நீ ஓட முடியாது. காந்தருவத்தை க்ஷத்திரிய தர்மம் அனுமதிக்கிறது. உன் தகப்பன் ஊரைக் கூட்டி மேளம் கொட்டி உன்னை எனக்குக் கொடுக்கும்வரை நான் காத்திருக்கப் போவதில்லை" என்று கூறித் தனது முகத்தைத் தாழ்த்தி அவள் இதழ்களில் தனது உதடுகளைப் பொருத்தி இழைத்தான் முரட்டுத்தனமாக. அடுத்து அவள் மார்பின் மொட்டுகள் மீது முகத்தை அழுத்தினான்.

பருவம் பதப்படாத நிலையிலும் அந்தப் பைங்கிளியைக் காம உணர்ச்சிகள் ஊடுருவிச் சென்றன. கிருகவர்மன் அவளைக் கையில் தாங்கியபடி அவள் உடலின் பல பாகங்களிலும் தனது முகத்தை அழுத்தியும் புரட்டியும் எடுத்தான். பிறகு அந்த மகிழ மரத்தடியிலேயே அவளைக் கிடத்தி அவள் பக்கத்தில் உட்கார்ந்து தனது வலது கையை அவள் வழவழத்த தொடை யொன்றின்மீது வைத்தான். அவள் திமிறினாள். அதன் விளைவாக விலகிய சேலை அவள் பக்குவ மலர்த் தொடையின் பரிமாணத்தைக் காட்டவே கிருகவர்மன் கை அதை வருடலாயிற்று. உணர்ச்சிப் பெருக்கில் சிக்கித் தவித்தாள் ராஜ்யஸ்ரீ. அந்தச் சமயத்தில் அவள் எதிர்பாராதது நடந்தது. திடீரென எழுந்து அரண்மனையை நோக்கி ஓடினாள் அவள். "அம்மா, அம்மா" என்று ஓடிக்கொண்டே கதறினாள். காரணம் கிருகவர்மனுக்குப் புரியாததால் பிரமை பிடித்து நின்றான்.

## 8

## விஷமிகள் இருவர்

ராஜ்யஸ்ரீ திடீரெனத் தனது தழுவலிலிருந்து நீங்கி, "அம்மா அம்மா" என்று கதறிக்கொண்டு ஓடியதன் காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாத கிருகவர்மன் நந்தவனத்து மகிழமரத்து அடியிலேயே நீண்டநேரம் பிரமை பிடித்து நின்றான். அப்படிப் பிரமை பிடித்த சமயத்திலும், கல்லைப்போல் கெட்டிப்பட்ட அவள் மார்பகத்தையும், வழவழத்த பருத்த தொடையையும், குன்றிய இடையையும் தான் தொட்டதையும் முகத்தை வைத்துப் புரட்டியதையும் மனத்தில் திரும்பிப் பார்த்து, இத்தனைக்கும் இடங்கொடுத்த ராஜ்யஸ்ரீ திடீரென ஓடியதன் காரணமென்ன என்று எண்ணி விடை காணாமல் தவித்தான். அப்பொழும் அவள் அழகிய கண்களும் செவ்விய அதரமும் அவனை உற்று நோக்கியதாகப் பட்டது காமத்தின் வசப்பட்ட கிருகவர்மனுக்கு. அவள் கதறலுக்கும் அவள் தந்தை திருமணத்துக்குச் செய்துவந்த தடைக்கும் ஏதோ சம்பந்தமிருக்க வேண்டுமென்று நினைத்த கிருகவர்மன் மறுநாள் திருமண விஷயமாகத் திட்டமான ஒரு முடிவுக்கு வரத் தீர்மானித்து அரண்மனையை நோக்கி மெதுவாக நடக்கலானான்.



அப்பொழுது நள்ளிரவிருக்கும். சந்திர வெளிச்சத்தில் தானேசுவரன் பளிங்கு அரண்மனை வெள்ளை வெளேரென்று பால் நிலவையும் தோற்கடிக்கும் வண்ணம் ஜொலித்தது. அதன் மூன்று மாடங்களிலிருந்த தங்கக் கலசங்கள்கூட நிறம் மாறி வெளுத்தே தெரிந்ததால் தானேசுவரன் மனம் எந்த களங்கமு மில்லாத மனமென்பதற்கு அத்தாட்சியாக நின்றன. இரவில் முடங்க வேண்டிய மயில்கள் கூட அன்று என்ன காரணத்தாலோ வெளியே நடை போட்டுக்கொண்டு நின்றன. இவற்றை யெல்லாம் பார்த்தும் பார்க்காதவன்போல் நடந்த கிருகவர்மன் காதில் அந்தப்புரத்தில் ஏற்பட்ட சலசலப்பும், பெண்கள் எங்கும் விரையும் ஒலியும் விழவே அதற்குக் காரணம் எதுவாயிருக்குமென்று தெரிந்துகொள்ள அந்தப்புரப் பகுதியை நோக்கித் தனது நடையைத் திருப்பினான். அவன் அந்தப்புர வாயிலை அடைந்ததும் வெளிவந்த இரு பணிப்பெண்கள், "யார் மாப்பிள்ளையா! வாருங்கள். உமக்கு அடிக்கிறது யோகம்" என்று சொல்லி நகைத்தார்கள். இன்னுமிருவர் நீர் கொண்டு வந்து, வாயிலில் தெளித்து கோலம் போட்டார்கள். அதே சமயத்தில் அந்தப்புரத்தில் மங்கல வாத்தியங்கள் முழங்கின.

சிறிதுநேரம் அந்தப்புர வாயிலிலேயே நின்ற கிருகவர்மன், "என்ன விசேஷம்? இந்தத் தடபுடலுக்கு என்ன காரணம்?" என்று வினவினான் அங்கிருந்த காவலனை நோக்கி.

"இது பெண்களைப் பற்றியது, நமக்கு சம்பந்தமில்லை" என்ற காவலன் தனது புன்முறுவலை மறைத்துக்கொள்ள வேறு பக்கம் திரும்பிக்கொண்டான்.

அவனிடமிருந்து செய்தி ஏதும் கிடைக்காதென்பதைப் புரிந்துகொண்ட கிருகவர்மன் அந்தப்புரத்திற்குள் நுழைந்து சென்றான். சிறிது தூரம் சென்றதும் காவலர் இருவரால்

நிறுத்தப்பட்டான். "இதற்குமேல் யாரும் செல்ல முடியாது" என்று காவலன் ஒருவன் அறிவித்தான்.

"ஏன்?" முரட்டுத்தனமாக எழுந்தது கிருகவர்மன் கேள்வி.

"விசேஷம்" காவலன் சுருக்கமாகப் பதில் சொன்னான்.

" என்ன விசேஷம்?" கிருகவர்மன் எரிச்சலுடன் கேட்டான்.

"மகாராணியைக் கேட்டால் தெரியும்" என்றான் காவலன்.

"சரி கேட்கிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே போகத் தொடங்கிய கிருகவர்மன் மீண்டும் காவலனால் தடுக்கப் பட்டான். "உள்ளே ஆடவர் யாரையும் அனுமதிக்க உத்தரவில்லை" என்றான் காவலன்.

அந்தச் சமயத்தில் இரண்டு தாதிகளுடன் மகாராணியே வந்தாள் அந்த வழியாக. தாதிகள் கைகளில் இருந்த தட்டுகளில் சர்க்கரையும் கற்கண்டும் நிரம்பக் காட்சியளித்தன; கிருகவர்மனைப் பார்த்ததும் மகாராணி தலை குனிந்து கொண்டாள். "மாப்பிள்ளைக்கு சர்க்கரை கொடுங்கள்" என்று உத்தரவும் இட்டாள்.

"எதற்கு சர்க்கரை?" என்று வினவினான் கிருகவர்மன்.

"உங்கள் இருவர் வாழ்க்கையும் இனிக்க" என்றாள் மகாராணி.

கிருகவர்மன் சிறிது சிந்தித்துவிட்டு, "மகாராணி? நான் இரண்டு விநாடிகள் ராஜ்யஸ்ரீயைப் பார்க்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

"இப்பொழுது பார்க்க முடியாது" என்றாள் மகாராணி.

"நாளைக்கு?"



"அதுவும் முடியாது. இது முதல் இரவு. இன்னும் இரண்டு இரவுகள் போக வேண்டும். மூன்று இரவுகள் தாண்டியதும் பார்க்கத் தடையில்லை."

"இப்பொழுது?"

"தடைதான்."

"யார் விதிப்பது!"

"இயற்கை" என்ற மகாராணி மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல் வேகமாகச் சென்றுவிட்டாள் அந்தப்புரத்தின் வேறொரு பகுதியை நோக்கி.

கிருகவர்மன் குழப்பமும் வேதனையும் நிறைந்த மனத்துடன் தனது அறைக்குச் சென்றான். சிறு வயதிலேயே அவன் தாய் இறந்துவிட்டதாலும், கூட தங்கை தமக்கை யாரும் பிறக்காததாலும், பெண்களின் இயற்கையை அறியாத கிருகவர்மன் சாட்சாத் சுகப் பிரம்மமாயிருந்தான். 'அரசன் இயற்கை என்கிறான். மகாராணி இயற்கை என்கிறாள். ராஜ்யஸ்ரீயைச் சூழ்ந்திருக்கும் இந்த இயற்கையின் மர்மம் தான் என்ன?' என்று தனக்குள்ளேயே வினவிக் கொண்டான். அறையில் தனித்திருந்த அந்த இரவில், அவள் எதற்காக அப்படி ஓடினாள்? நான் என்ன செய்துவிட்டேன்? என்று சினந்தும் கொண்டான்.

அதே கேள்வியை மகாராணி மகாராஜாவைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அவன் என்னதான் செய்திருப்பான் குழந்தையை, இப்படி அவள் திடீரெனப் பருவமடைய?" என்று.

" எனக்கெப்படித் தெரியும்?" என்ற மகாராஜா புன்னகை கொண்டார்.

"வயதுக்கு வராத பெண்ணை அவன் எப்படிச் சந்திக்கலாம் தனியாக?" என்று வினவினாள் மகாராணி.

"அவன் கிடக்கட்டும், இவள் ஏன் போனாள்?" என்றார் மகாராஜா.

"அவளுக்கு எப்பொழுதும் வாவிக்கரை பிடிக்கும். இரவில் போவது வழக்கம்" என்றாள் மகாராணி.

"அவளுக்கு வாவிக்கரை பிடித்தால் கிருகவர்மனுக்கு அவளையே பிடிக்கும். அவளைத் தேடிப் போயிருப்பான்" என்ற மகாராஜா, "இதற்கு விவாதம் எதற்கு?" என்றும் வினவினார்.

மகாராணி மகாராஜாவைச் சுடச்சுடப் பார்த்தாள். "முறையற்ற செய்கையைக் கண்டிப்பது பெற்றோர் கடமையல்லவா?" என்று வினவினாள் சொற்களில் உஷ்ணம் ஊடுருவ.

"கண்டிப்பதை நான் தடுக்கவில்லை" என்று மகாராஜா அலட்சியமாகப் பதில் சொன்னார்.

"பெண்ணை வேண்டுமானால் நான் கண்டிக்கலாம். அந்தத் தடியனை நான் எப்படித் தண்டிக்க முடியும்?" என்று மகாராணி வினவினாள்.

"அவனை நானும் தண்டிக்க முடியாது. அவன் ஒரு நாட்டின் மன்னன். தவிர நாளைக்கு மருமகப் பிள்ளையாகப் போகிறவன்." இதைச் சொன்ன மகாராஜா பஞ்சணையில் லேசாகப் புரண்டார்.

"நாளைக்கு வைத்தியரை வரவழைக்க வேண்டும்" என்று மகாராணி எரிச்சலுடன் சொன்னாள்.

"எதற்கு?" கவலையுடன் கேட்டார் மகாராஜா.

"ராஜ்யஸ்ரீயின் பருவம் இயற்கையாக ஏற்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள வேண்டும். கிருகவர்மன் விஷமத்தால் ஏற்பட்டிருந்தால் அதைக் கவனிக்க வேண்டும்" என்ற மகாராணி, "சில சமயங்களில் இது விபரீதத்தில் கொண்டு போய் விடுவதும் உண்டு" என்று சுட்டிக் காட்டினாள்.



மகாராஜா தலையை அசைத்தார் புரிந்துகொண்டதற்கு அறிகுறியாக. "ஒன்றுமிருக்காது. எதற்கும் நாளை மருத்துவரை வரச்சொல்கிறேன்."

"உங்களுக்கென்ன? நிம்மதியாக இருக்கிறீர்கள்" என்று மகாராணி அலுத்துக் கொண்டாள்.

"நிம்மதியில்லாமலென்ன? இந்த மாதிரி நான் அவசரப் பட்டதில்லை. உனக்காக மாதக்கணக்கில் காத்திருந்திருக்கிறேன்" என்று பழைய நினைப்பில் திளைத்தார் மகாராஜா.

"காத்திராமல் என்ன செய்வது? நான் உங்களுக்கு இடம் கொடுக்கவில்லை" என்றாள் மகாராணி.

"எந்த இடம்?" என்று மகாராஜா மகாராணி கையைப் பிடித்துப் பஞ்சணையில் உட்கார வைத்தார்.

"மகாராஜா! வரவர நீங்கள் தரக்குறைவாகப் பேசுகிறீர்கள். உங்கள் மருமகப்பிள்ளையாக வரப் போகிறவன் தரக்குறைவாக நடக்கிறான். இருவருக்கும் நல்ல பொருத்தம்" என்று மகாராணி சொன்னாலும் பஞ்சணையிலிருந்து எழுந்திருக்கவில்லை. மெதுவாக மகாராஜா அவளைத் தன்மீது சாய்த்தபோது நன்றாகவே சாய்ந்தாள் மகாராணி.

மகாராஜா தமது கைகளைக் கொண்டு அவள் உடலை வளைத்தார். ஐம்பது வயதைத் தாண்டியிருந்தும் மகாராணியின் உடல்கட்டு செம்மையாவே இருந்தது. மகாராஜாவின் கையொன்று அவரை அறியாமலே மகாராணியின் மார்பின்மீது பதிந்தபோது மகாராணி பெருமூச்சு விட்டாள். "மகாராஜா, நமக்கு மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். மூவரும் பெரியவர்களாகி விட்டார்கள். இனி நாம்..." என்று இழுத்தாள்.

"என்ன மகாராணி?" உல்லாசத்தால் சிறிது அசைந்தார் மகாராஜா.

"இதை நீங்கள் நிறுத்திவிடுவது நல்லது" என்றாள் மகாராணி.

"எதை?"

"கேள்வியே அழகாயிருக்கிறது."

"ஒரு அழகி பக்கத்திலிருக்கும்போது கேள்வி வேறு எப்படி வரும்?" அதற்கு அப்புறமும் மகாராஜா விஷமத்தை விடவில்லை. மகாராணியும் ஆட்சேபிக்க வில்லை.

"விஷமிகள் இருவர்' என்று முணுமுணுத்தாள் மகாராணி.

"இருவரா!" மகாராஜா வியப்புடன் வினவினார்.

"ஆம் நீங்கள் ஒன்று, உங்கள் மாப்பிள்ளை ஒன்று" என்ற மகாராணி நகைத்தாள்.

அந்த நகைப்பு மறுநாள் அரண்மனையெங்கும் கேட்டது. ராஜ்யஸ்ரீயைத் தோழிகள் கேலி செய்த ஒலிகள் எங்கும் கேட்டன. அந்த ஒலி பின் தொடர கிருகவர்மனை மறுநாள் சந்தித்த மகாராஜா, "கிருகவர்மா! இன்றிலிருந்து மூன்றாவது மாதம் உனது திருமணம்" என்று அறிவித்தார்.

"மூன்று மாதமா? அத்தனை நாள் வேண்டுமா?" என்றான் கிருகவர்மன்.

"ஆம். தானாப் பழுக்காத கனியைத் தடி கொண்டு அடிப்பது தகாது" என்ற மகாராஜா பழமொழி சொன்னார்.

பின்னாலிருந்து கேட்ட சேடிகள் பெரிதாக நகைத்தனர்.

9

# வேட்கையின் கதை

சிறிதளவாவது வாழ்க்கையின் ரகசியத்தைப் புரிந்து கொண்டவனாயிருந்தால் கிருகவர்மன் மறுநாளே தானேசுவரத்திலிருந்து தனது தலைநகருக்குக் கிளம்பியிருப்பான். ஆனால் பரம சுத்தனாக, உலகம் தெரியாதவனாக, ரிஷ்ய சிருங்கரைப்போல் வளர்ந்திருந்த கிருகவர்மன் ராஜ்ய ஸ்ரீயோடு சில வார்த்தைகளாவது பேசிவிட்டும், முடியுமானால் மகாராஜாவிடம் திருமணத் தேதியைச் சிறிது முன்னதாக நிச்சயப்படுத்திக் கொண்டும் தனது நாடு செல்லத் தீர்மானித்தால் அவன் தானேசுவரன் அரண்மனையை விட்டு அடுத்த இரண்டு நாளும் கிளம்பினானில்லை. அவன் அப்படி விடாப்பிடியாக வருங்கால மாமனார் வீட்டு அரண்மனை வாசத்தை நீடித்ததைக் கண்ட ராஜ்யஸ்ரீயின் தோழிகள் அவளைப் படாதபாடு படுத்தினார்கள். தோழி ஒருத்தி கேட்டாள் மறுநாள் பகலில், "ராஜ்யஸ்ரீ! மாப்பிள்ளை ஊருக்குக் கிளம்ப மறுக்கிறாராமே. நந்தவனத்தில் என்னதான் சொக்குப் பொடி போட்டாய் அவருக்கு?" என்று.

ராஜ்யஸ்ரீ அதற்குப் பதில் சொல்லவில்லை. சுட்டு விடுவது போல் தோழியைப் பார்க்க மட்டும் செய்தாள். இன்னொரு தோழி சற்று அதிகமாகவே போய் "அரசகுமாரி!

மகாராணி சந்தேகப் படுகிறார்கள்" என்றாள். புன்முறுவல் கோட்டினாள்.

ராஜ்யஸ்ரீ தலை குனிந்தவண்ணம் தரையைப் பார்த்து நகைத்தாள். "என்ன சந்தேகம் என் தாயாருக்கு?" என்று மெதுவாகக் கேட்டாள்.

"ஏதோ சந்தேகமிருக்கும்போல் தோன்றுகிறது. தாயாரல்லவா? அதுவும் பெண் அல்லவா?" என்று இரண்டாவது தோழி சூசமாகச் சொன்னாள்.

"தாயாருக்கு வரவர புத்தி கெட்டுவிட்டது" என்றாள் ராஜ்யஸ்ரீ, கோபத்துடனும் சிறிது வெட்கத்துடனும்.

"புத்தி கெட்டது தங்களுக்குத்தான் என்று மகா ராணியார்நினைக்கிறார்கள். நேற்று மகாராஜாவிடம் நீங்கள் நந்தவனத்துக்குப் போனதைப்பற்றி முறையிட்டுக் கொண்டிருந்தார்களாம்" என்று முதல் தோழி சொன்னாள்.

"இப்பொழுதுதான் புதிதாகப் போகிறேனா?" என்று வினவினாள் ராஜகுமாரி.

"இல்லை. உங்களை நாடி அவரும் வந்தாரல்லவா?"என்று இரண்டாவது தோழி கேட்டாள்.

ராஜ்யஸ்ரீ சிறிது சிந்தித்தாள். மகாராஜாவிடம் இதை தாயார் அந்தரங்கத்தில் தான் கேட்டிருப்பார்களென்றும், மற்றவை தோழிகளின் கற்பனை விலாசத்தில் உதித்தவை என்பதையும் புரிந்துகொண்ட ராஜகுமாரி, "வந்தாலென்ன? தேவகுப்தன் வரவில்லையா?" என்று விசாரித்தாள், வேண்டு மென்றே விவாதத்தை வளர்த்த.

முதல் தோழி சற்று இரைந்தே நகைத்தாள். "ராஜகுமாரி! தேவகுப்தன் வருவது வேறு, கிருகவர்மன் வருவது வேறு. முதல்வரை உங்கள் தமையனார் நீராட்டி விட்டார். இரண்டாமவர் வந்தபோது உங்களுக்கு யார் தலையீடும் இல்லையே!" என்றாள் நகைப்பின் ஊடே.



"அதனாலென்னவாம்?" என்று ராஜகுமாரி சிறிது கோபத்தைக் காட்டினாள்.

இரண்டாவது தோழியும் நகைத்தாள். "என்ன வென்பதைத் தெரிந்துகொள்ள மகாராணி ஆசைப் படுகிறார்கள்" என்றாள் மெதுவாக.

ராஜ்யஸ்ரீக்கு விஷயம் நன்றாகவே புரிந்தது. கிருக வர்மன் தன்னிடம் அத்துமீறி நடந்து கொண்டிருப்பானோ என்ற சந்தேகம் தாயாருக்கு எற்பட்டிருக்க வேண்டுமென்பதையும், அதை முன்விட்டே தாயார் தனது தந்தையிடம் பேசியிருக்க வேண்டுமென்பதையும் சந்தேகமில்லாமல் புரிந்துகொண்ட ராஜ்யஸ்ரீ, 'சே! சே! இப்படி ஒரு சந்தேகமா? அப்படியே அத்துமீறி நடந்து கொண்டிருந்தாலும் அவருடைய வருங்கால மனைவி யிடம்தானே நடந்துகொண்டிருப்பார். அதற்கு இவ்வளவு விவகாரமா?' என்று தனது தாயைக் கடிந்துகொண்டாள். 'அப்படியே இருந்தாலும் அத்துமீறி என்னதான் செய்திருப்பார்? அத்துமீறி என்றால் எதை நினைக்கிறாள் தாயார்?' என்று எண்ணமிட்ட ராஜ்யஸ்ரீ. 'ஐயையோ! அப்படியா சந்தேகப் படுகிறாள்?' என்று தனக்குள் கேள்விகளை எழுப்பித் தாயாரின் ஊகத்தாலும், சந்தேகத்தாலும் ஏற்பட்ட விபரீதங்களை எண்ணி உண்மையில் உள்ளம் பூரித்தாள். அப்படியே கிருகவர்மன் ஏன் நடந்துகொள்ளவில்லை என்றும் சினந்தாள். "சுத்தக் கோழை அவர்" என்று அவனை நிந்திக்கவும் செய்தாள். "இல்லை, அவர் கோழையில்லை, அவர் கைப்பட்ட வுடனேதான் இது நேர்ந்து விட்டதே. அதனால் நானே ஓடிவிட்டேனே" என்று நடந்ததை யெல்லாம் அணு அணுவாக நினைத்து மகிழ்ச்சி கொண்டாள். பருவம் அவள் உடலில் உணர்ச்சிகளைச் சுழலவிட்டது.

இப்படி அவள் சிந்தித்து, சிந்தனையால் உணர்ச்சிகளைத் தூண்டி மகிழ்ந்துகொண்டிருந்த சமயத்தில் மகாராணி தன்னுடன் மருத்துவரையும் கூட்டி வந்தாள். மகாராணி வந்ததும் தோழிகள் பறந்தனர். ராஜ்யஸ்ரீ முகத்தில் சினத்தைக் காட்டி, "அம்மா மருத்துவரை ஏன் அழைத்து வந்திருக்கிறாய்?" என்று வினவினாள்.

"குழந்தாய், இது அரசகுல சம்பிரதாயம்" என்று சப்பைக் கட்டு கட்டினாள் மகாராணி.

"அரசகுல சம்பிரதாயமா!" போலி வியப்பைக் காட்டினாள் ராஜ்யஸ்ரீ.

"ஆம் குழந்தாய். அரசகுமாரிகள் பெரியவர்களாகும் போது அவர்களைப் பரிசோதிப்பது மன்னர் குல வழக்கம்" என்ற மகாராணி, "மருத்துவரே! குழந்தையைப் பாருங்கள்" என்றாள்.

வயது எண்பதுக்குக் குறையாத மருத்துவர் அன்று காலை தீட்டிய விபூதியுடனும், குங்குமத்துடனும், கழுத்தில் மகாராஜா அளித்த ருத்திராட்சம் பதித்த கெட்டியான மகர கண்டியுடனும் ராஜ்யஸ்ரீ மீது அனுதாபப் பார்வையை வீசினார். "ஒன்று மிருக்காது. முகத்தில் அதற்கான குறிகள் ஏதுமில்லை" என்று பெரிய சரிகைத் துப்பட்டா முண்டாசு கட்டிய தலையை அசைத்தார். பிறகு ராஜ்யஸ்ரீயைக் கொலைப் பார்வையாகப் பார்த்தார் சில விநாடிகள். "கையைக் காட்டு அரசகுமாரி" என்று கூறி, அரசகுமாரி வலது கையை நீட்டியதும், "உம்..உம்.. பெண்கள் இடது கையைக் காட்ட வேண்டும்" என்று தனது வித்தைத் திறமையைப் புலனாக்கினார்.

அரசகுமாரி வேண்டா வெறுப்பாக இடது கையைக் காட்டியதும் மருத்துவர் தான் கொண்டு வந்திருந்த தமது மருத்துவ சஞ்சியிலிருந்து ஒரு பட்டை எடுத்து அரசகுமாரியின் கைமீது போட்டு இடது கையால் அவள் இடது



கையைப் பிடித்து வலது கையால் நாடியைப் பரிசோதிக்கலானார். ஏதோ பெரிய நாதசுர வித்வான்போல் அவள் கையில் தமது விரல்களை எடுத்தும் பதித்தும் பார்த்த மருத்துவர் கடைசியில் மகாராணியைப் பார்த்துப் புன்னகை செய்தார். "உங்கள் பயத்துக்குக் காரணம் இல்லை மகாராணி. இது இயற்கையாக ஏற்பட்ட மங்களந்தான். வாயு, பித்த, சிலேஷ்ம நாடிகள் சீராக இருக்கின்றன. குறுக்கே வேறு எந்தத் துடிப்பையும் காணோம்" என்று சாஸ்திர பூர்வமாக மகாராணியின் சந்தேகத்தைத் தீர்த்தார். அத்துடன் எழுந்திருந்த மருத்துவர் அரண்மனையில் தமக்கிருந்த செல்வாக்கைக் காட்ட ராஜகுமாரியைப் பார்த்து, "ராஜகுமாரி, உனக்கு விவாக காலம் வந்துவிட்டது, எங்களுக்கெல்லாம் விருந்து எப்போது?" என்று வினவினார். மகாராணியைப் பார்த்துச் சிரிக்கவும் செய்தார்.

வயது எண்பதையும் தாண்டிய அந்த வைத்தியருக்கும் இந்தப் புத்தி போகவில்லையென்பதால் மகாராணியின் உள்ளத்தே சிறிது சங்கடம் ஏற்பட்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல் ஒரு தோழியைப் பார்த்து "மருத்துவரை மகாராஜாவிடம் அழைத்துச் செல்லுங்கள். அங்கு அவருக்குச் சன்மானம் காத்திருக்கிறது" என்றாள்.

மகாராணி தன்னைத் துரத்துகிறாளென்பதைப் புரிந்து கொண்ட மருத்துவர் தனது மருத்துவ சஞ்சியை எடுத்துக் கொண்டு தோழியைப் பின்பற்றினார்.

மகாராஜா அவரைப் பார்த்து நகைத்துவிட்டு, தாம் பாளத்திலிருந்த வெற்றிலை பாக்கு பழத்துடன் நாலைந்து பொன் நாணயங்களையும் வைத்துக் கொடுத்தார். அவற்றை எடுத்து சஞ்சியில் கொட்டிக்கொண்ட மருத்துவர், "எல்லாம் சௌகரியமா யிருக்கிறது" என்று சொன்னார்.

"எனக்குத் தெரியும்" என்றார் மகாராஜா அலட்சியமாக.

"பின் ஏன் என்னை வரவழைத்தீர்கள்?" என்று மருத்துவர் வினவினார்.

"மகாராணிக்காக" என்றார் மகாராஜா.

"இல்லையே, அரசகுமாரியைத்தானே மகாராணி பார்க்கச் சொன்னார்கள்" என்று மருத்துவர் தமது முட்டாள்தனத்தைக் காட்டினார்.

மன்னர் மிக விஷமமாகச் சிரித்தார். "மருத்துவரே! மகாராணிக்கு இது நேரிட்டு நீண்ட காலமாகிறது" என்று விஷமம் ஒலித்த குரலிலும் சொன்னார்.

"தங்களுக்குத் தெரியாதது எதுவுமில்லை?"என்றார் மருத்துவர்.

"ஆம், ஆம். மகாராணி சம்பந்தப்பட்ட வரையில்" என்று இழுத்த மகாராஜா பெரிதாக நகைத்தார்.

மகாராஜாவுக்கு வயதாக ஆக இந்தச் சபலங்களும் தரக்குறைவான பேச்சும் அதிகமாவதை உணர்ந்த மருத்துவரும் தமது சாமர்த்தியத்தைக் காட்டத் தொடங்கி, "மகாராஜா இப்படிப் பேசக்கூடாது. தங்கள் பதவிக்கு இது தகுதியல்ல" என்றார்.

"பதவிக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?" என்று மகாராஜா வினவினார்.

"வேறு எதற்கும் இதற்கும் சம்பந்தம்?" என்று மருத்துவர் 'இதற்கும்' என்ற சொல்லை அழுத்தியே உச்சரித்தார்.

"ஆண்மகனுக்கும் பெண்ணுக்கும் உள்ள சம்பந்தம். இது தோட்டி முதல் தொண்டமான் வரை எல்லோருக்கும் பொது. புரிகிறதா மருத்துவரே?" என்று மகாராஜா மீண்டும் நகைத்தார்.

"புரிகிறது, புரிகிறது" என்றுசொல்லிக்கொண்டே விடைபெற்ற மருத்துவர் மன்னரின் அறைக்கு வெளியே



வந்ததும், "இத்தனை வயதாகியும் மன்னருக்குச் சபலபுத்தி போகவில்லை" என்று முணுமுணுத்துக்கொண்டு நடையைக் கட்டினார்.

இப்படிப்பட்ட சிந்தனையில் திளைத்து உப்பரிகை யிலிருந்து இறங்கிய மருத்துவர் கீழ்த்தளத்துக்கு வந்ததும் "மருத்துவரே!" என்ற அதிகாரக் குரல் அவரைத் தடுத்தது.

மருத்துவர் திரும்புவதற்குள் அவரது கையைப் பலமான ஒரு கை பிடித்து, "இப்படி வாரும்" என்று அழைத்துச் சென்றது.

திரும்பி நோக்கிய மருத்துவர், கிருகவர்மன் தன்னை இழுப்பதைப் பார்த்து,"மாப்பிள்ளை! பயப்பட வேண்டாம். எல்லாம் சாதாரணமாயிருக்கிறது" என்றார்.

"பேசாமல் வாரும்"என்று அதட்டி அவரைத் தனது அறைக்குள் இழுத்துச் சென்ற கிருகவர்மன், "மருத்துவரே! நீர் வந்த காரணம் எனக்குத் தெரியும்" என்றான்.

"மருத்துவர் ஏதுமறியாத பூனைபோல் பார்த்தார் கிருக வர்மனை. "என்ன காரணமோ" என்று வினவினார்.

"என்மீது மகாராணிக்குச் சந்தேகமாம்" என்றான் கிருகவர்மன்.

"இயற்கைதானே.." மருத்துவர் இழுத்தார்.

"என்ன இயற்கை?"

"மாப்பிள்ளை.."

"உம்."

"நீரும் ராஜ்யஸ்ரீயும் நந்தவனத்தில் தனித்து இருந்திருக்கிறீர்கள்.."

"ஆமாம். அதனாலென்ன?"

"இருவருக்கும் இளம் வயது."

"சொல்லும்."

"அதில்.. தவறுகள் நேருவது இயற்கை.."

"என்ன தவறு நேர்ந்துவிடும்?" கோபத்துடன் கேட்டான் கிருகவர்மன்.

"சங்கடமான கேள்வி" என்றார் மருத்துவர்.

"இதில் சங்கடமென்ன இருக்கிறது?" என்று கிருகவர்மன் கேட்டான்.

"தங்களுக்கில்லை மாப்பிள்ளை. ஒருவேளை பெண்ணுக்கு இருக்குமோவென்று மகாராணிக்குச் சந்தேகம்.." இடக்காகப் பேசினார் மருத்துவர்.

"பெண்ணை என்ன செய்துவிடுவேன்? கடித்தா தின்று விடுவேன்?" என்று கிருகவர்மன் சீறினான்.

"அதைத் தீர்மானிக்கத்தான் மகாராணி என்னை அழைத்தார்கள்" என்ற மருத்துவர், "மாப்பிள்ளை, சஞ்சலம் வேண்டாம். உம்மால் எதுவும் இல்லை. இயற்கைதான் என்று நான் நற்சாட்சி கொடுத்துவிட்டேன்" என்று புன்முறுவல் செய்தார் மருத்துவர்.

"சரி நீங்கள் செல்லலாம்" என்ற கிருகவர்மன் அவர் சென்றதும் அறைக் கதவைச் சாத்திவிட்டுப் படுத்தான்.

அப்பொழுது நுழைந்த அரண்மனைக் காவலன் ஒருவன், "கன்னோசி மன்னரே! உங்கள் புரவி சேணமிட்டு நிற்கிறது. உங்கள் மெய்க்காவலரும் சித்தமாகிவிட்டனர்" என்று அறிவித்தான்.

கிருகவர்மன் சினத்தின் உச்சியை அடைந்தான். "எதற்கு?" என்று வினவினான்.

"பயணத்துக்கு." காவலன் தலைவணங்கி பதில் சொன்னான்.



"பயணப்படுவதாக யார் சொன்னது?" என்று கிருகவர்மன் வினவினான்.

"மகாராணியார்" என்றான் காவலன்.

"நான் புறப்பட உத்தேசமில்லை."

"ஏன்?"

"மகாராஜா உத்தரவு."

"அப்படியா!"

"ஆம்."

"எனக்குத் தெரியாது மன்னவா, மன்னிக்க வேண்டும்" என்ற காவலன் வெளியே சென்றான்.

கிருகவர்மன் விடாப்பிடியாக இரண்டு நாள் தங்கினான் தானேசுவரத்தில். மூன்றாவது நாள் மாலை கிளம்பினான். கிளம்புமுன்பு ராஜ்யஸ்ரீயை அவளது அறையிலே சந்தித்தான். புஷ்பவதியாகி அன்றே நீராடிய ராஜ்யஸ்ரீ அன்று புது மெருகுடன் விளங்கினாள். மகாராணி பெண்ணுக்கு அன்று மிக நன்றாக அலங்காரம் செய்திருந்தாள். அன்று ராஜ்யஸ்ரீயின் விழிகளில் ஏதோ ஒரு புதுமை இருப்பதாகத் தோன்றியது கிருகவர்மனுக்கு, அவளை விழுங்கி விடுவதுபோல் பார்த்தான்.

அவள் விழிகளும் அவனை ஒரு விநாடி சந்தித்து நிலத்தில் தாழ்ந்தன. அருகிலிருந்த தோழிகளைக் கடைக்கண்ணால் பார்த்தாள் ராஜ்யஸ்ரீ. தோழிகள் வெளியே விரைந்தனர். கிருகவர்மன் புஷ்பவதியாகி நின்ற அந்தப் புதுமலரை நெருங்கி அவள் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு "வருகிறேன் ராஜ்யஸ்ரீ" என்றான்.

என்றுமில்லாதபடி ராஜ்யஸ்ரீயின் கைகள் துடித்தன, அவன் கரங்களில். விரல்கள் அவன் விரல்களுடன் பின்னின. "உடனே போக வேண்டுமா" என்று மெதுவாகக் கேட்டாள் அவள்.

"ஆம், ராஜ்யஸ்ரீ. இன்னும் ஒரு விநாடி இருந்தால் மகாராணி என்னைத் துரத்திவிடுவாள்" என்றான் கிருகவர்மன்.

அவள் விழிகள் துடித்து அவனை நோக்கின. "அம்மா எதாவது வித்தியாசமாக நடந்து கொண்டாளா? மரியாதைக் குறைவாக ஏதாவது நடந்ததா?" என்ற சொற்கள் துடித்த உதடுகளிலிருந்து உதிர்ந்தன.

"அப்படியொன்றுமில்லை" என்ற கிருகவர்மன் அவள் உதடுகளைத் தனது இரு விரல்களால் தடவினான்.

"எதையோ மறைக்கிறீர்கள்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

"எதையும் மறைக்கவில்லை, ஆனால் மாமனார் வீட்டில் மூன்று நாட்களுக்குமேல் இருக்கக்கூடாது என்று சாஸ்திரம் இருக்கிறது."

"சாஸ்திரமா?" என்று அவள் வினவினாள்.

"எதற்கும் சாஸ்திரம் இருக்கிறது" என்ற கிருகவர்மன் அவளை நன்றாக நெருங்கி அவள் காதில் சொன்னான், "காமத்துக்கும் சாஸ்திரம் இருக்கிறது" என்று.

வெட்கமும் வேட்கையும் கலந்த உணர்ச்சிகள் அரச குமாரியின் உடலை ஊடுருவிச் சென்றன. அவள் மெள்ளக் கேட்டாள் "எப்பொழுது" என்று.

"இன்னும் மூன்று மாதங்கள் என்கிறார் உன் தந்தை. ஆனால் அத்தனை நாள் காத்திருக்க எனக்குப் பொறுமையில்லை. சீக்கிரம் வந்துவிடுவேன்" என்றான் கிருகவர்மன்.

அவள் பதிலுக்கு தன் விரல்களுடன் இணைந்த அவன் விரல்களை அழுத்தினாள்.

விரல்கள் சொன்ன கதை ஒன்று. அது வேட்கையின் கதை.

# 10

## புரியும்போது புரியும்

பூத்து விரிந்த மலராக எதிரே நின்ற புஷ்பவதி ராஜ்யஸ்ரீயின் மென்மையான மலர் விரல்கள் தனது முரட்டு விரல்களுடன் பின்னி அவற்றை நெரித்தபோது, வாளேந்தியதால் காய்த்துப்போய் வடுக்கள் விழுந்திருந்த தனது முரட்டு விரல்கள் கூடச் சிறிது வலித்ததை எண்ணிய கிருகவர்மன் பேசினானில்லை. விரல்கள் சொன்ன கதையை ஊகித்தும் உணர்ந்தும் நின்றான் பல விநாடிகள். "இப்பொழுதே என்னை அழைத்துப் போய்விடு" என்று விரல்கள் விரகக் கதையைச் சொன்னதாகக் காமத்தின் வசப்பட்ட அவன் இதயத்துக்குத் தோன்றியது. அவன் விரல்களும் அவள் விரல்களைச் சற்று வலி எடுக்கும் வண்ணம் நொறுக்கின. அந்த வலியால் எத்தனை ஆனந்தம் அவளுக்கு. 'இன்னும் என் உடலையே ஏன் நொறுக்கவில்லை இவர்?' என்று உள்ளூரக் கடிந்துகொண்டாள் கிருகவர்மனை அந்த ஏந்திழை.

அவள் எண்ணத்தை, எண்ணத்தில் விரிந்த வேட்கையை கன்னோசி அரசனும் புரிந்துகொண்டிருக்க வேண்டும். ஆகையால் அவளிடமிருந்து நன்றாக எட்டி நின்று கையைப் பிடித்தவன் மெதுவாக முன்னேறினான் இரண்டடிகள்.

அதனால் அவன்மீது உராய்ந்த அவள் பட்டுச் சேலைக்கும் ஏதோ உணர்ச்சி இருப்பதாகப் பட்டது கிருகவர்மனுக்கு. ஆகவே அவன் அவள் ஒரு கை விரல்களை விட்டுத் தனது விரல்களை நீக்கி அந்த விரல்களை அவள் தோள்மீது வைத்து அவள் கண்களுடன் தனது விழிகளை உறவாட விட்டான். அந்தக் கண்களில் மூன்றுநாட்களுக்கு முன்பு இருந்ததைவிட அதிகப் புதுமை ஏதோ இருப்பதாகத் தோன்றியது கிருகவர்மனுக்கு.

சாதாரணமாகவே வெட்கம் சொட்டும் கண்கள் அன்று அதிக வெட்கத்தைக் கொட்டின. வெட்கத்தோடு ஒரு சலனமும், லேசாக வெறியும் கலந்திருந்ததாக நினைத்தான் கிருகவர்மன். சாதாரணமாகவே பொன் நிறமுள்ள அவள் வழவழத்த புஷ்டியான கன்னங்களின் மத்தியில் குங்குமம் தீட்டப்பட்டது போல் ஒரு ரத்தச் சிவப்பு தெரிந்தது. நெற்றிகூடச் சிறிது சிவந்து கீழே இருந்த செவ்விய அதரங்களுடன் போட்டி போட்டது. 'அதரங்கள்! அதரங்களா அல்லது ரத்தினங்களா? ரத்தினத்தின் நீரோட்டத்தையும் அந்தச் சிவப்பு தோற்கடிப்பதன் காரணம் என்ன? அவை ஏன் லேசாகக் கோடிகளுக்கு இழுபட்டுத் துடிக்கின்றன? அந்தத் துடிப்பை நிறுத்த, அவளுக்குத் துணிவூட்ட நான் என்ன செய்ய வேண்டும்?' என்று எண்ணிய கிருகவர்மன் அவளை மேலும் நெருங்கி, "ராஜ்யஸ்ரீ" என்று மெதுவாக ஒருமுறை அழைத்தான்.

"உம்!" இந்த ஒலிதான் கிளம்பியது பதிலுக்கு.

"உன் உதடுகள்..." சொற்களை முற்றிலும் உதிர்க்க முடியாமல் தவித்தான் கிருகவர்மன்.

"ஆம்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

"என்ன ஆம்?"

"உதடுகள்."



"உதடுகள் தான் ஏன் துடிக்கின்றன? உடலுக்கு ஏதாவது?"

"ஆம்."

"ஏதாவது செய்கிறதா!"

"ஆம்."

"இந்த ஆமைத்தவிர வேறு எதுவும் தெரியாதா உனக்கு?"

"தெரியவில்லை."

"தெரியவில்லையா?"

"புரியவில்லை."

"புரிவில்லையா?"

"ஆம்."

"என்ன புரியவில்லை?"

"எனக்கு என்ன செய்கிறதோ தெரியவில்லை."

"வைத்தியரை வரவழைக்கட்டுமா?"

"வேண்டாம்."

"ஏனாம்."

"வைத்தியர் எதிரிலேயே இருக்கிறார்."

கிருகவர்மன் சுற்று முற்றும் பார்த்தான். யாருமில்லாதது கண்டு, "ராஜ்யஸ்ரீ!" என்று கடுமையுடன் அழைத்தான்.

"என்ன?" என்று புன்முறுவல் செய்தாள் அவள்.

அவள் தோள்மீதிருந்த இடதுகை விரல்கள் அவள் தோளை இறுக்கிப் பிடித்தன.

"இங்கு யாரையும் காணோமே?" என்று கேட்டான் அவன்.

"நீங்கள் இல்லையா?" என்று சிறிது தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டாள் அவள்.

"நானா!" அவன் பிரமித்தான்.

"ஆமாம்."

"நான் என்ன செய்ய முடியும்?"

"ஐயோ, என் மானம் போகிறது. இது என்ன கேள்வி?"

"அப்படி என்ன சொல்லிவிட்டேன்?" என்று கிருகவர்மன் கேட்டு அவளை நெருங்கி அவள் உடலுடன் தனது உடல் நெருங்கிப் படும்படி நின்றான்.

அவன் அவயவங்கள் தன்மீது பட்டதால் அடியோடு நிலைகுலைந்த தானேசுவரன் மகள் அவனை நோக்கித் தனது தலையை உயர்த்தி, "நீங்கள் கேட்ட கேள்வி விசித்திரமாயிருக்கிறது" என்றாள்.

"என்ன விசித்திரம் அதில்?" என்று கிருகவர்மன் வினவினான்.

"நீங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்கவில்லையா?" என்று அவன் முகத்தின்மீது தனது முகத்தை நெருக்கிப் பேசினாள் ரகசியமாக.

"கேட்டேன்." அவனும் தலைகுனிந்து அவள் காதில் ரகசியம் பேசினான்.

"அது ஒரு பைத்தியக்காரக் கேள்வி" என்றாள் ராஜ்யஸ்ரீ. ரகசியம் சொல்லும் சாக்கில் உதடுகளை அவன் கன்னத்தில் மெல்லப் படும்படி செய்தாள்.

"என்ன! பைத்தியக்காரக் கேள்வியா?" என்ற அவன் தனது கன்னத்தைத் திருப்பி அவள் இதழ்களைத் தனது இதழ்களால் மேல்வாரியாகத் தடவினான்.



"வேறென்ன? வேறு யார் எனக்கு..." இழுத்தாள் ராஜ்யஸ்ரீ. அவள் உடலெங்கும் உணர்ச்சி பிரவகித்துக் கொண்டிருந்தது.

"உனக்கு...?"

"வைத்தியம் செய்ய முடியும்." அவள் மென்று விழுங்கினாள்.

"மருத்துவர்?" என்றான் கிருகவர்மன்.

"இந்த வியாதிக்கு நீங்கள்தான் மருத்துவர்" என்ற ராஜ்யஸ்ரீ தனது பூவுடலை நின்ற நிலையில் அவன்மீது சிறிது அதிகமாகவே அழுத்தினாள்.

அவள் புஷ்பத் தொடைகள் அவன் தொடைகளுடன் உராய்ந்தன. அவள் மார்பின் எழுச்சிகள் அவன் மார்பைத் தொட்டன. தொட்டதால் துடித்தன. கால்களைச் சிறிது எழுப்பி அவள் தனது கட்டை விரல்களால் நின்றாள், இருவர் உயரத்தையும் சரி செய்துகொள்ள. அந்த நிலையில் அவன் கண்களை உற்றுப் பார்த்தாள். அந்தப் பார்வை அவன் ஆத்மாவையே ஊடுருவிப் பார்ப்பது போல் தெரிந்தது கிருகவர்மனுக்கு. அவன் தனது உதடுகளுக்கு எதிரேயிருந்த அவள் இதழ்களைச் சற்று அதிகமாகவே அழுத்தினான். அவள் வலது கை விரல்கள் பிணைந்த நிலையிலேயே அவன் விரல்களை மீண்டும் நெரித்தன. பிறகு அவன் விரல்களை விடுதலை செய்தன. விடுதலை செய்யப்பட்ட அவன் கை கீழே இறங்கி அவள் மலர்த் தொடையொன்றைத் தொட்டது.

உணர்ச்சியின் எல்லைக்குச் சென்றாள் ராஜ்யஸ்ரீ. அவள் மேலாடை சிறிது சரிந்து ஒரு பக்கத்தின் எழிலை விளக்கமாகக் காட்டியது. அது முன்னைவிட சற்று அதிகமாகப் பருத்திருப்பதாகத் தோன்றியது கிருகவர்மன் காமக் கண்களுக்கு. மூன்று நாட்களுக்குள் அது எப்படிப்

பெரிதாக முடியும் என்று உள்ளூர எண்ணமிட்ட அவன் அதன் அழகையும் ஈர்க்கும் சக்தியையும் தவிர்க்க முடியாமல் அவள் மேலாடையை எடுத்துத் தோள்மீது வைத்தான். ஆனால் வழவழத்த அந்த துஷ்டக் காசிப்பட்டு மறுபடியும் வழுக்கி விழுந்து அவள் தொடையில் பதிந்திருந்த அவன் கையை மூடிவிட்டது.

அதை ராஜ்யஸ்ரீ உணரவே செய்தாள். "இந்தச் சேலைக்கு என்ன இத்தனை துர்ப்புத்தி? இதன் உள்ளத்தையும் இவர் விலைக்கு வாங்கிவிட்டாரா? மறைவைச் செய்து கொடுக்கிறதே அட துஷ்ட சேலையே!" என்று கடிந்துகொண்டாளே தவிர, அதைச் சரிசெய்ய முயலவில்லை அந்த உன்மத்தக்காரி.

சேலையால் மறைக்கப்பட்ட கை ஒரு தொடையிலிருந்து மற்றொரு தொடைக்குத் தாவியது. இடையையும் வருடியது. "ராஜ்யஸ்ரீ!" என்று உணர்ச்சிப்பெருக்கால் அழைத்தான் கிருகவர்மன்.

அவள் பதில் சொல்லவில்லை. கண்ணோடு கண் இணைந்தால்தான் வாய்ச்சொல் யாதும் பயனில என்று வள்ளுவர் சொன்னார். ஆனால் அந்த நியதி காலுக்கும் உண்டு. கையால் ஏற்படும் ஸ்பரிசத்துக்கும் உண்டு என்பதை அந்த இருவரும் அன்று நிதர்சனமாகப் புரிந்து கொண்டார்கள். அவனும் பேச்சை இழந்தான். மௌனமாகவே இருவரும் நெருங்கி, நின்ற நிலையிலேயே சங்கடப்பட்டார்கள். அந்த வேதனை சகிக்க முடியாத வேதனைதான். பூர்த்தி செய்துகொள்ள முடியாத வேட்கைதான். இருப்பினும் அந்த வேதனையிலும் திருப்தி இருந்தது. மூன்று நாட்களுக்கு முந்தி இருந்த ராஜ்யஸ்ரீக்கும் அன்றைய ராஜ்யஸ்ரீக்கும் உள்ள வித்தியாசத்தை அவன் அறிந்துகொள்ள இஷ்டப்பட்டான். "ராஜ்யஸ்ரீ! உன்னிடம்



இன்று ஏதோ புதுமையைப் பார்க்கிறேன்" என்றான் கிருகவர்மன்.

"உம் உம். பார்ப்பீர்கள். பார்ப்பீர்கள். புதுமைதான்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

"என்ன புதுமை?" என்று அவன் கேட்டான்.

"சொல்ல முடியாத புதுமை" என்றாள் அவள்.

"ஏன் சொல்ல முடியாது?" என்று அவன் வற்புறுத்திக் கேட்டான்.

"காரணம் இருக்கிறது" என்றாள் அவள்.

"என்ன காரணமோ?"

"காலத்தில் புரியும் உங்களுக்கு."

"கொஞ்சநாள் கழித்துத்தான் சொல்வாயா?"

"கொஞ்சநாள் கழிக்கலாம். சொல்ல அவசியமில்லை!"

"ஏன்?"

"உங்களுக்கே புரியும்?"

"கொஞ்சம் கோடி காட்டமாட்டாயா ராஜ்யஸ்ரீ?"

"இது சொல்லித் தெரிவதில்லை" என்றாள் ராஜ்யஸ்ரீ. பிற்காலத்தில் தமிழ் நாட்டில் ஒரு பெரும் கவி வருவான். அவன் பாடுவான், "சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை" என்று அவள் அன்று புரிந்துகொள்ளவில்லை.

தமிழ்ப்பாட்டையும், தமிழ் இன்பத்தையும் அறிந்து கொள்ள அன்று ராஜ்யஸ்ரீ கொடுத்து வைக்கவில்லை. ஆனால் கவியின் சூட்சுமத்தை அனுபவிக்க மட்டும் செய்தாள். கவிகள் என்றால் தீர்க்கதரிசிகள். முன்னோக்கிப் பார்ப்பவர்கள் என்று கூறுவதுண்டு. ஆனால் அவர்கள் பின்னோக்கியும் பார்க்க முடியும் என்பதைக் கவிதைகள்

எடுத்துக் காட்டின. அன்று ராஜ்யஸ்ரீ கிருகவர்மன் இருவர் நிலையும் கவிதை நிலையில் தான் இருந்தது. உட்கருத்து, உள் உணர்ச்சிகள் இரண்டும் அதிகம் வெளியில் தெரியா விட்டாலும் இருவரிடமும் வேகம் மிகுந்து நின்றது. வேகம் வெட்கத்தை மெள்ள மெள்ள அவிழ்க்க முற்பட்டது. சூழ்நிலையை அறவே மறந்த இருவரும் பரஸ்பர அணைப்பில் ஆழ்ந்தனர். அவன் கைகள் அவள் உடலின் ஆராய்ச்சியில் இறங்கின. விஷயம் முற்றுவதை அறிந்த இரு தோழிகள் சாளரத்தின் மூலையிலிருந்து அகன்றனர். மகாராணியிடம் ஓடி, "மகாராணி, மகாராணி" என்று கூவினார்கள் பதட்டத்துடன்.

"என்னடி நேர்ந்துவிட்டது?" என்று மகாராணி கேட்டாள்.

"அதுதான்" என்றாள் ஒருத்தி.

"அது என்றால்?" என்றாள் இன்னொருத்தி.

"மாப்பிள்ளை..." என்றாள் முதல் தோழி.

"என்ன அவருக்கு?" மகாராணி உஷ்ணத்துடன் கேட்டாள்.

"ராஜகுமாரியின் அறையில் இருக்கிறார்" என்றாள் மற்றொரு தோழி.

"விடைபெற வந்திருப்பார்."

மகாராணி திடமாகச் சொன்னாலும் அதிக திடம் தெரியவில்லை அவள் குரலில்.

"விடை பெறுவதாகத் தெரியவில்லை" என்றாள் முதலில் பேசிய தோழி.

மகாராணி மேற்கொண்டு கேள்வி ஏதும் கேட்கவில்லை. தனது மேலாடையை எடுத்து முக்காடிட்டுக் கொண்டு மகளின் அறையை நோக்கி வேகமாக நடந்தாள். சாளரம்



திறந்துதானிருந்தது. தோழிகள், இல்லாததைக் கற்பனை செய்ததாக நினைத்த மகாராணி, சாளரத்தின் மூலம் பார்த்தாள்.

கிருகவர்மன் ராஜ்யஸ்ரீயை தனது கைகளில் தூக்கிக் கொண்டு எதிரே தெரிந்த பஞ்சணையை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அப்பொழுது நகைத்த ராஜ்யஸ்ரீ, "புரியும் போது எப்படியும் புரியும்" என்றாள் சற்று பலமாகவே.

"என் பெண் இவ்வளவு வெட்கங்கெட்டவளா! பட்டப் பகலில்..." மகாராணியால் மேற்கொண்டு சிந்திக்கவும் சக்தியில்லை.

# 11

# சோதிடருக்குப் புரிந்தது

தலையில் முக்காடிட்டு, திறந்த சாளரத்தின் மூலம் ராஜ்யஸ்ரீயின் அறைக்குள்ளே பர்த்ததும், அங்கு தனது கண்களுக்கு எதிரே விரிந்த காட்சியைக் கண்டு, வெல வெலத்துப்போனாள் மகாராணி. தனது மகளை, புஷ்பவதியாகி அன்றே நீராடிய புதுமலரை, கிருகவர்மன் கைகளில் தூக்கிக் கொண்டு, பஞ்சணையை நோக்கி நடப்பதைப் பார்த்துப் பெரும் பிரமிப்பை அடைந்தாலும் ஏதும் செய்ய இயலாத மகாராணி நின்ற இடத்திலேயே சிலையென நின்றுவிட்டாள். கிருகவர்மன் அவளைக் கைகளில் தூக்கிக்கொண்டு நடந்தபோது ராஜ்யஸ்ரீ தனது இரு கைகளாலும் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டதையும் ஒரு காலையும் சமாளித்துத் தூக்கி அவன் தோளில் போட முயன்றதையும் பார்த்த மகாராணி, தனது மகள் அடியோடு வெட்கத்தை விட்டுவிட்டதையும், அடுத்த சில விநாடிகளில் எதுவும் நேரலாமென்பதையும் உணர்ந்து கொண்டாள். அந்தச் சமயத்தில்தான் கிருகவர்மன் தனது திட மனத்தையும், எந்தச் சமயத்திலும் பண்பைக் கைவிடாத உறுதியையும் காட்டினான்.



பஞ்சணையை நோக்கி நடக்கையில் ராஜயஸ்ரீ தனது கழுத்தை இரு கைகளால் வளைத்தது மிக இன்பமாயிருந்ததென்றால், தனது வலது கைகளில் நீண்டு கிடந்த ஒரு காலை அவள் தனது தோள்மீது போட அவன் இடம் கொடுத்தானில்லை. அந்தக் கால்மீது குனிந்து தனது இதழ்களைப் புதைக்கவே செய்தான். பிறகு பஞ்சணையை நெருங்கி அவளை லேசாகப் படுக்க வைத்தான். ஆனால் அவன் பஞ்சணையை நெருங்கி நின்றானே தவிர அதில் உட்காரவும் முயலவில்லை. அவளைப் படுக்க வைத்ததும் அவளது காலை மறைத்த சேலைகளைத் தூக்கிப் பருவத் தொடையொன்றில் தனது இதழ்களைப் பொருத்தினான். அந்தச் சமயத்தில் உணர்ச்சிப் பெருக்கால் நெளிந்து அவன் தலையை அழுத்திவிட முயன்ற ராஜ்யஸ்ரீயின் கைகளை விலக்கி எழுந்து நின்று அவளை நோக்கினான்.

பஞ்சணையில் ராஜ்யஸ்ரீ மன்மதனுடைய பஞ்ச பாணங்களையும் ஏந்திக் கிடந்தாள். அவள் ஒவ்வொரு பகுதியும் காமனின் ஒரு மலரம்பாக மாறி கிருகவர்மன் மீது பாய்ந்தன. ஆனால் காமனின் ஐந்து கணைகளையும் அவள் ஒருங்கே இணைத்துக் கொண்டதாக கிருகவர்மன் கருதினான்.

“தாமரை முகம், பங்கஜ விழிகள், பங்கஜத்தின் இரண்டு இதழ்களைச் சேர்த்துவிட்டது போன்ற உதடுகள், மார்பின் இரு பலமான தாமரை மொட்டுகள், தாமரையினும் மென்மையான மலர்த்தொடைகள், பங்கயப் பாதங்கள், எல்லாமே தாமரை தானே? இவற்றில் ஐந்து கணைகள் ஏது?” என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான். கேட்டுக் கொண்டதோடு நில்லாமல் ஒவ்வொரு தாமரையை தனது கைகளால் தொட்டு அவற்றின் மென்மையையும் கடினத்தையும் ஆராய்ந்தான். கடைசியில் அவன் மார்பினிடமும், பருவ மலர்த்தொடைகளிடமும் வந்தபோது சிறிது நின்றான்.

இவற்றையெல்லாம் சாளரத்தின்மூலம் பார்த்த மகாராணியும் உணர்ச்சிப் பெருக்கால் கலங்கினாள். "இவள் தந்தையும் இந்தமாதிரிதான் என்னையும் இம்மசைப் படுத்தினார். ஆண்களாவது! மிருகங்கள்!" என்று தனது பழைய நினைவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொண்டாள். ஆனால் அவள் கிருகவர்மனை ஒரு விஷயத்தில் பாராட்டினாள். அவன் கட்டிலில் உட்காரக்கூட இல்லாததையும், எட்ட நின்றுகொண்டே சின்னஞ்சிறு லீலைகளில் ஈடுபடுவதையும் கண்டு, 'மகாராஜாவைவிட இவன் எவ்வளவோ நல்லவன், அவராயிருந்தால் இத்தனை நேரம்...' என்று நினைத்துக்கொண்டே போனவள் சிந்தனையைச் சட்டென்று கத்தரித்துக்கொண்டாள். அந்தச் சமயத்தில் கிருகவர்மன் ராஜ்யஸ்ரீ மீதிருந்த தனது முகத்தை எடுத்து "ராஜ்யஸ்ரீ! நான் கிளம்ப நேரமாகி விட்டது" என்றான்.

"அப்படியா?" என்று கேட்ட ராஜ்யஸ்ரீ திரும்பி ஒருக்களித்துப் படுத்து அவன் கையொன்றைப் பற்றித் தன்மீது வைத்துக்கொண்டாள்.

"ஆமாம் ராஜ்யஸ்ரீ, புரவி சேணமிட்டு சித்தமாக வாசலில் நிற்கிறது."

"அதனாலென்ன?" அவன் புறப்பாட்டில் இஷ்டமில்லாத ஒலி அவள் கேள்வியில் இருந்தது.

"மெய்க்காவலரும் சித்தமாகிவிட்டார்கள்" என்று கூறிப் புன்முறுவல் செய்தான் கிருகவர்மன்.

"ஏன்? உங்கள் மெய்க்காவலர் காத்திருக்க மாட்டார்களோ?" என்று கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

"காத்திருப்பார்கள். ஆனால் அரண்மனைக் காவலர் காத்திருக்கமாட்டார்." இதைச் சொல்லிலேசாக நகைத்தான் கிருகவர்மன்.



அரசகுமாரியின் புருவங்கள் அவள் நுதலில் மேலே ஏறின ஏதோ கேள்வி கேட்பதற்கு அறிகுறியாக. "யார் அது அரண்மனைக் காவலர்?" என்று கேள்வியே கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

கிருகவர்மன் புன்முறுவல் செய்தான். "இந்த அரண்மனை முழுவதுக்கும் காவலர்?" என்றான் புன்முறுவலின் ஊடே.

"யார் மகாராஜாவா?"

"இல்லை."

"வேறு யார்?"

"மகாராஜாவையும் ஆட்டிப் படைப்பவர்."

"அப்படியொருவர் உண்டா தானேசுவர அரண்மனையில்?"

"உண்டு."

"விளக்கிச் சொல்லுங்கள்."

"உன் தாயார், மகாராணி."

ஒருக்களித்த நிலையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள் ராஜ்யஸ்ரீ. "என்ன, என் தாயாரா?" என்று வினவினாள். வியப்புடன்.

"ஆமாம், மூன்று நாட்களாக என்னை ஊருக்கு விரட்ட முயலுகிறார்கள்" என்றான் கிருகவர்மன்.

"ஏன்?" ராஜ்யஸ்ரீயின் குரலில் கவலை உதித்தது.

இதை கிருகவர்மன் கவனிக்கவே செய்தான். "கவலைக்குக் காரணமில்லை ராஜ்யஸ்ரீ. உன் நன்மையை முன்னிட்டுத்தான் உன் தாயார் என்னை விரட்டுகிறார்கள்" என்று விளக்கவும் செய்தான்.

"உங்களையும் என்னையும் எதற்காகப் பிரிக்க வேண்டும் அவள்?"

"பஞ்சையும் நெருப்பையும் அருகில் இருத்த மகாராணி அச்சப்படுகிறார்கள்."

"ஏன்?"

"பற்றிக் கொள்ளும்."

"எது?"

"பஞ்சு."

"பஞ்சா?"

"ஆம், நீ."

"நீங்கள்?"

"நெருப்பு" என்ற கிருகவர்மன், "ஆனால் அது தவறு ராஜ்யஸ்ரீ" என்றும் சொன்னான்.

ராஜ்யஸ்ரீ நகைத்தாள். "நல்ல வேடிக்கை. என்னைத் தொட்டுப் பாருங்கள். நான் பஞ்சு மாதிரியா இருக்கிறேன்?" என்றாள் அவள் நகைப்பின் ஊடே.

கிருகவர்மன் அவள் மார்பில் லேசாகக் கையை வைத்து, "இல்லை. நீ இரும்பாகிவிட்டாய்" என்றான்.

"இரும்பு நெருப்பில் பற்றிக்கொள்ளுமா?" என்று ராஜ்யஸ்ரீ கேட்டாள்.

"பற்றிக்கொள்ளாது" என்றான் கிருகவர்மன்.

"அப்படியானால் நீங்கள் இப்பொழுது போவானேன்?" என்று ராஜ்யஸ்ரீ வினவினாள்.

"முறைப்படி திரும்பி வர" என்ற கிருகவர்மன் அவள் கன்னத்தில் கையை வைத்து நிமிண்டினான். "ராஜ்யஸ்ரீ! சம்பிரதாயங்கள் சடங்குகள் என்று வைத்திருக்கிறார்கள்.



அவற்றுக்கு எல்லோரும் அடிமை. உன் தந்தை தாய் இருவரும் கூடத்தான். நமக்குள் திருமணம் முடிந்தபிறகு நம்மைக் கேட்பாரில்லை" என்று சொன்னான். மறுபடியும் அவள் கன்னத்தை நிமிண்டினான், சற்று அதிகமாகவே.

"கையை எடுங்கள், வலிக்கிறது" என்ற ராஜ்யஸ்ரீயின் வேண்டுகோளுக்கு இணங்கிக் கையை எடுத்த கிருகவர்மன் தான் நிமிண்டிய இடம் சிவந்து குங்குமப் பொட்டு மாதிரி காட்சியளிப்பதைக் கண்டான்.

அதனால் மனம் நெகிழ்ந்த அவன் குனிந்து அவள் கன்னக் குங்குமப் பொட்டுக்குத் தனது இதழ்களால் வைத்தியம் செய்தான். "என்ன செய்கிறீர்கள்?" என்று மெதுவாகக் கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

"காயமடைந்த இடத்துக்கு வைத்தியம் செய்கிறேன்" என்றான் கிருகவர்மனும் ரகசியமாக. "வேறு எங்காவது?" என்று மந்திரமும் ஓதினான் அவள் காதில்.

"எங்காவது என்ன?" ராஜ்யஸ்ரீயும் மிக மெதுவாகக் கேட்டாள்.

"காயம் இருக்கிறதா?"

"இருந்தால்?"

"வைத்தியம் செய்வேன்."

"இந்த மாதிரியா?"

"இதற்கென்ன?"

"ஒன்றுமில்லை. ஒரே ஒரு வைத்தியந்தான் தெரியுமா உங்களுக்கு என்பதற்காகக் கேட்டேன்" என்ற ராஜ்யஸ்ரீ அவன் கண்களைத் தைரியமாகச் சந்தித்தாள்.

கிருகவர்மன் அவள் முன்பு சிரித்துக்கொண்டு நின்றான். திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு, "நேரமாகிறது.

வருகிறேன் ராஜ்யஸ்ரீ" என்று கூறிவிட்டுத் திரும்ப முயன்றான்.

கட்டிலிலிருந்து எழுந்த ராஜ்யஸ்ரீ அவன் கையைப் பிடித்து நிறுத்தினாள். "ஏன் ஓடுகிறீர்கள்?" என்று வினவினாள்.

சாளரத்தைப் பார்த்த ராஜ்யஸ்ரீ திகிலடைந்தாள். "இத்தனை நேரம் திறந்தா இருந்தது?" என்று அச்சத்துடன் கேட்டாள்.

அத்துடன் சாளரத்தின் ஓரத்தில் சேலை முந்தானை தெரிவதைப் பார்த்து அங்கு நிற்பவள் தோழிகளில் ஒருத்தியாகத்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்து, "யாரங்கே? வா இப்படி" என்று சீறி அழைத்தாள் ராஜ்யஸ்ரீ.

அடுத்த நிமிடம் அந்த அறைக்கதவு மெதுவாகத் திறந்தது. மகாராணி உள்ளே நுழைந்தாள் ஏதுமறியாதவள் போல. அவளைக் கண்ட இருவருமே திகைப்பின் உச்சத்தை எட்டினார்கள்.

"அம்மா! நீயா?" என்றாள் ராஜ்யஸ்ரீ. சட்டென்று தனது ஆடையைச் சரிப்படுத்திக்கொள்ளவும் செய்தாள்.

"தாங்களா மகாராணி!" என்ற கிருகவர்மன், "எங்கு வந்தீர்கள்?" என்று விசாரிக்கவும் செய்தான்.

"ஒன்றுமில்லை மாப்பிள்ளை. தங்கள் மெய்க்காவலன் ஒருவன், தங்களைக் காண வந்தான்" என்று சமாளித்தாள் மகாராணி.

"என்ன அவசரமாம் அவனுக்கு?" என்று சிறிது சினத்தைக் குரலில் காட்டினான் கிருகவர்மன்.

"நேரம் கழித்துப் புறப்பட்டால் இன்று மாலைக்குள் பாதி தூரம் கூடப் போக முடியாதாம்" என்றாள் மகாராணி.



கிருகவர்மன் காரணமில்லாமல் தலையை ஆட்டினான். "அப்படியானால் நான் வரட்டுமா மகாராணி?" என்று கேட்டான் கிருகவர்மன்.

"போய் வாருங்கள் மாப்பிள்ளை" என்ற மகாராணி வழிவிட்டு நின்றாள்.

கிருகவர்மன் ஒரே ஒரு விநாடிதான் தாமதித்தான். பிறகு பொருளுள்ள பார்வையொன்றை ராஜ்யஸ்ரீ மீது வீசிவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

அவன் சென்றதும் தாயும் மகளும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றனர். மகாராணி மகளை நெருங்கி அவள் தோள்மீது கையை வைத்து, "பெண்ணே! எதற்கும் காலம் நேரம் உண்டு" என்றாள்.

ராஜ்யஸ்ரீ பதில் சொல்லவில்லை. தாயின் தோள்மீது தலையைப் புதைத்துக்கொண்டாள். மகாராணி அவளை அப்படியே நடத்திச் சென்று பஞ்சணையில் உட்கார வைத்து, தானும் பக்கத்தில் உட்கார்ந்து பெண்ணின் தலையைக் கோதிக் கொடுத்தாள். "மகளே, கிருகவர்மன் சீக்கிரம் வருவான். பயப்படாதே" என்றாள் மகளின் குழலைக் கோதிய வண்ணம்.

ராஜ்யஸ்ரீ சற்றுத் திரும்பித் தாயின் மார்பில் தலையைப் புதைத்துக்கொண்டாள். "மூன்று மாதம் ஆகுமாமே அம்மா" என்றாள் ராஜ்யஸ்ரீ.

"யார் சொன்னது கண்ணே?" என்று மகாராணி கேட்டாள்.

"அவர்தான்."

"காரணம் சொன்னாரா?"

"இல்லை."

"அவருக்குக் காரணம் தெரியாது."

"என்ன காரணம் தாயே?"

"நீ மூன்று முறையாவது முழுக வேண்டும். அப்பொழுதுதான்..'' மேற்கொண்டு மகளிடம் கூடப் பேச முடியாமல் தவித்தாள் தாய்.

ராஜ்யஸ்ரீ புரிந்துகொண்டாள், தான் பக்குவப்பட அத்தனை நாள் ஆகுமென்பதை. ஆகவே சொன்னாள். "அவர் அவசரப்படுகிறார் அம்மா!"

"எதற்காக?" என்றாள் தாய்.

"கன்னோசி ராஜ்யத்திற்கு உடனடியாக ராணி வேண்டுமாம்" என்று ராஜ்யஸ்ரீ தனது கற்பனைப் பொய்யைச் சொன்னாள்.

"மூன்று மாதத்திற்குள் கன்னோசி ராஜ்யம் உடைந்து விடுமா?" என்று கேட்ட தாய், "பெண்ணே! புருஷர்கள் தங்கள் எண்ணம் நிறைவேற இல்லாத பொய்யை எல்லாம் சொல்வார்கள். நீ அவற்றை நம்பாதே. எதையும் நல்ல காலத்தில் நல்ல முறையில் செய்ய வேண்டும். அதைப்பற்றி எனக்கும் உன் தந்தைக்கும் தெரியும்" என்ற மகாராணி, "மகளே, மனத்தை அலட்டிக்கொள்ளாதே" என்று கூறி மகளைத் தனது மார்பிலிருந்து எடுத்துப் பஞ்சணையில் படுக்க வைத்துவிட்டு வெளியேறினாள்.

அவள் வெளியே வந்ததும் தாரைகள் பலமாக ஊதும் சப்தம் காதில் விழுந்ததால் ஆசுவாசப் பெருமூச்சு விட்டாள் மகாராணி. "நல்லவேளை, கிருகவர்மன் புறப்பட்டு விட்டான். இன்னும் இரண்டு நாள் இருந்தால் திருமணத்துக்கே அவசியமிருக்காது. அரண்மனைப் புரோகிதருக்கு வேலையிருக்காது" என்று சொல்லிக் கொண்டாள். "கிருகவர்மா, இன்னும் மூன்று மாதம் நீ ராஜ்யஸ்ரீயை அணுக முடியாது" என்று கறுவிச் சிரிக்கவும் செய்தாள்.



தனது சிரிப்பு அர்த்தமற்ற தென்பதை அவள் அப்பொழுது அறிந்துகொள்ளவில்லை. கிருகவர்மன் பெரும் நுழைநரி யென்பதையும் அவள் உணரவில்லை. தானேசுவரத்தின் ராஜவீதியில் தனது மெய்க்காவலர் தொடரப் புரவியை நடத்திய கிருகவர்மன் ராஜவீதியைக் கடந்ததும் மெய்க் காவலன் ஒருவனை நோக்கி, "இந்த அரண்மனைச் சோதிடர் எங்கிருக்கிறார் விசாரி" என்றான். எதிரில் இருந்த ஒரு மாளிகைக் காவலனை விசாரித்த மெய்க்காவலன் "அடுத்த வீதியில் இருக்கிறாராம்" என்றான்.

கிருகவர்மன் அடுத்த வீதிக்குப் புரவியைச் செலுத்தினான். அங்கிருந்த சோதிடர் வீட்டு வாயிலில் இறங்கி உள்ளே சென்றான். "அடடா! மருமகப்பிள்ளையா? வரவேணும் வரவேணும்" என்று வரவேற்று அரண்மனைச் சோதிடர் கிருகவர்மனுக்கு ஒரு ஆசனத்தை அளித்துத் தாம் எதிரில் கைகட்டி நின்றார். கிருகவர்மன் தனது கச்சையிலிருந்து ஒரு சிறு பட்டுப் பையை எடுத்து சோதிடர் கையில் கொடுத்தான்.

சோதிடர் அதைக் கையில் வாங்கி விழித்தார். "பையின் வாயிலுள்ள பட்டுக் கயிற்றை அவிழ்த்துப் பாரும்" என்றான் கிருகவர்மன்.

பட்டுப் பையை அவிழ்த்து அதிலிருந்ததைத் தமது கையில் கொட்டிப் பார்த்தார். அவர் கை வெலவெலத்தது. "இந்த வைரங்களைக் கொண்டு ஒரு ராஜ்யத்தை வாங்கலாம்" என்றார்.

"ராஜ்யத்தை வாங்க வேண்டாம். ராஜ்யஸ்ரீயை வாங்கினால் போதும்" என்ற கிருகவர்மன், "சோதிடரே இந்த மாதத்திற்குப் பிறகு நாள் எதுவும் சரியில்லை அவள் திருமணத்திற்கு" என்று கூறிவிட்டு அவர் பதிலுக்குக் காத்திராமல் வெளியே நடந்து விட்டான்.

கையில் வைரங்களை வைத்துக்கொண்டு பிரமித்தார் சோதிடர். "சரி வேறு வழியில்லை" என்று சொல்லிக் கொண்டு உள்ளே சென்று வைரப் பட்டுப் பையைப் பெட்டியில் வைத்துப் பூட்டினார். வைரத்தைக் கிருகவர்மன் கொடுத்த காரணம் அவருக்குப் புரிந்துவிட்டது. அடுத்து அவர் தமது பூஜை அறைக்குச் சென்று பட்டுப் பாயை விரித்து பஞ்சாங்கச் சுவடியையும் பிரித்துப் பார்க்கலானார். அந்தச் சமயத்தில் வேகமாக விரைந்த கிருகவர்மன் புரவியின் காலடிகள் அவர் தலைமீதே படுவது போன்ற பிரமை ஏற்பட்டது சோதிடருக்கு. "பெரிய இடத்து விவகாரம்" என்று சொல்லிக்கொண்டு சுவடிகளைப் புரட்டலானார்.

அன்று மாலை தற்செயலாகப் போவதுபோல் அரண் மனைக்குச் சென்றார். மகாராணியே அவரை வரவேற்றாள். "குழந்தை" என்று துவங்கினாள் மகாராணி.

"கேள்விப்பட்டேன். கல்யாணம் விசாரிக்கலாமென்று தான் வந்தேன்" என்றார் சோதிடர்.

## 12

# சகுனம்

**சா**தாரணமாகக் கூப்பிட்டனப்பினாலொழிய அரண்மனைப் பக்கம் திரும்பாதவரும், சோதிடம் தவிர மந்திர தந்திர சாஸ்திரங்களில் பெரும் பாண்டியத்தை உடையவரென்று வட பாரதம் முழுவதும் பிரசித்தி பெற்றவரும், மன்னர்களுக்கு யாகங்கள் செய்து வைக்க அடிக்கடி மற்ற ராஜ்யங்களுக்குப் போய் வருபவருமான தானேசுவர சோதிடர், அழைக்காமலே அன்று அரண்மனைக்கு வந்ததை எண்ணி மகாராணி பெருமித மடைந்தாள். அதனால் அவரை ஒரு மகாராஜாவை வரவேற்பது போல் வரவேற்று அவர் உட்காரத் தனி மஞ்சமொன்றைப் போட்டு, பட்டு ஒன்றையும் அதன்மீது தானே விரித்தாள். சோதிடர் அந்த உபசாரங்களைப் பெரிதும் வரவெற்றாரானாலும், தாம் அதற்கெல்லாம் மிஞ்சியவர் என்பதைக் காட்ட தனது மடிசஞ்சியிலிருந்து ஒரு சதுரமான மான் தோலை எடுத்து மஞ்சத்தின் பட்டின்மீது விரித்து, "மகாராணி! மன்னிக்க வேண்டும். இப்பொழுதுதான் ஹயக்ரீவ ஹோமம் செய்து வருகிறேன். ஆகவே இரவு பலகாரம் செய்யும்வரை சிறிது ஆசாரமா யிருக்க வேண்டியிருக்கிறது" என்று மான் தோலை விரித்த

காரணத்தைச் சொன்னபின்பே மஞ்சத்தில் அமர்ந்து பத்மாசனமாகக் கால்களை மடக்கிக் கொண்டார்.

நெற்றியில் கட்டான விபூதியுடனும் அதன் நடுவில் பெரிய குங்குமப் பொட்டுடனும், கழுத்தில் மன்னர் அளித்திருந்த சாளக்கிராமம் புதைத்த மகர கண்டியுடனும் சாட்சாத் பரமசிவன் போல் காட்சியளித்த சோதிடரான ஜயவர்த்தனர், எதிரே ஆசனத்தில் அமர்ந்துகொண்ட மகாராணியை ஏறெடுத்துப் பார்க்காமலே தமது சஞ்சிக்குள் கையை விட்டுச் சுவடியை எடுத்துக்கொண்டு. "மகாராணி! குழந்தையை வரச் சொல்லுங்கள்" என்று உத்தரவிட்டார். அவர் உத்தரவிடுமுன்பே பெண்ணுக்குச் சொல்லியனுப்பி யிருந்த மகாராணியின் கட்டளையை முன்னிட்டு உள்ளே நுழைந்த ராஜ்யஸ்ரீ சோதிடருக்குத் தண்டனிட்டு நின்றாள்.

ராஜ்யஸ்ரீ உள்ளே வந்ததை முன்னமே பார்த்து விட்டாலும் பார்க்காததுபோல நடித்த சோதிடர், தமது கண்களைச் சுவடியிலிருந்து நீக்கி, "யார் ராஜ்யஸ்ரீயா? வாம்மா! மிகவும் சந்தோஷம் மங்களானிபவந்து" என்று ஆசீர்வாதம் செய்தார். தம்மை வணங்கி நின்ற ராஜ்யஸ்ரீக்குத் தமது சஞ்சியிலிருந்த ஒரு பொற்கிண்ணத்தை எடுத்து அதிலிருந்து சிறிது குங்குமப் பிரசாதமும் கொடுத்தார். சும்மா பிரசாதத்தைக் கொடுத்தால் பயனில்லையென்ற காரணத்தால், "அம்மா! மகேச்வரி பூஜையின் பிரசாதம். இதைத் தரிப்பவர்களுக்குச் சர்வ மங்களமும் உண்டாகும்" என்று கூறியே கொடுத்தார். பிறகு சஞ்சியிலிருந்து ஒரு பலாச இலையை எடுத்து அதில் குங்குமத்தை அள்ளிப் போட்டு மடித்து அரசகுமாரியிடம் கொடுத்து, "தினம் ஸ்நானம் செய்ததும் இதைத் தரித்துக்கொள். எந்தத் தீமையும் உன்னை அணுகாது" என்றும் கூறினார்.

குங்குமப் பிரசாதத்தை வாங்கிக் கொண்டதும் உள்ளே போக முயன்ற ராஜ்யஸ்ரீயைத் தடுத்து, "உட்காரம்மா!



உனக்காகத்தானே வந்திருக்கிறேன்" என்று சொல்லி, அர்த்தம் தொனித்த புன்முறுவலும் செய்து, மகாராணியை நோக்கி, "மகாராணி! குழந்தை புஷ்பவதியான நேரம்?" என்று வினா ஒன்றையும் தொடுத்தார்.

மகாராணி அப்பொழுதுதான் புஷ்பவதியானவளைப் போல் வெட்கச்சாயை முகத்தில் படரவிட்டுக் கொண்டாள். "இன்று காலைதான் ஸ்நானம் செய்தாள்" - மகாராணி சொற்களை முடிக்கத் தயங்கினாள்.

ஆனால் இந்த மாதிரி விஷயங்களைக் கேட்டு மரத்துப் போயிருந்த சோதிடர் அதை ஒரு பொருட்டாக மதிக்காமல், "அதாவது இரண்டு நாட்களுக்கு முந்திய இரவிலா பகலிலா?" என்று விசாரித்தார் திடமான குரலில்.

"இரவில்தான்" மகாராணி மந்தமான, ஆனால் மகிழ்ச்சி ஒலித்த குரலில் சொன்னாள்.

சோதிடர் தமது கண்களை ஏறெடுத்து மகாராணியை நோக்கி, "இரவிலா!" என்று அது நடக்கக்கூடாத காரியம்போல் வினவினார்.

"ஆம்" என்றாள் மகாராணி.

"சூர்ய நமஸ்காரத்தை விடாமல் செய்கிற குடும்பத்துக்கு இரவில் சுபம். பாஸ்கரன் ஆக்ஞை அப்படியிருக்கிறது" என்ற சோதிடர் சுவடிகளைப் புரட்டினார்.

"ஏன் ஸ்வாமி! அதனால் ஏதாவது?" என்று மகாராணி கவலையுடன் கேட்டாள்.

"நாம் சமாளிக்க முடியாத அப்படி எந்த தோஷமும் இல்லை" என்று சகல தோஷங்களுக்கும் தாமே அதிபதி போல் அசட்டைக் குரலில் பேசிய சோதிடர், "புஷ்பவதி யான சமயம், அதாவது சுமாராக நாழிகை சொல்ல முடியுமா?" என்று விசாரித்தார்.

"முன் ஜாமத்தில்தான். ஆனால் திட்டமாகச் சொல்ல முடியாது." மகாராணியின் பதில் சற்றுக் கவலையுடன் வந்தது.

"வேண்டாம், வேண்டாம். நாழிகையைக் கணக்கில் பார்த்துக்கொள்ளலாம்" என்று சோதிடர் தாம் பெரிய கணக்கு மேதைபோல் பேசிவிட்டுச் சுவடிகளை நீண்ட நேரம் சோதித்தார். பிறகு விரல் விட்டு எண்ணினார். அந்த அறையின் மோட்டு வளையைப் பார்த்தார். அடுத்து ராஜ்யஸ்ரீயை நோக்கிப் புன்முறுவல் செய்தார். "ராஜகுமாரி! குழந்தாய்! நீ அதிக நாள் இந்த அரண்மனையில் இருக்க முடியாது" என்று சொன்னார்.

அவர் சொன்னதன் பொருளை ராஜ்யஸ்ரீ புரிந்து கொண்டதால் புன்னகை செய்தாள். மகாராணியும் தனது ஆசனத்தை விட்டு எழுந்தாள். மகாராஜா அப்பொழுது உள்ளே வந்ததால் அவரைக் கண்டதும் எழுந்திருக்க முயன்ற சோதிடரைக் கையமர்த்திய மகாராஜா, மகாராணி ஏற்கனவே உட்கார்ந்திருந்த மஞ்சத்தில் அமர்ந்தார். "என்ன ஜோஸ்யரே! குழந்தை புஷ்பவதியான கால பலன் எப்படி இருக்கிறது?" என்று வினவினார்.

"அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அப்படி நிவர்த்திக்க முடியாத கிருகதோஷம் எதுவுமில்லை. ஆனால் இராக் காலமானதால் ராகு சிறிது விளையாடுகிறான்" என்றார் சோதிடர், ராகுவை தீராத விளையாட்டுப் பிள்ளைபோல் சித்திரித்து.

"அதற்கு ஏதாவது..." மகாராஜா சொற்களை முடிக்கவில்லை.

முடிக்கவும் விடவில்லை சோதிடர். "பரிகாரம் நிச்சயமாக இருக்கிறது. ராகு ப்ரீதி பிரமாத விஷயமல்ல. ஆனால் அதைவிட சுலபமான வழி இருக்கிறது" என்று விளக்கினார் சோதிடர்.



மகாராஜா அவசரப்பட்டு, "சொல்லுங்கள் செய்து விடுவோம்" என்றார். "செலவைப் பற்றிக் கவலை வேண்டாம்" என்றும் சொன்னார்.

சோதிடர் நகைத்தார். "மகாராஜா, பணத்தால் எல்லா வற்றையும் செய்ய முடியாது. அதுவும் இந்த விஷயத்தில் செலவும் ஏதுமில்லை. இவளுக்குச் சீக்கிரம் ஒரு சுபம் ஏற்பட்டுவிட்டால் தோஷ நிவர்த்தி தானே ஆகிவிடும்" என்றார் நகைப்பின் ஊடே.

மகாராஜா விஷமமாகக் கேட்டார். "இப்பொழுது நடந்தது சுபமில்லையா?" என்று, விஷமமாக மகாராணியையும் பார்த்தார்.

மகாராணியின் முகம் வெட்கத்தால் சிவந்தது. பதினெட்டு வயது குமாரியைப்போல் நெளிந்தாள் தான் நின்ற இடத்திலேயே. சோதிடர் அவள் சங்கடத்தைப் போக்க சாஸ்திரம் பேசினார். "மகாராஜா! இந்த சுபம் பெண்களுக்கு இயற்கையாக ஏற்படுகிறது. அடுத்த சுபத்தை மாதா பிதாக்கள் செய்து வைக்கிறார்கள். மாஸி மாஸி சுபத்யரம். அதாவது மாதத்தில் மூன்று முறை சுபம் ஏற்பட வேண்டுமென்பது சாஸ்திரம். வரும் சுபத்தைத் தடுத்தாலோ, தாமதித்தாலோ அந்தக் கிருகத்தில் அசுபங்கள் விளைகின்றன. ஆகையால் வரும் சுபத்தைத் தடுக்கக் கூடாது" என்றார் சோதிடர்.

மகாராஜா சோதிடரை நன்றாகப் புரிந்துகொண்ட வராதலால் "ஜோஸ்யரே! சொல்வதைத் தெளிவாகச் சொல்லும்" என்றார் லேசாக நகைத்து.

சோதிடர் தமது சுவடியை விரித்து மடியில் வைத்துக் கொண்டு மகாராஜாவைப் பார்த்தார். "இதில் மறைவு ஏதுமில்லை. ராஜகுமாரி விவாகம், உடனடியாக நடைபெற வேண்டும்" என்றார்.

மகாராணி அதிர்ச்சியுற்றாள். "விவாகமா?" என்று அதிர்ச்சி குரலிலும் துலங்கக் கேட்டாள்.

"ஆம் மகாராணி! பெண் பிறந்துவிட்டால் அது அசல் வீட்டுச் சொத்து; என்றாவது நீங்கள் பிரிந்துதானாக வேண்டும்" என்றார் சோதிடர்.

மகாராணியின் முகத்தில் கவலை அதிகமாகச் சுடர் விட்டது. "அதை நான் தடுக்கவில்லை ஜோஸ்யரே, பெண் இன்னொரு வீட்டுக்குப் போக வேண்டியவள், நான் வரவில்லையா இங்கு! மகாராஜாவிடம் நான் வந்தபோது எனக்கு வயது பதினான்கு" என்றாள்.

"அதனாலென்ன மகாராஜாவும் உங்களுக்கு எந்தக் குறையையும் வைக்கவில்லை. புத்ர பாக்யத்துக்குக் குறைச்சல் வைத்தாரா? வேறு எதற்குத்தான் குறைவு வைத்தார்?" என்று மகாராஜாவுக்குப் பரிந்து பேசுவதுபோல் பரிகாசம் செய்தார் சோதிடர்.

அவர் விஷமப் பேச்சை மகாராணி புரிந்து கொண்டாலும் புரியாததுபோல், "எந்தக் குறைச்சலையும் வைக்கவில்லை ஜோஸ்யரே. ஆனால் உடனடியாக ராஜ்யஸ்ரீக்கு எப்படி விவாகம் செய்ய முடியும்?" என்று கேட்டாள்.

"ஏன் முடியாது? இன்னும் ஒரு மாதம்வரை ராஜகுமாரியின் ஜாதகத்தில் சுப கிரகங்கள் உச்சத்திலிருக்கின்றன" என்று சோதிடர் தமது கலை வன்மையைக் காட்டினார்.

"கிரகங்களைப் பற்றிச் சொல்லவில்லை" என்றாள் மகாராணி.

"பக்குவத்தைப் பற்றிச் சொல்கிறாள் மகாராணி. தான் அடைந்த பக்குவம் வரவில்லையென்று நினைக்கிறாள் மகாராணி" என்று மகாராஜா குறுக்கிட்டார்.



மகாராணி தனது சுடுவிழிகளை மகாராஜாவின் மீது நாட்டினாள். "இந்த விஷயத்தில் மகாராஜா வாயைத் திறக்காமலிருப்பது நல்லது" என்றாள் கோபத்துடன்.

"என் வாயைக் கட்டக்கூடிய அத்தனை பெரிய விஷயம் என்ன?" மகாராஜா மீண்டும் கேட்டார்.

'பெண்கள் விஷயம்" என்றாள் மகாராணி.

"ஆண்களுக்குச் சம்பந்தமில்லை போலிருக்கிறது?" என்று விசாரித்தார் மகாராஜா.

"இல்லை," திட்டமாகச் சொன்னாள் மகாராணி.

மகாராஜா புன்முறுவல் கோட்டினார். "அப்படியானால் நமக்குள் சம்பந்தமில்லை" என்று விஷமமாகப் பார்த்தார் மகாராணியை.

"மகாராஜா!" மகாராணியின் குரல் கடுமையாயிருந்தது.

"என்ன மகாராணி?"

"உங்கள் பைத்தியக்காரத்தனத்தை மகள் முன்பு காட்ட வேண்டாம்."

"'பின் யார்முன்பு காட்ட வேண்டும்?"

"யார்முன்பும் காட்ட வேண்டாம். சோதிடரும் நானும் சேர்ந்து இதை முடிவு செய்கிறோம்."

"சோதிடரும் நீயும் சேர்ந்தா?"

"மகாராஜா!"

"உம்."

"உமது சொற் சித்திரம்..."

" என்ன அதற்கு?"

"வர வர விகாரமாயிருக்கிறது?"

"விரசமாகவா, விகாரமாகவா?"

"இரண்டும் ஒன்றுதான்" என்ற மகாராணி, "உங்கள் பெண்ணும் பக்கத்தில் நிற்கிறாள்" என்று சுட்டியும் காட்டினாள்.

"பேச்சே அவளைப்பற்றித்தானே!" என்ற மகாராஜா, "ஜோஸ்யரே! விஷயத்துக்கு வருவோம்" என்றார் சோதிடரை நோக்கி.

"வந்துவிடுவதுதான் நல்லது" என்றார் சோதிடரும்.

"பெண்ணுக்கு வயது வந்துவிட்டதால் உடனடியாக விவாகத்துக்கு வற்புறுத்துகிறார். வரப்போகும் ஜாமாதா (மாப்பிள்ளை)" என்ற மகாராஜாவைக் குறுக்கே மறித்த சோதிடர், "அது சகஜந்தானே" என்றார்.

"இரண்டும் பருவச் சிட்டுகள்" என்றார் மகாராஜா.

"அவசரத்துக்கு அதுதான் காரணம். ஆனால் அது தவறுமில்லை. ராஜகுமாரியின் ஜாதக பாவமும் புஷ்பவதியான சமய க்ஷேத்திர பாவமும் சீக்கிர விவாகத்தை வலியுறுத்துகின்றன. எப்படியும் ஒரு மாதத்திற்குள் விவாகத்தை நடத்திவிடுவது நல்லது" என்றார்.

அதுவரை பேசாமலிருந்த மகாராணி "அது முடியாது" என்றாள் திட்டமாக.

"ஏன்?" என்று மகாராஜா குறுக்கிட்டார்.

"பெண்கள் உடம்பு பக்குவம் உங்களுக்குத் தெரியாது" என்றாள் உஷ்ணமாக.

"எனக்கா! பெண்கள் பக்குவத்தைப் பற்றியா?" என்று ஏதோ பேசப் போனவரைத் தடுத்த மகாராணி முதல் விலக்கு ராஜ்யஸ்ரீக்கு இப்பொழுதுதான் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு விலக்காவது ஆகவேண்டும்" என்று திட்டமாகச் சொன்னாள்.



சோதிடர் மகாராணியை அனுதாபத்துடன் பார்த்தார். "மகாராணி ராகுவுடன் விளையாடக்கூடாது" என்று எச்சரித்தார். ராகு என்று சொன்னபோது மகாராஜாவைப் பார்த்தார்.

மகாராஜா சங்கடத்தால் ஆசனத்தில் அசைந்தார். அதுவரை அங்கு நின்றிருந்த ராஜ்யஸ்ரீ வெளியே சென்றுவிட முயன்றாள். "இன்னும் சிறிதுநேரம் நில் ராஜகுமாரி என்ற சோதிடர், "மகாராணி! காலத்தை யாராலும் மாற்ற முடியாது. சுப காலம் ஒருமுறை மாறினால் அடுத்து எப்பொழுது வரும் என்று சொல்ல முடியாது. ராஜகுமாரிக்கு இன்னும் ஒரு மாதத்தில் விவாகத்தை முடிக்காவிட்டால் இன்னும் இரண்டு வருஷங்களுக்கு விவாகம் கிடையாது" என்ற சோதிடர் தமது சுவடிகளைக் கட்டி சஞ்சியில் வைத்துக்கொண்டார். அவர் புறப்பட்டு விட்டதைப் புரிந்துகொண்ட மகாராணி, ஒரு தட்டில் பழம், பாக்கு, வெற்றிலை, சர்க்கரை கொண்டுவரச் சொல்லி, சில பொன் நாணயங்களையும் வைத்துக் கொடுத்தாள்.

அந்தப் பொன் நாணயங்களையும் பார்த்து, கிருகவர்மன் தனது கையில் கொட்டிய வைரங்களையும் எண்ணிப் பார்த்துப் புன்முறுவல் செய்து பொன் நாணயங்களையும் இரண்டொரு பழங்களையும் எடுத்து சஞ்சியில் அடைத்துக்கொண்டார். சர்க்கரையைச் சிறிது வாயில் போட்டுக்கொண்டார். "மகாராணி! சுபஸ்ய சீக்கிரம் என்பது பெரியோர் வாக்கு. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுத் தமது சஞ்சியிலிருந்த ஒரு மஞ்சள் ஓலையை எடுத்து ஏதோ வரிகளை எழுத்தாணியால் எழுதி மகாராணியிடம் நீட்டினார். "இது ராஜ்யஸ்ரீயின் விவாக தினம்" என்று கூறிவிட்டு எழுந்தார்.

அவர் சொன்னதும் அரண்மனைப் பெருவாயிலில் தாரைகள் பெரிதாக முழங்கின. மங்கல வாத்தியங்கள்

சப்தித்தன. மகாராஜா சட்டென்று எழுந்தார். வெகு வேகமாக ஓடிவந்த காவலனொருவன், "மகாராஜா! மூத்த ராஜகுமாரர் ராஜ்யவர்த்தனர் வந்துவிட்டார்" என்று அறிவித்தான்.

"சகுனம் மிக மங்களம்" என்று சொல்லிக்கொண்டு எழுந்தார் சோதிடர்.

மகாராணியின் கண்களில் ஆனந்த பாஷ்யம் பெருகியது. அடுத்து சில விநாடிகளில் போரிலிருந்து வந்த தனது பிரதம ராஜகுமாரனை மார்புடன் அணைத்துக் கொண்டாள் ராஜ்மாதா.

13

# காமம் காட்டிய கண்கள்

புஷ்பபூதி வம்ச திலகமெனக் கொண்டாடப் பட்டவனும், தனது தலைமகனும் வடமேற்கு எல்லைப் பூசல்களை அடக்கி வெற்றி வாகை சூடி வந்திருப்பவனுமான ராஜ்யவர்த்தனனை மார்புடன் அணைத்துக்கொண்ட ராஜமாதாவின் ஆனந்தக் கண்ணீர் தலைமகனின் கழுத்துப் பகுதியை லேசாக நனைத்தது. மகாராணிக்கும் மேல் உயரமா யிருந்த ராஜ்யவர்த்தனன் கழுத்தில் உஷ்ணமாக விழுந்த தாயின் ஆனந்தக் கண்ணீரால் மனம் உருகப்பெற்று அவள் முதுகை ஆதரவுடன் தடவிக் கொடுத்து சற்று எட்ட நிறுத்தி, "தாயே! என்னைப் பார், நான் நன்றாகவே திரும்பி யிருக்கிறேன். ஹிமாலயத்தின் பனிக்காற்று எனக்கு எத்தனை ஆரோக்கியத்தை அளித்திருக்கிறது பார்" என்றான்.

ராஜமாதா மகனை ஏற இறங்கப் பார்த்தாள். அவன் நெடிய உருவமும், மார்பை அணைத்த பெரும் உலோகப் போர்க் கவசமும், முழங்கையிலிருந்து மணிக்கட்டு வரை கைகளை மறைத்த இரும்பு உறைகளும், அவன் தோற்றத்திற்குப் பெரும் கம்பீரத்தைக் கொடுத்ததால் ராஜமாதா சொன்னாள், "ராஜ்யா! ஏதோ அலெக்ஸாண்டர் என்ற யவன வீரனைப்பற்றிப் பெரிதாகச் சொல்கிறார்கள். அவனை நான் பார்த்ததில்லை. ஆனால் உன்னைப்

பார்க்கிறேன். அப்படியொரு மகாவீரன் இருந்திருந்தால் அவன் உன்னைப் போல்தான் இருந்திருக்க வேண்டும்" என்று. பிறகு ராஜ்யவர்த்தனன் கன்னங்களைத் தடவிக் கொடுத்த மகாராணி, "ராஜ்யா! போரில் உனக்குக் காயங்கள் அதிகமில்லையே?" என்று வினவினாள்.

அதுவரை தாய் சேய் குலாவலைக் கவனித்துக் கொண்டு ஏதும் பேசாமல் மஞ்சத்தில் இடித்த புளியென அமர்ந்திருந்த மகாராஜா மெல்லத் தமது சொரூபத்தைக் காட்டத் தொடங்கி, "காயம் இருக்காது. எதிரிகள் உன் மகனைத் தடவிக் கொடுத்திருப்பார்கள்' என்றார்.

ராஜ்யவர்த்தனன் நகைத்தான் லேசாக, தாயின் தழுவலிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு தாயை முரட்டுத்தனமாக இழுத்துக்கொண்டு போனான். "ராஜ்யா, விடடா இதென்ன முரட்டுத்தனம்?" என்ற மகாராணியின் சொற்களை லட்சியம் செய்யாது, தாயை வலிய இழுத்துச் சென்று தந்தையின் பக்கத்தில் நிற்க வைத்து நிலத்தில் தண்டியிட்டு இருவர் பாதங்களிலும் தனது தலைபட வணங்கினான் ராஜ்யவர்த்தனன்!

தனயன் தலை காலில் பட்டதும் எதற்கும் அசையாத பிரபாகரவர்த்தனன் மனமும் அசைந்தது. அவர் மகன் தலைக்குழல்களை ஆதரவுடன் தடவிக் கொடுத்து, "இளவரசனே! அடுத்து முடிசூட வேண்டிய ராஜபுத்ரா! எழுந்திரு" என்று குரலில் சந்துஷ்டி ஒலிக்கப் பேசினார்.

ராஜ்யவர்த்தனன் எழுந்து நின்றான் மாதா பிதாக்கள் முன்னிலையில். மகாராஜா கேட்டார், "ராஜ்யா! இந்தப் போரில் எத்தனை காயங்கள் உனக்கு?" என்று.

"அதிகமில்லை தந்தையே! எதிரிகள் சரியாகப் போரிட வில்லை. இரண்டே நாள் போரில் ஓடிவிட்டார்கள். எனக்கு ஏற்பட்டது இரண்டே காயங்கள். அதுவும் ஆறிவிட்டது, ஹிமாலய ஔஷதப் பச்சிலைகளால்" என்று கூறிக் கழுத்திலிருந்த இரண்டு சிறு வடுக்களைக் காட்டினான்.



அதைக்கண்ட மகாராஜா பெருமிதம் எய்தினார். "காயம் இரண்டானாலும் கழுத்தில் இருக்கிறதடா குழந்தாய். அபாயமான இடத்தில் அஜாக்கிரதையாகப் போரில் இறங்கியிருக்கிறாய். சற்று ஆழமாகக் கத்தி இறங்கியிருந்தாலும் ரத்தக் குழாய்களை வெட்டிவிடும்" என்று கூறினார் மகாராஜா.

மகாராணி மைந்தனை அணுகிக் கழுத்திலிருந்த காயங்களைத் தடவிப் பார்த்தாள். "தந்தை சொல்லுவது சரியாகத்தானிருக்கிறது. உன் தந்தைக்கும் இந்தமாதிரி அசட்டுத் துணிச்சல் உண்டு. அபாயத்தைத் தேடிப் போவார். தந்தையைப் போல் மகன்" என்று பெருமையும் குற்றச் சாட்டுதலும் கலந்து ஒலித்த குரலில் சொன்னாள்.

ராஜமாதாவின் சொற்களைக் கவனிக்கவில்லை ராஜ்ய வர்த்தனன். கழுத்திலிருந்தவற்றைக் கத்திக் காயங்களென்று தந்தை எப்படி அறிந்தார் என்ற வியப்பின் வசப்பட்டு, "தந்தையே, இவை ஏன் வேல் காயங்களாயிருக்கக் கூடாது?" என்று வினவினான்.

மகாராஜா மைந்தனை நோக்கிப் புன்முறுவல் செய்து, "ராஜ்யா! வேல்கள் சாதாரணமாகத் தூரத்திலிருந்துதான் எறியப்படும். ஒன்று அதை உன் வேலால் தட்டிப் போடலாம். இல்லையேல் காயம் மிக ஆழமாக இருக்கும். ஆனால் இது கத்தியால் ஏற்பட்டது. இரண்டு காயங்களுக்கும் வடுக்கள் குறுக்கில் இருக்கின்றன. ஆகவே நெருங்கிய போரில் தனிச் சண்டையில் ஏற்பட்டவை. தவிர உன் வாள் எதிரி வாளை அடிக்கடி தடுத்து நின்றதால் ஏதோ சற்று அலட்சியமாயிருந்த சமயத்தில் சீறியிருக்கிறது" என்று போரை நேரில் பார்த்தது போல் பேசினார் தானேசுவர மகாராஜாதிராஜர்.

ராஜ்யவர்த்தனன் வியப்பு ஆயிரம் மடங்கு உயர்ந்தது. "தந்தையே? போரை நேரில் பார்த்ததுபோல் சொல்கிறீர்கள்" என்றான் மிதமிஞ்சிய வியப்பு குரலில் துலங்க.

"ராஜ்யா! எதுவும் அனுபவத்தால் ஏற்படுகிறது. இந்தமாதிரி இக்கட்டில் நானும் சிக்கிக்கொண்டிருக்கிறேன்" என்ற மகாராஜா, "ஆமாம்! உன்னைக் காயப்படுத்திய எதிரி யார்? என்ன ஆனான்?" என்று வினவினார்.

"சாதாரண ஹூணன். ஆனால் மகாவீரன். அவன் வாளை நான் தட்டிவிட்ட பிறகும் ஓட மறுத்தான். என் முன் மண்டியிட்டான்."

"எதற்கு? உயிர்ப்பிச்சை கேட்கவா?"

"இல்லை தந்தையே. தன்னை வெட்டிவிடும்படி கேட்டான். போரில் தோற்றுத் திரும்பினால் தனது தலைவன் தன்னை வெட்டிவிடுவான் என்று சொல்லி "வீரனான உன் கையால் இறப்பதை விரும்புகிறேன்" என்று கூறினான்.

"நீ என்ன செய்தாய் அவனை?"

"அழைத்து வந்திருக்கிறேன்."

"இங்கா!"

"ஆம்."

"எதற்கு?"

"என் மெய்க்காவலனாக அமர்த்திக்கொண்டேன்."

பிரபாகரவர்த்தனர் சிந்தனை வசப்பட்டார். "அவன் பெயர் என்ன?" என்று வினவினார்.

'பெரிய பெயரைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறான். மிகிரகுலன் என்று சொன்னான்" என்றான் ராஜ்யவர்த்தனன்.

பிரபாகரவர்த்தனர் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார் பல விநாடிகள். "ராஜ்யா! அவனை நான் நாளை பார்க்கிறேன்" என்றார் சிந்தனைக்குப் பிறகு.

"ஏன் மகாராஜா" ராஜ்யவர்த்தனன் குரலில் சந்தேகம் ஒலித்தது. மகாராஜாவின் மனத்தில் ஓடும் எண்ணங்களை அறிய முடியாததால்.



"மிகிரகுலன் தோரமானாவின் மகன். தோரமானாவைப் போல் வீரனல்ல. ஆனால் பலரை விருந்துக்கு அழைத்து விஷம் வைத்துக் கொன்றிருக்கின்றான். அந்தப் பெயர் பாரதத்திற்கே ஒரு சாபக்கேடு" என்று விளக்கிய மகாராஜா, "எதற்கும் நாளை அவனைப் பார்க்கிறேன்" என்றார்.

அதுவரை போர் விவரங்களைக் கேட்டுக்கொண்டிருந்த கணவரின் உரையாடலில் தலையிடாதிருந்த மகாராணி, "குழந்தை இப்பொழுதுதான் போரிலிருந்து வந்திருக்கிறான். அவன் நீராடவில்லை. சாப்பிடவில்லை. இங்கு ராஜ விசாரணை நடக்கிறது! மகாராஜா வர வர மனிதத் தன்மையை இழந்து வருகிறார்" என்று கடுமையாகச் சொன்னாள்.

"ராஜ்யா! நீ போய் நீராடி வாடா. உனக்கு உணவு தருகிறேன்" என்றும் சொன்னாள் மகாராணி.

"குழந்தைக்கு ஊட்டுவாயோ?" என்று மகாராஜா விசாரித்தார்.

"ஏன் குழந்தைக்கு அப்பாவுக்குக்கூட ஊட்டியிருக்கிறேன். ஹூணர்களுடன் சண்டையிட்டு வந்தபிறகு ஒரு மாதம் படுத்திருந்தீர்களே, காயத்திற்கு சிகிச்சைக்காக. அப்பொழுது என்ன நடந்ததாம்?" என்று கேட்ட மகாராணியை மகாராஜா உற்று நோக்கினார்.

"என்ன பார்க்கிறீர்கள் உற்று?" மகாராணியின் குரல் கடுமையாயிருந்தது.

"மறுபடியும் காயம் கிடைத்து சிகிச்சை செய்து கொண்டால் என்ன என்று யோசிக்கிறேன்" என்றார் மகாராஜா புன்முறுவல் கோட்டி.

மகாராணி உஷ்ணமான பார்வையொன்றை மகாராஜாவை நோக்கி வீசிவிட்டு மகனை அழைத்துக்

கொண்டு வெளியேறினாள். இரண்டு பணிப் பெண்களை அழைத்து, "ராஜபுத்ரன் நீராடட்டும்" என்றாள். பணிபெண்கள் ராஜகுமாரனை அழைத்துச் சென்றார்கள்.

ராஜ்யவர்த்தனன் தனது கவசங்களை நீக்கி நீண்ட நேரம் சுகந்த ஸ்நானம் செய்தான். பிறகு பட்டாடைகளை அணிந்து கழுத்தில் தொங்கிய வீர ஆரத்துடன் மீண்டும் ராஜ மாதாவின் அறைக்குச் சென்றான். ராஜமாதா அவனுக்குத் தனது கைகளாலேயே அமுது படைத்தாள். "அம்மா! பணிப்பெண்கள் இருக்கிறார்களே?"

"நானிருக்கப் பணிப்பெண்கள் எதற்கு?" என்ற ராஜமாதா மைந்தன் பக்கத்தில் உட்கார்ந்து அவனுக்கு உணவைக் கலந்து கொடுத்தாள்.

மகன் உண்டு முடிந்து பணிப்பெண்கள் அவன் தங்கத் தட்டை எடுத்துச் சென்றபிறகு மகாராணி மெள்ளச் சொன்னாள், "மகனே! நீ சென்றபின்பு பல விஷயங்கள் அரண்மனையில் நடந்திருக்கின்றன" என்று.

"என்ன விஷயம் தாயே?" ராஜ்யவர்த்தனன் ஆசையுடன் கேட்டான்.

"உன் தங்கைக்குத் திருமணம் நிச்சயமாயிருக்கிறது.." என்றாள் தாய்.

"முன்னமே நிச்சயமானதுதானே!" என்று கேட்டான் தலைமகன்.

"ஆம் மகனே! ஆனால் அதில் ஒரு சிக்கல் இருக்கிறது.." தாய் தயங்கினாள்.

"கிருகவர்மனுக்குத்தானே கொடுக்கிறோம்?"

"ஆம்."

"தங்கைக்குச் சம்மதந்தானே?"

"சம்மதம் மட்டுமல்ல. அவளும் கல்யாணத்துக்குத் துடிக்கிறாள்."



"நியாயந்தானே அம்மா."

"என்னடா நியாயம்? எதற்கும் காலம் இல்லையா? இப்பொழுதுதான் முதன் முதலாகத் தங்கை குளித்திருக்கிறாள்."

ராஜ்யவர்த்தனன் முகத்தில் மகிழ்ச்சி பூர்ணமாகப் பரவியது. "எப்பொழுது அம்மா?" என்று வினவினான் மகிழ்ச்சி முகத்தில் விரிய.

"ஒரு நாளாகிறது" என்ற ராணி "ராஜ்யா! உன் தந்தை முகூர்த்தமும் வைத்துவிட்டார்" என்றாள்.

"எப்பொழுது அம்மா?"

"அடுத்த மாதம்."

"அத்தனை துரிதத்திலா?"

"ஆம். அந்தச் சோதிடப் பீடை வந்து தேதியும் குறித்து வைத்துவிட்டது."

ராஜ்யவர்த்தனன் யோசித்தான் சில விநாடிகள். "ஏனம்மா! உனக்கு இஷ்டமில்லையா?" என்று கேட்டான்.

"உடனடியாக முகூர்த்தம் வைப்பது சரியல்ல. இன்னும் இரண்டு மாதங்களாவது போக வேண்டும்" என்ற மகாராணி, "ராஜ்யா! இதை எப்படியாவது ஒத்திப்போட வேண்டும்" என்றாள்.

இந்த உரையாடலை மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த ராஜ்யஸ்ரீ வேகமாகத் தனது அறைக்குச் சென்றாள். அங்கு கதவைச் சாத்திக்கொண்டு மிக வேகமாக ஒரு ஓலை எழுதினாள். அன்று ஆத்திரத்தில் எழுதிவிட்டாள் ராஜ்யஸ்ரீ. அது விதியின் ஓலை என்பதை அன்று அறியவில்லை அவள். அது தன் வாழ்க்கையை எத்தனை தூரம் பாதிக்கப் போகிறது என்பதையும் உணரவில்லை அவள். காமம் அவள் கண்களைக் கட்டியிருந்தது.

14

## மாதவ குப்தன்

ராஜ்யவர்த்தனனும் தனது தாயும் பேசிய ரகசியப் பேச்சிலிருந்து தனது கல்யாணத்தை எப்படியும் ஒத்திப் போட முயற்சி நடக்குமென்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்ட ராஜ்யஸ்ரீ, பருவத்தின் உஷ்ணத்தினாலும் தேவையாலும் கிருகவர்மனுக்குக் கடிதம் எழுதிவிட்டாளே தவிர, அதை யாரிடம் கொடுத்தனுப்புவது என்பதைச் சிந்தித்தாள் இல்லை. அந்த சிந்தனை வந்தபோது பெரிதும் குழப்பமும் வேதனையுமே அடைந்தாள். மகாராஜாவோ, அவரைவிட முக்கியமான தனது மாமன் மகனும் மகா வீரனுமான பண்டியோ அறியாமல் எந்த வீரனும் அரண்மனையை விட்டு அசைய முடியாதென்பதை உணர்ந்த ராஜ்யஸ்ரீ அன்று முழுவதும் எழுதிய கடிதச் சீலையை மடியிலே சொருகிக்கொண்டு உள்ளம் உருகிக் கொண்டிருந்தாள். அன்று பகல் முழுவதும் கிருகவர்மனை நினைத்தே உருகிக்கொண்டிருந்தவள் மாலையில் அரண்மனை நந்தவனத்தை நோக்கி நடந்தாள். அந்த நந்தவனத்தில் கிருகவர்மன் தன்னை அணைத்து நின்றதையும், அதன் விளைவாகத் தான் புஷ்பவதியாகி விட்டதையும் நினைத்து உள்ளத்தில் வெட்கம் உருவெடுக்க,



அது முகத்தில விரிய, அந்த நினைப்பே மகிழ்ச்சியையும் வேதனையையும் உடலெங்கும் சுழற்ற, அந்தப் பழைய மரத்தடிக்கே சென்று அதன்கீழ் உட்கார்ந்துகொண்டாள்.

கிருகவர்மன் வந்ததிலிருந்து நடந்த பல நிகழ்ச்சிகளையும் மனக்கண்ணில் ஓட்டிப் பார்த்தாள். அவன் தனது நிலை தெரியாமல் தன்னை அடையத் துடித்ததையும், தெரிந்த பின்பு மகாராணி அவனை வெளியேற்ற முயற்சி செய்தும் அவன் நகராமல் அரண்மனையிலேயே தங்கி தன்னிடம் விடைபெற்றுச் சென்றதையும் நினைத்து, 'சே! இவருக்கு வெட்கமே இல்லை' என்று தன்னுள் சொல்லிக்கொண்டாள். 'எனக்கு மட்டும் ஏது வெட்கம்! அவர் என்னிடம் விடைபெற வந்து என்னைத் தூக்கிய போது எனது காலை என்ன திமிரில் அவர் தோள்மீது போட்டேன்?' என்று தன்னையும் கடிந்துகொண்டாள். இப்படி அவனையும் தன்னையும் கடிந்துகொண்டாலும் அந்தக் கண்டனத்திலும் ஒரு திருப்தியைக் கண்டாள் ராஜ்யஸ்ரீ.

இப்படி நடந்ததை நினைத்து நினைத்துப் பொருமிய ராஜ்யஸ்ரீ நினைப்புகள் நேரத்தை ஓட்டுமென்பதை அறிந்தாளில்லை. இரவு மூண்டுவிட்டதையோ அரண்மனை எங்கும் விளக்குகள் எரிய முற்பட்டதையோ கவனிக்கவில்லை. சந்திரன் ஆகாயத்தில் தனது பவனியைத் தொடங்கி விட்டதையும் புரிந்து கொண்டாளில்லை. இப்படி எண்ணத்திற்கு அடிமையாயிருந்த சமயத்தில்தான் அந்த அழைப்பு வந்தது. "ராஜகுமாரி!" என்று யாரோ அழைத்ததைக் கேட்டு நிமிர்ந்து நோக்கினாள். எதிரே நின்றிருந்தவனுடன் அவளுக்குப் பழக்கமில்லையென்றாலும் அவனை அரண்மனை போர்ப்பயிற்சி அரங்கில் ஓரிரு முறை சந்தித்திருக்கிறாள். அவனைக் கண்டதும் எழுந்திருக்க முயன்ற ராஜ்யஸ்ரீயை, "ராஜகுமாரி! எழுந்திருக்க

வேண்டாம். நான் போகிறேன்" என்று அவன் திரும்ப முயன்றான்.

"வேண்டாம். நில்லுங்கள்" என்ற ராஜ்யஸ்ரீ எழுந்திருந்தாள் மரத்தடியிலிருந்து.

வந்தவனுக்குச் சுமார் பதினாறு வயதுதானிருக்கும். மிக மெல்லிய உருவம். ஆனால் லாவகமாக அவன் வாள் சுழற்றுவதை ஓரிரு முறை பயிற்சியின்போது பார்த்திருந்த ராஜ்யஸ்ரீ, "ஒரு காலத்தில் இவன் பெரிய வீரனாவான்" என்று பாராட்டியும் இருக்கிறாள். இத்தனைக்கும் அவன் யாரென்பதை அறிய அவள் முயலவில்லை. அன்று நேரிட அவன் வந்து விட்டபடியால் பேச முற்பட்டு, "வீரரே! நாம் சந்தித்திருக்கிறோம்..." என்றாள் சற்றுத் தடுமாறி.

வந்தவன் பதில் சொன்னான், "ஆம் பயிற்சி அரங்கில், பண்டி ஆசார்யரின் சீடர்களாக" என்று.

"நீங்கள்?" ஒரு கேள்வியை யோசித்தே தொடுத்தாள் ராஜ்யஸ்ரீ.

"மாளவ நாட்டவன். பெயர் மாதவகுப்தன்" என்று திட்டமாகப் பதில் சொன்னான் அவன்.

ராஜ்யஸ்ரீ சற்றுக் கலங்கினாள். "அப்படியானால் நீங்கள்..." வசனத்தை முடிக்கவில்லை அவள்.

"தேவகுப்தன் தம்பி" என்றான் அவன் சர்வ சாதாரணமாக.

"அப்படியா?" ராஜ்யஸ்ரீயின் குரலில் கடுமை இருந்தது.

"இருப்பினும் நான் நல்லவன்" என்று தன்னைப் பற்றித் தானே நற்சாட்சி அளித்துக்கொண்டான் மாதவ குப்தன்.

"தேவகுப்தன் அளவுக்குக் குப்தர்கள் குடும்பம் சீரழிந்த பிறகு..."



"அதில் நல்லவன் எப்படியிருக்க முடியும் என்று சிந்திக்கிறீர்கள். சிந்தனையில் தவறில்லை. புராணம் வேறு விதமாகயிருக்கிறது."

"புராணமா?"

"ஆம் ராஜகுமாரி. ராவணனுக்கு ஒரு தம்பி விபீஷணன் இல்லையா?"

ராஜ்யஸ்ரீ முறுவல் கொண்டாள். மாதவகுப்தன் வினாவைக் கேட்டு, "நன்றாகப் பேசுகிறீர்கள்" என்றாள்.

"சத்தியம் பேச்சுக்கு வலுக்கொடுக்கிறது" என்றான் மாதவகுப்தன்.

"உங்களை நீங்களே பாராட்டிக் கொள்வது நாகரிகமா?" என்று ராஜ்யஸ்ரீ கேட்டாள்.

"வேறு யாரும் பாராட்டாதபோது சுயஸ்தோத்திரம் தவறல்ல" என்ற மாதவகுப்தன், "ராஜகுமாரி! உங்கள் திருமணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். மிகவும் மகிழ்ச்சி" என்றான்.

ராஜகுமாரி அவனிடம் அந்தரங்கமாகப் பேசலானாள். திடீரென்று அவனிடம் அத்தனை நம்பிக்கை எப்படி வந்தது என்பது மாதவகுப்தனுக்கும் வியப்பாயிருந்தது.

ராஜகுமாரி முகத்தில் வருத்தத்தைப் படரவிட்டுக் கொண்டு சொன்னாள், "விவாகம் உடனடியாக நடக்காது போலிருக்கிறது மாதவகுப்தரே" என்று.

மாதவகுப்தன் வியப்பைக் காட்டினான். "ஜோஸ்யர் தேதிகூட வைத்துவிட்டதாகச் சொல்கிறார்கள்..."

தயங்கிப் பேசினான் மாதவகுப்தன்.

"தேதியைத் தள்ளி வைப்பது ஒரு பிரமாதமா?" என்று வினவினாள் ராஜ்யஸ்ரீ.

மாதவகுப்தன் வியப்பு உச்சிக்குச் சென்றது. "ராஜகுமாரி! அரண்மனை முழுவதும் விவாக தேதியைப் பற்றிப் பேசுகிறார்கள். இதை எப்படி மாற்ற முடியும்?" என்று மாதவகுப்தன் கேட்டான் வியப்பு குரலில் ஒலிக்க.

"ஏன் முடியாது? பெரியவர்கள் இஷ்டப்பட்டால் முடியும்." ராஜ்யஸ்ரீ கோடி காட்டினாள்.

மாதவகுப்தன் ஓரளவு புரிந்துகொண்டான். "ராஜகுமாரி! இது கிருகவர்மனுக்குத் தெரியுமா?" என்று வினவினான்.

"தெரியாது." ராஜகுமாரி வேதனையுடன் சொன்னாள்.

"தெரிந்தால் சீற்றம் கொள்வாரே! முகூர்த்த நிர்ணயம் செய்துவிட்டு மாற்றினால் அவர் குலத்துக்கே அவமான மாயிற்றே! இது யுத்தத்தில் கொண்டு விட்டாலும் விடுமே!" என்று கவலையுடன் விளைவைச் சொன்னான் மாதவகுப்தன்.

"யுத்தம் வராது மாதவகுப்தரே! ஆனால் மனப்பிரிவு வரும். அது இரு குடும்பங்களின் பிற்காலத்தைப் பாதிக்கும்" என்று குறிப்பிட்டாள் ராஜ்யஸ்ரீ.

"அதைத் தடை செய்வது அவசியமல்லவா?"

"அவசியந்தான்."

"நீங்கள் ஒரு ஓலை எழுதியனுப்பினால் என்ன?" சிறு பிள்ளையாதலால் கேட்கக் கூடாததைக் கேட்டான் மாதவ குப்தன்.

"அனுப்பலாம், யார் கொண்டு செல்வார்கள்? பகிரங்கமாக ஓலையை அனுப்ப முடியாது. சரியான தூதன் வேண்டும், எனது அந்தரங்கத்தை அவன் காப்பாற்ற வேண்டும்" என்று விளக்கினாள் ராஜ்யஸ்ரீ.



மாதவகுப்தன் அவள் முகத்தில் படர்ந்த துன்பச் சாயையை, ஏதும் செய்ய முடியாததால் ஏற்பட்ட ஏமாற்றத்தை, கவனிக்கவே செய்தான். அதன் விளைவாக மெதுவாகக் கேட்டான், "ராஜகுமாரி! என்னை நம்ப முடியுமா உங்களால்?" என்று.

தூக்கி வாரிப் போட்டது ராஜ்யஸ்ரீக்கு "உங்களையா" என்று கேட்டாள்.

"ஆம். தேவகுப்தன் தம்பியென்று யோசிக்கிறீர்களா? கவலைப்படாதீர்கள். என்னை உங்கள் சகோதரர்களில் ஒருவனாக நினைத்துக்கொள்ளுங்கள்" என்றான் மாதவகுப்தன்.

அவனைத் தூதனாக அனுப்புவது உசிதமில்லையென்று நினைத்தாள் ராஜ்யஸ்ரீ. ஒரு ராஜபுத்ரனைத் தூது அனுப்புவது வீண் விளைவுகளை ஏற்படுத்தும் என்று அஞ்சினாள். ஆனால் மாதவகுப்தன் விடவில்லை. "ராஜகுமாரி! நான் உங்கள் அடிமை, அழகுக்கல்ல, உங்கள் வீரத்துக்கு. நீங்கள் எனது அண்ணனை வாள் வீச்சில் தோற்கடித்ததைப் பார்த்தபோதே என் மனம் உங்களிடம் அடிமைப்பட்டு விட்டது. ஆகையால் உத்தரவிடுங்கள். எதற்கும் யோசிக்காதீர்கள்" என்று தூண்டினான் அவன்.

அவன் நம்பிக்கையுடன் பேசியதாலும் அவன் காட்டிய உணர்ச்சிப்பெருக்காலும் துணிவை அடைந்தாள் ராஜ்யஸ்ரீ. "மாதவகுப்தா" என்று பெயர் சொல்லி அவனை அழைத்து, "இன்றுவரை எனக்கு இரண்டே சகோதரர்கள். இனி உன்னையும் சேர்த்து மூவர்" என்று கூறித் தனது மடியிலிருந்து கடிதச் சீலையை எடுத்து மாதவகுப்தனிடம் கொடுத்தாள்.

மாதவகுப்தன் அதை மடித்துத் தனது கச்சையில் பத்திரப்படுத்திக்கொண்டான். அடுத்த விநாடி அங்கு நிற்க

வில்லை அவன். வேகமாக அரண்மனையை நோக்கி விரைந்தான். ராஜ்யஸ்ரீ நிதானமாக நடந்து அந்தப்புரத்துக்கு வந்து சேர்ந்தாள். அங்கு அவளை மகாராணி வரவேற்றாள் நுழை வாயிற்படியிலேயே. "எங்கு போய் வருகிறாய் ராஜ்யஸ்ரீ?" என்று மகாராணி வினவினாள்.

"நந்தவனத்துக்கு." தலை குனிந்தவண்ணம் சொன்னாள் ராஜ்யஸ்ரீ.

"உனக்கு முன்பு அரண்மனையில் அடுத்த வாயிலில் நுழைந்தானே அவன் யார்?" என்று மகாராணி வினவினாள்.

"தெரியாது."

"உனக்கு முன்புதான் வந்தான்."

"அப்படியா?"

"ஆம். அதுவும் நந்தவனத்திலிருந்துதான் வந்தான்."

இதைக் கேட்ட ராஜ்யஸ்ரீ சீற்றம் மிகுந்த பார்வையைச் செலுத்தினாள் மகாராணிமீது. "என்மீது சந்தேகப் படுகிறாயா அம்மா?" என்று வினவினாள் சீற்றம் முகத்திலும் நிலவ.

மகளுக்கு வழிவிட்டு நின்றாள் மகாராணி. ராஜ்யஸ்ரீ உள்ளே சென்றதும் சிந்தனை வசப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து உப்பரிகைப் படிகளில் ஏறிச் சென்றாள். பயிற்சிக் கூடத்தில் தனது சகோதரன் மகனான பண்டியைச் சந்தித்து ஏதோ சொன்னாள். பண்டி தலையசைத்தான் புரிந்ததற்கு அறிகுறியாக.

மாதவகுப்தன் தனது அறையில் ஒரு சிங்கத் தோற்பையில் தனது ஆடைகளை அடைத்துக்கொண்டு பயணப்படத் திரும்பிய போது அறை வாயிற்படியில் பண்டி நிற்பதைக் கண்டு, "ஆசார்யரே! நமஸ்கரிக்கிறேன்" என்றான்.



"எங்கோ பயணம் போலிருக்கிறது" என்றான் பண்டி.

"ஆம். தலைநகரிலிருந்து அவசரச் செய்தி வந்திருக்கிறது" என்று கூறிய மாதவகுப்தன் பையுடன் வாயிற்படியை நோக்கி வந்தான். பண்டி வாயிற்படியிலிருந்து அகலவில்லை. அதை அடைத்தபடி நின்றிருந்தான். பிறகு கையை நீட்டி, "அந்தக் கடிதம்" என்றான்.

"கடிதமா?" வியப்பைக் காட்டினான் மாதவகுப்தன்

"தெரியும் கொடுத்துவிடு" என்றான் பண்டி

15

# மகாராஜாவின் மனம்

ஆயுதப் பயிற்சி ஆசார்யனான பண்டி அத்தனை திட்டமாகக் கையை நீட்டிக் கடிதத்தைக் கேட்டபிறகும் மாதவகுப்தன் லவலேசமும் அசைந்தானில்லை.

"கடிதத்தைக் கொடுப்பதற்கில்லை ஆசார்யரே" என்று கண்டிப்புடன் பதில் சொன்னான்.

பண்டியும் வாயிற்படியை மறைத்து நின்ற நிலையிலிருந்து விலகவில்லை. "மாதவகுப்தா! நான் உன் குரு" என்று தனது பதவியை வலியுறுத்தினான் பண்டி.

"நான் உங்களை அழைத்த முறையிலேயே அதைக் குறிப்பிட்டுவிட்டேன்" என்று சொன்னான் மாதவகுப்தன்.

"குருவின் ஆணையைச் சீடன் மீற முடியாது என்பதை உணர்ந்துகொள்வது உசிதமல்லவா மாதவகுப்தா?" என்று வினவினான் பண்டி.

"அது ஆணையைப் பொறுத்தது; குரு இருக்கும் பக்கத்தைப் பொறுத்தது!" என்று விளக்கினான் மாதவகுப்தன்.

"ஆணையைப் பொறுத்ததா!" என்று வியப்பைச் சொற்களில் உதிர்த்தான் பண்டி.



"துரோணருக்கு எகலைவன் மானசிக சீடன். அவன் விரலை வெட்டி வாங்கினார் குரு, அவன் வில் வித்தை பயனுறாதிருக்க. அயோக்கியத்தனம் செய்த, திரௌபதியை மானபங்கப்படுத்திய கௌரவர்கள் பக்கம் சேர்ந்து சீடர்களான பாண்டவர்களுக்கு எதிராகப் போர் புரிந்தார். அவருடைய ஆத்ம சீடன் அர்ஜுனன் அவரைக் கொல்ல வேண்டியதாயிற்று" என்று புராண உவமைகளை வரிசையாகக் காட்டினான் மாதவகுப்தன்.

எதற்கும் குழம்பாத பண்டியும் சிறிது குழம்பினான். "உன் கடிதத்திற்கும் அந்தப் புராண நிகழ்ச்சிகளுக்கும் என்ன சம்பந்தம்?" என்று வினவினான் குழப்பத்தின் ஊடே.

"முற்றும் இருக்கிறது சம்பந்தம் ஆசார்யரே. இங்கும் ஒரு பெண்ணின் கௌரவம் சம்பந்தப்பட்டிருக்கிறது. திரௌபதியின் கஷ்டத்தை மற்ற அரசர்கள் பேடிகள் போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இது துவாபரயுகமல்ல. நமது பெண்களுக்குக் கைகொடுக்க வீரர்கள் இருக்கிறார்கள்" என்று கூறிய மாதவகுப்தன், "வழி விடுங்கள் ஆசார்யரே!" என்று அவரை நோக்கியும் வந்தான்.

பண்டி அப்பொழுதும் வழி விடவில்லை. இடித்த புளி போல் நின்றான். "ஆசார்யரே! விலகுங்கள். அரசகுமாரியின் கடிதத்தை என்னிடமிருந்து வாங்க யாராலும் முடியாது. என்னைக் கொன்றாலும் கடிதத்தைக் கொடுக்கமாட்டேன்" என்று சொன்னான் மாளவ இளவரசன் மாதவகுப்தன்.

பண்டி அவனை ஏற இறங்க நோக்கினான். "உன்னைச் சிறை செய்தால்!" என்று வினவினான்.

"சிறை செய்யும் பலனை இந்த ராஜ்யம் அனுபவிக்கும். ராஜகுமாரிக்கு மணமுடிக்க மகாராஜா துடிக்கிறார். திருமணத்தை எதிர்பார்த்திருக்கிறாள் அரசகுமாரியும். இதற்கிடையில் மகாராணியும் நீரும் சேர்ந்து செய்யும் சதி

மகாராஜாவுக்குத் தெரிந்தாலும் கஷ்டம். இன்னொரு நாட்டு இளவரசனை, அதுவும் இங்கு ஹர்ஷனுக்குத் துணைவனாகவும் வித்தை கற்கும் சீடனாகவும் வந்திருக்கும் ராஜகுமாரனைச் சிறை செய்தால் மகாராஜாவுக்கு நீங்கள் பதில் சொல்ல நேரிடும். மகாராஜாவை சரிகட்டி விட்டாலும் எனது அண்ணன் தேவகுப்தன் படையெடுப்பதை நீங்கள் தவிர்க்க முடியாது. துஷ்டப்பிரபு என்று பெயர் வாங்கியவனும், அரசகுமாரியிடம் வாள் போரில் தோற்றதால் அடியுண்ட வேங்கைபோல் உங்கள் மீது பழி வாங்க சமயம் பார்த்திருப்பவனுமான தேவகுப்தன், தனது தம்பியைச் சிறை செய்த சாக்கை வைத்துக்கொண்டு போருக்கு வருவான். "வித்தை கற்கச் சென்ற தம்பியை தானேசுவர மகாராஜா சிறை செய்தார், இந்த அக்ரமத்தைக் கண்டிக்காமல் விடக்கூடாது' என்று அவன் செய்தி பரப்பினால் தானேசுவரம் மற்ற மன்னர்கள் கண்களில் இழிநிலை அடையும். இத்தனை சிக்கல்கள் இருக்கின்றன. சிந்தித்துப் பாருங்கள் ஆசார்யரே!" என்று நிதானமாக விளைவுகளைக் கோர்வையாகச் சொன்னான் மாதவகுப்தன்.

பண்டி மேற்கொண்டு தர்க்கத்தில் இறங்கவில்லை, மாதவகுப்தன் சொன்னவை அனைத்தும் உண்மையென்பதை அவன் அறிந்தேயிருந்தான். இருப்பினும் மகாராணியைத் திருப்தி செய்ய, "மாதவகுப்தா! அரசர் பெயரால் உன்னைச் சிறை செய்கிறேன். உன் வாளைக் கொடு" என்றான்.

மாதவகுப்தன் வாளைக் கொடுக்கவில்லை. "ஆசார்யரே! சிறைக்கு வருகிறேன். ஆனால் என்னிடமிருந்து வாளையோ, எனது கச்சையிலுள்ள குறுவாளையோ, கடிதத்தையோ பெற முயல வேண்டாம். வீரர்களைக் கொண்டு என்னைப் பணிய வைக்கலாமென்று கனவு காணவே வேண்டாம். யார் என்னை அணுகி வந்தாலும்



இங்கு போர் நடக்கும். அதன் கூச்சலும் மாண்டு விழும் உமது வீரர்கள் அலறலும் அரண்மனையெங்கும் ஒலி கிளப்பும். மகாராஜா நேரில் வராதிருக்க மாட்டார். வந்தால் அவர் குறிப்பிட்ட திருமணத் தேதியை மாற்ற நடக்கும் சதியைப் பற்றி அவரிடம் சொல்லுவேன். மகாராஜா தலையிடாவிட்டாலும் இந்தக் கதை நாளையே தானேசுவரமெங்கும் பரவும். பிறகு இந்த ராஜ குடும்பத்தின் கௌரவம் எப்படியிருக்கும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை" என்று சாந்தமாகப் பேசினான்.

அந்த சாந்தத்தில் எத்தனை விஷமம் இருக்கிறது, எத்தனை பொல்லாங்கு இருக்கிறது, எத்தனை உண்மையிருக்கிறது என்பதை உணர்ந்த பண்டி, "சரி மாதவகுப்தா! என்னுடன் வா. நாளை மன்னர் விசாரணைக்குப் பின்பு எது நடக்கிறதோ நடக்கட்டும்" என்று கூறிவிட்டுத் திரும்பி நடந்தான். மாதவகுப்தன் ஏதும் பேசாமல் அவனைத் தொடர்ந்தான். அரண்மனையின் தரைத்தளத்துக்கு அவனை அழைத்து வந்த பண்டி, மன்னர்கள் சிறை வைக்கப்படும் பெரிய அறையொன்றில் அவனை அடைத்துப் பூட்டினான். "காலையில் சந்திக்கிறேன்" என்று சொல்லிச் சென்றான்.

பண்டி சென்ற பிறகு அந்த அறை வாயிலுக்கு இரு காவலர் வந்துவிட்டதை உணர்ந்த மாதவகுப்தன் தனக்குள் நகைத்துக் கொண்டு அறையை நோட்டமிட்டான். அறையின் சுவர்கள் பலமாயிருந்தன. சாளரக் கட்டைகளும் கம்பிகளும் மிகப் பெரியதாகவும் வலுவுள்ளதாகவும் இருந்தன. அந்த அறையை விட்டுத் தப்பிச் செல்வது நடவாத காரியம் என்று தனக்குள் சொல்லிக் கொண்ட மாதவகுப்தன் அங்குள்ள மஞ்சமொன்றில் அமர்ந்து பின்னால் சாய்ந்து சிந்தனை வசப்பட்டான். இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு காவலர் கொண்டுவந்த ராஜபோக உணவை நன்றாகவே அருந்தினான். காவலரையும் சிரித்த முகத்துடன்

வரவேற்றான். மாதவகுப்தன் நல்குணத்திற்காக அவனை அரண்மனை முழுவதுமே நேசித்ததால் காவலர் உள்ளே வந்தபோதெல்லாம் தலைவணங்கியும் "மன்னிக்க வேண்டும்" என்றும் கூறினர். காவலரில் ஒருவன் மட்டும் சொன்னான். "பிரபு! கவலைப்பட வேண்டாம். இது மன்னருக்குத் தெரிந்தால் பேசாமலிருக்க மாட்டடார்" என்று தைரியமும் சொன்னான். அது உபசாரப் பேச்சு என்று மாதவகுப்தன் எண்ணினான். அது தவறு என்பதை அன்றைய இரவின் நிகழ்ச்சிகள் நிரூபித்தன.

அன்று உணவருந்தியபின் மகாராஜா தமது பஞ்சணையில் சாய்ந்துகொண்டிருந்த சமயம் மகாராணியே பேச்சைக் கிளப்பினாள். "பண்டியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நினைப்பதற்கென்ன இருக்கிறது. மைத்துனன் மகன் அவனைப்பற்றித் தவறாக நினைக்கலாமா?" என்று மகாராஜா கேட்டார் புன்முறுவல் செய்து.

"என் அண்ணன் மகன் என்பதற்காக அவனைப் பாராட்ட வேண்டாம்" என்று ஏதோ சொல்லப்போன மகாராணியின் முதுகைத் தடவிக் கொடுத்தார் மகாராஜா.

மகாராணி சற்றே நெளிந்தாள். "நாம் இன்னும் வாலிப வயதல்ல..." என்று மகாராணி வெட்கத்தை முகத்தில் காட்டினாள்.

"அப்படியென்ன உனக்கு வயதாகிவிட்டது? ஐம்பது வயது ஒரு வயதா? அப்படியே இருந்தாலும் உன் அழகும் கட்டும் எங்கு மாறியது? என்ற மகாராஜா தனது கையை மகாராணியின் இடையில் செலுத்தினார்.

மகாராணி மகாராஜாமீது சாய்ந்துகொண்டு. "உங்களுக்கு இன்னும் சபலம் போகவில்லை. மாப்பிள்ளை



வரப்போகிறார். இன்னும் நீங்கள் மாப்பிள்ளையாக இருக்க விரும்புகிறீர்கள்" என்று வார்த்தைகளை உதிர்த்தாள்.

"ஏன் மகாராணி! மாப்பிள்ளை வரத்தான் ஒரு மாதமிருக்கிறதே. அதுவரைக்கும் நான் மாப்பிள்ளை தானே?" என்ற மகாராஜா மெதுவாகவும், விஷமமாகவும் சிரித்தார்.

மகாராணி மோகனப் புன்னகை கோட்டினாள். அந்த வயதிலும் மகாராணி அழகாகவே காட்சியளித்தாள் மகாராஜாவின் கண்களுக்கு. "பேச்சை எங்கோ கொண்டு போய்விட்டீர்கள்! பண்டியைப் பற்றிக் கேட்டேனே. அவன் தங்களைக் கேட்காமலே ஒரு முடிவு எடுத்து நிறைவேற்றியும் விட்டான்" என்றாள் மகாராணி மெதுவாக.

மகாராஜாவின் கண்களில் திடீரென ஏதோ ஒரு சிந்தனை ஒளி பிறந்து மறைந்தது. "பண்டி எது செய்தாலும் சரியாகத்தான் செய்வான்" என்றார்.

"நடந்தது உங்களுக்குத் தெரியாது..." மகாராணி மெதுவாக விஷயத்துக்கு வந்தாள்.

"தெளிவாகத்தான் சொல்லேன்" என்றார் மகாராஜா.

மகாராணி சிறிது நிதானித்தாள். "மாதவகுப்தனை சிறை செய்திருக்கிறான்" என்றாள் மகாராணி சில விநாடிகளுக்குப் பிறகு.

மகாராஜா எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை. "அதற்கென்ன இப்பொழுது? காலையில் விசாரிப்போம்" என்று கூறிவிட்டு மகாராணியை அணைத்தார் மெதுவாக. "சரி, நீ போ உன் அறைக்கு. எனக்கு உறக்கம் வருகிறது" என்றார்.

மகாராணி மெதுவாக எழுந்து அந்த அறைக்குப் பக்கத்திலிருந்த தனது அறைக்குச் சென்றாள்.

"இடையிலிருக்கும் கதவு திறக்கட்டும்" என்று மகாராஜா கொஞ்சினார். வெட்கப் பார்வையொன்றை மகாராஜாமீது வீசிவிட்டுத் தனது அறைக்குச் சென்றாள் மகாராணி.

நேரம் ஓடியது. மாதவகுப்தன் தனது அறை மஞ்சத்தில் விழித்துக் கிடந்தான். நடுநிசி வந்ததை அரண்மனை உச்சிகால மணியால் அறிந்த மாதவகுப்தன் மஞ்சத்திலிருந்து எழுந்திருக்க முடியாதபடி ஒரு கை அவனை அழுத்தியது. அவன் முகத்திற்கெதிரே குனிந்த ஒரு உருவம், "அந்தக் கடிதத்துடன் இதையும் வைத்துக் கொள்" என்று கூறி அவன் கச்சையில் ஒரு கடிதத்தைத் திணித்தது. பிறகு அவன்மீது தனது கையிலிருந்த சால்வையைப் போர்த்தி, தலையிலிருந்து இடுப்பு வரை அவனை மறைத்து வெளியே அழைத்துச் சென்றது. அரண்மனை பின்புற வாயிலுக்கு வந்ததும், "உன் புரவி எட்ட இருக்கும் மரத்தில் கட்டியிருக்கிறது. பின்புற வாயிலால் சென்றுவிடு. யாரும் உன்னைத் தடுக்க மாட்டார்கள்" என்று கூறியது. அந்த உருவத்தை வணங்கிப் புரவிமீது ஏறி வெளியேறினான் மாதவகுப்தன். புரவியின் ஒலி கேட்டு ஓடிவந்த பண்டி அந்த உருவத்தைக் கண்டதும் பிரமித்து நின்றான். "மகாராஜா! நான் சிறை வைத்தவன் தப்பிவிட்டான்?" என்று வெலவெலத்த குரலில் கூறினான்.

"ஏன் தப்பவிட்டாய்?" என்று மகாராஜா வினவினார்.

அபாண்டமான அந்தக் குற்றச்சாட்டைக் கேட்டு பண்டி கிலிக்கு உள்ளானான்.

# 16

## மகாராஜாவின் சாகசமும் சரசமும்

மகாராஜா பிரபாகரவர்த்தனர், "அவனை ஏன் தப்ப விட்டாய்?" என்று தன்மீதே குற்றத்தைத் திருப்பிவிட்டதைக் கவனித்த ஆசார்ய பண்டி சில விநாடிகள் பிரமை பிடித்துச் சிலையென நின்றாலும், பிறகு சமாளித்துக்கொண்டு, "நானே சிறை செய்தவனை நானே எப்படித் தப்பவிட முடியும் மகாராஜா!" என்று வினவினான்.

மகாராஜா பண்டியின்மீது தமது கண்களைத் திருப்பி, "பண்டி! சிறை செய்தது நீதானா?" என்று வினவினார் ஏதுமறியாதவர்போல.

"ஆம்" என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் பதில் சொன்னான் பண்டி.

"அவனுக்குச் சரியான காவல் வைத்தாயா?" என்று மீண்டும் வினா தொடுத்தார்.

"இரண்டு காவலரைப் பாதுகாக்க நியமித்திருந்தேன்.." பண்டியின் குரலில் பலவீனமிருந்தது.

"சிறை செய்யப்பட்டவன் பலவானாயிருந்தால் காவலை அதிகமாகப் போடுவது உனது பொறுப்பல்லவா?" மகாராஜா கேட்டார் கண்டிப்பான குரலில்.

"ஆம் மகாராஜா!"

"ஏன் அப்படிச் செய்யவில்லை?"

இதற்கு என்ன பதில் சொல்வதென்று விளங்கவில்லை பண்டிக்கு. ஆகவே மௌனமே சாதித்தான்.

மகாராஜாவே மேற்கொண்டு கேட்டார், "அப்படி யாரை சிறை செய்தாய்? எப்பொழுது?" என்று.

விசாரணை தன்னை நெருங்குவதை உணர்ந்து கொண்ட பண்டி உண்மையைக் கக்கலானான். "மாதவகுப்தனைச் சிறை செய்தேன்" என்று தடுமாறினான்.

மகாராஜாவின் கண்களில் கோபம் துளிர் விட்டது. "யார் மாளவ இளவரசனையா?" என்று வினவினார் சினம் லேசாகக் குரலில் ஒலிக்க.

"ஆம் மகாராஜா!" பண்டியின் குரலில் அச்சம் இருந்தது.

"இந்த அரண்மனையில் வித்தை பயிலவும் அரச குமாரர்களுக்கு நண்பர்களாக இருக்கவும் வந்த அரச குமாரனை சிறை செய்வதால் உண்டாகக்கூடிய விளைவை யோசித்தாயா பண்டி?" என்று மகாராஜா கவலையுடன் கேட்டார்.

"யோசித்தேன்..." பண்டி மென்று விழுங்கினான்.

"அப்படிச் சிறைக்குச் செல்ல என்ன குற்றம் செய்தான்?"

"ஒரு கடிதத்தை எடுத்துக்கொண்டு அயல் நாட்டுக்குச் செல்ல முயன்றான்."

"என்ன கடிதம் அது?"

"தெரியாது."

"வாங்கிப் படித்துப் பார்க்கவில்லை?"

"ஏன்?"



"அவன் கொடுக்க மறுத்தான்."

"அதனால் விட்டுவிடுவதா? அரசாங்கத்துக்குப் பாதகமான கடிதத்தை எடுத்துச் செல்வது யாராயிருந்தாலும் வீரர்களைக் கொண்டு கடிதத்தைப் பிடுங்க வேண்டியது தானே?" மகாராஜாவின் குரலில் கோபாக்கினி சுடர் விட்டது.

அதற்குமேல் தாங்காத பண்டி, "மகாராஜா! இதில் அரசியல் ஏதமில்லை; மகாராணியார் அந்தக் கடிதத்தை விரும்பினார்கள். அந்தக் கடிதம் செல்லாதபடி தடை செய்யவும் உத்தரவிட்டார்கள். நமது ராஜ்யஸ்ரீ கல்யாண விஷயம் அது. தேதியை ஒத்திப்போட மகாராணியார் முயற்சி செய்ய, அதைப்பற்றி ராஜகுமாரி கிருக வர்மனுக்குக் கடிதம் எழுதினாளாம். ராஜ்யஸ்ரீ இதில் தலையிடுவதை விரும்பவில்லை மகாராணி" என்று விளக்கிச் சொன்னான்.

மகாராஜா முழுவதையும் கேட்டுக்கொண்டு, "பண்டி! இந்த விஷயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம். ஏதும் நடக்காதது போல் இருந்துவிடு. இந்த விவரங்கள் வெளியானால் நமது குடும்பத்துக்கே அவமானம்" என்று கூறிவிட்டு மீண்டும் உப்பரிகைப் படிகளில் ஏறிச் சென்றார். தமது பள்ளியறையை அடைந்த பிரபாகரவர்த்தனர் தமது மேல் போர்வையைக் களைந்து பஞ்சணைமீது எறிந்துவிட்டு மகாராணியிருந்த பக்கத்து அறைக்குச் சென்றார்.

மகாராணி நன்றாக உறங்கிக்கொண்டிருந்தாள். அறை விளக்கின் வெளிச்சத்தில் அவள் அங்க லாவண்யங்கள் மிகத் தெரிளவாகத் தெரிந்தன. ஐம்பது வயது தாண்டியும் சிறிதும் கட்டுத் தளராமல் பத்து வயது குறைவாகத் தென்பட்ட அவள் அழகிய உடலை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே நின்ற மகாராஜா, "இவளுக்குக் காரணமாகத்தான் யசோமதி என்று பெயர் வைத்திருக்கிறார்கள்" என்று தமக்குள் சொல்லிக் கொண்டார். மகாராணியின் மூச்சு ஒரே சீராக

வந்துகொண்டிருந்தது. உறக்கத்திலும் ஒரு சீர் இருந்ததையும் உத்தம ஸ்திரீகளுக்கு லட்சணமாக அவள் இரு கால்களையும் குறுக்கி ஒருக்களித்துப் படுத்ததால் பெரிதாக எழுந்திருந்த பின்னெழில் ஒன்றின்மீது தமது வலது கையை வைத்த வண்ணம் மகாராஜா மகாராணியின் பக்கத்தில் உட்கார்ந்தார்.

மகாராஜாவின் கைப்பட்டதும் சிறிது சிணுங்கிய மகாராணி சிறிது நகர்ந்து படுத்தாள். அதன் விளைவாகக் கிடைத்த இடத்தில் படுத்து கால்களை நீட்டிக்கொண்ட மகாராஜா அந்த அறையின் கூரையிலிருந்த காமச் சித்திரங்களைக் கவனிக்கலானார். "மகரிஷியிலிருந்து மகாபதிதன் வரை, கவியிலிருந்து பாமரன் வரை காம வசப்படவே செய்கிறான்" என்று மனத்துள் சொல்லிக் கொண்ட மகாராஜா மகாராணியின் மீது தமது கை யொன்றைப் போட்டார். அந்தக் கையைத் தனது கையால் பற்றிய மகாராணி, "மகாராஜாவா?" என்றாள்.

மகாராஜா விஷமமாகப் புன்முறுவல் கொண்டார். "வேறு யாரை எதிர்பார்த்தாய்?" என்று வினவினார்.

மகாராணி கோபத்துடன் திடீரென்று திரும்பினாள் மகாராஜாவை நோக்கி. அதனால் கட்டிலிலிருந்து விழப்போன மகாராஜாவைத் தனது இரு கைகளாலும் அணைத்துப் பிடித்தாள். "மூன்று குழந்தைகளைப் பெற்ற பிறகு பேச்சு மிக அழகாயிருக்கிறது" என்று கடிந்தும் கொண்டாள். அத்துடன் விடவில்லை, "நமது பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமான பிறகு, இந்த சேஷ்டையெல்லாம் சரி வராது. நாம் சிறிது நிதானத்துடன் நடந்துகொள்வது நல்லது" என்றும் சொன்னாள் அணைப்பை நீக்காமலே.

மகாராஜாவின் உணர்ச்சிகள் அந்த வயதிலும் தடுமாறின. உண்மையில் மகாராஜாவுக்கும் மகாராணிக்கும்



இரண்டு மூன்று வயதுகள்தான் வித்தியாசம். ஆகவே உணர்ச்சிக்கு ஆட்பட்ட மகாராஜா "நிதானமாகவே நடந்துகொள்கிறேன், எத்தனை நேரம் காத்திருக்க வேண்டும் சொல்" என்று கூறினார்.

"எதற்கு?" என்றாள் மகாராணி.

"இதென்ன கேள்வி யசோமதி? நாமிருவருமே இந்தப் பரீட்சையில் தேறியவர்கள்" என்று சிலேடையாகப் பேசினார்.

மகாராணி நகைத்தாள். "மகாராஜா, உங்கள் துஷ்டத்தனம் போகவில்லை. இருங்கள், ராஜ்யஸ்ரீக்குக் கணவன் வந்து விடட்டும். அப்புறம் நீங்கள் ஆட்டம் போடுவதைப் பார்ப்போம்" என்றாள் மகாராணி.

"பார்ப்போம், ஒரு மாதம் காத்திருக்க என்னால் முடியாதா?" என்று வினவினார் மகாராஜா.

"ஒரு மாதமா!" வியப்பு ஒலித்தது மகாராணியின் குரலில்.

"ஒரு மாதத்திற்குள்தானே சோதிடர் தேதி நிச்சயம் செய்திருக்கிறார்?" மகாராஜா வினவினார்.

"எல்லாவற்றுக்கும் சோதிடரை நம்பக்கூடாது. நமது புத்தியையும் உபயோகப்படுத்த வேண்டும்." மகாராணி மெள்ள விஷயத்துக்கு வந்தாள்.

"சரி உபயோகப்படுத்து."

"கல்யாணத்தை இரண்டு மாதத்துக்குத் தள்ளிப் போட நிச்சயித்துவிட்டேன்."

"ஏன்?"

"ராஜ்யஸ்ரீ இப்பொழுதுதான் பெரியவளானாள் கனியாத காய் அவள்."

இப்பொழுதுதான் புஷ்பவதியாகிவிட்டாள். புஷ்பித்துப் பிஞ்சு விட்டுக் காயாகிப் பழமாகிற நாளுக்குக் கிழமாய் விடுவாளே?" என்று கூறி மகாராஜா நகைத்தார்.

"மகாராஜா!" மகாராணி அதட்டினாள்.

"ஏன் மகாராணி?" மகாராஜா ஏதுமறியாதவர்போல் கேட்டார்.

"நீங்கள்தான் ரொம்பப் புத்திசாலி, உங்களுக்குத்தான் பேசத் தெரியும் என்று நினைக்காதீர்கள். ராஜ்யஸ்ரீ புஷ்பவதியாகியிருக்கலாம். இன்னும் பக்குவப்படாதவள். எங்கள் உடற்கூறு உங்களுக்குப் புரியாது" என்றாள் மகாராணி சினத்துடன்.

"எங்கள் என்றால் உன்னைச் சேர்த்தா? உன் உடற்கூறு எனக்குப் புரியாதா?" என்ற மகாராஜா பெரிதாகச் சிரித்தார்.

"அசட்டுச் சிரிப்பு போதும், நிறுத்துங்கள்" என்று கடிந்தாள் மகாராணி.

"சரி."

"ராஜ்யஸ்ரீயின் கல்யாணம் சோதிடர் வைத்திருக்கும் தேதியில் நடக்காது."

"நீ வைக்கப்போகிற தேதியில்தான் நடக்குமாக்கும்?"

"ஆம்."

"உன்னையும் சோதிடரையும் மீறி விதி என்று ஒன்றிருக்கிறதே மகாராணி?"

"விதியை வளைக்க என்னால் முடியும். விதியை மதியால் வெல்லலாம்" என்ற மகாராணியை மகாராஜா மேற்கொண்டு பேசாமல் லேசாக அணைத்தார்.

விதி அத்தனை சுலபமாக அசைக்கக்கூடியதல்ல என்று மகாராணி மறுநாள் காலையில் புரிந்துகொண்டாள்.



மகாராணி எழுந்ததும் எழுந்திராததுமாக அவளைச் சந்தித்த பண்டி, "மகாராணி! பறவை பறந்துவிட்டது" என்றான்.

"எப்படி?" என்று மகாராணி சுடுவிழிகளை பண்டிமீது நாட்டினாள்.

பண்டி பதில் சொல்லுமுன்பு சிறிது சிந்தித்தான். முடிவில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "மகாராஜாவின் உதவியால்" என்று சொற்களை நிதானமாக உதிர்த்தான்.

மகாராஜா ஏதுமறியாத பூனைபோல் இரவில் தன் அறைக்கு வந்து சரசத்துக்குத் துவங்கியதையும், பற்பல அர்த்தங்கள் விளங்க அவர் பேசியதையும் நினைத்துப் பார்த்த மகாராணி, ஒரு காலை கோபத்துடன் தரையில் உதைத்தாள். "மகாராஜா! உங்கள் சாமர்த்தியத்தைப் பார்க்கிறேன்" என்று உள்ளூர சொல்லிக்கொண்டு வேகமாக ராஜ்யஸ்ரீயின் அறையை நோக்கி நடந்தாள்.

அத்தனை காலையில் தாயார் வருவாளென்று லவலேசமும் எதிர்பார்க்காததால் பஞ்சணையில் நன்றாக உறங்கிக் கொண்டிருந்த ராஜ்யஸ்ரீ 'ஊம் ஊம்' என்று இரு முறை முனகினாள். அப்படி முனகியவள் ஒருக்களித்த சயன நிலையிலிருந்து திரும்பிக் குப்புறப் படுத்துத் தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு கால்களை இப்படியும் அப்படியும் ஆட்டினாள். அப்பொழுதும் அவள் ஏதோ கனவு கண்டு கொண்டிருக்கிறாளென்பதை அவள் திடீர் முனகலாலும் அவள் புஷ்ப உடல் பஞ்சணையில் லேசாகப் புரண்டதாலும் அறிந்துகொண்ட மகாராணி அதற்கான காரணங்களையும் ஊகித்துக் கொண்டதால், "இந்த சிறுசுகளுக்குப் பிறக்கும்போதே சகலமும் தெரிந்து விடுகிறது" என்று உள்ளூர அலுத்துக்கொண்டாள். இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல் பெண்ணை

இருமுறை அசைத்து, "ராஜ்யஸ்ரீ! ராஜ்யஸ்ரீ! எழுந்திரு" என்று அதட்டினாள்.

ராஜ்யஸ்ரீ குப்புறப் படுத்த நிலையிலேயே தலையைச் சிறிது தூக்கிப் பக்கப் பார்வையாக மகாராணியைப் பார்த்து, "என்னம்மா! இதற்குள் ஏன் எழுப்புகிறாய்?" என்று வினவினாள்.

மகாராணி பஞ்சணையில் பெண்ணின் பக்கத்தில் அமர்ந்து, "ராஜ்யஸ்ரீ! புருஷன் வீட்டுக்குப் போகப் போகிறவள் இத்தனை நேரம் உறங்கக்கூடாது" என்றாள் பெண்ணை ஆசையுடன் முதுகில் தடவிக்கொடுத்து.

ராஜ்யஸ்ரீ உடலைச் சிறிது புரட்டி தலையைத் தாயின் மடிமீது வைத்துக்கொண்டு, "அம்மா! புருஷன் வீட்டுக்குப் போவதற்குத்தான் நாளிருக்கிறதே. அதுவரை சிறிது தூங்கினால் என்ன?" என்று செல்லமாகக் கேட்டாள்.

மகாராணியின் முகத்தில் தந்திரக்குறி பரவியது. 'அடி ராஜ்யஸ்ரீ! தீட்டிய மரத்திலேயே கூர் பார்க்கிறாயே, என்று உள்ளூர சொல்லிக்கொண்டாலும், மேலுக்குக் கேட்டாள், "நாளிருப்பதாக யார் சொன்னது? சோதிடர் ஒரு மாதத்திற்குள் முகூர்த்தம் வைத்திருப்பது உனக்குத் தெரியாதா?" என்று.

"தெரியும். ஆனால் நீ ஏதோ முகூர்த்தத்தை ஒத்திப் போட்டுவிட்டதாக அரண்மனையில் பேசிக் கொள்கிறார்களே?" என்று மெதுவாகக் கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

மகாராணியின் முகத்தில் சந்தேகம் நிலவியது. "யார் பேசிக்கொள்கிறார்கள்?" என்று வினவினாள் சந்தேகம் குரலிலும் ஒலிக்க.

17

# அரண்மனை தந்திரங்கள்

தாயார் தன்னை ஏதோ சோதனை செய்ய வந்திருக்கிறாளென்பதை உணர்ந்துகொண்டாள் ராஜ்யஸ்ரீ. தான் தூது அனுப்பியது ஒருவேளை தாயாருக்குத் தெரிந்து விட்டதோ என்றுகூடக் கலங்கினாள். ஆனால் உயிர் போனாலும் மாதவகுப்தன் செய்தியை வெளியே விடமாட்டானென்பது அவளுக்கு நிச்சயப்பட்டிருந்ததால் அந்தக் கலக்கத்தைக் கைவிட்டு, "யாரென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. எல்லோரும் பேசிக்கொள்வதாகத் தோழிகள் சொன்னார்கள்" என்றாள்.

"அப்படியா?"

"ஆம் அம்மா."

"அதை நீ நம்புகிறாயா பெண்ணே?"

"இல்லையம்மா."

இதைக் கேட்ட மகாராணி தனது மகளின் தந்திரத்தை உள்ளூர மெச்சிக்கொண்டாள். புலி எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்ற பழமொழி சரியாயிருக்கிறதென்று எண்ணமிட்டாள். அந்த எண்ணத்தை வெளிக்குக் காட்டாமல், "ராஜ்யஸ்ரீ! நீ எனக்கு ஒரே பெண்" என்றாள்.

"ஆம் அம்மா" என்ற ராஜ்யஸ்ரீயும் தாயின் தொடையில் தனது முகத்தைப் புரட்டினாள்.

மகாராணி நைச்சியம் செய்யத் தொடங்கி, "மகளே! எந்தத் தாயாவது தனது மகளின் நலத்துக்கும் சுகத்துக்கும் இடைஞ்சலாகச் செயல்படுவாளா?" என்று கொஞ்சினாள். "என் கண்ணே! யார் எதைச் சொன்னாலும் நம்பாதே" என்று கூறிக் குனிந்து தனது பெண்ணின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

பெண்ணும் தாய்க்குச் சளைக்கவில்லை. சட்டென்று எழுந்து தாயின் கழுத்தை வளைக்கப் போனவள் தாயின் நிலை கண்டு சிறிது தாமதித்து, "இதென்னம்மா இது?" என்று தாயின் கலைந்த குழலையும் ஆடையையும் கவனித்து அதிர்ச்சியுற்றுக் கேட்டாள்.

"எதைச் சொல்கிறாய்?" என்று தாய் வினவினாள்.

ராஜ்யஸ்ரீ புன்முறுவல் செய்து, "எதையா? போய் அந்த நிலைக்கண்ணாடியில் பார்" என்றாள்.

மகாராணிக்கு மெள்ள விஷயம் புரிந்ததால், "இந்த வயதில் எனக்குக் கண்ணாடி வேறு, அழகு பார்ப்பது வேறு" என்று வெளியே சொன்னாலும் உள்ளூர ஏற்பட்ட வெட்கத்தால் தலையைக் கோதிவிட்டுக் கொண்டாள். ராஜ்யஸ்ரீ தாயின் சேலையை நன்றாகப் போர்த்திச் சரி செய்தாள். "அம்மா! உன் ஆடை எப்பொழுதும் நலுங்காதே? இன்று ஏன் இப்படிக் கலைந்திருக்கிறது?" என்று வினவவும் செய்தாள்.

"தூக்கத்தில் புரண்டிருப்பேன்" என்று சமாளிக்கப் பார்த்தாள் மாகராணி.

"நீ புரளமாட்டாயே அம்மா?" என்று மீண்டும் துருவிக் கேட்டாள் ராஜ்யஸ்ரீ.



"இதற்கென்னடி இத்தனை கேள்வி? நான் எப்படியிருந்தாலென்ன? எனக்கு வயதாகிவிட்டது" என்ற மகாராணி, 'நேற்று புஷ்பவதியானவள், என்னை என்னென்ன கேட்கிறாள்? போக்கிரி' என்று உள்ளூர எண்ணினாள். "எழுந்து போய் நீராடிவிட்டு வா. நானும் நீராடி வருகிறேன்" என்று கூறிப் பஞ்சணை முகப்பிலிருந்து எழுந்திருக்கவும் செய்தாள்.

ராஜ்யஸ்ரீயும் எழுந்து பஞ்சணையில் உட்கார்ந்து கால்களைத் தொங்கப்போட்டு ஆட்டிக்கொண்டே தாயை உற்று நோக்கினாள். மகாராணியும் தனது மகளின் கண்கள் தன்னை ஆராய்வதைக் கவனித்ததால் சேலையைச் சரியாகச் சீர் செய்துகொண்டு கிளம்பி வாயிற்படியை அடைந்தவள், "ராஜ்யஸ்ரீ! வயது வந்தவள் என்பதை நினைவில் வைத்துக் கொள்" என்றாள்.

"சரி அம்மா." ராஜ்யஸ்ரீ புன்முறுவலுடன் பதில் சொன்னாள்.

"இனி ஆண் பிள்ளைகளோடு சரிசமானமாகப் பழகக் கூடாது" என்று சூசகமாகச் சொன்னாள் மகாராணி.

"உத்தரவுப்படி அம்மா" என்ற ராஜ்யஸ்ரீ நிலைக் கண்ணாடியிருக்குமிடம் சென்று அதில் தனது அழகைப் பார்த்துக்கொண்டாள். வாயிற்படியைத் தாண்டும்போதே அதைக் கவனித்த மகாராணி தனது பெண்ணின் உள்ளம் ஓடுமிடத்தைப் புரிந்துகொண்டாள். பிறகு ஏதும் பேசாமல் நடந்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் காலைக்கடன் முடிந்து, நீராடி, புத்தாடை புனைந்த தானேசுவர ராஜகுமாரியின் அறைக்குள், மன்னர் நுழைந்தார். மகளை அன்போடு அணைத்து நெற்றியில் முத்தமும் இட்டார். "அம்மா! நீ வர வர அழகாகிக்கொண்டு வருகிறாய்" என்று சிலாகிக்கவும் செய்தார்.

"அப்பா! நீங்களே என்னைப் புகழ்வது எப்படி முறையாகும்?" என்று வினவினாள் ராஜ்யஸ்ரீ.

"புரிகிறது" என்றார் மகாராஜா.

ராஜ்யஸ்ரீ உதடுகளைக் குவித்தாள். "என்ன புரிகிறது?" என்று வினவினாள்.

"புகழ்வதற்குத்தான் வேறொருவர் வர இருக்கிறாரே!" என்றார் மகாராஜா.

"அப்பா!" சினந்தாள் ராஜகுமாரி.

"ஏன் ராஜ்யஸ்ரீ?"

"ஒரு தகப்பன் பேசும் பேச்சல்ல இது."

"உன் தாயும் இப்படித்தான் அபிப்பிராயப்படுகிறாள்."

"தாய் சொன்னால் சரியாகத்தானிருக்கும்."

"எல்லாமா?"

"ஆம் எல்லாம்."

"உன் திருமணத்தை ஒத்திப்போடச் சொல்கிறாள் உன் தாய். அது உனக்கு ஒப்புதல்தானே?"

"ஒப்புதல் இல்லாமல் என்ன?" என்றாள் ராஜ்யஸ்ரீ.

"மகாராணியின் உத்தரவுக்கு விரோதமாக நடப்பவர்களை என்ன செய்யலாம்?" என்று மகாராஜா கேட்டார்.

"எதையும் செய்யலாம்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

"சிறையில் தள்ளலாமா?" என்று மகாராஜா கேட்டார்.

"தள்ளலாம்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

மகாராஜா தமது முகவாய்க்கட்டையைத் தடவி விட்டுக் கொண்டு மகளை நோக்கினார் அரைப் பார்வையாக. "ராஜ்யஸ்ரீ! சிறையில் தள்ளுவதில சிறிது கஷ்டமிருக்கிறது" என்று சொன்னார்.



"என்ன கஷ்டம் அப்பா?"

"சரியான காவலர் நம்மிடம் இல்லை."

"நம்மிடமா!"

"ஆம்."

"விசித்திரமாயிருக்கிறதே!"

"இந்த அரண்மனையில் சில நாட்களாக எல்லாமே விசித்திரமாயிருக்கிறது! எவனைச் சிறையில் தள்ளினாலும் அவன் மறுநாள் அங்கிருப்பதில்லை.

"ஏன்?"

"தப்பிவிடுகிறான். தப்பிவிடுவதற்கு உதவ அரண் மனைக்குள் நம் ஆட்களிருக்கிறார்கள்."

"இந்த அரண்மனையில் துரோகிகளா! இதுவரையில் கேள்விப்படாத விந்தையாயிருக்கிறதே!"

இதற்கு மகாராஜா உடனடியாகப் பதில் சொல்லவில்லை. பதில் சொன்னபோது மிக மெதுவாகவே பேசினார். "அம்மா! நேற்றிரவு ஒருவனைச் சிறையில் தள்ளினான் பண்டி. இன்று காலை அவனைக் காணோம். பண்டியைக் கேட்டால் விழிக்கிறான்..." என்றார் மகாராஜா.

ராஜ்யஸ்ரீயின் முகத்தில் பலவித உணர்ச்சிகள் தாண்டவ மாடின. 'சிறை செய்யப்பட்டவன் யார்? ஒருவேளை மாதவகுப்தனாயிருக்குமோ?' என்று தன்னைத்தானே வினவிக் கொண்டாள். 'இருந்தாலும் தப்பிவிட்டார். என்ன சூடிகை, மாதவகுப்தன் இந்தச் சிறு வயதில்!' என்று அவனை உள்ளூரப் பாராட்டவும் செய்தாள்.

இப்படி நினைத்தாலும் அதை வெளியே காட்டாமல், "யாரையப்பா சிறை செய்தீர்கள்" என்று மெதுவாக வினவி தந்தையை அணுகி அவர் தோள்மீது தலையை வைத்துக் கொண்டாள்.

"வேறு யார்? அந்தத் துஷ்டப் பிரபுவின் தம்பியைத் தான். அவன் வேறு எப்டி இருக்க முடியும்?" என்றார் மகாராஜா.

"அப்பா! அண்ணன் கெட்டவனாக இருந்தால் தம்பியும் அப்படியிருக்க வேண்டுமென்று சட்டமா?" என்று கேட்டாள்.

"இல்லை! அப்படியொன்றுமில்லை, ஆனால் மாதவகுப்தன் சந்தேகத்திற்குரியவன்" என்ற மகாராஜா "அரண்மனையிலிருந்து ரகசியமாக ஓடப் பார்த்தான்" என்றும் சொன்னார்.

பிறகு மெதுவாகக் குனிந்து, "உன் கடிதத்தை எடுத்துக் கொண்டு மாயமாய் மறைந்துவிட்டான்" என்று சொல்லி விட்டு அந்த அறையை விட்டு நகர்ந்தார் மகாராஜா.

ராஜ்யஸ்ரீ பஞ்சணையில் குதூகலத்துடன் விழுந்தாள். அங்கிருந்த தலையணையையும் எடுத்து மார்பில் அணைத்துக் கொண்டாள்.

அன்றிலிருந்து நான்காம் நாள் ராஜ்யஸ்ரீயின் கடிதத்தைத் தனது அரண்மனையின் சயன அறையில் கிருகவர்மனும் மார்பில் வைத்துக்கொண்டான். எதிரே நின்ற மாதவகுப்தனை நோக்கி, "தம்பி! நீ எனக்குச் செய்த உபகாரம் மதிப்பிட முடியாதது. இந்தா இதைப் போட்டுக்கொள்" என்று தனது கையிலிருந்த முத்திரை மோதிரத்தை எடுத்து மாதவகுப்தன் கையிலும் போட்டான். பிற்காலத்தில் அந்த மோதிரம் விளைவிக்க இருந்த சிக்கல்களை அந்த இருவருமே அன்று உணரவில்லை.

கிருகவர்மன் தனது விரலில் போட்டுவிட்ட மோதிரத்தை ஒரு முறைக்கு இருமுறையாகப் பார்த்த மாதவகுப்தன் அது மௌகாரிகளின் முத்திரை மோதிரம் என்பதைப் புரிந்துகொண்டதால் பெருவியப்பை எய்தினான்.



ஆகவே சொன்னான். "கன்னோசி ராஜ வம்சத்தின், அதாவது மௌகாரிகளின் முத்திரை மோதிரம் இது. இதைப் பிறருக்கு வழங்கும் வழக்கமில்லையே" என்று.

கிருகவர்மன் மாதவகுப்தனை நோக்கிப் புன்முறுவல் செய்தான். "உண்மை. இந்த மோதிரத்தைப் பிறருக்கு வழங்கும் வழக்கமில்லைதான்" என்றான் புன்முறுவலைச் சற்று விஸ்தரித்துக்கொண்டு.

"அப்படியானால் எனக்கு எப்படிக் கொடுத்தீர்கள்?" என்று வினவினான் மாதவகுப்தன்.

கிருகவர்மன் தனது மஞ்சத்தை விட்டு எழுந்து மாதவ குப்தன் அருகில் வந்தான். "பிறருக்குத்தான் வழங்கக்கூடாது என்று நியதி இருக்கிறது" என்று சிறிது அழுத்திச் சொற்களை உதிர்த்தான் மாதவகுப்தன். தோள்மீது தனது கையொன்றையும் போட்டுக்கொண்டான்.

"என்ன சொல்கிறீர்கள் கிருகவர்மரே?" என்று ஏதும் புரியாமல் கேட்டான் மாளவ ராஜபுத்ரன்.

"பிறருக்கு கன்னோசி முத்திரை மோதிரத்தை வழங்கக் கூடாது. ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கலாம். சகோதரனுக்கு வழங்கலாம்" என்றான் கிருகவர்மன்.

இம்முறை மாதவகுப்தன் புன்முறுவல் செய்து, "கிருக வர்மரே! நான் உங்கள் சகோதரனாயிருக்க முடியாது" என்றான்.

இதைக் கேட்டதால் திகைப்படைந்த கிருகவர்மன், "ஏன்? எனது சகோதரனாயிருப்பது கௌரவமாயில்லையா உங்களுக்கு?" என்று வினவினான். அவன் குரலில் அதிருப்தி யும் ஏமாற்றமும் பலமாயிருந்தன.

"கிருகவர்மரே! தாங்கள் அளிப்பது அத்துமீறிய கௌரவம். அதை நான் குறைத்து மதிப்பிடுவதாக நினைக்க

வேண்டாம். ஆனால் சகோதரனாயிருக்கும் உரிமையை நான் வேறொருவருக்கு அளித்துவிட்டேன்" என்ற மாதவகுப்தன் உள்ளூர குதூகலித்தான்.

"அப்படியா!" கிருகவர்மன் கேள்வியில் வியப்பு ஒலித்தது.

"ஆம்."

"என்னைவிட உயர்ந்தவரா அவர்?"

"ஆம் பலவிதத்தில்."

"யார்? தானேசுவர மகாராஜாவா?"

"இல்லை. அவருக்கு நான் சகோதரனாக முடியாது. எனக்குத் தந்தைக்குச் சமானம், வயதானவர்."

"ராஜ்யவர்த்தனனா, ஹர்ஷனா?"

"நாம் எல்லோரும் ஒன்றாக வித்தை பயின்றோம். அதில் ஒருவித சகோதரத்துவம் உண்டு. ஆனால் அந்த உறவு உடன் பிறந்த அளவுக்கு உயர முடியாது."

www.cleanindians.com

கிருகவர்மன் குழம்பினான். "என் ஊகத்துக்கும் மிஞ்சிப் போகிறது விஷயம். நீங்கள்தான் சொல்லிவிடுங்களேன்" என்று குழப்பத்துடன் ஆர்வமும் கொஞ்சலுங் கூடக் கலந்து ஒலித்த குரலில் கேட்டான் கிருகவர்மன்.

மாதவகுப்தன் மேலும் மார்மமாகப் பேசினான். "உள்ளங் கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அல்லாடுகிறீர் கிருகவர்மரே. உமது கையில் என்ன இருக்கிறது?" என்று கேட்டான்.

கிருகவர்மன் சட்டென்று நிலைத்து நின்றான்.

"ராஜ்யஸ்ரீயின் கடிதம். ஓகோ, புரிந்துவிட்டது. மாதவ குப்தரே, மைத்துனரே! இதை ஊகிக்க முடியவில்லையே.



நான் எப்படி ராஜ்யத்தை ஆளப்போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே மாதவகுப்தனை இறுகத் தழுவினான்.

மாதவகுப்தன் உடல் பூரித்து நின்றான். "கிருகவர்மரே! நான் நீண்டதூரம் பயணம் செய்திருக்கிறேன். உடை முழுவதும் மண்ணாகியிருக்கிறது" என்று கிருகவர்மன் தழுவலிலிருந்து விடுபட முயன்றான்.

கிருகவர்மன் தழுவல் கரடித் தழுவலாயிருக்கவே அதிலிருந்து விலக முடியவில்லை மாதவகுப்தனால். அத்துடன் கிருகவர்மன் சகஜமாகப் பேசத் தொடங்கி, "மாதவகுப்தா! இந்த மண் ராஜ்யஸ்ரீயின் தூது மண். அது எனது உடலிலும் படட்டும். அதிலும் இன்பம் இருக்கிறது" என்று கூறினான்.

"கிருகவர்மரே! எனது சகோதரியை நினைத்து நான் நடுங்குகிறேன்" என்றான் மாதவகுப்தன்.

"ஏன்?" கிருகவர்மன் சந்தேகத்துடன் கேட்டான்.

"உங்கள் முரட்டுத் தழுவலை என்னாலேயே தாங்க முடியவில்லை. பாவம், ராஜ்யஸ்ரீ, என்ன செய்வாள்?" என்று கூறி நகைத்தான்.

இதைக்கேட்ட கிருகவர்மனும் நகைத்தான் பெரிதாக. "மாதவகுப்தா! சில வேளைகளில் பெண்களின் தழுவல் இன்னும் பலமாயிருக்கும் என்று கேள்வி" என்று கூறிய கிருகவர்மன் முரட்டுத்தனமாக மாதவகுப்தன் முதுகில் பேய் அறைவது போல் அறைந்தான். "அப்பா! காதல் எத்தனை பயங்கரமானது!" என்று நினைத்த மாதவகுப்தனும், கிருகவர்மன் சிரிப்பில் கலந்துகொண்டான்.

18

## விதியின் சொற்கள்

**ரா**ஜ்யஸ்ரீயிடமிருந்து கிடைத்த கடிதத்தின் விளைவாக மகிழ்ச்சியின் எல்லையை எட்டி, தேன் குடித்த நரிபோல் நிதானம் தெரியாமல் துள்ளிய கிருகவர்மன், தூது வந்த மாதவகுப்தனை அடுத்த நான்கு நாட்கள் தனது அரண்மனையை விட்டு நகர விடவில்லை. சென்ற இடத்துக்கெல்லாம் அவனையும் அழைத்துச் சென்று தனக்குச் சமமான அந்தஸ்தையும் அளித்தபடியால், அவனையும் கன்னோசி மன்னனாகவே பிரபுக்களும் பணியாட்களும் நடத்தலானார்கள். அரண்மனைப் பெருமண்டபத்தில் உட்கார்ந்து ராஜ்யபாரம் செய்த நாலைந்து நாழிகைகளைத் தவிர மற்ற *சமயங்களில் மாதவகுப்தனை விட்டுப் பிரியாமலிருந்தபடியால், மாளவ இளவரசன் பாடு சிறிது திண்டாட்டமாகவே இருந்தது. அவன் வந்த மறுநாள் தன்னுடனேயே உணவருந்தச் செய்து அரண்மனையின் பல பகுதிகளையும் தானே அவனுக்குக் காட்டியதன்றி இரவு படுக்கும் நேரத்திலும் தனது சயன கிருகத்திலேயே படுக்கவும் வைத்துக்கொண்டான் கன்னோசி மன்னன்.

அன்றிரவு இருவரும் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்த பொழுது மாதவகுப்தனுக்குத் தனி அறையை ஏற்பாடு



செய்திருந்த அரண்மனை ஸ்தானீகர் மகாராஜாவின் சயன அறைக்கு வந்து, "மகாராஜா! நேரம் அதிகமாகிவிட்டது" என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

தனது பள்ளியறையில் மாதவகுப்தனுடன் பேசிக் கொண்டிருந்த கிருகவர்மன் ஸ்தானீகரை நோக்கி, "எதற்கு நேரமாகிறது?" என்று வினவினான்.

"சயனத்துக்கு" என்று ஸ்தானீகர் மிகப் பணிவுடன் சொன்னார்.

"அதற்கென்ன, படுத்துக்கொள்கிறோம். நீங்கள் போகலாம்" என்றான் கன்னோசி மன்னன்.

"மாதவகுப்தருக்கு அவர் அறையைக் காட்டிவிட்டுப் போய்விடுகிறேன்" என்று ஸ்தானீகர் விண்ணப்பித்துக் கொண்டார்.

"அவருக்கு எதற்காகத் தனி அறை?" என்று கிருகவர்மன் வினவினான்.

"சம்பிரதாயம்" என்றார் ஸ்தானீகர்.

"என்ன சம்பிரதாயம்?" கிருகவர்மன் கேள்வியில் வியப்பு இருந்தது.

"இங்கு வரும் விருந்தாளிகள் மன்னர் குலத்தவரா யிருந்தால் அவர்களுக்குத் தனி அறை, பிரதானிகளா யிருந்தால் அவர்களுக்குத் தனி அறை. தூதர்களாயிருந்தால் அதற்குத் தனியறை.." இப்படி அடுக்கிக்கொண்டே போன ஸ்தானீகரை இடைமறித்த கிருகவர்மன், "ஸ்தானீகரே?" என்றான் உஷ்ணமாக.

"என்ன மன்னவா?"

"இந்த அரண்மனை முழுவதும் அறைகள்தானோ?"

"இல்லை. விசாலமான மண்டபங்கள் இருக்கின்றன. நீதி மண்டபம், மன்னர் சன்மான மண்டபம், கவிஞர் மண்டபம், இப்படிப் பல மண்டபங்கள் உண்டு."

"நல்லவேளை" என்ற மன்னன், "ஸ்தானீகரே! என்னைத் தவிர எல்லோருக்கும் பள்ளியறைகள் தனிதானோ!" என்று கிருகவர்மன் வினவினான்.

"ஆம் மன்னவா" என்றார் ஸ்தானீகர். இந்தப் புதுக் கேள்வியை மன்னன் எதற்குக் கேட்கிறான் என்பதை அறியாமல்.

"அதுதான் சம்பிரதாயமோ!" மீண்டும் கேட்டான் கிருகவர்மன்.

"ஆம் மகாராஜா" ஸ்தானீகர் சிறிது குழப்பத்துடன் பதில் சொன்னார்.

கிருகவர்மன் மாதவகுப்தனைப் பார்த்து மந்தகாசம் செய்தான் ஒரு விநாடி. பிறகு ஸ்தானீகரை நோக்கி "எனக்கு ஒரு மனைவி வந்தால், அவளுக்கும் தனி அறைதானே?" என்று வினவினான்.

"ஆம் மகாராஜா" என்றார் ஸ்தானீகர்.

"என்ன ஆம் மகாராஜா?"

"மகாராணியாருக்குத் தனி பள்ளியறை உண்டு. அது இந்த அறைக்கு அடுத்தது. ஆனால்...?" சிறிது திணறினார் ஸ்தானீகர்.

"என்ன ஆனால்? விளக்கமாகத்தான் சொல்லுமே!" என்று கேட்டான் கிருகவர்மன்.

"இரண்டு அறைகளுக்கும் இடையில் கதவு உண்டு. அது திறந்திருக்கும்..." என்று மென்று விழுங்கினார். அத்துடன் விடவில்லை ஸ்தானீகர். "தாங்கள் சிறுவயதாக இருந்தபோது காலமாகிவிட்ட தங்கள் தந்தை இருந்தபோதும் இதே ஏற்பாடுதான்" என்று சூசகமாக அறிவித்த ஸ்தானீகர் நிலத்தை நோக்கிப் புன்முறுவல் செய்தார்.



கிருகவர்மன் லேசாக நகைத்தான். "ஸ்தானீகரே, இனி மேல் அந்த முறை மாறுகிறது. அடுத்த அறையை இழுத்துப் பூட்டிவிடும்" என்றான் நகைப்பின் ஊடே.

"சித்தம் மகாராஜா" என்ற ஸ்தானீகர் "மாளவ இளவரசர்..." என்று இழுத்தார்.

"மாதவகுப்தர் என் மைத்துனர்" என்றான் கிருகவர்மன்.

"அவருக்கும்...?" ஸ்தானீகர் கேள்விக்குறியைக் கண்களில் எழுப்பிக்கொண்டார்.

"தனி அறை தேவையில்லை" என்று திட்டமாகச் சொன்ன கிருகவர்மன், "நீங்கள் செல்லலாம்" என்று உத்தரவிட ஸ்தானீகர் வெளியே புறப்பட்டவர் சட்டென்று நின்று திரும்பி, "மகாராஜா!" என்று அழைத்தார்.

"என்ன ஸ்தானீகரே?" என்று வினவிய கிருகவர்மன், "இன்னும் ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?" என்றும் கேட்டான்.

"இல்லை. மாளவ இளவரசருக்கு ஒரு தனி பஞ்சணை அனுப்பட்டுமா?" என்று கேட்டார் ஸ்தானீகர்.

"அவசியமில்லை" என்று கிருகவர்மன் சொன்னதும் ஏதோ தேள் கொட்டியதுபோல் பறந்தார் ஸ்தானீகர்.

அவர் சென்றதும் ராஜசேவகன் ஒருவன் தலை நீட்டி, "மகாராஜா உத்தரவு!" என்றான்.

"ஏதுமில்லை. காவல் செய்" என்றதும் அறைக் கதவை மூடிக்கொண்டு வெளியே சென்றான் காவலன்.

இப்படித் தனிமையில் விடப்பட்ட இருவரும் ஒருவரையொருவர் நோக்கி மந்தகாசம் செய்தார்கள். "மாதவகுப்தரே! உமக்கு அலுப்பாயிருக்கும், படுத்துக்கொள்ளும்" என்றான் கிருகவர்மன்.

"நீங்கள்?" என்று வினவினான் மாதவகுப்தன்.

"நான் உறங்கி நீண்ட நாளாயிற்று." இதைச் சொன்ன கிருகவர்மன் பெருமூச்சு விட்டான்.

"எப்பொழுதும் என் சகோதரியைப் பற்றி நினைப்போ?" என்று பரிகாசமாகக் கேட்டான் மாதவகுப்தன்.

கிருகவர்மன் சோகப் பெருமூச்சு விட்டான். "வேறு யாரைப்பற்றி நினைப்பேன் மாதவகுப்தா?" என்று சகஜமாக உரையாடலில் இறங்கிய கிருகவர்மன், "ஒன்று ராஜ்யஸ்ரீ, இன்னொருத்தி அவள் தாய், இருவரைப்பற்றித்தான் தினமும் நினைக்கிறேன்" என்றான் கன்னோசி மன்னன்.

"அவள் தாயைப் பற்றியா?" வியப்பைக் குரலில் காட்டினான் மாதவகுப்தன்.

"ராஜ்யஸ்ரீயைவிட அவள் தாயைத்தான் அதிகமாக நினைக்கிறேன். படுத்தால் அவள் நினைப்புதான்." இதைச் சொன்ன கிருகவர்மன் வருத்தத்தைக் குரலில் காட்டினான்.

மாதவகுப்தன் மிரண்ட பார்வையை கிருகவர்மன் மீது வீசினான். "கிருகவர்மா! இது நியாயமல்ல" என்றான்.

"எது?"

"நீங்கள் பேசுவது."

"அப்படியென்ன பேசிவிட்டேன்?"

"தானேசுவர மகாராணியைப் பிரதி இரவும் நினைப்பதாகச் சொன்னீர்கள்."

"ஆம். அதனாலென்ன?"

"அவர் தங்களுக்குப் பெண் கொடுப்பவர், மாமியார்!"

"மாமியாராயிருந்தாலென்ன?"

"மனைவியையும் நினைத்து மாமியாரையும் நினைப்பது தர்ம விரோதம்."



"இதில் தர்மம் எங்கிருந்து வந்தது?"

"புரியவில்லையா கிருகவர்மா?"

"இல்லை."

"மாமியாரை- உம்" சொல்ல முடியாமல் திணறினான் மாதவகுப்தன்.

அப்பொழுதுதான் தனது மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட கிருகவர்மன், "மைத்துனரே! உமது புத்தி இப்படிப் போக வேண்டாம்" என்றான்.

"எனது புத்தியா?"

"ஆம்."

"உமது புத்தி? மிக நேர்மையாக இருக்கிறதோ?"

"இல்லாமல் என்ன? ராஜ்யஸ்ரீயைப் பற்றி நினைக்கும் போது அவள் தாயை நினைப்பதற்கு ஒரே ஒரு காரணம் உண்டு. நாங்கள் ஒன்றுபடுவதற்கு அவள் இடைஞ்சலா யிருக்கும் காரணந்தான் அது. நீ நினைப்பது போல் விபரீத காரணமல்ல" என்று கிருகவர்மன் விளக்கினான்.

"ஆம் ஆம். அது உண்மைதான். மகாராணி இடைஞ்சலாகத்தானிருக்கிறார்கள். ஆனால் மகாராஜா அப்படியில்லை. கவலைப்பட வேண்டாம். முகூர்த்தத்தைச் சீக்கிரம் முடிப்பதில் மகாராஜா தீவிரமாயிருக்கிறார்" என்ற மாதவகுப்தன் சயனிக்கத் தீர்மானித்து, "கிருகவர்மா! சயனிப்போம். நடுநிசி தாண்டிவிட்டது" என்றான்.

"சரி." என்ற கிருகவர்மன் தனது பஞ்சணையில் படுத்துக்கொண்டு சிறிது நகர்ந்து மாதவகுப்தனுக்கும் இடம் விட்டான்.

அதைக் கண்ட மாதவகுப்தன், "தவறு கிருகவர்மா! அது என் சகோதரிக்கான இடம்" என்று கூறித் தரையில் படுத்துக் கொண்டான். படுத்த சிறிது நேரத்தில் உறங்கியும் விட்டான்.

ஆனால் கிருகவர்மன் உறங்கவில்லை. பஞ்சணையில் படுத்தபடியே புரண்டுகொண்டிருந்தான். அவன் எண்ணங்க ளெல்லாம் தானேசுவரத்தையும் ராஜ்யஸ்ரீயையும் நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. படுத்த நிலையில் உறக்கத்தில் முனகினான், சிரித்தான், பல ஸ்வப்னாவஸ்தைகளில் சிக்கித் திண்டாடினான். இதனால் சில சமயங்களில் விழித்துக் கொண்ட மாதவகுப்தன், "கன்னோசி மன்னன் சுத்த காமுகன்" என்று உள்ளூர அவனைக் கடிந்துகொண்டான்.

கிருகவர்மன் கிருகத்தில் இருந்த நான்கு நாட்களிலும் இதே அவஸ்தையை அனுபவித்த மாதவகுப்தன், ஐந்தாவது நாள் தனது நாட்டுக்குப் புறப்படத் தீர்மானித்து மன்னனை அனுமதி கேட்டான். மன்னன் லேசில் அனுமதி கொடுப்பதாகத் தெரியவில்லை. "மாதவகுப்தா! இதற்குள் தானேசுவரம் செல்ல என்ன அவசரம்! என்னுடன் வரலாமே" என்றான்.

மாதவகுப்தன் தனது சீரிய விழிகளை கிருகவர்மன்மீது நாட்டினான்.

"நான் தானேசுவரம் போகவில்லை" என்றான்.

கிருகவர்மன் திகைத்தான். "ஏன்?" என்று வினவினான் திகைப்பு தெரிய.

"அங்கு எனக்கு சிறை காத்திருக்கிறது" என்ற மாதவகுப்தன் நடந்ததை விவரித்தான்.

கிருகவர்மன் சிந்தனையில் இறங்கினான். பிறகு சொன்னான், "மாதவகுப்தா! என்னுடன் வந்தால் யாரும் உன்னை சிறை செய்ய முடியாது. சிறை செய்தால் திருமணம் நடக்காது" என்று.

மாதவகுப்தன் சிந்திக்காமலே சொன்னான், "கிருகவர்மா! என் சகோதரியின் திருமணத்தைத் தடை செய்ய நான் தூது வரவில்லை. துரிதமாக நடத்தி வைக்க



தூது வந்தேன். ஆகையால் நான் திரும்பவில்லை தானேசுவரத்துக்கு. ராஜ்யஸ்ரீ உன்னை மணந்து சுகவாழ்வு நடத்தும்போது முடியுமானால் இங்கு வருகிறேன். இல்லையேல் எப்படியும் ஒரு நாள் சந்திப்பேன் அவளை" என்று மனம் நெகிழ்ந்து பேசினான் மாதவகுப்தன். உணர்ச்சிப் பெருக்கால் அவன் தொண்டை அடைத்தது. "ராஜ்யஸ்ரீயிடம் சொல் கிருகவர்மா! என் சகோதரியை என்றும் நினைத்திருப்பேன். அவளைக் காக்க மூன்றாவது சகோதரனின் வாள் என்றும் தயாராயிருக்கிறதென்று சொல்" என்று உணர்ச்சியுடன் பேசினான் மாதவகுப்தன். அந்த உணர்ச்சிக்கோ வேகத்துக்கோ காரணம் அவனுக்கே தெரியவில்லை.

அது கிருகவர்மனுக்கும் புரியாததால், "மாதவகுப்தா? அவளுக்கு எந்தத் தீங்கும் நேரிடாது. என் மனைவியாக அவள் மகோன்னத நிலையில் இருப்பாள்" என்று சொன்னான்.

ஆனால் மாதவகுப்தன் சொற்கள் விதி உகுத்த சொற்கள் என்பதைக் காலம் தெளிவுபடுத்தியது.

19

## ரகசிய ஓலைகள்

மாதவகுப்தன் கன்னோசியிலிருந்து புறப்பட்டபோது அவனை நகரின் எல்லை வரையில் கொண்டுவிட்ட கிருகவர்மன், "மாதவகுப்தா! உனக்குத் துணை வர எனது மெய்க்காவலர் நால்வரை அனுப்புகிறேன். எதிலும் உன்னைக் காத்து நிற்கும் திறன் அவர்களுக்கு உண்டு. என்று கூறியதன்றி நால்வரை அனுப்பவும் செய்தான். கிருகவர்மன் சொன்னதும் ஆயுத பாணிகளான திடகாத்திரசாலிகள் நால்வர் மன்னனுக்குப் பின்னாலிருந்து முன்னால் வந்து தனக்கு இருபுறத்திலும் நின்றுவிட்டதைக் கவனித்த மாதவகுப்தன் புன்முறுவல் செய்து, "கன்னோசி மன்னரே! இவர்கள் துணை எனக்கு எதற்கு?" என்று வினவினான்.

"மாதவகுப்தா! நீ செல்லும் விழியில் சசாங்கன் நாடு இருக்கிறது. சசாங்கன் நம்பத்தகாதவன். அவன் நாட்டை அடுத்துப் பெரும் காட்டைத் தாண்டி உன் நாட்டை அடைய வேண்டும். வழி அபாயமானதால் உதவி இருப்பது நல்லது. தவிர எனக்குத் திருமணம் நடக்கப் போகிறது. மைத்துனனுக்கு மரியாதை செய்ய வேண்டாமா? அதை முன்னதாகவே செய்கிறேன். இவர்களை அழைத்துப்போ. சமயத்தில் உதவும் திறன் இவர்களுக்கு இருக்கிறது" என்று



பிடிவாதம் செய்யவே, மாதவகுப்தன் அவர்களுடன் பயணமானான்.

அவன் செல்வதை நின்று பார்த்துக்கொண்டே இருந்த கிருகவர்மன் தீர்க்கசிந்தனையுடன் தனது அரண்மனை திரும்பினான். அன்று காலை வேளையைச் சிந்தனையிலேயே கழித்த கிருகவர்மன் பிற்பகலில் ஒரு முடிவுக்கு வந்து தனது பிரதான மந்திரியை அழைத்து, அரண்மனைச் சோதிடரை வரவழைக்கும்படி உத்தரவிட்டுத் தனது மந்திராலோசனை அறைக்குச் சென்றான். சோதிடரும் பிரதான மந்திரியும் வந்ததும் சோதிடரை நோக்கி மன்னன், "சோதிடரே! எனக்குத் திருமணம் நிச்சயமாகி இருப்பது உமக்குத் தெரியுமல்லவா?" என்று வினவினான்.

"தெரியாமலென்ன? ஜகப்பிரசித்தமாயிற்றே" என்றார் சோதிடர் தலை வணங்கி.

"அதை எப்பொழுது வைத்துக்கொள்ளலாம்?" என்று வினவினான் மன்னன்.

சோதிடர் வியப்பு நிரம்பிய கண்களால் மன்னனை நோக்கி, "இதென்ன கேள்வி மன்னவா? இதை முடிவு செய்ய வேணடியவர்கள் பெண் வீட்டாரல்லவா?' என்றார்.

"கன்னோசி சப்பையான ராஜ்யம் என்கிறீர்?" என்று மன்னன் இடக்காக வினவினான்.

சோதிடர் குழம்பினார். "அப்படி நான் ஏதும் சொல்லவில்லையே மன்னவா!" என்றார் குரலில் குழப்பம் தெரிய.

"அப்படியானால் எனது திருமண நாளை தானேசுவரம் முடிவு செய்ய அவசியமென்ன?" கிருகவர்மன் கேட்டான் சிறிது சினத்துடன்.

"அவர்கள் பெண் வீட்டார்..." என்று சோதிடர் இழுத்தார்.

"அதனால்?"

"முகூர்த்தத் தேதியை அவர்கள்தான் நிர்ணயிக்க வேண்டும்."

"அவர்கள் என்றால் சோதிடரா, அந்த நாட்டு மகாராஜாவா, ராணியா?"

"சந்தேகமென்ன? சோதிடர்தான்."

"அவர் தேதியை அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால்?"

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால் சோதிடர் விழித்தார். மன்னனே அவர் குழப்பத்தைத் தீர்க்க முன்வந்து, "சோதிடரே! நாளும் கிழமையும் நமது இஷ்டப்படி வருமா?" என்று வினவினான்.

சோதிடர் புரிந்து கொண்டார். அதனால் இடித்த புளி மாதிரி நின்றுகொண்டிருந்த பிரதான மந்திரியை நோக்கினார். "என்னையா விழிக்கிறீர்? சொல்லுமே? மன்னர் கேட்பது நியாயமில்லையா?" என்று பிரதான மந்திரி கேட்டார்.

சோதிடர் தமது முண்டாசுத் தலையை இருமுறை வேகமாக ஆட்டி, "ஏன் புரியவில்லை? நன்றாகப் புரிகிறது. மன்னர் எதையாவது கேட்டால் அது நியாயமாக இல்லாமல் எப்படியிருக்க முடியும்?" என்று சொன்னார்.

"ஆகையால் மன்னர் புறப்படுவதற்கு நாள் வைக்க வேண்டியதுதானே?" என்று வினவினார் பிரதான மந்திரி.

"ஆமாம். அதைவிட என்ன எனக்கு" என்ற சோதிடர் தமது மடிசஞ்சியிலிருந்த பஞ்சாங்கத்தை எடுத்து நாளைப் பார்க்கலானார்.

"அடடா! இவன் எங்கே குறுக்கே வருகிறான்? சரி தொலையட்டும். அவன் பார்வையும் சரியாயில்லையே!" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு போனார்.



அவரை இடைமறித்துப் பிரதான மந்திரி, "சோதிடரே! அவன் பார்வை இருக்கட்டும்; உமது பார்வையைச் சரியாக வைத்துக்கொள்ளும்" என்று கூறினார். "எதிலும் அதிகப்படி கூடாதையா. 'அதிஸர்வத்ர வர்ஜயேத்' என்ற வாக்கு தெரியுமல்லவா? எல்லாவற்றிலும் அதிகப்படியை விட்டுவிட வேண்டும்" என்றும் அறிவுறுத்தினார்.

சோதிடர் தமது மூளையைத் துரிதமாக வேலை செய்ய விட்டார். என்ன பிரதம மந்திரி விரட்டியும் மன்னனுடைய க்ஷேமத்தை நினைப்பவராதலால், "இன்னும் பதினைந்து நாட்களுக்குப் பிறகு சுக்லபக்ஷ ஸப்தமியில் கிளம்பலாம்" என்று கூறி நாளும் வைத்தார்.

"தானேசுவர சோதிடர் குறிப்பிட்ட நாள் அதற்கடுத்த ஒரு வாரத்தில் வருகிறது. ஏற்பாடுகளுக்கு நாள் வேண்டாமா?" என்றான் கிருகவர்மன்.

சோதிடர் சிந்தித்தார். "மன்னவா! முன்னால் அவர்களுக்குச் செய்தி அனுப்புங்கள். அவர்கள் சித்தமாயிருக்கட்டும்" என்றார். அத்துடன் அவர் பேசாதிருந்திருக்கலாம். நச்சு நச்சென்று சொற்களைக்கொட்டிப் பழக்கப்பட்ட சோதிடர் இன்னும் ஒன்று சொன்னார். "மகாராஜா! பஞ்ச உஷத்காலத்தில் எந்த யாத்திரையையும் வைத்துக்கொள்ள சாஸ்திரம் அனுமதிக்கிறது. அது பிரும்ம முகூர்த்தம். அதற்குத் தோஷமில்லை" என்றார்.

மன்னவன் முகத்தில் மகிழ்ச்சி தவழ்ந்தது. "பிரதான மந்திரி, சோதிடருக்கு ஆயிரம் பொற்காசுகள் கொடுத்து அனுப்புங்கள். இவர் நாளையே புறப்பட்டு தானேசுவரம் போகட்டும். நாம் இன்னும் நாலைந்து நாட்களுக்குள் புறப்படுகிறோம்" என்று கூறிவிட்டு, "சோதிடரே! நீர் தானேசுவர அரண்மனை சோதிடர் வீட்டில் தங்கும். அவர் உமக்கு சகல உதவியும் செய்வார். முடிந்தால் நமது வருங்கால

ராணியையும் பார்த்து நாம் சீக்கிரம் வருவதாகச் சொல்லும்" என்றும் சொல்லி ஆசனத்தை விட்டு எழுந்தான்.

மன்னன் சொற்படி மறுநாளே புறப்பட்ட சோதிடர் நாலைந்து நாட்களுக்குள் தானேசுவரத்தை அடைந்தார். அவர் சொல்வது யாருக்கும் தெரிய வேண்டாமென்பதற் காகப் பிரதான மந்திரி அவருக்குத் துணையாக யாரையும் அனுப்பவில்லையாதலால் அவர் தன்னந்தனியே பயணம் செய்து தானேசுவர சோதிடர் விலாசத்தை விசாரித்துக் கொண்டு அவர் இல்லம் சேர்ந்தார். தானேசுவர சோதிடர் இல்லத்தில் எல்லோருக்கும் நடப்பது போல அவருக்கும் விருந்தோம்பல் நடந்தது. உணவருந்திய பின்பு கன்னோசி சோதிடர் தானேசுவர சோதிடரைத் தனிமையில் பார்க்க விரும்புவதாகத் தெரிவிக்கவே தானேசுவரத்தார், "ஏன், ஜாதகம் பார்க்க வேண்டுமா?" என்று வினவினார்.

"இல்லை சிறிது ரகசியம் பேச வேண்டும்" என்றார்.

தானேசுவரத்தார் புருவங்களைச் சந்தேகத்துடன் உயர்த்தி, "தாங்கள் அரச குலமல்லவே?" என்று வினவினார்.

'இல்லை."

"அந்தணர்தானே?"

"ஆமாம்."

"அரச குலத்தாருக்குத்தான் அந்தரங்கம், சில்விஷமம் எல்லாம் உண்டு. உமக்கென்ன!"

இதைக் கேட்ட கன்னோசியார், "சேர்க்கையால் நமக்கும் சகல துர்க்குணங்களும் வருகின்றன" என்றார்.

"நமக்கா!"

"ஆம்."

"அப்படியென்ன துர்க்குணம் வரக்கூடும்?"



"சொன்னால் கோபப்படமாட்டீரே?"

"கோபத்திற்கு என்ன இருக்கிறது இதில்?"

கன்னோசியார் சிறிது மௌனம் சாதித்துவிட்டு, "இந்த ராஜ்யத்தின் ராஜ்யஸ்ரீ முகூர்த்தத் தேதியை யார் நிர்ணயித்தது?" என்று வினவினார்.

தானேசுவர சோதிடரின் முகத்தில் சிறிது அச்சம் விரிந்தது. "நீ யார்?" என்று வினவினார்.

"நானும் ஒரு சோதிடன்"என்றார் கன்னோசியார்.

தானேசுவரத்தார் கேட்டார், "நான் வைத்த தேதி சரியா யில்லையா?" என்று.

"தேதி சரிதான்."

"வேறு எது சரியல்ல?"

"இப்பொழுது இரண்டு மாத காலத்துக்கு குரு சுக்ர மூடம் இருக்கிறது."

"உம்."

"சித்திரை வைகாசி இரண்டுதான் குரு சுக்ர மூடத்துக்கு விலக்கு" என்ற கன்னோசியார், "சுபகார்யம் நகர்த்தவ்யம் மௌட்ய குரு சுக்ரயோ. சைத்ர: வைசககோர்விநா - என்றிருக்கிறது வாக்கியம். குருவும் சுக்ரனும் மூடமா யிருந்தால் சுபகாரியங்களைச் செய்யக்கூடாது. சித்திரை வைகாசி மாதங்கள் மட்டும் விலக்கு என்று சாஸ்திரம் சொல்லுகிறது" என்றார்.

தானேசுவரத்தார் கோரமாகப் புன்முறுவல் செய்தார். "சோதிடரே!" என்று விபரீதமான குரலில் அழைக்கவும் செய்தார் கன்னோசியாரை நோக்கி.

"என்ன சோதிடரே" என்றார் கன்னோசியார்.

"உமது ஜாதகத்தைக் கொண்டு வந்திருக்கிறீரா?" என்று தானேசுவரத்தார் வினவினார்.

"என் ஜாதகம் எதற்கு?" வியப்புடன் வினவினார் கன்னோசியார்.

"உமது ஆயுர்ப்பாவத்தைப் பார்க்கிறேன்" இதைச் சிறிது எக்காளத்துடன் சொன்னார் தானேசுவரத்தார்.

"என் ஆயுர்ப்பாவத்திற்கு என்ன வந்துவிட்டது இப்பொழுது? நான் எண்பது வயது வரையில் நிச்சயமாக இருப்பேன்" திடமாகக் கூறினார் கன்னோசியார்.

"இருக்கமாட்டீர்." தானேசுவரத்தாரும் திடமாகப் பேசினார்.

"ஏன்" சங்கடத்துடன் எழுந்தது கன்னோசியார் கேள்வி.

"உமக்குக் கிருகவர்மனைத் தெரியுமா?" என்றார் தானேசுவரத்தார்.

"தெரியும்." சிரிப்பை அடக்கிக்கொண்டு பதில் சொன்னார் கன்னோசியார்.

"அவர் திருமணம் செய்துகொள்ளத் துடிக்கிறார்."

"அப்படியா?"

"ஆமாம்."

"ராஜ்யஸ்ரீயும் துடிக்கிறாள்."

"ஓகோ!"

"சீக்கிரமாக நாள் வைக்க கிருகவர்மன் எனக்கு வைரங்கள் கொடுத்தான்."

"புரிகிறது புரிகிறது."

"என்ன புரிகிறது?"

"நீர் நாளை சீக்கிரமாக வைத்த காரணம்."



"அது தவறா?"

"ஒரு தவறுமில்லை. சாஸ்திர சம்மதம்" என்று தமது கருத்தைத் தலைகீழாகத் திருப்பினார் கன்னோசியார்.

"என்ன சாஸ்திரமய்யா அது?" சிரித்தார் தானேசுவரத்தார்.

"ஜோஸ்ய சாஸ்திரம். வதுவரர்களுக்குள் (திருமணம் செய்துகொள்ளும் பெண்ணுக்கும் ஆணுக்கும்) மனப் பொருத்தமிருந்தால் ஜோஸ்யத்தைப் பார்க்காதே என்றிருக்கிறது சாஸ்திர வாக்கியம்" என்று கூறி, கன்னோசியாரும் தானேசுவரத்தாரின் சிரிப்பில் கலந்து கொண்டார். பிறகு மெதுவாகச் சொன்னார். "இன்னும் நான்கு தினங்களில் கன்னோசி மன்னன் புறப்படுகிறான் திருமணத்திற்கு" என்று.

தானேசுவர சோதிடர் அதிர்ச்சியைக் காட்டினார். "இன்னும் ஒரு வாரத்துக்குள் நாள் சரியில்லையே?" என்றார்.

"பிரும்ம முகூர்த்தத்தில் புறப்பட்டால் தோஷம் கிடையாது" என்றார் கன்னோசியார்.

தானேசுவரத்தார் சந்தேகப் பார்வையை கன்னோசியார் மீது செலுத்தினார். "நீர்..." என்று சந்தேகத்துடன் கேட்டார்.

"கன்னோசி மன்னனின் ஆஸ்தான சோதிடன்" என்ற கன்னோசியார் தலை தாழ்த்தி அடக்கத்தைக் காட்டினார்.

பிரமித்து உட்கார்ந்துவிட்டார் பல விநாடிகள் தானேசுவர ஆஸ்தான சோதிடர். பிறகு தமது சக சோதிடரை நோக்கி, 'நீர் பெரிய குள்ள நரி' என்றார்.

"தங்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவன்" என்றார் கன்னோசியார்.

அன்று பிற்பகல் தானேசுவர சோதிடர் கன்னோசி சோதிடரை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்று அவரைத் தமது சீடராக அறிமுகப்படுத்தினார். மகாராஜாவும் மகாராணியும் உட்கார்ந்திருந்த அறையில் அவர்களைச் சந்தித்து, "மகாராஜா! இவர் கன்னோசி யிலிருந்து வருகிறார். எனது சீடர். செய்தி கொண்டு வந்திருக்கிறார்" என்று சொன்னார்.

"என்ன சேதி?" என்று கேட்டார் மகாராஜா.

"கன்னோசி மன்னர் இன்னும் நான்கு நாட்களில் புறப்பட்டு இங்கு வர இருக்கிறாராம்" என்றார் தானேசுவர சோதிடர்.

"எதற்காம்?" என்று மகாராணி கேட்டாள்.

"எதற்கிருக்கும் மகாராணி? திருமணத்தை முடித்துக் கொள்ளத்தான்" என்று கன்னோசி சோதிடர் சொன்னார்.

"அதற்குள் என்ன அவசரம்?" என்று சிரித்தாள் மகாராணி.

"அவசரம் அந்த வயதில் இருப்பவர்களுக்குத்தான் தெரியும். உனக்கும் எனக்குமா தெரியும்?" என்று கேட்ட மகாராஜா, தானேசுவர சோதிடரை நோக்கி, "உமது சீடர் வேண்டுமானால் அரண்மனையிலேயே தங்கலாம்" என்றார்.

குறிப்பறிந்த தானேசுவர சோதிடர், "மகாராஜாவின் சித்தம்" என்றார்.

கன்னோசி ஜோதிடருக்குத் தனியறை அரண்மனையில் ஒழித்துவிடப்பட்டது. அன்று மாலையைப் பூஜை புனஸ்காரங்களில் கழித்தார் கன்னோசி சோதிடர். இரவில் நல்ல உணவு அளிக்கப்பட்டது. இரவு முற்றியதும் தமக்களிக்கப்பட்ட பஞ்சணையில் படுக்கச் சித்தமாகிக் கதவை மூடிக்கொண்ட சோதிடருக்கு ஒருவர்



பின்னொருவராக நான்கு பேரிடமிருந்து அழைப்பு வந்தது. நான்கும் ரகசிய ஓலைகள். கையெழுத்து இல்லாத உத்தரவுகள். ஒவ்வோர் ஓலையும் யாரால் அனுப்பப்பட்ட தென்பதை ஓலை கொண்டு வந்த பணிமக்கள் சொன்னார்கள். பழமொழி மாறிவிட்டதை உணர்ந்தார் கன்னோசி சோதிடர். "இரு தலைக்கொள்ளி என்று பழமொழி உண்டு. நாலு தலைக் கொள்ளி என்று கிடையாது. ஆனால் எனக்கு ஏற்பட்டிருக்கிறது." என்று தன்க்குத்தானே சொல்லிக்கொண்ட கன்னோசி சோதிடர் ஒரு தீர்மானத்துக்கு வந்து கிளம்பினார் தமது அறையை விட்டு.

20

# சோதிட சாகஸம்

கன்னோசி ஆஸ்தான சோதிடர் தானேசுவர அரண்மனையில் தமக்கு ஒழித்துவிடப்பட்ட அறியிலிருந்த கட்டிலில் சுக நித்திரை செய்யும் நோக்கத்துடன் பஞ்சணையில் புரண்டு, "என்ன மென்மை! என்ன சுகம்! தானேசுவரம் பெரிய அரசு என்பதை இந்தப் பஞ்சணையிலிருந்தே தீர்மானிக்கலாம்" என்று சொல்லிக்கொண்டார். "விருந்தாளிகளுக்கே இப்பேர்ப் பட்ட பஞ்சணையென்றால் மருமகனாக வரும் கன்னோசி மன்னருக்கு எத்தகைய பஞ்சணை கிடைக்கும்?" என்றும் தம்மைக் கேட்டுக் கொண்டார். "கிருகவர்மனுக்கு அடிக்கிறது யோகம்" என்றும் குதூகலித்தார். "சரி. இனி உறங்க வேண்டும்" என்று முடிவு செய்தார்.

அந்தச் சமயத்தில் அவர் கதவு மெல்ல தட்டப்படவே, "யாரது?" என்று வினவினார் சோதிடர்.

"கதவைத் திறவுங்கள்" என்று பதில் வந்தது. குரல் சிறிது அதட்டலாகவும் இருந்தது. அதன் விளைவாக சுக சயனத்திலிருந்து எழுந்த சோதிடர் கதவைத் திறந்தார். அரண்மனைப் பணிமகனுக்குப் பதில் ஒரு பணிமகள் உள்ளே வந்து, "இந்த ஓலையைப் படியுங்கள்" என்று சொல்லவே



ஓலையைப் படித்த சோதிடர் சிறிது வியப்பும் குழப்பமும் அடைந்தார். "இதில் யார் கையெழுத்தும் இல்லையே" என்று கேட்டார் பணிமகளை நோக்கி.

"இதில் கையெழுத்துத் தேவையில்லை. உமது அறைக்குப் பக்கத்திலிருக்கும் படிகளில் ஏறிச் சென்றால் மகாராஜாவின் அறை வரும். அதற்கு அடுத்த அறை, அங்கு மகாராணியார் காத்திருப்பார் முதல் ஜாம முடிவில்" என்ற பணிமகள், பதிலை எதிர்பார்க்காமல் திரும்பிச் சென்றாள் கதவை மூடிக்கொண்டு.

கதவைத் தாளிட்டுப் படுத்தார். சோதிடர். அடுத்த நான்கு நிமிடங்களில் மீண்டும் அவர் அறை தட்டப்பட்டது. "யார்?' என்ற கேள்விக்கு, 'கதவைத் திறவும்' என்ற பதில் கிடைத்தது.

சோதிடர் கதவைத் திறந்ததும் பணி மகனொருவன் வந்தான் உள்ளே. ஓர் ஓலையை நீட்டி, "மகாராஜாவை நீங்கள் இரண்டாவது ஜாம ஆரம்பத்தில் பார்க்க வேண்டும்" என்று உத்தரவிட்டுத் திரும்பிச் சென்றான் அறைக் கதவை மூடிக்கொண்டு.

இம்முறை சோதிடர் கதவைத் தாளிடவில்லை. "என்ன தான் சுகமான பஞ்சணை கிடைத்தாலும் உறங்க அதிர்ஷ்டம் வேண்டாமா?" என்று தமக்குள் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டார். அடுத்த சில நிமிடங்களில் மீண்டும்கதவு தட்டப்பட்டது. "திறந்திருக்கிறது. வரலாம்" என்ற சோதிடரின் அனுமதியுடன் உள்ளே நுழைந்த ஒரு பெண் ஓர் ஓலையை நீட்டி, "அரசகுமாரி அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அறை இந்தத் தளத்தின் இடது கோடியில் இருக்கிறது. இரண்டாவது ஜாமத்தின் மத்தியில் வர உத்தரவு. இந்த சாளரத்தின் மூலம் ஆகாயம் தெரியும். நட்சத்திரத்தைப் பார்த்து நாழிகையையும் ஜாமத்தையும் முடிவு செய்யும்.

வருவது மிக ரகசியமாக இருக்கட்டும்" என்று சொல்லிப் போனாள்.

அடுத்து வரப்போவது யார் என்ற நினைப்பில் உட்கார்ந்திருந்த சோதிடரை அடுத்த தூதன் அதிகமாகக் காக்க வைக்கவில்லை. வந்தவன் கதவைத் தட்டிவிட்டு சோதிடர் அனுமதியை எதிர்பாராமல் உள்ளே நுழைந்து ஓலையை நீட்டினான். "இளவரசர் மூன்றாவது ஜாம ஆரம்பத்தில் உமக்காக நந்தவனத்தில் காத்திருப்பார்" என்று கூறிச் சரேலென்று திரும்பிச் சென்றுவிட்டான்.

அவன் சென்றதும் நான்கு ஓலைகளையும் திரும்பத் திரும்ப அறையின் விளக்கொளியில் படித்த சோதிடர். அரசகுலத்தவரைப் பெரிதும் சபித்தார். "இப்படி அரண்மனையில் ஏற்படும் விரோதங்களும் குறுக்கு யோசனைகளுந்தான் மக்களையும் நாட்டையும் பாதிக்கின்றன" என்று வெறுப்புடன் சொல்லிக் கொண்டார். ஒவ்வோர் ஓலையிலும் ஒரே வரிதான் எழுதப் பட்டிருந்தது. ஓலை ஒவ்வொன்றிலும், 'வந்து பார்க்கவும். முக்கிய விஷயம்' என்று கண்டிருந்ததே தவிர வேறு விவரமில்லை. "விவரங்கள் நேரில் சொல்லப்படும்' என்று சோதிடர் எண்ணி லேசாக நகைத்தார். பிறகு அறையிலி ருந்து புறப்படத் தீர்மானித்து சாளரத்தின் வழியே ஆகாயத்தை நோக்கினார். "புஷ்பம் இப்படிச் சாய்ந்து விட்டதா? அப்படியானால் முதல் ஜாமம் முடியப்போகிறது" என்று சொல்லிக்கொண்டு பெரிய சரிகைக் கம்பளியைப் போர்த்திக்கொண்டு, அறையை விட்டு வெளியே வந்து உப்பரிகையில் ஏறிச்சென்று மகாராணியின் அறைக் கதவைத் தட்டினார். "உள்ளே வாரும்" என்று அனுமதிக் குரல் ஒலிக்கவே உள்ளே நுழைந்த சோதிடர் மகாராணிக்குத் தலை வணங்கினார்.



மகாராணி படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில் சிறிது சோகமும் சினமும் கலந்த உணர்ச்சி காணப்பட்டதால் எச்சரிக்கை அடைந்த சோதிடர், "மகாராணி, இந்த ஏழையை அழைத்தது ஏழையின் பாக்கியம்" என்று மரியாதையைக் காட்டினார்.

"சொன்னபடி கேட்டால், பாக்கியம் அதிகமாகும்" என்றாள் மகாராணி.

"உத்தரவிடுங்கள் மகாராணி" என்றார் சோதிடர்.

மகாராணி சுற்றி வளைக்காமல் விஷயத்துக்கு வந்து, "எங்கள் சோதிடர் வைத்த முகூர்த்த நாள் உமக்கு சம்மதமா?" என்று வினவினாள்.

சோதிடர் சிறிதும் யோசிக்காமல் பதில் சொன்னார். இல்லை என்று.

"அதில் என்ன குறை?" என்று வினவினாள் மகாராணி.

"இரண்டு மாதங்களுக்கு குரு சுக்ரமூடம் இருக்கிறது. ஆகையால் திருமணம் செய்யக்கூடாது" என்றார் சோதிடர்.

"அப்படியானால் நீர் ஏன் ஆட்சேபிக்கவில்லை?"

"ஆட்சேபித்தேன். யாரும் கேட்கவில்லை."

"அப்படியானால் ஒன்று செய்யும்."

"என்ன மகாராணி?"

"திருமணம் இப்பொழுது செய்யக்கூடாதென்பதற்குக் காரணம் எழுதிக்கொடும்" என்றாள் மகாராணி.

சோதிடர் அதற்குச் சித்தமாகவே வந்திருந்ததால் அங்கேயே தரையில் உட்கார்ந்து மடியிலிருந்து ஒரு நறுக்கு ஓலையையும் எழுத்தாணியையும் எடுத்து வேகமாக எழுதிக் கையெழுத்தும் இட்டு ஓலையை மகாராணியிடம் கொடுத்தார்.

மகாராணி அதைப் பார்த்து மகிழ்ந்தாள். தலையணையின் கீழிருந்து கை நிறையப் பொற்காசுகளை எடுத்து சோதிடரிடம் கொடுத்து, "நிறைவேறியதும் இன்னும் தருகிறேன்" என்றாள்.

கை நிறையக் கொட்டப்பட்ட பொற்காசுகளை மடியில் வைத்துக்கொண்டு மகாராணிக்குத் தலை வணங்கித் திரும்பினார் சோதிடர். அறைக்குச் சென்று பொற்காசுகளை மடிசஞ்சியில் வைத்துவிட்டு நட்சத்திரத்தைப் பார்த்து மகாராஜாவின் அறைக்குச் சென்றார். அங்கு அவர் கதவைத் தட்டு முன்பு மகாராஜாவே கதவைத் திறந்து உள்ளே அழைத்துப் போனார். "இரண்டாவது ஜாமம் துவங்கியதும் உமது காலடிச் சத்தம் கேட்டது" என்று தாமே கதவைத் திறந்த காரணத்தைச் சொன்னார் மகாராஜா. "இந்த அறையிலும் அடுத்த அறையிலும் காவல் வேண்டாமென்று நாங்களே அனுப்பிவிட்டோம். 'நாங்க'ளில் இன்னொருவர் மகாராணி" என்றும் குறிப்பிட்டு விஷமமாகப் புன்முறுவல் செய்தார் மகாராஜா.

"மகாராஜாவின் சித்தம்" என்று வணங்கினார் சோதிடர்.

"மகாராஜாவின் சித்தம் இருக்கட்டும். மகாராணி சித்தம் எப்படி?" என்று மகாராஜா வினவினார்.

சோதிடர் விழித்தார், என்ன பதில் சொல்வதென்பதை அறியாமல். "நீர் முதல் ஜாம முடிவில் மகாராணி அறைக்குள் நழைந்ததை நானே பார்த்தேன்" என்று சுட்டிக் காட்டிய மகாராஜா, "திருமணத்தை நிறுத்த என்ன காரணம் சொன்னீர்!" என்று கேட்டார்.

"குரு சுக்ரமூடம்" என்றார் சோதிடர்.

"சரி, அதற்கு மாறாக ஏதாவது எழுதும்" என்று உத்தரவிட்ட மகாராஜா அங்கிருந்த ஓர் ஆசனத்தைச் சோதிடருக்குக் காட்டினார்.



சோதிடர் வாயைத் திறக்காமல் ஓலை எழுதி மகாராஜாவிடம் சமர்ப்பித்தார். மகாராஜா ஓலையைப் படித்து மகிழ்ச்சியடைந்து தனது அங்கிப் பையிலிருந்து ஒரு பிடி தங்க நாணயம் அளித்தார். "திருமணத்தின்போது உரிய மரியாதை சமர்ப்பிக்கப்படும்" என்றும் கூறினார்.

சோதிடர் தலைவணங்கி, தமது அறைக்கு வந்து அடுத்த இடத்துக்குச் செல்ல பொழுதைக் கழித்துக்கொண்டிருந்தார். நேரம் வந்ததும் அரசகுமாரியின் அறைக்குச் சென்றார். அங்கு அரசகுமாரி சோகமே உருவாக உட்கார்ந்திருந்தாள். சோதிடர் வந்ததும் எழுந்து தலை வணங்கினாள். "சீக்கிரம் விவாகப் பிராப்திரஸ்து" என்று ஆசீர்வதித்தார் சோதிடர்.

அரசகுமாரியின் சோகக் கண்கள் சோதிடரை ஏறெடுத்து நோக்கின. "நீர் சொன்னது நடக்குமா?" என்று வினவினாள்.

"சோதிடர் வாக்கு பொய்க்காது" என்றார் சோதிடர்.

"சீக்கிரமாகவே விவாகம் நடக்குமா?"

"கண்டிப்பாய் நடக்கும்."

"தடை வராதே?"

"வராது. வந்தால் நீக்க நானிருக்கிறேன்"

"நீரா?"

"நான் என்றால் நான் வணங்கும் பராசக்தி என்று பொருள்."

இதைக்கேட்டு முகம் மலர்ந்த ராஜகுமாரி அவரிடம் தனது மடியிலிருந்து இரண்டு பெரிய வைரங்களை எடுத்துக் கொடுத்தாள். சோதிடர் அவற்றை மடியில் பத்திரப்படுத்திக் கொண்டு அரசகுமாரி கேட்காமலே ஒரு ஓலையை எழுதி, "இதை கன்னோசிக்கு அனுப்பிவிடுங்கள்" என்றார்.

ஓலையைப் படித்த அரசகுமாரி மகிழ்ச்சியின் எல்லையை எய்தினாள். 'சோதிடரே! நீர்தான் எங்கள் குலதெய்வம்' என்றும் கொண்டாடினாள்.

சோதிடர் அரசகுமாரியை மறுபடியும் ஆசீர்வதித்துத் தமது அறைக்கு வந்து சிறிது கட்டிலில் படுத்து சிரம பரிகாரம் செய்துகொண்டார். தகுந்த நேரத்தில் சஞ்சியிலிருந்து இரட்டை ஓலையொன்றை எடுத்துக் கொண்டு நந்தவனக் கதவைத் திறந்துகொண்டு நந்தவனத்தில் புகுந்தார். தூரத்தே பளிங்கு வாவிக்கரையில் ஓர் உருவம் நின்றுகொண்டிருந்ததைக் கண்டு அதை நோக்கி நடந்தார்.

அவர் அருகில் வந்ததும் அந்த உருவம் தானாகவே அவரை நோக்கித் திரும்பியது. அந்த உருவத்தைக் கண்டதும் திகைத்து நின்றார் சோதிடர். அங்கு நின்றிருந்தது ஓலையைக் கொடுத்த அதே உருவம்.

"இங்கு..." என்று மென்று விழுங்கிய சோதிடரை நோக்கி இரண்டடி எடுத்து வைத்த அந்த உருவம், "இளவரசன், பணி மகனாயிருக்க முடியாதென்று சட்டமில்லை" என்று கூறியது.

"தாங்கள்..." திணறினார் சோதிடர்

"ஹர்ஷன். மன்னரின் இரண்டாவது மகன்."

"இளவரசர் கட்டளை..." என்று எதோ சொல்ல முற்பட்ட சோதிடரை இடைமறித்த ஹர்ஷன், "எக்காரணத்தை முன்னிட்டும் திருமணத் தேதியை மாற்ற வேண்டாம் என்று ஓலை எழுதிக் கொடும். அதை உங்கள் மன்னருக்கு எழுதும்" என்று உத்தரவிட்டான்.

அவன் பேச்சு, குரல், தோரணை எல்லாமே பிற்காலப் பேரரசனாகும் தன்மையை உணர்த்தியதால் சோதிடர் வாவிக்கரையில் உட்கார்ந்து ஓலை எழுதினார். அதை



ஹர்ஷனிடம் கொடுக்கவும் செய்தார். ஹர்ஷன் அந்த ஓலைக்குப் பரிசு ஏதும் கொடுக்கவில்லை? தனது கையிலிருந்த முத்திரை மோதிரத்தை எடுத்துக் கொடுத்து, "திருமணம் முடிந்ததும் என்னைச் சந்தியும்" என்று சொன்னான்.

மோதிரத்தைப் பத்திரப்படுத்திக்கொண்டார் சோதிடர். நிம்மதியாகப் படுக்கச் சென்றார். படுத்த நிலையில் நகைத்தார்.

அன்றிலிருந்து இரண்டாவது நாள் கிருகவர்மன் தனது அறையில் நான்கு ஓலைகளையும் ஒவ்வொன்றாகப் படித்து பஞ்சணையில் போட்டுக்கொண்டிருந்தான். கடைசி ஓலையைப் போட முயன்றபோது சிறிது நிதானித்து அந்த ஓலையை மட்டும் பரிசோதித்தான். அது ஓர் இரட்டை ஓலை என்பதையும், அந்த இரண்டு நறுக்குகளும் ஒன்றைப்போல் ஒட்டப்பட்டிருந்ததையும் பார்த்து அந்த ஓலைகளை சிரமப்பட்டுப் பரித்தான். நான்காவது ஓலையின் கீழிருந்த ஓலையில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு துள்ளி எழுந்தான் கிருகவர்மன். காவலனை அழைத்து சேனாதிபதியை உடனே அழைத்து வருமாறு கட்டளையும் இட்டான். சேனாதிபதி வந்ததும், "சேனாதிபதி, நாம் நாளையே தானேசுவரம் கிளம்புகிறோம். ஏற்பாடுகள் நடக்கட்டும் துரிதமாக" என்று ஆக்ஞாபித்தான்.

## 21

# துரியோதனி

தானேசுவரத்திலிருந்து வந்த நான்கு ஓலைகளையும் படித்த கிருகவர்மன் மௌகாரி முதலில் சற்றுக் குழப்பமே அடைந்தான். நான்கும் ரகசிய ஓலைகளென்று தனித் தனியாக முத்திரை இடப்பட்டிருந்தாலும், நான்கும் ஒரே பேழையில் போடப்பட்டிருந்தாலும், நால்வரின் ஓலைகளும் ரகசிய ஓலைகளாதலால் அதை ஒருவரே அனுப்ப முடியாதாகையாலும், "இந்தப் பேழையை யார் கொடுத்தது?" என்று கிருகவர்மன் விசாரித்தான்.

"ஆசார்ய பண்டிதான் கொடுத்தார்" என்றான் தூதன்.

"நான்கு ரகசிய ஓலைகள் எப்படி ஒரே பேழையில் வர முடியும்?" என்று கிருகவர்மன் சந்தேகத்துடன் கேட்டான்.

"மகாராஜா! ஆசார்யர் முதலில் கிடைத்த ஓலையை பேழையில் போட்டு முத்திரை பொறிக்க இருந்த சமயத்தில் இன்னொருவன் வந்து மகாராஜாவின் ஓலையைக் கொடுத்து, "இது மகாராஜாவின் ஓலை. உடனே கன்னோசி போக வேண்டும்" என்று சொன்னான். இரண்டாவது ஓலையைப் போட்டு மீண்டும் முத்திரை பொறிக்கப்போன சமயத்தில் மூன்றாவதாக அரசகுமாரியின் ஓலை வந்தது. கடைசியாக இளவரசர் ஓலையும் வந்தது. அதற்குப் பிறகு பொறுமை இழந்த ஆசார்யர். இந்த அரண்மனை



யிலுள்ளவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. இதற்கு மேல் எந்த ஓலை வந்தாலும் நெருப்பில் போட்டுவிடுகிறேன்" என்று சீறி, பேழையை உடனடியாக மூடி முத்திரையையும் வைத்து, "கன்னோசிக்குப் போய் கிருகவர்மனிடம் கொடுத்து விடு என்று சொன்னார்" என்று விளக்கினான் தூதன்.

கிருகவர்மன் ஒவ்வோர் ஓலையாகப் பார்த்துக் கொண்டே வந்தான். எல்லாவற்றிலும் விஷயங்கள் சிறிது மாறுபட்டிருந்தாலும் கையெழுத்து தமது ஆஸ்தான சோதிடருடையதாக இருக்கவே, "சோதிடர் தானேசுவர அரண்மனையையே தம் வசப்படுத்திக்கொண்டார் போல் இருக்கிறது" என்று சொல்லி லேசாக நகைத்தான். முதல் ஓலை கல்யாணம் இப்பொழுது நடக்கக் கூடாதென்பதற்குக் காரணம் சொல்லியது. இரண்டாவது ஓலை தேதியைத் தள்ளிப்போடக் கூடாதென்பதற்குக் காரணம் சொல்லியது. மூன்றாவது ஓலை திருமணம் நடக்க முதலில் குறித்த தேதியைத் தவிர வேறு தேதி கிடையாதென்று திட்டமாக அறிவித்தது. நான்காவது ஓலையிலும் கிட்டத்தட்ட அதே மாதிரி செய்திதான். ஆனால் அந்த நாலாவது ஓலை மற்ற ஓலைகளை விட அதிக தடிப்பாயிருந்ததைப் பார்த்த கிருகவர்மன், அதை நன்றாக ஆராய்ந்து அது இரட்டை ஓலை என்பதையும் அது வேண்டுமென்றே ஒட்டப் பட்டிருந்ததையும் கவனித்துத் தனது கை நகத்தால் அதை இரண்டாகப் பிளந்தான். அடி ஓலையில் ஆஸ்தான சோதிடர் விஷயத்தை எழுதியிருந்தார். "எந்த ஓலையையும் மதிக்க வேண்டாம். உடனடியாகத் திருமணத்துக்குக் கிளம்புங்கள்" என்று எழுதிய ஆஸ்தான சோதிடர் தமது கையெழுத்தையும் இட்டிருந்தார்.

அதனால் ஒரு தீர்மானத்துக்கு வந்த கிருகவர்மன் மறு நாளே தானேசுவரம் புறப்பட ஏற்பாடுகளைச் செய்யுமாறு சேனாதிபதிக்கு உத்தரவிட்டு, பிரதான மந்திரியையும்

# 21

# துரியோதனி

**தா**னேசுவரத்திலிருந்து வந்த நான்கு ஓலைகளையும் படித்த கிருகவர்மன் மௌகாரி முதலில் சற்றுக் குழப்பமே அடைந்தான். நான்கும் ரகசிய ஓலைகளென்று தனித் தனியாக முத்திரை இடப்பட்டிருந்தாலும், நான்கும் ஒரே பேழையில் போடப்பட்டிருந்தாலும், நால்வரின் ஓலைகளும் ரகசிய ஓலைகளாதலால் அதை ஒருவரே அனுப்ப முடியாதாகையாலும், "இந்தப் பேழையை யார் கொடுத்தது?" என்று கிருகவர்மன் விசாரித்தான்.

"ஆசார்ய பண்டிதான் கொடுத்தார்" என்றான் தூதன்.

"நான்கு ரகசிய ஓலைகள் எப்படி ஒரே பேழையில் வர முடியும்?" என்று கிருகவர்மன் சந்தேகத்துடன் கேட்டான்.

"மகாராஜா! ஆசார்யர் முதலில் கிடைத்த ஓலையை பேழையில் போட்டு முத்திரை பொறிக்க இருந்த சமயத்தில் இன்னொருவன் வந்து மகாராஜாவின் ஓலையைக் கொடுத்து, "இது மகாராஜாவின் ஓலை. உடனே கன்னோசி போக வேண்டும்" என்று சொன்னான். இரண்டாவது ஓலையைப் போட்டு மீண்டும் முத்திரை பொறிக்கப்போன சமயத்தில் மூன்றாவதாக அரசகுமாரியின் ஓலை வந்தது. கடைசியாக இளவரசர் ஓலையும் வந்தது. அதற்குப் பிறகு பொறுமை இழந்த ஆசார்யர். இந்த அரண்மனை



யிலுள்ளவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. இதற்கு மேல் எந்த ஓலை வந்தாலும் நெருப்பில் போட்டுவிடுகிறேன்" என்று சீறி, பேழையை உடனடியாக மூடி முத்திரையையும் வைத்து, "கன்னோசிக்குப் போய் கிருகவர்மனிடம் கொடுத்து விடு என்று சொன்னார்" என்று விளக்கினான் தூதன்.

கிருகவர்மன் ஒவ்வோர் ஓலையாகப் பார்த்துக் கொண்டே வந்தான். எல்லாவற்றிலும் விஷயங்கள் சிறிது மாறுபட்டிருந்தாலும் கையெழுத்து தமது ஆஸ்தான சோதிடருடையதாக இருக்கவே, "சோதிடர் தானேசுவர அரண்மனையையே தம் வசப்படுத்திக்கொண்டார் போல் இருக்கிறது" என்று சொல்லி லேசாக நகைத்தான். முதல் ஓலை கல்யாணம் இப்பொழுது நடக்கக் கூடாதென்பதற்குக் காரணம் சொல்லியது. இரண்டாவது ஓலை தேதியைத் தள்ளிப்போடக் கூடாதென்பதற்குக் காரணம் சொல்லியது. மூன்றாவது ஓலை திருமணம் நடக்க முதலில் குறித்த தேதியைத் தவிர வேறு தேதி கிடையாதென்று திட்டமாக அறிவித்தது. நான்காவது ஓலையிலும் கிட்டத்தட்ட அதே மாதிரி செய்திதான். ஆனால் அந்த நாலாவது ஓலை மற்ற ஓலைகளை விட அதிக தடிப்பாயிருந்ததைப் பார்த்த கிருகவர்மன், அதை நன்றாக ஆராய்ந்து அது இரட்டை ஓலை என்பதையும் அது வேண்டுமென்றே ஒட்டப் பட்டிருந்ததையும் கவனித்துத் தனது கை நகத்தால் அதை இரண்டாகப் பிளந்தான். அடி ஓலையில் ஆஸ்தான சோதிடர் விஷயத்தை எழுதியிருந்தார். "எந்த ஓலையையும் மதிக்க வேண்டாம். உடனடியாகத் திருமணத்துக்குக் கிளம்புங்கள்" என்று எழுதிய ஆஸ்தான சோதிடர் தமது கையெழுத்தையும் இட்டிருந்தார்.

அதனால் ஒரு தீர்மானத்துக்கு வந்த கிருகவர்மன் மறு நாளே தானேசுவரம் புறப்பட ஏற்பாடுகளைச் செய்யுமாறு சேனாதிபதிக்கு உத்தரவிட்டு, பிரதான மந்திரியையும்

குருநாதரையும் கலந்தான். குருநாதர் பயணத்தை ஆட்சேபிக்கவில்லை. "மகாராஜா! ஒரு மகாராணி பக்கத்திலில்லாமல் உங்கள் சிம்மாசனம் வெறிச் சென்றிருக்கிறது. ஆகவே போய் வதுவை முடித்து தானேசுவரன் பெண்ணை அழைத்து வாருங்கள்" என்றார்.

பிரதான மந்திரி மட்டும் சிறிது ஆட்சேபணை கிளப்பினார். "மகாராஜா, பெண் வீட்டாரிடமிருந்து அழைப்பு வராமல் கிளம்புவது நமது கௌரவத்துக்குக் குறைவு" என்று சுட்டிக் காட்டினார்.

கிருகவர்மன் நகைத்தான், "நமது கௌரவத்துக்கா?" என்று வினவினான்.

"ஆம்" என்றார் பிரதான மந்திரி.

"அது இப்பொழுது வராது" என்றான் கிருகவர்மன்.

"ஏன்?" என்று பிரதான மந்திரி கேட்டார்.

கிருகவர்மன் சிறிது நேரம் சிந்தித்தான். "பிரதான மந்திரி! தானேசுவரம் எந்த இடம் தெரியுமா?" என்று வினவினான்.

மன்னன் என்ன கேட்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத மந்திரி, "என்ன மகாராஜா?" என்று வினவினார்.

"இல்லை, அது எந்த இடம் என்று கேட்டேன். அது புராணப் பிரசித்தி பெற்றதாகச் சொல்கிறார்கள்" என்றான் கிருகவர்மன்.

"ஆம் மகாராஜா. தானேசுவரமும் அதைச் சுற்றியுள்ள இடங்களும்* குருக்ஷேத்திரம். மகாபாரத யுத்தம் நடந்த இடம்" என்றார் பிரதான மந்திரி.

* The Country Surroundings **THANESWAR** has been holy ground as the Land of Kuru and famous as the battle field of legendary heroes - The Early History of India - By Vincent A SMITH - Page - 309 - 310



"இல்லை மந்திரி" என்றான் கிருகவர்மன்.

பிரதான மந்திரி கோபத்தின் வசப்பட்டு, "என்ன இல்லை மகாராஜா? எனக்குப் புராணம் தெரியாதென்கிறீர்களா?" என்று வினவினார்.

கிருகவர்மன் முறுவல் கொண்டு, "எது தெரிந்தும் பயனில்லை. மகாபாரதம் நடக்கும் இடம் தானேசுவர ராஜ்யமல்ல. தானேசுவர அரண்மனைதான்" என்றான். அத்துடன் சொன்னான் "அங்குதான் துரியோதனி இருக்கிறாள்" என்று.

"மகாராஜா! என்று சீறினார் பிரதம மந்திரி.

"என்ன?" கிருகவர்மன் ஏதும் தெரியாததுபோல் நடித்தான்.

"புராணத்தில் துரியோதனன் என்றுதான் உண்டு. துரியோதனி கிடையாது" என்றார்.

"அது பழைய புராணம் மந்திரி," கிருகவர்மன் நகைத்தான்.

"புதிய புராணத்தில்?" என்று கேட்டார் பிரதான மந்திரி.

"துரியோதனிதான். தானேசுவர அரண்மனையில் இருக்கிறாள். அங்கு உமக்குக் காட்டுகிறேன். அவள்தான் என் திருமணத்துக்குத் தடை" என்ற கிருகவர்மன் பெரிதாக நகைத்தான்.

விஷயத்தை ஓரளவு புரிந்துகொண்ட பிரதான மந்திரி, "மகாராஜா! தானேசுவர மகாராணியைச் சொல்கிறீர்களா?" என்று வினவினார்.

"வேறு யாரைச் சொல்வேன்?"

"மகாராஜா!"

"சொல்லும்."

"மாமியாரை இழிவாகப் பேசக்கூடாது..." என்று மெல்ல இழுத்தார் பிரதான மந்திரி.

"மாமியாரிடம் பக்தி செலுத்த வேண்டுமாக்கும்?" கிருகவர்மன் இகழ்ச்சி நிரம்பிய குரலில் கேட்டான்.

"அதில் தவறில்லை. பெண்ணைப் பெற்றவள், பெண்ணைக் கொடுப்பவள்" என்று பிரதான மந்திரி சுட்டிக் காட்டினார்.

கிருகவர்மன் மந்திரியை இடக்காக நோக்கினான். "பிரதான மந்திரி! அவள் பெண்ணைப் பெற்றவளாக இருக்கலாம். கொடுப்பவளாக இல்லை. என்னையும் ராஜ்யஸ்ரீயையும் பிரித்து வைக்கவே பார்க்கிறாள். நீர் உமது மாமியாரிடம் கைகட்டிச் சேவகம் செய்யும். என்னால் அது முடியாது. அந்த துரியோதனியையும் மீறி இந்த விவாகத்தைக் குறித்த தேதியில் முடிக்கிறேன்" என்று கூறி, சேனாதிபதியை அழைத்து, "பயணத்துக்கு சித்தம் செய்யும்" என்று கட்டளை இட்டான். பிறகு பிரதான மந்திரியை நோக்கி, "சம்பிரதாயம் எப்படியோ அப்படிச் செய்யும் ஏற்பாடுகளை. இன்னும் நான்கே நாட்களில் நாம் தானேசுவரத்தில் இருப்போம்" என்று கட்டளையிட, தலை வணங்கிச் சென்றார் பிரதான மந்திரி.

பிறகு சேனாதிபதியைத் தமது அறைக்கு அழைத்து, "சேனாதிபதி! மன்னருடன் செல்ல நூறு புரவி வீரர் சித்தமாகட்டும், பட்டத்துக் குதிரைக்கு நன்றாக அலங்காரம் செய்யுங்கள்" என்று உத்தரவிட்டார். "மன்னர் கல்யாணத்துக்கு மற்ற மன்னர்களுக்கு ஓலையனுப்ப நாளில்லை. எதற்கும் மாளவத்துக்கும் வடக்கு வங்காளத்துக்கும் தூதர்களை அனுப்ப ஏற்பாடு செய்யும். அழைப்பு ஓலைகளை நான் சித்தம் செய்கிறேன்" என்று கூறித் தமது பணிகளில் சுறுசுறுப்பைக் காட்டினார் பிரதான மந்திரி.



அன்றிரவு தீர்க்க சிந்தனையுடன் படுத்திருந்தார் பிரதான மந்திரி தமது பள்ளியறையில். "மன்னர்கள் தங்கள் திருமணங்களில் இத்தனை அவசரம் காட்டுவது சம்பிரதாய விரோதம். நாலுபேர் பார்த்து நகைக்கும் படியாயிருக்கும்" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டார். "மன்னரின் துரிதத்தை, விரோதிகளான வட வங்காள மன்னன் சசாங்கனும் மாளவ தேவகுப்தனும் கேட்டால் பெரிதும் பரிகசிப்பார்கள். இதுபற்றித் துஷ்பிரசாரமும் செய்வார்கள். இந்த அவசரம் பின்னால் தீமைகளை விளைவிக்கக்கூடியது" என்று மனத்துள் சொல்லி ஆதங்கப்பட்டுக் கொண்டார்.

ஆனால் மறுநாள் தூதர்கள் பறந்தனர், திருமண அழைப்பு ஓலைகளை ஏந்தி. கிருகவர்மனும் மறுநாளே பயணப்பட்டான் தானேசுவரம் நோக்கி. தான் வரும் விஷயத்தை தானேசுவர சக்கரவர்த்திக்கும் முன்னதாகத் தெரியப்படுத்திவிட்டான். தூதர்கள் சென்ற மறுதினம் யாத்திராதானம் செய்து கன்னோசியின் நூறு புரவி வீரர்கள் சூழ்ந்துவரத் தனது நகரை ஒருமுறை வலம் வந்து நகர மக்களின் சுபகோஷத்தை ஏற்றுத் தானேசுவரம் நோக்கிச் சென்றான். பிரதான மந்திரியும் மகாராஜாவுடன் சென்றார். தானேசுவரத்தை அடைந்ததும் நகருக்குள்ளே புக முயன்ற கிருகவர்மனைப் பிரதான மந்திரி தடுத்து, "நாம் நகரத்துக்குப் புறம்பேயுள்ள பிரபுக்கள் விடுதியில் தங்குவோம். பெண் வீட்டார் எதிர்கொண்டு அழைக்கட்டும்" என்று தாம் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவர் என்ற அகங்காரத்தைக் காட்டினார்.

பிரதான மந்திரி யோசனைக்கு சம்மதம் கொடுத்த கிருகவர்மன் அரண்மனை அழைப்பை எதிர்பார்த்து பிரபுக்கள் விடுதியில் காத்திருந்தான். ஆனால் அழைப்பு லேசில் வரவில்லை. அரண்மனையிலிருந்து ஒவ்வொருவராக

வந்து அவனை விசாரித்துப் போனார்கள். பிறகு அவன் ஆஸ்தான சோதிடரும், தானேசுவர சோதிடரும் வந்து, "நாளை விடியற்காலையில் நீங்கள் பட்டணப் பிரவேசம் செய்கிறீர்கள்" என்றார்கள்.

"இன்றைக்கென்ன?" என்று கேட்டான் கிருகவர்மன் கோபத்துடன்.

"நல்ல நாழிகை நாளைதான் வருகிறது! என்று இரு சோதிடர்களும் சொல்லவே வேறு வழியின்றி கிருகவர்மன் சம்மதித்தான்.

அன்றிரவில் கிருகவர்மன் மனம் முழுவதையும் ராஜ்யஸ்ரீ ஆண்டுகொண்டிருந்தாள். அவள் நினைப்புடன் பிரபுக்கள் வீதியின் நந்தவனத்தில் நடமாடிக் கொண்டிருந்த கிருகவர்மன் ராஜ்யஸ்ரீயின் பேரெழிலை நினைத்து உருகிக்கொண்டிருந்தான். வானத்திலிருந்த பூர்ண சந்திரனை நோக்கி, "சந்திரா! ராஜ்யஸ்ரீயின் வதனம் உன்னைவிட அழகு வாய்ந்தது. ஆகையினால் நீ பொறாமைப்படுகிறாய்" என்று பைத்தியம் போல் பேசினான். அப்பொழுதுதான் அங்கு ஹர்ஷன் வந்து சேர்ந்து, "மாப்பிள்ளை தீவிர யோசனையில் இருப்பதாகத் தெரிகிறது" என்று சொல்லி லேசாக நகைத்தான்.

சிந்தனையில் திளைத்திருந்த கிருகவர்மன் சிந்தனை கலைந்து, "ஹர்ஷா! எப்பொழுது வந்தாய்?" என்று கேட்டு அவனை அணைத்தான்.

"அடடே! என்னை இம்சைப்படுத்த வேண்டாம்" என்றான் ஹர்ஷன். பிறகு காதுடன் சொன்னான். "உங்களுக்காக ராஜ்யஸ்ரீ நந்தவனத்தில் காத்திருக்கிறாள்" என்று.

கிருகவர்மன் வெறிபிடித்தவன்போல் உள்ளே ஓடி ஒரு போர்வையைத் தலையிலிருந்து கால்வரை போர்த்திக்



கொண்டு வரவே இருவரும் புரவிகளில் ஏறி அரண்மனை சென்றார்கள். ஹர்ஷன் கிருகவர்மனை நேர்வழியாக அழைத்துச் செல்லாமல் அரண்மனையின் திட்டி வாசல் வழியாக நந்தவனம் கொண்டு போய்ச் சேர்த்தான். "என் தங்கை அதோ அந்த லதா கிருகத்தில் (கொடி வீட்டில்) இருக்கிறாள்" என்று கூறிவிட்டு நடையைக் கட்டினான்.

கிருகவர்வன் சுற்றுமுற்றும் பார்த்தான். எங்கும் இன்பமான சூழ்நிலை. வெண்மதியின் வெள்ளிப் போர்வை அவனைச் சுற்றிக் கிடந்தது. புஷ்பங்களின் நானாவித வாசனைகள் அவன் புத்தியைச் சுழற்றின. அவற்றையெல்லாம் ஒரு நொடியில் நுகர்ந்து முடித்துவிட்ட கிருகவர்மன் ராஜ்யஸ்ரீ இருந்த கொடி வீட்டை நோக்கி மெதுவாக நடந்தான். தான் வந்தது யாருக்கும் தெரியக்கூடாததென்பதற்காக அடிகளை மெல்ல வைத்து நடந்தான்.

ஆனால் அவன் கொடி வீட்டை நோக்கிச் சென்றதை துரியோதனி பார்த்துக்கொண்டிருந்தாள் ஒரு மரத்தின் அடியிலிருந்து. அடுத்து தன் பக்கத்திலிருந்த ஒருவனிடம் ஏதோ செய்தி சொல்ல அவன் அரண்மனையை நோக்கி வேகமாக ஓடினான்.

22

# நேரம் காலம்

தூனேசுவர அரண்மனை நந்தவனத்திலிருந்த கொடி வீட்டை நோக்கி அடிமேலடி வைத்து அரவம் ஏதும் செய்யாமல் மெது நடைபோட்ட கிருகவர்மன் மெதுவாகக் கொடி வீட்டுக்குள் நுழையுமுன்பு ஒருமுறை அப்புறமும் இப்புறமும் பார்த்து யாரும் அங்கில்லை என்பதை நிர்ணயம் செய்துகொண்டு உள்ளே நுழைந்தான். அந்த லதா கிருகத்தின்மீது தொத்தி ஏறி அடர்த்தியாகப் படர்ந்திருந்த சந்தன முல்லைக்கொடி நுழைவாயிலிலும் சிறிது தொங்கி மலர்ந்து கிடந்ததால், அந்த மலர்க்கொத்து ஒன்று அவன் கன்னத்தைத் தடவிக் கொடுத்து மிக மெதுவாக அதன் நறுமணமும் அவன் நாசியில் புகுந்து அடுத்துக் கிடைக்கவிருக்கும் சுகத்துக்குப் பூர்வாங்க சுருதியைக் கூட்டியது. இத்தகைய சூழ்நிலையால் ஏற்கனவே ஏறியிருந்த வெறி அதிகமாக கிருகவர்மன் தனது கைகளை நீட்டிக்கொண்டே அந்தக் கொடி வீட்டில் நுழைந்தான். கொடி வீட்டிற்குள் இருந்த இருட்டின் விளைவாக ராஜ்யஸ்ரீ எங்கிருக்கிறாள் என்பதை உணர முடியாத கிருகவர்மன் தனது கைகளால் துழாவிக்கொண்டே அந்தக் கொடி வீட்டிற்குள் மெதுவாக நடந்தான்.

நீட்டிய கைகளில் எதுவும் அகப்படவில்லை. "உம்! உம்! உன்னைப் பிடிப்பது அத்தனை கஷ்டமா? இரு இரு



சொல்கிறேன்" என்று மெதுவாகப் பேசிக்கொண்டே கொடி வீட்டிற்குள் சுற்றிக் கைகளால் துழாவிய கிருகவர்மன் தனது முயற்சி பலிக்காமல் போகவே ஓர் இடத்தில் சட்டென்று நின்றான்.

அப்பொழுது பின்புறத்திலிருந்து வந்த இரு பூங்கரங்கள் அவன் கழுத்தை வளைத்தன. இரு பூச்செண்டுகள் அவன் முதுகில் அழுந்தின. அதனால் நின்ற நிலையிலிருந்து அசையாத கிருகவர்மன், "திருடர்கள்தான் மனிதர்களைப் பின்னாலிருந்து பிடிப்பார்கள்" என்று சொல்லிப் பெருமூச்செறிந்தான்.

அப்பொழுது அவன் தோளில் புதைந்த ஒரு மலர் முகம் வாய் நெகிழ்ந்து, "திருடர்கள் சரி. குருடர்கள் எப்படி?" என்று கேட்டது ரகசியமாக.

"குருடரா! யாரது?" என்று கேட்ட கிருகவர்மன் நின்ற நிலையிலிருந்து சிறிதும் அசையாமல், "குருடரா? எப்படியிருப்பார்கள்?" என்று இன்னொரு கேள்வியையும் எழுப்பினான்.

"கண் தெரியாது. எதிரே கைகளை நீட்டிக் காற்றைத் துழாவுவார்கள்" என்று விளக்கிய ராஜ்யஸ்ரீ மெதுவாக நகைத்தாள்.

கிருகவர்மன் தனது முதுகில் அழுந்திய இன்பப் புஷ்பங்களால் பிரமை தட்டிய நிலையில், 'கதையைத் தொடரட்டுமா?' என்று வினவினான்.

"எந்தக் கதையை" என்று கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

"முடிவில்லாத கதையை" என்று சொன்ன கிருகவர்மன் பின்புறமாகத் தனது கைகளை ஏவி அவள் முதுகை வளைத்து எதிர்ப்புறமாக அவளை இழுத்தான். அப்படிச் சுற்றி இழுக்கப்பட்ட ராஜ்யஸ்ரீயின் மென்மையான உடற்கூறுகள் அவன்மீது தவழ்ந்து திரும்பியதால் ஏற்பட்ட

உணர்ச்சியின் சுழற்சியால் கிருகவர்மன் பெருமூச்சு விட்டு, முன்னே வந்துவிட்ட அந்த எழில் சிற்பத்தைத் தனது இரு கைகளாலும் வளைத்து இறுக்கினான்.

உடலோடு உடல் நெரிந்த நிலை, உணர்ச்சிகள் அத்து மீறி தெறிக்கும் நிலை, அறிவு பறிபோன நிலை, ஈடு செய்ய முடியாத ஆசை அலைகள் எங்கும் உடலில் ஊடுருவி மயக்கம் அளிக்கும் விவரணத்துக்கு அப்பாற்பட்ட தனி சொர்க்கம். அந்த சொர்க்கத்துக்குள் ஈர்க்கப்பட்ட இருவரும் பேச்சின்றி மௌன இன்பத்தில் ஈடுபட்டதால் வாய்ச்சொல் யாதும் பயனில்லாத நிலையில் உணர்ச்சிகள் சுழன்றன. சொல் இல்லையே தவிர செயல் நின்றுவிடாத நேரம் அது.

கிருகவர்மன் கைகள் அவள் அழகிய தேகத்தைத் தடவிச் சென்றன. தட்டுப்பட்ட சில இடங்களில் தேங்கவும் செய்தன. மெள்ளத் தலையை இறக்கிய கிருகவர்மன் ராஜ்யஸ்ரீயின் வலது கன்னத்தில் இதழ்களைப் புதைத்தான்.

"உம்" என்று உணர்ச்சிப் பெருக்கால் முனகினாள் ராஜ்யஸ்ரீ. கன்னங்களுக்கிடையே வேற்றுமை காட்டக் கூடாதென்பதற்காக அவள் முகத்தைத் திருப்பி இடது கன்னத்திலும் இதழ்களைப் புதைத்தான்.

ராஜ்யஸ்ரீ சுயநிலையை அடியோடு இழந்திருந்தாள். அவள் மார்பும், வயிறும் நீண்ட கால்களும் அவன்மீது அதிகமாகவே அழுந்தின. அவள் கைகள் இரண்டும் அவன் கழுத்தைச் சுற்றிக் கிடந்தன. உதடுகள் அவன் மார்பில் புதைந்தன.

அதனால் பெரிதும் சங்கடத்துக்குள்ளாகிய கிருக வர்மன் அவள் முகத்தைத் தூக்கித் தலைகுனிந்து அவள் இதழ்களைத் தனது இதழ்களில் சிறைப்படுத்திக் கொண்டான். இதழோடு இதழ் இணைந்த நிலையில் அவன் முகம் புரண்டு இதழ்களை அழுத்திக் கவ்வியதாலும் அவள் உடல் அதிகமாக இறுக்கப்பட்டதாலும் ஏற்பட்ட



இன்பவலியில் அவன் சுகத்தின் சுனையில் ஆழ்ந்து கிடந்தான்.

கிருகவர்மன் அவள் இதழ்களை விட்டுக் கழுத்தில் அவற்றைப் புதைத்தான். பிறகு கழுத்துக்குக் கீழும் இறங்கிய உதடுகள் மார்புப்புறத்தை எய்திய சமயத்தில் அவள் எதிர்ப்பு ஏற்பட்டது. "உம்" என்ற எச்சரிக்கை முனகலும் எழுந்தது அவளிடமிருந்து.

கிருகவர்மன் அவள் மார்பின் விளிம்பில் அழுந்திய இதழ்களால் கேட்டான். "என்ன ராஜ்யஸ்ரீ" என்று.

அவள் குனிந்து அவன் காதில் சொன்னாள். "அதற் கெல்லாம் சமயமிருக்கிறது" என்று.

"எதற்கு ராஜ்யஸ்ரீ?" என்று அவன் கேட்டபோது அவன் இதழ்கள் விளிம்பில் அசைந்ததால் ஏற்பட்ட இன்ப இம்சையின் விளைவாக, "இதற்குத்தான்" என்றாள் ராஜ்யஸ்ரீ மெதுவாக.

கிருகவர்மன் பதிலேதும் சொல்லவில்லை. தனது இதழ்களை அகற்றி அவள் எதிரே நிலத்தில் மண்டியிட்டு உட்கார்ந்தான். அதனால் தனது இடையில் பொருந்திய அவன் முகத்தை நிமிர்த்த முயலவில்லை ராஜ்யஸ்ரீ. அவன் தலைக் குழல்களைக் கோதிவிட்டாள். அவன் கையொன்று அவள் இடைச் சீலையைச் சிறிது தளர்த்தி உதடுகள் இடையில் பதிய வழி வகுத்தது. அவன் அதரங்கள் இடையுடன் திருப்தியடையாததால் மேற்கொண்டு துராக்கிருகத்துக்கு இடங்கொடுக்க இஷ்டப்படாத ராஜ்யஸ்ரீ தானும் கீழே நழுவித் தரையில் மண்டியிட்டு உட்கார்ந்தாள். அதனால் மேலுக்கு வந்துவிட்ட அந்த முரடன் தலையைத் தனது இரு கைகளாலும் பிடித்துத் தனது மார்பில் அணைத்துக் கொண்டாள்.

அவள் உணர்ச்சிகள் புரண்டன. அவன் தலையும் புரண்டது அவள் மார்புமீது. அதனால் சிறிது கலைந்த

மார்புச் சீலையைச் சரி செய்துகொள்ளும் நிலையில் இல்லை அவள்.

கீழே மண்டியிட்டு எதிரும் புதிருமாக அரைவாசி நின்ற நிலையில் சாரையும் நாகமும் போலப் பிணைந்து கிடந்த அவ்விருவரில் கிருகவர்மனே அந்த ஸ்தம்பித்த நிலையிலிருந்து மீண்டு, சட்டென்று எழுந்து ராஜ்யஸ்ரீயைத் தனது இரு கைகளாலும் வாரி எடுத்துக்கொண்டு, கொடி வீட்டின் ஒரு மூலையிலிருந்த திண்ணைக்குச் சென்று அதில் அமர்ந்து, தனது மடிக்குக் குறுக்கே அவளைக் கிடத்தி, "ராஜ்யஸ்ரீ !" என்று மெதுவாக அழைத்தான்.

"உம்!" அதற்குமேல் பேச முடியவில்லை அவளால்.

"என்ன இப்படி மௌனியாகிவிட்டாய் ரா்ஜ்யஸ்ரீ?" என்று வினவினான் கிருகவர்மன்.

"அடக்கம்" என்று ஒற்றைச் சொல்லை உதிர்த்தாள் ராஜ்யஸ்ரீ.

"அடக்கமா?" என்று கேட்ட கிருகவர்மன் கலைந்த அவள் தலையைச் சிறிது கோதிவிட்டான். கலைந்த அவள் இடைச் சேலையையும் சிறிது நெகிழ்த்திவிட்டான்.

அவள் பதில் சொல்லாமல் மெதுவாக நகைத்தாள். "என்ன நகைக்கிறாய்?" என்று வினவினான்.

"அடக்கமா என்றா கேட்டீர்கள்?" சொற்களை முடிக்கவில்லை அவள்.

"ஆம் கேட்டேன்."

"ஆனால் அடக்கத்துக்கு வழி வகுக்கவில்லை நீங்கள்."

"என்ன அப்படிச் செய்துவிட்டேன்?"

"தலையைக் கோதிவிட்டீர்கள்."

"ஆம்."

"அது சரி."



"எது சரியல்ல?"

"இடைச் சேலையை நெகிழ்த்தினீர்களே, அது சரியா?" இதைக் கேட்ட ராஜ்யஸ்ரீ அவன் மடியில் மல்லாந்த நிலையிலிருந்து ஒருக்களித்தாள்.

அந்த ஒருக்களித்த சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன் படுத்திக்கொண்ட கிருகவர்மன் அவள் பின்னெழிலை ஒரு கையால் இழுத்து அவள் உடலைத் தன்னுடன் இணைய விட்டான். பிறகு குனிந்து அவள் காதுடன் பேச முற்பட்டு, "இது சரிதானே?" என்றான்.

"எது?"

"உன்னைத் திருப்பியபடி இழுத்துவிட்டேன்."

"அதனால் என்ன லாபம்?"

"இடையின் சேலை நெகிழ்ச்சி மறைந்து விட்டதல்லவா?"

"எங்கிருந்து?"

"பிறர் கண்ணிலிருந்து."

"இங்கு ஏது பிறர்?" என்று கேட்ட ராஜ்யஸ்ரீ ஒருக்களித்தபடி நகைத்தாள்.

அப்பொழுதுதான் தனது அறிவீனத்தை உணர்ந்த கிருகவர்மன் 'ஓகோ! யாருமில்லையா?' என்று கேட்டான்.

"எதுவும் புரியவில்லை உங்களுக்கு" என்று ராஜ்யஸ்ரீ புன்முறுவல் செய்தாள்.

அந்தப் புன்முறுவல் அவனுக்குத் தெரியவில்லை இருட்டின் காரணமாக. புற உலகம் புரியவில்லை புத்தி சலனத்தின் விளைவாக. வேறு உலகத்துக்குச் சென்று விட்டதாக நினைத்த கிருகவர்மன், தானிருந்தது, புகுந்து விட்டது எல்லாம் ராஜ்யஸ்ரீ என்ற ஒரே உலகந்தான் என்பதை உணர்ந்தான். அதனால் தனது மடியில் புரண்டு

கிடந்த அவள் பூவுடல்மீது தலை சாய்த்துப் படுத்தான். அவள் தலையில் சூடியிருந்த பெரு முல்லைச்சரம் முதுகில் கிடந்த அவன் நாசிக்கு நறுமணத்தை ஏற்றியதால் அதைத் தீர்க்கமாக முகர்ந்தான். முகர்ந்த நாசி மற்ற அவயவங்களை இயக்கியதால் அவன் தலை அலைந்தது அவள் பின்புறத்தில். மேலிருந்து கீழும் கீழிருந்து மேலுமாகப் பயணம் செய்து எழில்களில் புரண்டு புரண்டு நீங்கியது. அதுவரை புஷ்பமாலை போல் அவன் மடியில் கிடந்த ராஜ்யஸ்ரீயும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு இலக்காகி அவன் மடியில் அசைந்தாள், நெளிந்தாள். அவன் கையொன்றைத் தனது கையால் பற்றி அதற்கு வழியும் காட்டினாள்.

வழி காட்டிய கையை நெறித்தான். 'அவன் அதை மட்டுமா நெறித்தான்? அவள் பூவுடலின் எத்தனை இடங்கள் இம்சைப் பட்டன! அவள் ஏன் 'உம்'காரம் கொட்டுகிறாள்? வலியாலா, வலியின் தேவையாலா? ஏன் சுழல்கிறாள்? உணர்ச்சிகளின் சுழற்சியாலா? அவனுக்கும் புரியவில்லை, அவளுக்கும் புரியவில்லை.

கொடி வீட்டின் ஏகாந்தம் அந்த இருவரையும் ஆட் கொண்டிருந்தது. இரவின் அமைதி அவர்கள் அமைதியைக் குலைத்துத் துணிவுக்கு இடங் கொடுத்தது. அந்த ஏகாந்த் நிலைக்கு மலர்கள் மயக்கமளித்தன. மாடப்புறாக்கள் அரண் மனைப் பொந்துகளிலிருந்து குவா குவாவெனக் கூவியதால் கொடி வீட்டின் குலாவலுக்கு சுருதி கூட்டின. கொடி வீட்டில் உணர்ச்சிகள் இணைந்து சுழன்றன. நேரம் ஓடியது தெரியவில்லை அந்த இருவருக்கும். அந்த நிலையில் நேரம் ஏது? காலந்தான் ஏது? ஓடும் காலம் அவர்களுக்காகத் தேங்கவில்லை. கால ஓட்டத்திற்காக அவர்களும் ஏங்கவில்லை.

# 23

# மாப்பிள்ளை ஒரு திருடன்

கொடி வீட்டின் ஏகாந்தத்தில் பரஸ்பர பிணைப்பில் கிடந்த அந்த இருவரும் மூன்றாம் ஜாமம் முடிந்து விட்டதையும் இரண்டாம் ஜாம முடிவிலேயே கிளம்பிவிட்ட விண்மதி தனது ஆட்சியைத் தொடங்கிவிட்டதால் கொடிகளின் இடைவெளியே உள்ளே நீளமாகக் கம்பி போலும், சக்கிர வட்டமாகவும் சந்திர வெளிச்சம் விழுந்ததையும் உணரவில்லை. காதலுக்கு வெளிச்சமும் தடையில்லை என்பதற்கு உதாரணமாக இருந்த அந்தக் காதலர்கள் இருவரில் முதன் முதலாக சுரணையடைந்த கிருகவர்மன், "ராஜ்யஸ்ரீ! சந்திர வெளிச்சம் விழுந்திருக்கிறது" என்று கூறிக்கொண்டே இறுகப் பிணைந்து கிடந்த நிலையிலிருந்து எழுந்தான் சிறிது.

அவன் பிணைப்பிலிருந்து விடுபட இஷ்டப்படாத ராஜ்யஸ்ரீ மட்டும் கண்களைத் திறக்காமலும் தனது பிடியை வலுவாக்கியும், "ஹூம்" என்று ஒரு நீண்ட ஹூங்காரத்தை வெளியிட்டாள்.

சிறிது எழுந்த நிலையிலேயே அவளையும் தூக்கிக் கொண்டு நிமிர்ந்த கிருகவர்மன் அவளை மீண்டும் மடியில் கிடத்திக்கொண்டு அவள் அழகிய உடலைக் கவனித்தான்.

அவள் மார்புமீதும் கழுத்துமீதும் விழுந்த வட்டமான சந்திர ரச்மிகள் அவளுக்கு ஏதோ வெள்ளி மாலையை அணிவித்தது போன்ற பிரமையை ஏற்படுத்தின. அவள் திண்மையான தொடைக்குக் குறுக்கே விழுந்த கம்பி போன்ற ஒரு கிரணம் அவளைத் தண்டிக்க வேண்டிய இடத்தைச் சுட்டிக் காட்டியது. அவள் சற்றே திரும்பியபோது அவள் பின்னெழிலில் விழுந்த சந்திர கிரணங்கள் அவளுக்கு எந்தப் பாகத்தில் கல்லிழைத்தாலும் தகும் என்பதை நிரூபித்தன. அப்படி லேசாகத் திரும்பியதால் அவள் ஒரு கன்னத்தில் விழுந்த சந்திரவட்ட வெளிச்சம் சற்றே சிவந்த அவள் கன்னக் கதுப்பின் அழகுக்கு வெள்ளியையும் கலந்து புதுவித ஒளியைச் சிருஷ்டித்துவிட்டதால் அவள் ஆகாயத்திலிருந்து குதித்துவிட்ட அப்ஸரஸ் போல் விளங்கினாள்.

அவள் கன்னத்தின் சந்திர வட்ட அடையாளத்தை அவன் குனிந்து தனது இதழ்களை அங்கு புதைத்து அகற்றினான். அப்படியே காதோரமாகச் சென்று, "ராஜ்யஸ்ரீ! என்னைப் பிடித்துக் கட்டாதே!" என்று கூறிக் கொண்டே அவள் உடலை மீண்டும் வளைத்து இறுக்கினான். சந்திர வெளிச்சம் அவள்மீது படக்-கூடாதென்ற நினைப்பினால் அவள் பின்னெழில்மீது கையை வைக்கவே அவன் கைமீது விழுந்தது அந்த விண்வெள்ளி. அதைக் கவனித்த அவன், "ராஜ்யஸ்ரீ எழுந்திரு. இல்லாவிட்டால் சந்திரன் என்னை விழுங்கி விடுவான் போலிருக்கிறது" என்றான்.

ராஜ்யஸ்ரீ மெதுவாக நகைத்தாள். "நானா உங்களைக் கட்டியிருக்கிறேன்? நீங்களல்லவா இரும்புப் பிடியாக என்னைக் கட்டித் தூக்கியிருக்கிறீர்கள்? பாருங்கள்" என்று சொன்னாள் நகைப்பின் ஊடே. மேலும் சொன்னாள், "எளியாரை வலியார் அடித்தால், வலியாரை தெய்வம் அடிக்கும்" என்று.



கிருகவர்மன் சித்த சுவாதீனத்தை அடியோடு பறி கொடுத்தான். அவளை மடியிலிருந்து தூக்கித் தழுவிக் கன்னத்தோடு கன்னம் இழைத்து, "யார் வலியார்? யார் எளியார்? யார் தெய்வம்? என்று வினவினான்.

அவன் கன்னத்தில் தனது கன்னத்தை நன்றாக இழைத்தாள் ராஜ்யஸ்ரீ. அந்த நிலையில் "நீங்கள் வலியார், நான் எளியவள்..." என்று சொல்லிக்கொண்டே போனவள் சட்டென்று பேச்சை நிறுத்தினாள்.

"சொல் ராஜ்யஸ்ரீ" என்றான் அவன், அவள் சட்டென்று பேச்சை நிறுத்திய காரணத்தைப் புரிந்துகொண்டு.

"சொல்ல ஒன்றுமில்லை..." ராஜ்யஸ்ரீ இழுத்தாள் சொற்களை.

"எளியாரை வலியார்... ஏதோ சொன்னாயே..."

"அது ஒன்றுமில்லை. சந்திரன் உங்களைத் தண்டிப்பான் என்று சொன்னேன்."

"எதற்கு?"

"நீங்கள் என்னை..."

"உன்னை?"

"துன்புறுத்தினால் சந்திரன் உங்களைத் துன்புறுத்துவான் என்று சொன்னேன்."

"சொற்களை மாற்றுகிறாயே."

இதற்கு ராஜ்யஸ்ரீ பதில் சொல்லவில்லை. மெதுவாக அவன் பிடிப்பிலிருந்து எழுந்திருக்க முயன்றாள். அவன் கைகள் அவளுக்கு விடுதலை அளிக்க மறுத்தன. "நேரமாகிவிட்டது. புரியவில்லையா உங்களுக்கு?" என்று அவள் லேசாகத் திமிறினாள்.

"அப்படியா?" என்றான் அவன் பிடியை அதிமாக இறுக்கி, உதடுகளைக் கன்னத்திலிருந்து விலக்கிக் கழுத்தில் அழுத்தி.

"நல்ல அழகு!" என்று அன்புச் சீறல் சீறினாள் ராஜ்யஸ்ரீ.

"ஏன், என் அழகிற்கென்ன?" என்று கிருகவர்மன் கேட்டான்.

"அழகு, நடத்தை இரண்டுமே திவ்வியமாயிருக்கிறது-" ராஜ்யஸ்ரீ முரண்டினாள். முறுவல் கொண்டாள்.

"அழகுக்கு என்ன? நடத்தைக்குத்தானென்ன?"

"அழகு திவ்வியமாயிருக்கிறது. குழல் தாறுமாறாகக் கலைந்து ராட்சன் மாதிரி இருக்கிறீர்கள். நடத்தை கன்னத்திலிருந்து கழுத்துக்கு இறங்கியிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே, அவன் மடியிலிருந்து நழுவித் திண்ணையிலிருந்து கிழே இறங்கினாள்.

நின்ற நிலையில் மோகனாகரமாயிருந்தாள் ராஜ்யஸ்ரீ. அவள்மீது சந்திரன் வெள்ளி நாணயங்களை வாரி இறைத்திருந்தான். அவள் தனது கலைந்த குழல்களைச் சீர் செய்துகொள்ள இரு கைகளையும் தூக்கியபோது திண்ணிய அவள் மார்பு இரண்டும் முரட்டுத்தனமாக எழுந்தன. தாறுமாறாக இருந்த சேலையைச் சீர்படுத்திக்கொள்ள அவள் வளைந்தும் நிமிர்ந்தும் உடலைத் திருப்பியபோது அந்த உடல் வளைவுகளின் அமைப்பு எப்படி மாறினாலும் அவற்றிலெல்லாம் ஒரு அழகு இருப்பதைத் திண்ணையில் உட்கார்ந்த நிலையிலேயே அவன் கண்டான். அவள் குழலையும் சேலையையும் சீர் செய்துகொண்ட பிறகு அவள் இடையை இரு கைகளாலும் தன்னை நோக்கி இழுத்துத் தலையை மார்பில் புதைத்துக் கொண்டான்.

சிறிது நேரம் விலகியிருந்ததால் உணர்ச்சிகளைக் கட்டுக்குள் கொண்டுவந்துவிட்ட ராஜ்யஸ்ரீ, "என் ராஜா! நான் போக வேண்டும்..." என்று கூறி அவன் தலைக்குழல்களைக் கோதிச் சீர்படுத்தினாள்.



"ஏன்? என்று மார்புகளுக்கிடையில் உதடுகளைத் திறந்து கேட்டான் கிருகவர்மன்.

அவள் நகைத்தாள். அதனால் சற்றே ஏறி இறங்கிய மார்புச் செல்வங்கள் அவன் முகத்தைத் தடவின. "ஏன் போகவேண்டுமென்றா கேட்கிறீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"ஆம், கேட்டேன்" என்றான் அவன்.

"மேளக்காரர்களை அனுப்ப வேண்டும்?" என்று அவள் கூறி மீண்டும் நகைத்தாள்.

"எதற்கு மேளக்காரர்கள்?" என்று அவன் வினவி அவள் மார்பிலிருந்து முகத்தை நீக்கி அவள் முகம் நோக்கி வினவினான்.

"மாப்பிள்ளை அழைப்புக்கு" என்றாள் அவள் வெட்கப் புன்னகை கோட்டி.

"மாப்பிள்ளை அழைப்புக்கா?" கிருகவர்மன் வியப்புடன் வினவினான்.

"உலகத்தையே மறந்துவிட்டீர்கள்" என்றாள் அவனை நெருங்கி, வளைந்த அவன் கரங்களில் புகுந்து.

"உலகத்தை மறந்தேனா! சரி மறந்தால்தானென்ன? அதற்கு நீதான் பொறுப்பாளி" என்றான் கிருகவர்மன் அவள் இடையை வளைத்து இழுத்தவண்ணம்.

"எல்லாவற்றுக்கும் நான்தான் பொறுப்பாளிபோல் இருக்கிறது?"

"ஆம்."

"நீ?"

"ஏதுமறியாத பேதை."

"நீ பேதையாயிருக்கலாம். உன் லாவண்யப் பிரதேசங்கள் பேதைகளல்ல. இதயத்தைக் கட்டியிழுக்கும் கண்கள், மனத்தை உளைக்கும் கன்னங்கள், குறுகியிருந்தாலும் காந்தமெனக் கைகளை இழுக்கும் சிற்றிடை" என்று மேலும் ஏதோ சொல்லப்போனவனை, "ஓகோ! கவியாகிவிட்டீர்கள்" என்று அவன் உதட்டில் கையை வைத்து அடக்கினாள் ராஜ்யஸ்ரீ.

"கவி எங்கிருந்து உதயமாகிறான் தெரியுமா?" என்று தனது உதடுகளை அழுத்திய அவள் மலர்க் கையை முத்தமிட்ட வண்ணமே கேட்டான் கிருகவர்மன்.

அவள் கையை இழுத்துக்கொண்டு, "எங்கிருந்து உதயமாகிறான்?" என்று வினவினாள்.

"அழகிலிருந்து."

"அழகிலிருந்தா?"

"ஆம் விகாரத்திலிருந்து கவி பிறப்பதில்லை. அழகு மலர்களைக் காண்கிறான், கவிதை உதயமாகிறது. விண்ணின் எழிலைப் பார்க்கிறான், கவிதை பிறக்கிறது. கண்ணோட்டம், நீரோட்டம், மேகத்தின் ஓட்டம் சிருஷ்டியின் ஒவ்வொரு அழகிலும் தெய்வீகத்தைப் பார்க்கிறான் கவி, கவிதை பிறக்கிறது. அது மட்டுமல்ல. முக்கியமாகப் பெண்ணின் எழிலைப் பார்க்கிறான். குவிக்கிறான் கவிதைகளைக் கொட்டி" என்று விளக்கினான் கிருகவர்மன்.

"சரி கவிஞரே! நான் போய் மாப்பிள்ளை அழைப்புக்கு ஏற்பாடு செய்கிறேன்!" என்று கூறிக்கொண்டு கொடி வீட்டின் வாயிலை நோக்கி நடக்க முற்பட்டாள் ராஜ்யஸ்ரீ.

திண்ணையை விட்டுக் குதித்து அவளைக் கையைப் பிடித்து நிறுத்திய கிருகவர்மன், "மார்பிள்ளை அழைப்புக்கு நீ ஏற்பாடு செய்வானேன்?" என்று வினவினான்.



"மாப்பிள்ளை திருடன் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது."

"மாப்பிள்ளைத் திருடனா?"

"ஆம். இரவில் கொடி வீட்டில் மறைந்திருப்பவரை என்னவென்று சொல்வார்கள்?"

"புரிகிறது, புரிகிறது.." என்ற கிருகவர்மன் நகைத்தான்.

"ஒன்றும் புரியவில்லை உங்களுக்கு. நீங்கள் மாப்பிள்ளை என்பதையே மறந்துவிட்டீர்கள். இன்று காலை பிரும்ம முகூர்த்தத்தில், இன்னும் அரை ஜாமத்தில் உங்களுக்கு ஜாநிவாசம் என்பதும் நினைப்பில்லை.." என்று சாட்டினாள்.

அதைக் கேட்ட கிருகவர்மன் அதிர்ச்சி அடைந்தான். தான் வெகு சீக்கிரம் தனது மாளிகையை அடையாவிட்டால் தானேசுவரமே நகைக்கும் என்பதைப் புரிந்துகொண்டதால், "என் மறதிக்கு நீதான் காரணம்" என்று ராஜ்யஸ்ரீ மீது கோபித்தான்.

"எல்லாவற்றுக்கும் நான்தான் காரணம். காலா காலத்தில் மாளிகைக்குச் செல்லுங்கள் மாப்பிள்ளை. இல்லாவிட்டால் மேளம், இந்தக் கொடி வீட்டுக்கு வந்துவிடும்" என்று ராஜயஸ்ரீ சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அரண்மனைப் பின் வாயிலில் உதயகால வாத்தியங்கள் முழங்கலாயின. கொடி வீட்டின் புறம்பே ஓடினாள் ராஜ்யஸ்ரீ. கிருகவர்மனும் வெளியே வந்தான். மேளக்காரர்கள் இசையை மெதுவாக வாசிக்க, இருபுறத்திலும் இரு பிள்ளைகள் தட்டுகளை ஏந்தி வர ராஜமாதா வந்துகொண்டிருந்தாள் கொடி வீட்டை நோக்கி. அவளுக்குப் பின்னால் பரிஜனங்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

கொடி வாயிலில் நின்ற இருவரும் அந்த ராஜபவனியை எரிர்பார்த்துச் சிலையென நின்றிருந்தார்கள். ராஜமாதா தன்னை அவமானப்படுத்தத் தீர்மானித்துவிட்டதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டான் கிருகவர்மன்.

பவனி மெதுவாக நெருங்கி வந்தது. மங்கையர் மங்கள கீதம் இசைத்தார்கள். தனது ஒரு கையை ராஜ்யஸ்ரீயின் தோள்மீது வைத்து அணைத்த வண்ணம் நன்றாக நிமிர்ந்து கம்பீரமாக நின்றான் கிருகவர்மன்.

24

# திருமண விருந்தாளி

இரு பிள்ளைகளுடனும் மேள வாத்தியக்காரர்களுடனும் பணிப்பெண்கள் மங்களம் பாட கொடி வீட்டை நோக்கி வந்த ராஜமாதா கொடி வீட்டின் முகப்பில் கிருகவர்மன் ராஜ்யஸ்ரீயின் தோள்மீது கையைப் போட்டுக் கொண்டு கம்பீரமாக நிற்பதைக் கண்டு ஒரு விநாடி அதிர்ச்சியடைந்தாளானாலும் மறு விநாடி தன்னைச் சமாளித்துக்கொண்டு, தனது பிள்ளைகளில் பெரியவனான ராஜ்யவர்த்தனனை நோக்கி, "ராஜ்யா! ஜாமாதா (மாப்பிள்ளை) சித்தமாயிருக்கிறார் அரண்மனைக்கு வர; முறைப்படி அழைத்து வா" என்று கூறினாள்.

ராஜ்யவர்த்தனன் தனது தாயையும் நோக்கி கிருகவர் மனையும் நோக்கினான் சில விநாடிகள் ஏதும் பேசாமலே. "கிருகவர்மரே! தானேசுவர அரண்மனைக்கு உமது வரவு நல்வரவாகட்டும். எனது தங்கைக்கு மங்களமுண்டாகட்டும். வாருங்கள்" என்று அழைத்தான் சிறிது மௌனத்திற்குப் பிறகு.

நின்ற நிலையை விட்டு அசையாமலும், கம்பீரத்தைச் சிறிதும் கைவிடாமலும் கிருகவர்மன் அந்த மங்கள அழைப்புக்குப் பதில் கூறும் முறையில், "ராஜ்யா! எத்தனை

ஆண்டுகளாக தானேசுவரத்தில் மாப்பிள்ளைகள் புழக்கடைப் புறத்திலிருந்து அழைக்கப்படுகிறார்கள்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டாள்.

இதன் விளைவாக ராஜ்யவர்த்தனன் சிறிது சங்கடப்பட்டுப் பதில் சொல்ல இயலாமல் நின்றாலும் ஹர்ஷவர்த்தனன் பதில் கூற முற்பட்டு, "மாப்பிள்ளை அழைப்புக்கு தானேசுவரத்தில் தனி விதி கிடையாது. மாப்பிள்ளை எந்த இடத்தில் இருக்கிறாரோ அந்த இடத்திலிருந்து அழைப்பது உலக மரபு. இந்த ராஜ்யத்திலும் அப்படித்தான். மாப்பிள்ளை வெளி கிருகத்திலிருந்தால் அழைப்பு அங்கிருந்து நடக்கும். வாசலில் இருந்தால் வாசலில் இருந்து நடக்கும். பின்புறத்திலிருந்தால் பின்புறத்திலிருந்து நடைபெறும். எல்லாம் மாப்பிள்ளையின் இருப்பிடத்தைப் பொறுத்தது" என்று விளக்கம் சொன்னான்.

கிருகவர்மன் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது. "நன்று சொன்னாய் ஹர்ஷா? தானேசுவரத்தில் மாப்பிள்ளை அழைப்பு மட்டுமல்ல. எல்லாமே பின்புறத்திலிருந்துதான் நடக்கிறது" என்று சொன்னான் புன்முறுவலின் ஊடே.

ஹர்ஷன் முகத்தில் சிறிது குழப்பம் தெரிந்தது. "என்ன சொல்கிறீர்கள் கிருகவர்மரே?" என்று வினவினான் குழப்பம் குரலிலும் ஒலிக்க.

"பெண்புத்தி பின்புத்தி என்று பழமொழி இருக்கிறது" என்றான் கிருகவர்மன்.

"அதற்கும் மாப்பிள்ளை அழைப்புக்கும் என்ன சம்பந்தம்?" என்று ஹர்ஷன் வினவினான்.

"இந்த ராஜ்யத்தில் ஆண் ஆதிக்கமில்லை. பெண் ஆதிக்கம் இருக்கிறது. அதனால் எல்லாமே பின்புத்திப்படி நடக்கிறது. ஆகையால்தான் நீங்கள் என்னை மாளிகையின் பின்புறத்திலிருந்து அழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது" என்று கூறிய கிருகவர்மன் ராஜமாதாமீது கண்களை நாட்டவிட்டான்.



அவன் சொல்வது எல்லோருக்கும் தெள்ளெனப் புரிந்திருந்தாலும் அதைப்பற்றி யாரும் வாய்விட்டுப் பேசவில்லை. கிருகவர்மனே தொடர்ந்தான்: "ராஜ்ய வர்த்தனா! ஹர்ஷவர்த்தனா! தாய் சொல் மிக்க மந்திரமில்லை என்பது உண்மைதான். ஆனால் அளவுமீறி, பண்பாட்டை மீறிச் சொல்லும் சொற்களைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் தாய் ஆரம்பத்திலிருந்து எங்கள் திருமணத்தைத் தடுக்க முயன்றிருக்கிறாள். அதற்காகக் கையாளக்கூடிய அத்தனை தந்திரங்களையும் கையாண்டிருக்கிறாள். ஆனால் ராஜ்யஸ்ரீயை முன்னிட்டு நான் அவை எதையும் பொருட்படுத்தவில்லை. இப்பொழுது என்னை அவமானப்படுத்த இந்தக் கொல்லைப்புற மாப்பிள்ளை அழைப்பை ஏற்பாடு செய்திருக்கிறாள். இது என்னை மட்டும் பாதிக்குமானால் நான் இப்பொழுதே உங்களுடன் வந்துவிடுவேன். இதில் ராஜ்யஸ்ரீயின் மானமும் கலந்திருப்பதால் யோசிக்கிறேன்."

இங்கு சிறிது பேச்சை நிறுத்தி எதிரே நின்றவர்கள் மீது கண்களை ஓடவிட்ட கிருகவர்மன், "ஹர்ஷா! காந்தர்வம் க்ஷத்திரியர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறைப்படி நான் ராஜ்யஸ்ரீயை மணந்துவிட்டேன். அவளை இப்பொழுதே நான் அழைத்துக்கொண்டு கன்னோசிக்குப் போய்விட முடியும். பிறகு யாரை அவமானப்படுத்தப் போகிறீர்கள்? எந்த மாப்பிள்ளையை அழைக்கப் போகிறீர்கள்" என்று ஹர்ஷனை நோக்கிக் கேட்டாலும் முக்கியமாக ராஜமாதாவையே நோக்கினான்.

ராஜமாதா பிரமை பிடித்து நின்றாள். அவள் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. கிருகவர்மனைத் தான்

அவமானம் செய்ய நினைக்க அவன் பாடத்தைத் தனக்கே திருப்பிவிட்டதைக் கவனித்ததால் செய்வதோ பேசுவதோ என்னவென்று அறியாமல் தத்தளித்தாள். அவள் சங்கடத்தை உணர்ந்த ராஜ்யவர்த்தனன். "அம்மா, நீ போ அரண்மனைக்கு. நாங்கள் இதை முடித்துக்கொண்டு வருகிறோம்" என்று சமாதானம் சொன்னான்.

ராஜமாதா மகளை நோக்கினாள். கிருகவர்மன் கை தோளில் புதைந்து கிடக்கத் தலைகுனிந்து நின்ற ராஜ்யஸ்ரீயைச் சுட்டு விடுவதுபோல் பார்த்தாள் மகாராணி. "ராஜ்யஸ்ரீ?" என்று உஷ்ணத்துடன் அழைக்கவும் செய்தாள்.

ராஜ்யஸ்ரீ தனது தலையை லேசாக நிமிர்த்தித் தாயை நோக்கினாள். "வா என்னுடன்" என்று மகாராணி கட்டளையிட்டாள்.

ராஜ்யஸ்ரீ பதிலுக்கு கிருகவர்மனை நோக்கினாள். மகாராணியின் கோபம் அதிகப்பட்டது. "அவரை ஏன் பார்க்கிறாய்? அவர் உத்தரவு வேண்டுமா உனக்கு என்னுடன் வர?" என்று சீறினாள் மகாராணி.

ராஜ்யஸ்ரீயின் விழிகளில் லேசாகச் சினம் துளிர்த்தது. தரையை நோக்கியவண்ணம் பதில் சொன்னாள்: "அவர் சொன்னதைக் கேட்கவில்லையா அம்மா?" என்று.

"என்ன சொன்னார்?" மகாராணி கேட்டாள் குழப்பத்துடன்.

"எங்களிருவருக்கும் காந்தருவ விவாகம் நடந்துவிட்டதென்று சொல்லவில்லை?" ராஜ்யஸ்ரீ வினவினாள்.

"ஆம். சொன்னார்."

"ஆகையால் இனி அவர் எனக்குக் கணவர், அவர் உத்தரவின்றி நான் என்ன செய்ய முடியும்?"

"நீ அவர் கைப்பொம்மையா?"



"பெண்கள் நிலையே அப்படித்தானே!"

"சுதந்திரம்?"

"உன்னைப்போல் எல்லோருக்கும் இருக்காது அம்மா" என்றாள் ராஜ்யஸ்ரீ.

தானேசுவர அரண்மனையைத் தன் இஷ்டப்படி ஆட்டி வைப்பதை மகள் குறிப்பிடுகிறாளென்று புரிந்துகொண்ட மகாராணியின் வதனம் சினத்தால் சிவந்தது. கோபம் எல்லை மீறியதால் என்ன செய்கிறோமென்பதை அறியாமல் மகளை நோக்கி இரண்டி வைத்த ராஜமாதா, ராஜ்யஸ்ரீயின் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு அரண்மனையை நோக்கி வெகு விரைவாக நடந்தாள். ராஜ்யஸ்ரீயும் வேண்டா வெறுப்பாகத் தாயுடன் நடந்தாள்.

கொடி வீட்டின் முகப்பில் விடப்பட்ட மற்றவர்கள் திகைத்து நின்றனர். ஹர்ஷன் மேளக்காரர்களையும் பணி மக்களையும் நோக்கி, "ஏன் நிற்கிறீர்கள்? போங்கள் அரண்மனைக்கு. மாப்பிள்ளை அழைப்பு இன்னும் சிறிது நேரத்தில் நடக்கும் அரண்மனை வாயிலில்" என்று அறிவிக்க அவர்களும் விரைந்தனர் அரண்மனை நோக்கி.

கடைசியாக ஹர்ஷன் சொன்னான், "கிருகவர்மரே! நீர் வந்த வழியே உமது இருப்பிடம் செல்லும். இன்னும் நான்கு நாழிகைகளில் பிரும்ம முகூர்த்தம் வந்துவிடும். உங்களை அழைக்க நானும் எனது தமையனும் வருகிறோம்" என்று.

கிருகவர்மன் கொடி வீட்டு முகப்பை விட்டு நகரவில்லை. தீர்க்க சிந்தனையிலிருந்தான். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து, "ஹர்ஷவர்த்தனா! ராஜமாதாவின் எண்ணப்படி இந்தத் திருமணத்தைத் தள்ளி வைத்தாலென்ன?" என்று வினவினான்.

"முடியாது கிருகவர்மரே! எனது தந்தை முகூர்த்தத்துக்கு மற்ற அரசர்களுக்குத் திருமண அழைப்பு

அனுப்பிவிட்டார். ஏற்கனவே இரண்டொரு அரசர்கள் வந்தாகிவிட்டது. நாளை இன்னும் பலர் வருவார்கள்" என்று விளக்கம் சொன்னான் ஹர்ஷன்.

"ஹர்ஷா! அடிக்கடி இந்த முகூர்த்தம் தடைப் படுவதிலிருந்து இது நடப்பது எனக்கும் ராஜ்யஸ்ரீக்கும் நல்லதுதானா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. மனத்திலும் பயமிருக்கிறது" என்றான் கிருகவர்மன்.

"கிருகவர்மரே! உலகத்தில் நல்ல காரியங்களுக்குத் தடை ஏற்படுவது சகஜம். அதற்காக நாம் நல்லதைச் செய்யாதிருக்க முடியுமா? அதுவும் இங்கு தடுத்தது யார்? தாயார். எந்தத் தாயாவது தனது மகளின் வாழ்வுக்குக் கெடுதல் நினைப்பாளா? என் அன்னை இந்தத் திருமணத்திற்கு ஆட்சேபிக்கவில்லை. துரிதத்தைத்தான் ஆட்சேபிக்கிறாள். திருமணம் முடிந்தபிறகு அவள் உற்சாகத்தைப் பாருங்கள்" என்று சமாதானம் சொன்னான் ஹர்ஷன்.

அவன் என்ன சொல்லியும் கிருகவர்மன் மனத்தில் ஏதோ ஒரு கலக்கம் இருந்துகொண்டிருந்தது. ஆகவே பதிலேதும் சொல்லாமல் தனது புரவியைக் கொண்டுவரச் சொல்லி ஏறித் தனது இருப்பிடம் சென்றான். அங்கு அரண்மனைப் புரோகிதர் மஞ்சள் படுத்திய தேங்காய், புஷ்பமாலை, சந்தனம் முதலியவற்றுடன் சித்தமாயிருந்தார். கிருகவர்மனைப் பார்த்ததும், "உம், நீராடுங்கள். நேரமாகிறது ஜாநிவாஸத்துக்கு" என்று துரிதப்படுத்தினார்.

கிருகவர்மன் மனம் ஒரு நிலையில் இல்லாததால் அவன் பதில் கூறவில்லை. சிந்தனைவசப்பட்ட வண்ணம் சென்றான் நீராட அவன் நீராடி முடிப்பதற்கும் மங்கள வாத்தியங்கள் முழங்குவதற்கும் நேரம் சரியாயிருந்தது. சர்வாலங் காரத்துடன் இடையில் வாளைக் கட்டித் தனது கிருகத்துக்கு வெளியே வந்த கிருகவர்மன் அங்கு பட்டத்து யானை அலங்கரிக்கப்பட்டுச் சித்தமாயிருப்பதைக் கவனித்தான்.



"ஏன் புரவியில் போனாலென்ன?" என்று வினவினான் கிருகவர்மன்.

அதற்குப் புரோகிதர் பதில் சொல்லவில்லை. கூட்டத்திலிருந்த ஒருவன் பதில் சொன்னான். "இதுதான் சம்பிரதாயம்" என்று.

சொன்னவன் யாரென்பதை அறியக் குரல் வந்த திசையில் கண்ணை ஓட்டினான் கிருகவர்மன்.

கூட்டத்தின் நடுவில் நல்ல உயரமாய் நகைத்த வண்ணம் நின்றிருந்த மாளவ மன்னன் தேவகுப்தன், "அடியவன்தான். திருமண விருந்தாளி" என்றான், தலையும் வணங்கினான்.

கிருகவர்மன் முகத்தில் சந்தேகமும் சஞ்சலமும் கலந்த சாயை பரவியது. "அப்படியா!" என்ற தேவகுப்தனை நோக்கிக் கேட்ட கிருகவர்மன் யானைமீது தாவி ஏறினான். மங்கள வாத்யங்கள் முழங்கின. எதிரே கூடியிருந்த பெரும் கூட்டம், "ஜெய ஜெய மகாராஜா!" என்று வாழ்த்தொலி கிளப்பினார்கள். கிருகவர்மன் ஊர்வலம் துவங்கியது. சிறிது தூரம் சென்றதும் என்ன காரணத்தாலோ யானை இடக்குச் செய்ய ஆரம்பித்தது. பெரிதாக ஊரே அதிரும்படியாகப் பிளிறியது. அடுத்த விநாடி வெறி பிடித்துத் தானேசுவர வீதிகளில் ஓடத் தொடங்கியது.

## 25

# யானை மண்டபம்

சகுனம் இயற்கை மனிதனுக்கு அளிக்கும் ஓர் எச்சரிக்கை. பிற்கால நிகழ்ச்சிகள் எப்படியிருக்கும் என்பதற்கு முன்கூட்டிக் கை காட்டும் விதியின் கரம். இப்படிப் பலர் எண்ணுகிறார்கள். இதை நம்பாதவர்களும் உண்டு. இது அறிவுக்கு உகந்ததல்ல. சகுனம் மனித சித்தம் எழுப்பும் வீண் பிரமை என்று சிலர் வாதிக்கிறார்கள். அப்படி வாதிப்பவர்கள் கூடக் கெடுதல் சம்பவிக்கும்போது, "ஒருவேளை இது அந்தச் சகுனத்தின் விளைவாக இருக்குமோ?" என்று உள்ளூர சந்தேகப்படுகிறார்கள். எது எப்படியிருந்தாலும் சகுனத்துக்கு நாம் அறியாத மர்மமான காரணம் எதோ இருக்கிறது. இதன் விளைவாகத்தானோ என்னவோ கிருகவர்மன் பவனி வந்த யானை வெறி பிடித்துத் தானேசுவரத்தின் தெருக்களில் ஓட ஆரம்பித்தது.

அந்த வெறிபிடித்த பட்டத்து யானை வீதிகளில் பறந்தும் நின்றும் திரும்பியும் மக்களை நோக்கி சீறியும் ஓடியதால் திருமண ஊர்வலத்தைப் பார்க்க வந்த பொது மக்கள் கூட்டம் ஆங்காங்கு விரைந்து மறைந்தது. அதை எப்படியாவது அடக்கப் புரவிகளில் வந்த வீரர்கள் இருவரை யானை தனது துதிக்கையால் தூக்கிப் பக்கத்துக்



கட்டிடங்கள் மீது வீசவே மற்ற வீரர்கள் கோட்டையின் பாதுகாப்பு விடுதிகளை நோக்கிப் பறந்தனர். எங்கும் மக்கள் அரவம் அதிகமாகிச் சில இடங்களில் பீதியின் விளைவாக அலறலும் ஏற்பட்டது. இதற்கிடையே அந்த யானையை நோக்கி ஒரு ஐந்து வயதுக் குழந்தை ஓடி வந்தது. "குழந்தையை எடுங்கள் எடுங்கள்" என்ற கூக்குரல் நாலா திசையிலிருந்து வந்தாலும் யானைக்கு அருகே செல்லத் துணிவில்லாததால் குழந்தை போய்விட்டதென்றே பார்த்தவர்கள் நினைத்தார்கள். குழந்தையின் தாய் பலமாக வீறிட்டு அழுதாள். அந்தக் குழந்தையை நெறித்துவிட யானை ஒருமுறை பிளிறி, காலைத் தூக்கியது. அந்தச் சமயத்தில் குறுக்கே ஓடிய ஒரு வாலிபன் அந்தக் குழந்தையை அப்படியே அள்ளிச் சென்று வீதியின் கோடியில் விட்டு யானையை நோக்கித் திரும்பி நடந்து வந்தான். வெறிபிடித்த களிறைப் போலவே, அதன் எதிரே வந்து நின்று தனது கையிலிருந்த பிரம்பால் துதிக்கையில் நான்கு அடிகளைப் பலமாகக் கொடுத்தான்.

யானை மீண்டும் பெரிதாகப் பிளிறியது. அந்த வாலிபன் யானையை ஏதோ சைகை மூலம் கேள்வி கேட்டான். யானை துதிக்கையை நீட்டி மேலே சுட்டிக் காட்டவே கிருகவர்மனை இறங்கச் சொன்னான் அந்த வாலிபன். இப்படி யானை ஒரு நிலைக்கு வந்ததால் யானையை அடக்கிய வாலிபன் ஹர்ஷன் என்பதை உணர்ந்த மக்கள், "ஹர்ஷ மகாராஜா ஜெயவிஜயீபவ" என்று கூக்குரலிட்டார்கள்.

ஹர்ஷன் உஷ்ணமான பார்வையொன்றை மக்கள் மீது திருப்பினான். "நான் மகாராஜா அல்ல, வீணாகக் கூச்சல் போடாதீர்கள்" என்று இரைந்து சீறிவிட்டு கிருகவர்மனை யானை மீதிருந்து கீழே இறங்கச் சொல்லித் தனது கையை நீட்டினான். அதைப்பற்றி, தப்பினோம் என்று இறங்கிய கிருகவர்மன் ஹர்ஷனைத் தழுவிக் கொண்டு, "என் உயிரை

நீ இன்று காப்பாற்றினாய். சமயம் வரும்போது இதை நான் மறக்கமாட்டேன்” என்று கூறினான்.

ஹர்ஷன் கிருகவர்மனை உற்று நோக்கிவிட்டு, “நீங்கள் மணவறைக்குச் செல்லுங்கள். நான் இந்த யானையைப் பார்த்துவிட்டு வருகிறேன்” என்று கூறிப் பக்கத்திலிருந்த தனது புரவியைச் சுட்டிக் காட்டினான். அதன்மீது மங்கலத்தை முன்னிட்டு தனது தோளிலிருந்த பட்டையும் போட்டு, “செல்லுங்கள், திருமணத்திற்கு எல்லோரும் காத்திருக்கிறார்கள்” என்று துரிதப்படுத்தவே கிருகவர்மன் ஏதும் பேசாமல் ஹர்ஷனுடைய புரவிமீது ஏறிக் கொண்டான்.

ஹர்ஷன் ஒருமுறை ஊர்வலத்தைச் சேர்ந்தவர்களை நோக்கி, “மாப்பிள்ளை அழைப்பு வழக்கப்படி நடக்கட்டும். புரவியிலும் மாப்பிள்ளை வரும் பழக்கமுண்டு, க்ஷத்திரிய மரபில்” என்று கூறிவிட்டு, “யாரங்கே வாத்தியம்?” என்று வாத்தியக்காரர்களையும் மங்கல வாத்தியங்களை முழக்கவிட்டான்.

ஹர்ஷன் வாத்தியங்களை ஊத உத்தரவிட்டாலும் யானையிடமிருந்த அச்சத்தால் வாத்தியக்காரர்கள் வீதியின் மூலையிலிருந்தே வாத்தியங்களை இசைத்தார்கள். அவ்வப் பொழுது பின்னால் திரும்பிப் பார்த்து, யானை தொடரவில்லை என்பதைக் கவனித்த வண்ணம் மாப்பிள்ளையை அழைத்துச் சென்றார்கள். கிருகவர்மன் தீவிர சிந்தனையுடனும் திருமணத்தை அறவே மறந்தும் புரவியை நடத்திச் சென்றான்.

ஊர்வலக் கூட்டம் அகன்றதும் ஹர்ஷன் யானையின் துதிக்கையைப் பிடித்து ஆதரவாகத் தடவிக் கொடுத்து, “படு” என்று உத்தரவிட அது மெள்ளக் கால்களை மடித்துப் படுத்து ஹர்ஷனை ஓரக்கண்ணால் பரிதாபமாகப் பார்த்தது.



ஹர்ஷன் மிகுந்த அன்புடன் அதன் முகத்தையும் காதுகளையும் தடவிக் கொடுத்துவிட்டு மத்தகத்தைக் கவனித்தான். பிறகு வியப்பு நிரம்பிய விழிகளை மத்தகத்தில் நிலைக்கவிட்டு, “டேய்! இந்த யானைக்குப் பாகன் யார்!” என்று கேட்டுத் திரும்பினான்.

பக்கத்திலிருந்த வயோதிகன் ஒருவன், “மகாராஜா! நான்தான்” என்று அருகில் வந்தான்.

அவனிடம் யானையின் மத்தகத்தைக் காட்டிய ஹர்ஷன், “இதை நன்றாகப் பார்” என்றான்.

ஹர்ஷன் சொற்படி யானையின் மத்தகத்தைக் கவனித்த பாகன், “விசித்திரம்! விசித்திரம்! என்னால் நம்ப முடியவில்லை” என்று கூறி பிரமை பிடித்த கண்களை ஹர்ஷன்மீது திருப்பினான்.

“யானை மதம் பிடித்து ஓடவில்லை” என்று ஹர்ஷன் சுட்டிக் காட்டினான்.

“ஆம் மகாராஜா...” பாகன் பதிலில் மீண்டும் வியப்பு ஒலித்தது.

“மத்தகத்தில் மதநீர் சிறிதும் துளிர்க்கவில்லை” என்றான் ஹர்ஷன் அதன் மத்தகத்தைத் தடவிக் கொடுத்து.

“ஆம் மகாராஜா!”

“அப்படியானால் இது வெறி பிடித்து ஓடவில்லை?”

“இல்லை.”

“வேறு எதனால் ஓடியது?” என்று கேட்டான் ஹர்ஷன். மக்கள் எட்ட நின்று வேடிக்கை பார்ப்பதைக் கவனித்து, “இதை யானை மண்டபத்துக்குக் கொண்டு வா பார்ப்போம், இங்கு மக்கள் முன்பு ஆராய்ச்சி வேண்டாம்” என்று சொல்ல, பாகன் மெள்ள யானையை எழுப்பினான். அவன்

துதிக்கையைப் பற்றி உடன் நடந்து வர முன்னால் சென்ற ஹர்ஷனை யானை ஆட்டுக்குட்டி போல் பின்தொடர்ந்தது.

ஹர்ஷன் திரும்பி வீதியைக் கவனிக்காமலும், மக்களைப் பார்க்காமலும், மக்கள் போட்ட ஜெய கோஷங்களைக் காதில் வாங்காமலும், நடந்தான் தீவிர சிந்தனையுடன். அரண்மனைக்குப் பக்கத்திலிருந்த பெரிய யானைக் கொட்டடியிலிருந்த நடுமண்டபத்துக்கு ஹர்ஷனும் யானையும் பாகனும் வரிசையாகச் சென்றவுடன் மண்டபத்திலிருந்த நான்கு யானைகளுக்கு நடுவில் அதைப் படுக்க வைத்த ஹர்ஷன், யானையின் முதுகின் மீது மாப்பிள்ளை சௌகரியமாக அமரப் போடப்பட்டிருந்த கனமான பட்டுக் கம்பளியைப் பார்த்துக்கொண்டிருந்தான் சில விநாடிகள். ஏதோ ஒரு முடிவுக்கு வந்து பாகனை நோக்கி, "இந்தக் கம்பளியை யார் போட்டது இதன்மேல்?" என்று வினவினான்.

"நான்தான்."

"இது அரண்மனைக் கம்பளியா?" என்று வினவினான் ஹர்ஷன்.

"எனக்குத் தெரியாது. மகாராணி அனுப்பியதாகச் சொன்னார்கள். அதைப் பிரிக்காமல் அப்படியே போடும்படியும் உத்தரவு வந்தது. அப்படியே செய்தேன்" என்றான் பாகன்.

படுத்திருந்த யானையைப் பக்கவாட்டில் நெருங்கி, மடிந்த அதன் ஒரு காலின்மீது தனது இரு கால்களையும் வைத்து ஏறி அந்தக் கம்பளியை லேசாக எடுக்க முயன்றான். யானை ஒரு தடவை முனகவே பாகனை நோக்கிய ஹர்ஷன், நீ அந்தப் பக்கமாக வந்து கம்பளியின் இன்னொரு பகுதியை லேசாகத் தூக்கு" என்று கூற, பாகன் ஹர்ஷன் உத்தரவுப்படி கம்பளியை மறுபக்கத்திலிருந்து மெதுவாகத் தூக்கினான்.



அப்படித் தூக்கப்பட்ட கம்பளியை மடித்து வாங்கிய ஹர்ஷன் அதை யானையிடமிருந்து சற்றுத் தள்ளி இருந்த தரையில் மெதுவாக விரித்தான். விரித்து அதை மெல்ல மெல்லத் தனது கைகளை வைத்து ஆராய்ந்தான். ஓரிடத்தில் ஏதோ சுறுக்கென்று கையில் தைக்கவே, "இந்த இடத்தில் கம்பளியைச் சற்றுப் பிரி" என்றான். பாகன் பிரித்ததும் கம்பளியின் மடிப்புக்குள் வட்டமாகச் செருகப் பட்டிருந்த சுமார் ஐம்பது சின்னஞ்சிறு முட்களைக் கவனித்தான். அவன் முகத்தில் சினம் மிகவும் ஏறியது. "இது இமாலயக் காட்டு முள், தைத்தால் ரணம் லேசில் ஆறாது. இது தைத்து ரண ஜன்னியில் போய்விட்டவர்களும் உண்டு. இந்த அநீதத்தை எனது யானைக்குச் செய்தவன் எவனா யிருந்தாலும் அவனை நான் கொல்லாமல் விடமாட்டேன். எனது தங்கையின் திருமணத்தைத் தடுக்கவும் திருமண நாளன்று அவள் கணவனை அழிக்கவும் யாரோ திட்டமிட்டுச் செய்திருக்கிறான். அவன் வீரனாயிருக்க முடியாது. வீரன் இந்தமாதிரி இழிச் செயலைச் செய்ய மாட்டான்!" என்று இரைந்தே சொன்னான் பாகனிடம்.

அந்தச் சமயத்தில் அரண்மனையில் மங்கல வாத்தியங்கள் பெரிதாக முழங்கியதால் மாப்பிள்ளை அரண்மனைப் பிரவேசம் செய்துவிட்டார் என்பதை ஊகித்துக்கொண்ட ஹர்ஷன், 'இனி திருமணம் நடந்துவிடும்' என்று உள்ளுக்குள் சொல்லி ஆசுவாசப் பெருமூச்சு விட்டான். பிறகு பாகனை நோக்கி, "நான் இங்கேயே இருக்கிறேன். நீ போய் ஆசார்ய பண்டியை அழைத்து வா" என்று உத்தரவிட்டான்.

பாகன் சிறிது நின்று, "மகாராஜா!" என்று அழைத்தான்.

"என்ன?" ஹர்ஷன் குரலில் சினம் இருந்தது.

"திருமண சமயம்..."

"ஆம்."

"எல்லோரும் தங்களை மண்டபத்தில் எதிர் பார்ப்பார்கள்."

"சகோதரன் முறைக்கு எனது தமையன் இருக்கிறான்."

"இருப்பினும் தாங்கள் இல்லாததை திருமணத்திற்கு வந்திருக்கும் அரசகுலத்தார் கவனிப்பார்களே!"

ஹர்ஷன் முகத்தில் வருத்தத்தைக் காட்டினான். "நீ போய் பண்டியை அழைத்து வா" என்று சொல்லி, யானையின் முதுகிலிருந்த சிறுசிறு ரத்தத் துளிகளைத் தனது மேல்பட்டால் துடைக்க ஆரம்பித்தான்.

அதே நேரத்தில் ராஜ்யஸ்ரீயின் பாதங்களுக்கு செம்பஞ்சுப் புள்ளிகளை வைத்து அரண்மனைத் தோழிகள் நலங்கு இட்டுக் கொண்டிருந்தார்கள். ராஜ்யஸ்ரீ முகத்தில் மகிழ்ச்சி ஓரளவு இருந்தாலும் அதில் பூர்த்தியில்லை. யானையின் முதுகில் குத்திய முள் அவள் இதயத்திலும் லேசாகக் குத்தியது. அன்று கிருகவர்மனுக்கு ஏதாவது விபரீதம் நடந்திருந்தால் திருமணத்திற்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டிருக்குமே என்ற சிந்தனை அவள் மனத்தில் துன்பத்தை விளைவித்துக் கொண்டிருந்தது. அத்துடன் "நல்லவேளை! அங்கு அண்ணன் இருந்தான். இவர் பிழைத்தார். பாகனால் அடக்க முடியாத யானையை அண்ணா எப்படி அடக்கினான்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். இந்த நினைப்பின் விளைவாக சற்று தலையை நிமிர்த்தி, "அண்ணா வந்துவிட்டானா?" என்று வினவினாள் செம்பஞ்சுச் சாந்தைப் பூசிக்கொண்டிருந்த தோழியை நோக்கி.

"எந்த அண்ணா?" என்று தோழி கேட்டாள்.

"ஹர்ஷன்" என்றாள் ராஜ்யஸ்ரீ.



"வராமல் எங்கு போவார்?" என்று தோழி கேட்டாள்.

"அண்ணா பிடிவாதக்காரன், யானையைக் கவனிக்கப் போயிருப்பான்? அந்த யானை அவனுடையது. அதன்மேல் அவனுக்கு உயிர்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

அந்த சமயத்தில் அங்கு வந்த புரோகிதர், "என்ன? இன்னும் அலங்காரம் ஆகவில்லையா? முகூர்த்த வேளை நெருங்குகிறது. மாப்பிள்ளை மணையில் உட்கார்ந்து தவிக்கிறார். சீக்கிரம் ஆகட்டும்" என்று அதட்டவே தோழிகள் அலங்காரங்களைத் துரிதமாக முடிக்க முனைந்தார்கள். அலங்காரம் முடிந்து சர்வாபரண பூஷிதையாய் ரதியே நடந்து வருவதுபோல் மண மண்டபத்துக்கு வந்த ராஜ்யஸ்ரீயை விழுங்கிவிடுபவன்போல் பார்த்தான் கிருகவர்மன்.

26

# மணவறைப் படலம்

சுற்றிலுமிருந்த மன்னர்களின் கூட்டத்தின் காரணமாக ராஜ்யஸ்ரீ நாணத்துடன் நடந்து வந்து கிருகவர்மன் பக்கத்தில் அமர்ந்ததும் திருமணச் சடங்குகளை ஆஸ்தான புரோகிதர் துவங்கினார். வேத மந்திரங்கள் பல ராஜ்யங்களிலுமிருந்து வந்திருந்த புரோகிதர்களால் ஓதப்பட்டன. ஒன்றுசேர்ந்து சப்தித்த மங்கள வாத்தியங் களுடன் ராஜ்யஸ்ரீயின் கழுத்துக்கு மாலையும் கைக்குக் கங்கணமும் அணிவித்தான் கிருகவர்மன். ராஜ்யஸ்ரீ கிருகவர்மனுக்கு மாலையிட, அட்சதையும் மலர்களும் தம்பதிகள் மீது தூவப்பட்டன. இப்படி மங்கலத்வனிகள் அமர்க்களப்பட்ட சமயத்திலும் ஹர்ஷன் வரவில்லை யென்பதைக் கவனித்தாள் ராஜ்யஸ்ரீ. அதனால் மனம் வெதும்பி, "அண்ணா! என்னைவிட உனக்கு யானைதான் பெரிதா?" என்று உள்ளூர கேட்கவும் செய்தாள்.

ஆனால் அந்தத் திருமணச் சடங்குகள் முடிந்த பின்பும் ஹர்ஷன் வரவில்லை. அவன் மட்டுமல்ல காணாதது, ஆசார்ய பண்டியையும் காணோம். இருவரும் இல்லாததை மன்னரும் கவனித்தாரானாலும் அதைப் பற்றி ஏதும் கேட்கவில்லை அவர். மகாராணியின் முகத்தில் மட்டும் ஏதோ அச்சம் தெரிந்தது. பக்கத்திலிருந்த மகாராஜாவை



நோக்கிக் குனிந்து, "உங்கள் சின்னப் பிள்ளையாண்டான் எங்கே?" என்று விசாரித்தாள்.

"எனக்கெப்படித் தெரியும்?" என்றார் மகாராஜா.

"பண்டி எங்கே?" என்று மகாராணி கேட்டாள்.

"இந்த அரண்மனை வம்பெல்லாம் உனக்குத்தான் தெரியும்" என்றர் மகாராஜா. மகாராணியைத் திரும்பிப் பாராமலே.

அவர்கள் யாரைப்பற்றித் தர்க்கம் செய்தார்களோ, அந்த ஹர்ஷனும் பண்டியும் யானை மண்டபத்தில் தீவிரமாக உரையாடலில் இருந்தார்கள்.

"உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?" என்று பண்டி கேட்டார்.

"தெரியும்" என்றான் ஹர்ஷன்.

"தேவகுப்தனா இதைச் செய்தான்?" மீண்டும் தொடுத்தார் கேள்வியைப் பண்டி

"ஆம்."

"இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"அவனுக்குத் தூது அனுப்புங்கள்."

"என்ன தூது?"

"இரவு இங்கு என்னைச் சந்திக்கும்படிச் சொல்லுங்கள். அவனை இந்த யானை முன்பே வெட்டிப் போடுகிறேன்."

"அவன் நமது விருந்தாளி" என்று ஆசார்யர் சுட்டிக் காட்டினார்.

"இல்லை நமது விரோதி" என்றான் ஹர்ஷன்.

பண்டி மேற்கொண்டு ஏதும் சொல்லவில்லை. "இன்றிரவு? இதே மண்டபத்தில்?" என்று மட்டும் கேட்டார்.

"ஆம்"

"தேவகுப்தனை நானே அழைத்து வருகிறேன்." என்ற ஆசார்யர் "சரி வா. திருமண மண்டபம் செல்வோம்" என்று கூறி முன் நடந்தார். ஹர்ஷன் முகத்தில் மிகுந்த சினத்துடன் தொடர்ந்தான் ஆசார்யரை.

ராஜ்யஸ்ரீயின் திருமணம் முடிந்து தம்பதிகளுக்கு மந்திராட்சதை போடப்பட்ட பின்பு திருமண மண்டபத்துக்குள் நுழைந்த ஹர்ஷனையும் ஆசார்ய பண்டியையும் விருந்தினர்கள் அனைவருமே சந்தேகக் கண்களுடன் பார்த்தனர். மகாராணி மட்டும் அவனை அருகில் அழைத்து, "இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்!" என்று ரகசியமாக விசாரித்தாள்.

"நமது யானையொன்றுக்கு மதம் பிடித்துவிட்டது" என்று துவங்கின ஹர்ஷனை ராணி இடையே மடக்கி, "அதுதான் ஊர் பூராவும் தெரிந்த விஷயமாயிற்றே" என்றாள்.

"ஆம் அம்மா! தெரிந்த விஷயந்தான். ஆகையால் அதை அடக்கவும் கட்டவும் வேண்டாமா? மறுபடியும் அது சீறி வந்தால், தெருக்களில் ஓடினால் மக்கள் கதி என்ன ஆகும்?" என்று சமாளிக்கப் பார்த்தான் ஹர்ஷன்.

ஆனால் மிகக் கூர்மையான புத்தியை உடைய மகாராணி அதற்கெல்லாம் மசியவில்லை. "யானையைப் பார்க்கவும் அடக்கவும் நமது பாகர்கள் இல்லையா?" என்று கேட்டாள்.

ஹர்ஷனும் சளைக்கவில்லை. "தெருவில் அதைச் சமாளிக்க முடியவில்லையே பாகனால், நான்தானே ஓட வேண்டியதாயிருந்தது. இல்லாவிட்டால் இத்தனை நேரம் மாப்பிள்ளை கைகால் உடைந்து கிடப்பாரே! இத்தனை கம்பீரமாக மணையில் உட்காரமாட்டாரே?" என்று சுட்டிக் காட்டினான். "அம்மா! இந்தத் தர்க்கம் இப்பொழுது எதற்கு? பிறகு வைத்துக்கொள்வோம்" என்று கூறி ராஜ்யஸ்ரீயையும் அவள் கணவனையும் நோக்கித் திரும்பி புன்னகை செய்தான்.



தம்பதிகள் ஹர்ஷன் காலில் விழுந்து வணங்கி எழுந்தனர். ஹர்ஷனும் அட்சதையையும் புஷ்பங்களையும் அவர்கள்மீது தூவி தங்கையை நோக்கி, "ராஜ்யஸ்ரீ! தடங்கல்கள் நீங்கிவிட்டன. இனி உனக்கு சர்வமங்களம்தான்" என்று ரகசியமாகக் கூறவும் செய்தான்.

ராஜ்யஸ்ரீக்கு அவனை யானையைப் பற்றிக் கேட்க வேண்டும் போலிருந்தாலும் கேட்க அவகாசமில்லை அவளுக்கு. அவளையும் மருமகப் பிள்ளையையும் விவாக உபாத்தியாயர் மணைக்கு அழைத்து அடுத்திருந்த சில்லரைச் சடங்குகளைக் கவனிக்கலானார். அந்தச் சமயத்தில் விருந்தினர்களை விசாரிக்கும் காரணத்தை முகாந்திரமாகக் கொண்டு தேவகுப்தன் இருந்த இடத்தைத் தேடினான் ஹர்ஷன். விருந்தினர் கூட்டத்தில் தேவகுப்தனைக் காணோம். ஆகவே ஆசார்ய பண்டியை நோக்கி, "குருநாதரே! உமது சீடனை எங்கும் காணோமே?" என்று வினவினான்.

தேவகுப்தனைக் கண்டுபிடிக்க ஆசார்ய பண்டியும் யானை மண்டபத்திலிருந்து வந்தது முதலே விருந்தினர் கூட்டத்தின்மீது கண்ணைச் செலுத்தி ஆராய்ந்தாரானாலும் அவனைக் காணாததால் சிந்தனையில் இறங்கியிருந்தார். ஒருவேளை தனது விஷமத்தைப் பற்றிய உண்மை தெரிந்துவிட்டதென்ற அச்சத்தில் தேவகுப்தன் ஓடி விட்டானோ என்றும் எண்ணினார். ஆனால் தேவகுப்தன் கொடியவனே தவிர கோழையல்லவென்ற நினைப்பால் ஓடியிருக்க மாட்டான் என்றே நினைத்தார். ஆகவே ஹர்ஷன் அவனைப்பற்றிக் கேட்டதும், "ஆமாம் அவனை எங்கும் காணோம்" என்றார்.

"ஒருவேளை தனது குற்றம் புரிந்துவிட்டதால் ஓடியிருப்பானோ?" என்று வினவினான் ஹர்ஷன்.

"ஒருக்காலும் ஓடியிருக்கமாட்டான். கொடியவன்தான், கோழையல்ல" என்று திட்டமாகக் கூறினார் ஆசார்யார்.

"இன்றிரவு?"

"கண்டிப்பாய் அவனை அழைத்து வருகிறேன்."

"அகப்படாவிட்டால்?"

"அகப்பட வைக்கும் வழி இருக்கிறது."

"என்ன வழி?"

"தேவகுப்தனை வாட்போரில் கொல்ல ஒருவர் யானை மண்டபத்தில் காத்திருக்கிறார் என்று தேவகுப்தன் மெய்க்காவலரிடை வதந்தியைக் கிளப்பிவிட்டால் போதும். கண்டிப்பாக அங்கு வந்துவிடுவான்." இதைத் திட்டவட்டமாகச் சொன்னார் பண்டி.

அத்துடன் அவருடன் உரையாடலை முடித்துக் கொண்ட ஹர்ஷன் அன்று பகல் முழுவதையும் தீவிர சிந்தனையிலேயே கழித்தான். அவனுக்கு மாறாக ராஜ்யஸ்ரீ மிகுந்த உற்சாகத்திலிருந்தாள். தோழிகள் அவளுக்கும் கிருகவர்மனுக்கும் இழைத்த விளையாட்டுகளில் திளைத்துக் கிடந்தாள். கிருகவர்மன் இந்த உலகத்தில் இல்லை. சொர்க்கத்திலிருப்பதாக நினைத்தான். மெள்ள மெள்ள மாலையும் நுழைந்தது. பகலவன் மேல் திசை மலைவாயிலில் விழுந்தான். புறாக்கள் அரண்மனை மகுடப் பொங்குகளுக்குள் அடைந்து கில்கிலா சப்தங்களைக் கிளப்பின. சகல உயிர்களும் அமைதியையும் உறங்குமிடத்தையும் நாடும் வேளையும் வந்தது. ராஜ்யஸ்ரீ இரவின் ஆரம்பத்தில் பெரும் சித்ரவதைக்கு உள்ளானாள். அனங்கன் அவளை மெள்ள மெள்ள அணுகிக்கொண்டிருந்தான். கிருகவர்மனும் காய்ந்த மாடுபோல் கம்பங்கொல்லையில் விழும் நேரத்தை எதிர் பார்த்திருந்தான்.



அன்றிரவு இருவருமே அறுசுவை உண்டியை ரசிக்கவில்லை. வேண்டா வெறுப்பாக உணவைச் சிறிதே அருந்தினார்கள். இரவு ஏறியதும் ஏற்கெனவே சோதிடர் குறித்திருந்த நேரத்தில் இருவரும் மணவறைக்குள் அனுப்பப் பட்டார்கள். இருவரையும் பஞ்சணையில் இருத்தி உபாத்தியாயர் மந்திரங்களை அனாவசியமாக நீட்டி எல்லோரையும் சலிக்க வைத்து அறையிலிருந்து வெளியேறினார். பணிப்பெண்களும் நகைத்துவிட்டு ராஜ்யஸ்ரீயைக் கன்னத்தில் தட்டிக் கொடுத்துச் சென்றார்கள். கதவும் மூடப்பட்டது.

கிருகவர்மன் கட்டிலில் தனக்கெதிரே மோகனாகாரமாக உட்கார்ந்திருந்த ராஜ்யஸ்ரீயைத் தனது கண்களால் விழுங்கினான். அரண்மனைக் கொடி வீட்டில் திருட்டுத்தனமாக அவளைக் கட்டியணைத்து சரசம் செய்த அவன் மனம் ராஜ்யஸ்ரீ சொந்தமாகி அவளிடம் ஒன்றிவிடத் தயாராக உட்கார்ந்திருந்த சமயத்தில் என்ன காரணத்தாலோ அச்சமடைந்தது.

ராஜ்யஸ்ரீக்கு அச்சம் சிறிதுமில்லை. கணவனிடம் தன்னை ஒப்படைக்கத் தயாராயிருந்தும் அவன் முதல் நடவடிக்கை எடுக்காததால் அவள் நாணத்தால் குன்றி உட்கார்ந்திருந்தாள். நேரம் ஓடியும் கிருகவர்மன் எந்தவிதச் செயலிலும் ஈடுபடாமல் அப்படியே உட்கார்ந்து தன்னைப் பார்த்துக்கொண்டே இருந்ததால் ராஜ்யஸ்ரீ மெதுவாகப் பஞ்சணையிலிருந்து இறங்கி அறைக் கோடிக்குச் சென்று கதவை மெதுவாகத் தாளிட்டுத் திரும்பி நின்றாள் கதவருகிலேயே.

கிருகவர்மன் கதவருகில் மோகினியைத் தோற்கடிக்கும் எழிலுடன் நின்ற ராஜ்யஸ்ரீயை ஏறெடுத்து நோக்கினான். அவன் இதழ்களில் முறுவல் இருந்தது. கண்கள் நிலத்தை நோக்கிக் கொண்டிருந்தன. ஆனால் மேலாடை நெகிழ்ந்து

மார்பக மொட்டொன்று மூர்க்கத்தனத்துடன் எழுந்து அவனை நோக்கி முறைத்துக்கொண்டிருந்தது. இடை ஒரு புறமாக வளைந்து நாட்டிய பாணியில் உடலை நிற்க வைத்தது. சற்று நேரத்திற் கொருமுறை அவள் தொடைகள் இணைந்து இணைந்து அகன்றுகொண்டிருந்தன.

இந்த அவள் நிலையைக் கண்டதால் உணர்ச்சி வேகத்துக்கு இலக்கான கிருகவர்மன் கட்டிலிலிருந்து இறங்கி அவளை நோக்கி வந்தான். கதவை அடைந்து அவள் தோள்களைப் பற்றி அங்கேயே அவளை அணைத்துக் கொண்டான். அவள் உடலைத் தனது உடலால் கதவை நோக்கி அழுத்தவும் செய்தான்.

ராஜ்யஸ்ரீ உணர்ச்சி மிகுதியால் கண்களை மூடிக் கொண்டாள். கிருகவர்மன் முரட்டுத்தனமாகத் தன்னைக் கதவின்மீது சாய்த்துவிட்டதிலிருந்து நைடதத்தின் மணவறைப் படலம் துவங்கிவிட்டதை உணர்ந்தாள். நிஷதராஜன் கதையை ஹர்ஷன் காவியமாக எழுத வேண்டுமென்று பலமுறை சொல்லியிருப்பதையும் நினைத்தாள். எழுதினால் தமையந்தியின் காதல் கதை பெரும் காமசாஸ்திரமாக விரியும் என்பதை உணர்ந்திருந்ததால் அதைப்பற்றிய விவரங்களை கற்பனை செய்ததால் அவளும் மலரைப்போல் நன்றாக விகசித்தாள்.

அந்தச் சமயத்தில் கிருகவர்மன் அவளை அப்படியே தூக்கிக்கொண்டு கட்டிலை நோக்கி நடந்து பஞ்சணையில் கிடத்தினான். அவள் ஏதும் பேசாமல் மல்லாந்த சிலையெனக் கிடந்தாள்.

27

## உணர்ச்சிக் காற்று

கிருகவர்மன் அவளது பக்கத்தில் உட்கார்ந்து நீண்ட நேரம் அவளை உற்று நோக்கினான். அவள் உடலில் மறைந்தும் மறையாமலுமிருந்த எழிலம்சங்கள் அவனுக்கு உன்மத்தத்தை ஊட்டியதால் அவன் மெதுவாகக் குனிந்து அவள் இதழ்களைப் பருகினான். அவள் கைகள் எந்த அலுவலிலும் ஈடுபடவில்லை. கட்டையெனக் கிடந்தன கட்டிலில். அவற்றுக்கும் உயிருண்டாக்க கிருகவர்மன் குனிந்து அவள் மார்புமீது முகத்தை வைத்தான். வலது கை இடையை அழுத்திப் பிற்புறத்தில் சென்று முன்னும் வந்தது.

அது ஏதோ விஷமம் செய்வதை உணர்ந்தாள் ராஜ்யஸ்ரீ. ஆனால் அவள் எந்தவிதச் செயலிலும் ஈடுபடவில்லை. செயல்படுவது ஆண் மகன் கடமை என்று உள்ளூர சொல்லிக் கொண்டாள். அடுத்து தனது ஆடையின் இடை முடிச்சு லேசாக அவிழ்க்கப்படுவதை உணர்ந்தாள். 'உம்!' என்று ஆட்சேபணை எச்சரிக்கையைக் கிளப்பினாள் ராஜ்யஸ்ரீ. சட்டென்று ஒருக்களித்துத் திரும்பிப் படுத்தாள். ஆனால் அவன் வலுவான கை வீணையின் உறை உருவப்படுவதுபோல் அவள் சேலை உருவப்பட்டது. இசை வித்வானின் விரல்கள் தந்திகளை மீட்டி ஸ்வரங்களைக் கிளப்ப முயன்றன. உறை கழற்றிய வீணையைப் போல் கிடந்தாள் ராஜ்யஸ்ரீ.

அதே சமயத்தில் யானை மண்டபத்தில் ஹர்ஷனும் தனது வாளை உறையிலிருந்து எடுத்தான். எதிரே நின்ற தேவகுப்தனை நோக்கிச் சொன்னான். "தேவகுப்தா! இன்று உன்னைக் கொல்ல முடிவு செய்துவிட்டேன். பட்டத்து யானைக்கு நீ செய்த தீங்கு எங்கள் பட்டத்துக்கே செய்யப்பட்டதைப் போன்றது. ஆகையால் வாளை உருவு" என்றான்.

தேவகுப்தன் வாளை உருவவில்லை. "ஹர்ஷா! நீ சிறுவன். உன்னைக் கொன்றால் எனக்கு அபவாதம் வரும். உன் அண்ணனை அழைத்து வா போரிடுவோம்" என்றான்.

"என் வயதை உத்தேசித்து நீ கனிவு காட்டத் தேவையில்லை. உருவு வாளை" என்றான் ஹர்ஷன்.

அப்பொழுதும் தேவகுப்தன் வாளாவிருந்ததால் "தேவகுப்தா! இன்னும் ஒருமுறை சொல்கிறேன். உருவு வாளை. இல்லையேல் நீ சித்ரவதைக்கு உள்ளாக்கிய யானை அதோ இருக்கிறது. யானை பகை உனக்குத் தெரியும். இப்பொழுது அதை அவிழ்த்து விட்டால் நீ பிண்டமாகி விடுவாய். அதை அவிழ்த்துவிடப் பாகன் சித்தமாயிருக்கிறான்" என்று அறிவித்தான்.

வேறு வழியின்றி தேவகுப்தன் வாளை உருவினான். வாளுடன் வாள் மோதியது யானை மண்டபத்தில். மோதின. இழைந்தன. பிரிந்தன. மீண்டும் ஒன்றை யொன்றை அடித்தன. இருவரின் இணையிலாப் போர் நடந்தன மிக மும்முரமாக.

யானை மண்டபத்தில் நடந்த உக்கிரப் போரைப் போலத்தான் இருந்தது ராஜ்யஸ்ரீயின் மணவறைப் போரும். உக்கிரம் பெரிதும் விளையாடியது அங்கே.

தானேசுவர அரண்மனையில் யானை மண்டபத்தில் எதிரும் புதிருமாக நின்று வாளை உருவிய ஹர்ஷனும் தேவகுப்தனும் உடனடியாகப் போரில் இறங்கவில்லை யென்றால் அதற்குக் காரணம் ஹர்ஷனல்ல. வாளை உருவிய



பிறகும் தேவகுப்தன் ஏதோ சிந்தனையிலிருப்பதைக் கண்ட ஹர்ஷன், "மாளவ பூபதி! நாம் இருவரும் அரண்மனை ஓவியர், ஓவியம் தீட்ட வாளை உருவிக்கொண்டு நிற்கவில்லை" என்று நினைவூட்டியும் தேவகுப்தன் வாளைத் தூக்கினானில்லை. அவன் மனதில் ஏதோ ஆழமான சிந்தனை உருவாகிக்கொண்டிருந்தது. இந்த வாள் போரில், தான் தோல்வியடைந்தால் உலகம் தன்னைப் பார்த்து நகைக்கும் என்பதை தேவகுப்தன் சந்தேகமற உணர்ந்திருந் தான். யானை மண்டபத்தின் இந்தச் சண்டையில் ரகசியம் அதிகமில்லையென்பதையும் அவன் புரிந்துகொண்டான். அந்த இரவில் தன்னைச் சந்திக்க யானை மண்டபத்தில் ஒரு வீரன் காத்திருப்பதாக பண்டி யாரிடமோ சொன்னதாகத் தனது மெய்க்காவலரில் ஒருவன் கொண்டு வந்த செய்தியைக் கேட்டு அது யாராயிருக்கும் என்பதை முதலில் புரிந்து கொள்ளவில்லை. கிருகவர்மனை யானை மீதிருந்து தள்ளத் தான் செய்த சதி யாருக்கும் தெரிந்திருக்கக் காரணமில்லை யென்று முதலில் நினைத்தாலும், பிறகு அதை அடக்கி ஓட்டிக்கொண்டுபோன ஹர்ஷன் உண்மையைக் கண்டுபிடித்திருப்பானென்று தீர்மானம் செய்து கொண்டானாதலாலும், ஹர்ஷன் சிறுவனாதலால் தன்னைப் போருக்கு அழைப்பவன் ராஜ்யவர்த்தனனாகத் தானிருக்க வேண்டுமென்றும் முடிவுக்கு வந்து அவனைச் சந்திக்கவே யானை மண்டபம் வந்தான் தேவகுப்தன். ஆனால் ஹர்ஷன் காத்திருந்ததைக் கண்டதும் பெரும் வியப்புக்கே உள்ளானான்.

நல்ல உறுதியான கைகளுடனும் பால் முகத்துடனும் காட்சியளித்த ஹர்ஷனைப் பார்த்ததும் இவனைக் கொன்று விட்டால், தான் தானேசுவரத்திலிருந்து தப்பிச் செல்வது குதிரைக்கொம்பு என்று நினைத்தான். ஆகவே எட்ட நின்ற பண்டியை நோக்கி, "ஆசார்யரே! இந்தச் சிறுவனுடன் நான் போரிட்டு இவன் மடிந்தால் என் கதி என்ன? இந்த

நகரிலேயே தூக்கிலிடப்படுவேனென்பது உமக்குத் தெரியாதா?" என்று வினவினான்.

பண்டியின் வீர முகத்தில் இகழ்ச்சிக்களை தாண்டவமாடியது. "தேவகுப்தா! நீ இன்று தானேசுவர ராஜ குடும்பத்துக்குப் பெரும் நாசத்தையும் அவமானத்தையும் விளைவிக்க முயன்றாய். அதை நீதி மண்டபத்தில் விசாரித்தால் உன்னைத் தூக்கில் போடவோ, கழுவில் ஏற்றவோ தீர்ப்பு நிச்சயம் கிடைக்கும். அதுதான் உனது துரோகத்துக்குத் தகுந்த தண்டனையும்கூட. ஆனால் அந்த விசாரணையில் அரச குமாரியின் பெயர் அனாவசியமாக அடிபடும். அதை ஹர்ஷன் விரும்பவில்லை. வீரனான உனக்கு வீர மரணத்தை அளிக்க விரும்புகிறான்." என்று கூறினார் ஆசார்யர் இகழ்ச்சி ஒலித்த குரலில்.

"நான் தோற்றால்?" என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினான் தேவகுப்தன்.

"இந்த வாட்போர் தர்மமாக நடந்ததென்றும், உன்மீது குற்றமில்லையென்றும் கூறி உன்னை ஊருக்கு அனுப்புவார் ஆசார்யர்" என்று ஹர்ஷன் சொன்னான்.

அதற்குப் பின்பும் அவன் யோசிக்கவே யானையை அவிழ்த்துவிட்டு அவனைப் பிண்டமாக அடித்துவிடுவதாக மிரட்டவே வேறு வழியின்றி வாளைச் சுழற்றினான் தேவகுப்தன். வேகமாகத் தலைக்குமேல் இறங்கிய அந்த வாளைத் தனது வாளினால் தடுத்த ஹர்ஷன் எதிரியின் வாளை ஒருமுறை சுழற்றிவிட்டான். அப்படி அந்த வாள் சுழற்றப்பட்டதிலிருந்துதான் புரிந்துகொண்டான் தேவகுப்தன், தான் போரிடுபவன் பார்ப்பதற்குச் சிறியவனே தவிர அசுர பலம் கொண்டவன் என்பதை. வாள் தடுக்கப்பட்ட வேகத்திலிருந்து ஹர்ஷன் பலமும், அதை அவன் சுழற்றிய முறையிலிருந்து அவன் வாட்போர் நுணுக்கமும் தேவகுப்தனுக்குத் தெரிந்துவிடவே, 'தனது எதிரி சிறுவன் உருவத்திலிருக்கும் சண்டவிக்கிரமன் என்ற முடிவுக்கு வந்து தீவிரமாகப் போரில் இறங்கினான்.



அந்தப் போரைக் கண்டு ஆசார்ய பண்டி மிகவும் திருப்தியடைந்தார். தான் போதித்த சாஸ்திர முறைகளை இரு சீடர்களும் நன்றாக அறிந்திருப்பதைக் கண்டதால் தாம் அளித்த பயிற்சி வீண் போகவில்லை என்பதையும் உணர்ந்து பெருமிதமடைந்தார். தேவகுப்தன் துவங்கிய போர் முறையில் ஓரளவு அதர்மம் இருப்பதும் அவருக்குத் தெரிந்தது. ஏதோ பேச்சுக் கொடுத்ததிலிருந்து எந்தவித முன்னெச்சரிப்பு மில்லாமல் திடீரென தேவகுப்தன் வாளை உயர்த்தி ஹர்ஷன் தலையில் இறக்கிவிட முயன்றது அதர்மம் என்று நினைத்தார். ஆனால் ஹர்ஷன் அந்த வாள் இறங்குமென்பதை முன்னதாகவே தீர்மானித்து அதைத் தனது வாளால் தடுத்துவிட்டதைப் பார்த்ததும் அவனை வாட் போரில் வெல்லுவது பிரம்மப் பிரயத்தனம் என்பதையும் உணர்ந்த பண்டி, எந்த அதர்மத்தையும், தர்மம் தடுக்குமென்பதை உணர்ந்ததால் மனச்சாந்தியும் அடைந்தார்.

அவர் இவ்வித சிந்தனையில் திளைத்திருந்த சமயத்தில் தேவகுப்தன் ஹர்ஷன் போர் தீவிரமாகிக் கொண்டிருந்தது. ஹர்ஷனுடைய வாளின் தற்காப்பை உடைத்து அவன் இதயத்தை ஊடுருவ தேவகுப்தன் கையாண்ட தந்திரங்கள் அனைத்தும் பயனற்றவையாயின. அவன் வாள் புகுந்த ஒவ்வோர் இடத்திலும் அது ஹர்ஷனது வாளால் தடுக்கப்பட்டது. சில சமயங்களில் பக்கவாட்டில் திருப்பப்பட்டது. ஆனால் அதைச் சுழற்ற முயலவில்லை ஹர்ஷன். அதன் காரணத்தை தேவகுப்தன் புரிந்து கொண்டான். தன்னை ஆயுதமற்றவனாக்கினால் ஹர்ஷன் நிராயுதபாணியைக் கொல்ல முடியாதாகையால் வாளை நிறுத்தியே தன்னைக் கொல்ல முயலுகிறான் என்று

தீர்மானித்தான். ஆகவே போரை மும்முரமாக்கி வாளை வேகமாகப் பாய்ச்சியும் இழுத்தும் முற்பட்டான்.

ஹர்ஷன் இருந்த இடத்தை விட்டு நகரவுமில்லை, முன்னேறவும் முயற்சிக்கவில்லை. நின்ற இடத்திலேயே போரிட்டான். சிறிதுநேரம் தற்காப்புப் போரையே நடத்திய ஹர்ஷன் எதிரியின் கை சிறிது சளைத்த சமயத்தில் தனது வாள் வீச்சின் வேகத்தை அதிகப்படுத்தினான். அவன் கையின் பலம் முழுவதும் வாளில் இறங்கியிருக்க வேண்டும். அதன் தாக்குதலுக்கு முன்பு நிற்க முடியாத தேவகுப்தன் முதன் முதலாகத் தனது வாட்போரின் திறமையில் சந்தேகம் கெண்டான். "இத்தனை சிறுவனுக்கு எங்கிருந்து யானையின் பலம் வந்தது?" என்று தன்னைக் கேட்டுக்கொள்ளவும் செய்தான். 'இனி எதிரியைச் சாமான்யமாக எடை போடுவது தவறு' என்று எண்ணி போரை வெகு எச்சரிக்கையுடன் நடத்தினான்.

அவன் வாளும் அதன் முழு பலத்துடன் தாக்கியது. வாட்களைப் பல கோணங்களில் திருப்பி ஹர்ஷன் கழுத்தை குறி வைத்து ஊடுருவ முனைந்தான். ஆனால் அவன் ஒவ்வோர் அடியையும் சமாளித்த ஹர்ஷன் காலம் விரயமாவதைக் கண்டு, "தேவகுப்தா! நாம் விளையாட வரவில்லை. போரிட வந்திருக்கிறோம். இன்று இரண்டிலொருவர் இந்த மண்டபத்தில் முடிந்துவிட வேண்டும்" என்று அமைதிபோல் ஒலித்த சீற்றச் சொற்களைக் கொட்டி முன்னேறி வாளை இயக்கினான்.

அவன் வாள் மெள்ள மெள்ளத் தனது வாளின் தற்காப்பை உடைப்பதைக் கண்டு சிறிது அச்சமே அடைந்தான் தேவகுப்தன். சில நாட்களுக்கு முன்பு அரண்மனைப் பயிற்சி மண்டபத்தில் தன்னைத் தோற்கடித்த ராஜ்யஸ்ரீயைப் பழிவாங்கும் எண்ணத்துடனேயே கிருகவர்மன் ஊர்வலத்தை உடைக்க முயன்ற தேவகுப்தன்,



அந்தத் திட்டம் நிறைவேறாதது மட்டுமின்றி, தானும் ஹர்ஷனிடம் சிக்கிக்கொண்டதை எண்ணி அச்சத்தின் உச்சியை அடைந்தான். ஆகவே வாட்போரில் தனக்குத் தெரிந்த தந்திரங்களையெல்லாம் கையாண்டான். ஆனால் ஹர்ஷன் தனது வாளை நீக்கி நீக்கி முன்னேறுவதையும், வாளைத் தன் இதயத்தின்மீது பாய்ச்சிவிட அகப்பட்ட சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தாததையும் கண்டு தேவகுப்தன் பூனை எலியுடன் விளையாடுவதைப்போல் தன்னிடம் விளையாடுகிறான் ஹர்ஷன் என்பதை அறிந்து கொண்டதால் வாளை உயர்த்திக்கொண்டு ஹர்ஷன்மீது பாய்ந்தான்.

அந்த வீச்சுதான் அந்த வாளின் கடைசி வீச்சு. திடீரென்று அவன் வாள் எதிரியின் வாளால் திசை திருப்பப்பட்டது. அடுத்து கண்ணிமைக்கும் நேரத்தில் எதிரியின் வாள் தனது நெற்றியின் குறுக்கே பலமாகக் கீறிவிட்டதை உணர்ந்த தேவகுப்தன் ஹர்ஷன் வாள் திறனைக் கண்டு பிரமித்தான். அந்தச் சமயத்தில் அவன் வாள் ஹர்ஷன் வாளால் சுழற்றி எறியப்பட்டது. அப்படிச் சுழன்று பறந்த வாள் மண்டபத்தில் விழுந்து ஒலிகளைக் கிளப்புமுன் அந்த வாளின் பிடியைத் தனது இடது கையால் பிடித்த ஹர்ஷன் இரு வாட்களையும் ஏந்தி தேவகுப்தனை நோக்கினான்.

தேவகுப்தன் நெற்றிக் காயம் சிறிது பலமாகவே இருந்ததால் அதிலிருந்து வந்துகொண்டிருந்த குருதி அவன் கண்களில் வழிந்து கண்களை மறைக்க முற்பட்டது. அதனால் கண்களைத் துடைத்துக்கொள்ள முயன்ற தேவகுப்தனை அணுகி ஆசார்யரே தமது அங்கியால் அவன் குருதியைத் துடைத்தார். "இத்துடன் இந்தப் போர் முடிகிறது" என்றும் அறிவித்தார்.

28

# கதையும் காலமும்

அந்த அறிவிப்புக்கு இரு எதிரிகளும் பதில் சொல்ல வில்லை. தேவகுப்தன் தான் அடைந்த தோல்வியால் தனக்கு எத்தனை அபவாதம் நேரிடுமென்பதை உணர்ந்ததால் தலைகுனிந்து நின்றான். உள்ளே எழுந்த உணர்ச்சிகளின் விளைவாக அவன் ஆசார்ய பண்டி தனது ரத்தத்தைத் துடைக்க முயன்றதைத் தடுக்கவில்லை. உள்ளூர அவமானத்தால் குன்றிக்கொண்டிருந்த தேவகுப்தன், "ஹர்ஷா! நீ மகாவீரன். ஒரு காலத்தில் இந்த பாரதத்தை ஆள்வாய்" என்றான்.

"தேவகுப்தா! நீயும் மகாவீரன். ஈனச்செயல்களில் புகாதிருந்தால் உன்னை இந்த உலகம் புகழும் நிலைக்கு நீ வந்திருப்பாய். இந்தா உனது வாள்" என்று வாளை நீட்டினான் எதிரியிடம்.

அதைப் பெற்றுக்கொள்ளவில்லை தேவகுப்தன். "அது இனி எனது வாளில்லை. உனது வாள். நீ போரில் வென்றதற்கு தேவகுப்தன் காணிக்கை வைத்துக்கொள்" என்று கூறிவிட்டு வெளியே செல்லத் திரும்பினான். திரும்பியவன், சட்டென்று ஒரு விநாடி நின்று, "ஆசார்யரே! போக உத்தரவா?" என்று கேட்கவும் செய்தான்.



அவன் முகத்தைத் துடைத்ததால் கறைப்பட்ட அங்கியுடன் நின்றுகொண்டிருந்த ஆசார்ய பண்டி, "போய் வா தேவகுப்தா. இனிமேல் இன்று செய்த மாதிரி ஈனச்செயல்களில் ஈடுபடாதே. எனது சீடர்களிடம் கண்ணியத்துடன் இணைந்த வீரத்தை நான் எதிர் பார்க்கிறேன்" என்று சொன்னார்.

அதற்குத் தலையசைத்துவிட்டு யானை மண்டபத்திலிருந்து வெளியேறினான் தேவகுப்தன். அவன் நடையில் தளர்ச்சி யிருந்ததையும் தலை குனிந்திருந்ததையும், ஆசார்யர் துடைத்த பின்பும் குருதி ஆங்காங்கு சொட்டியதையும் கவனித்த ஹர்ஷன், "ஆசார்யரே! என் தங்கையின் திருமண தினத்தில் குங்குமக் கறையும் செவ்விய ஆலத்தி நீரின் கறையும் பட வேண்டும். அதற்குப் பதில் இங்கு ரத்தக்கறை பட்டிருக்கிறது" என்றான் துக்கத்துடன்.

ஆசார்ய பண்டி அவனை நெருங்கி வந்து அவன் தோள்மீது கை வைத்தார். ஆதரவுடனும், அன்புடனும் தோளை இறுகப் பிடித்தவண்ணம் சொன்னார், "ரத்தம் காண்பது க்ஷத்திரியனின் தர்மம். அவனுக்கு ஆலத்தி நீர் அதுதான். குருதியைக் கண்டு வீரன் கலங்கக்கூடாது. இன்று நீ மகத்தான காரியத்தைச் சாதித்திருக்கிறாய். உன் தங்கையின் திருமண அபசகுனத்தைத் துடைத்துவிட்டாய். ரத்தத்தால் துடைத்தாலும் அது வரவேற்கத் தக்கதுதான்" என்று.

ஹர்ஷன் தலையை இருமுறை அசைத்தான் ஒப்புக் கொண்டதற்கு அடையாளமாக. ராஜ்யஸ்ரீயின் திருமணத்தில் பல அபசகுனங்கள் தொடர்ந்து ஏற்பட்டதை நினைத்து, "அவற்றுக்கெல்லாம் இது உச்சகட்டம்" என்று எண்ணினான். ஆகவே சமாதானமற்ற, மிகவும் கலங்கிய சித்தத்துடன் பட்டத்து யானையை நோக்கி நடந்தான். அதனருகில் உட்கார்ந்து அதன் தலையைத் தடவினான். அது தன் துதிக்கையை எடுத்து மெள்ள ஹர்ஷன் உடலைத்

தடவியது. பெருமூச்சு விட்டான் ஹர்ஷன் யானையைத் தடவிக்கொடுத்த வண்ணம்.

அது நடுநிசி நேரம். அந்த நேரத்தில் அரண்மனை மணவறையிலும் மாப்பிடியொன்று தனது துதிக்கை போன்ற காலை எடுத்து, மத வேழத்தின்மீது போட்டு இழுத்தது. அங்கும் பெருமூச்சு! உணர்ச்சி வெள்ளத்தின் உற்சாகக் காற்று அது!

ராஜ்யஸ்ரீயின் திருமணத்தில் ஏற்பட்ட பல அபசகுனங்களை நினைத்து இதயத்தில் துன்பச் சுமையுடன் ஹர்ஷன் யானை மண்டபத்தில் இருந்த சமயத்தில் அரண்மனை மணவறையில் ராஜ்யஸ்ரீ தனது காலால் கிருகவர்மன் காலை வளைத்தாள். இன்பம் இதயத்தில் பொங்கி வழிய கிருகவர்மன் காலும் அவள் காலுக்கு ஈடு கொடுத்து இணைந்து இழைந்தது. அந்தச் சமயத்தில் கிருகவர்மன் தனது திருமண வைபோகத்தை யெல்லாம் நினைத்து இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்து கிடந்தான். ‘எத்தனை நாட்டு அரசர்கள் வந்திருந்தார்கள்! சிற்றரசர்களின் பரிசுகள் எத்தனை! அவர்கள் ராணிகள் ராஜ்யஸ்ரீக்கு அளித்த வாழ்த்துக் காணிக்கைகள் எத்தனை விதம்! எத்தனை அருமை!’ என்றெல்லாம் எண்ணத்தை ஓட்டினான். அதன் விளைவாகப் பஞ்சணையில் பக்கத்தில் கிடந்த அழகு உடலை தனது இரு கைகளாலும் அள்ளினான். இத்தகைய ஒரு பரிசுக்குத் தான் தகுதியா என்று நினைத்து, “இல்லை! யாருமே தகுதியில்லை. இது எனக்குக் கிடைத்தது தகுதியாலல்ல. அதிர்ஷ்டத்தால்” என்றும் உள்ளூர சொல்லியும் கொண்டான்.

இரு கைகளாலும் வாரி எடுத்த ராஜ்யஸ்ரீயின் பூவுடல் அவன் உடல்மீது கிடந்து இழைந்தது. கைகள் அவன் உடலை இறுக்கின ஒருமுறை. பிறகு அகன்று அவளைத் துழாவ முற்பட்டன. இவளை நாடிச் செல்ல எத்தனை



அழகாக விடை கொடுத்தார் புரோஹிதரான கம்பீரர் என்று நினைத்து அந்தக் காட்சியை அவள் தன்மீது கிடந்த சமயத்தில் அவள் காதில் ஓதினான். அந்த விவரங்களை ‘ஹர்ஷ சரித்திரம்’ எழுதிய பாணபட்டன் மிகச் சிறப்பாகக் கூறுகிறான்:

“வைதீகச் சடங்குகள் முடிந்ததும் பிராம்மணனான கம்பீரன் எழுந்து கிருகவர்மனை நோக்கி, ‘மகனே! உன்னை அடைந்ததால் ராஜ்யஸ்ரீ இரு பெரிய வம்சங்களை, அதாவது புஷ்பபூதியின் வம்சம், முகாரவம்சம் இரண்டையும் இணைத்து விட்டாள்” என்று சொன்னான். அப்படி அவன் சொல்லிக் கொண்டிருக்கையில் இருநாட்டு சோதிடர்களும் மன்னனை அணுகி, ‘மகாராஜா! முகூர்த்த நேரம் அணுகிவிட்டது. மருமகன் பெண்ணின் மணவறைக்குச் செல்லட்டும்’ என்று கூறினார்கள். மன்னனும் அதற்குச் சிரம் அசைத்து கிருகவர்மனை எழுந்திருக்க உத்தரவு கொடுக்கவே கிருகவர்மன் அந்தப்புரத்துக்குள் நுழைந்தான். அங்கு மணவறையில் பல சேடிகள் படை சூழச் செந்நிற முக்காடு போர்த்தி வைர வைடூரியங்களை அணிந்து நின்றிருந்த தனது மனையாளைக் கண்டான். அங்கு வந்த புரோகிதர் மணவறை மந்திரங்களை ஓதிய பிறகு வெளியேறினார். மணமகனும் மனையாளின் கையைப் பற்றி அஸ்மாரோகணம் (பஞ்சணையில் ஏறுதல்) செய்தான்.

அந்த மணவறை அற்புதமாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. அதன் நுழைவாயிலின் (வாஸகிருகம்) இருபுறங்களிலும் ரதி, ப்ரீதி இவர்கள் உருவங்கள் தீட்டப்பட்டிருந்தன. மங்கள தீபங்கள் மணவறைக்குள் ஜொலித்தன. பஞ்சணை ஒரு வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டிருந்தது. தலைமாட்டில் ஒரு தங்கப் பாத்திரத்தில் குடிநீர் வைக்கப்பட்டிருந்தது. தலைமாட்டில் வெள்ளி ஜாடியொன்றில் தாமரை மலர்கள் விரித்து வைக்கப்பட்டிருந்தன.

சிற்றரசர்களின் ராணிகள் கொடுத்த தங்கப்பேழைகளில் வெற்றிலை பாக்கு முதலியன வைக்கப்பட்டிருந்தன. போகப் பொருள்கள் குறைவின்றி இருந்தன. மீன் வடிவுள்ள 'ஸபாருகா' பேழையில் மெல்லியதாகச் சீவப்பட்ட பாக்கு இருந்தது. அறையின் சுவர்களெங்கும் அலங்காரக் கண்ணாடிகள் மாட்டப் பட்டிருந்தன. அவற்றில் மணமகளின் அழகிய உருவத்தின் பிரதிபிம்பங்கள் தெரிந்தன. அத்தனை கண்ணாடிகளின் காரணமாக அந்த மணவறை கண்ணாடி அறையாகவே காட்சியளித்தது. அதில் பிரதிபலித்த சில முகங்கள் இடுக்கு வழியாக மணவறை விசேஷங்களைக் கவனிக்கும் தேவ ஸ்திரீகளைப்போலத் தெரிந்தன."

இது பாணபட்டன் வர்ணனை. இத்தகைய சிறப்பு வாய்ந்த மணவறைப் பஞ்சணையில் தனது மார்புமீது கிடந்த ராஜ்யஸ்ரீயைச் சுற்றிலுமிருந்த கண்ணாடிகளில் பல கோணங்களிலும் பார்த்த கிருகவர்மன் உணர்ச்சிக் கொந்தளிப்பில் சிக்கித் தவித்தான்.

ராஜ்யஸ்ரீ தனது கால்மீது அவன் காலைப் போட்டு வளைத்ததைக் காட்டியது ஒரு கண்ணாடி. இன்னொரு கண்ணாடி தான் அவளைத் தூக்கி மார்பில் இறுக்கிக் கொண்ட நிலையைக் காட்டியது. இறுக்கியதால் தளர்ந்துவிட்ட அவள் கஞ்சுகத்தையும், கலைந்துவிட்ட ஆடையையும் மற்றுமொரு கண்ணாடியில் பார்த்த கிருகவர்மன், "ராஜ்யஸ்ரீ" என்று மெள்ள அழைத்தான்.

"உம்" என்று முனகி அவள் இழைந்தாளே தவிர பேசவில்லை. "இப்படிப் பார் ராஜ்யஸ்ரீ. அதோ அந்தக் கண்ணாடியில் என்ன அழகாயிருக்கிறாய் நீ" என்று அழைத்தான் அவளை.

அவள் அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு கண்களை இறுக மூடிக்கொண்டாள். அவன் விடவில்லை.



அவள் தலையைத் தூக்க முயன்று, "அடி ராஜ்யஸ்ரீ! இப்படிப் பார்க்க மாட்டாய்?" என்று கெஞ்சினான்.

"ஊஹூம். எனக்கு வேண்டாம்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

"எனக்கு?" என்ற கிருகவர்மன் தனது இதழ்களை அவள் கழுத்தில் புதைத்தான்.

அவன் தலை அவள் கழுத்தில் மறைந்து கிடந்ததால் மெள்ளக் கண்களை லேசாக விழித்த ராஜ்யஸ்ரீ எட்ட சுவரில் இருந்த கண்ணாடியில் தனது நிலையைப் பார்த்தாள். அதனால் உணர்ச்சி மிகுதியால் பெருமூச்சு விட்டாள். அதன் விளைவாக கிருகவர்மன் தலையைத் தூக்கியதும் அவனை சுவரைப் பார்க்கவிடாமல் அவன் தலையைத் தனது மார்பில் அழுத்திக் கொண்டாள்.

அவள் பணைத்த மார்பில் தலையைப் புரட்டிய கிருகவர்மன், "ராஜ்யஸ்ரீ! உன்னை எத்தனை குறைவாக எடை போட்டுவிட்டாள் உன் அன்னை!" என்று வினவினான்.

அவளும் பேச்சுக் கொடுத்தாள் உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ள. "என் அன்னையா!" என்று வினவினாள்.

"ஆம்! உன்னை ஒன்றுமறியாத குழந்தை என்று நினைத்தாள்" என்ற கிருகவர்மன், "நீயா, குழந்தை?" என்றும் கேட்டான்.

"இல்லாமலென்ன?" என்று அவள் அவன் காதில் ரகசியம் சொன்னாள்.

"குழந்தை இப்படித்தான் காலை வளைக்குமா?" என்று அவன் அவள் காலைத் தனது காலால் இறுக்கினான்.

"பின் எப்படி வளைக்குமாம்?" என்று ராஜ்யஸ்ரீ கேட்டாள்.

"இப்படி" என்ற கிருகவர்மன் தனது காலால் அவள் காலை நெருடினான்.

"நன்றாயிருக்கிறது!" என்று கூடிந்துகொண்டாள் ராஜ்யஸ்ரீ.

"அப்படியா!"

"ஆமாம். நீங்கள்தான் குழந்தையாயிருக்கிறீர்கள் இப்பொழுது."

"நான் யாரென்பதைக் காட்டுகிறேன்" என்று கூறிய கிருகவர்மன் பஞ்சணையிலிருந்து எழுந்து அறையைச் சுற்றிலுமிருந்த தீபங்களை ஒவ்வொன்றாக அணைக்க முற்பட்டான். ராஜ்யஸ்ரீ பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்து "எல்லாவற்றையும் அணைத்துவிடாதீர்கள்" என்றாள்.

திரும்பி நோக்கினான் அவளை கிருகவர்மன். சரிந்த சேலையுடனும் செழித்த உடலுடனும் உட்கார்ந்திருந்த ராஜ்யஸ்ரீயைப் பார்த்தான். அவள் குறுநகை கொண்டாள்.

விளக்கினருகில் நின்றவண்ணம் அவளைக் கேட்டான், "இதை அணைக்க வேண்டாமா?" என்று.

"வேண்டாம்"

"ஏன்?"

"இருள் கவிந்துவிடும்."

"கவிந்தாலென்ன?"

"நீர் அருந்த பொற்கலத்தை எப்படி எடுப்பது!"

"தலைமாட்டில்தானே இருக்கிறது?"

"இப்பொழுது அப்படித்தான் என்று சொல்லி நகைத்தாள் ராஜ்யஸ்ரீ."

அவள் நகைத்ததன் பொருள் அப்பொழுதுதான் புரிந்தது கிருகவர்மனுக்கு. அந்த விளக்கை அணைக்காமலே வெறியுடன் விரைந்தான் ராஜ்யஸ்ரீயை நோக்கி. பஞ்சணையை அடைந்தவன் அவள் மடியில் விழுந்து 'ராஜ்யஸ்ரீ! ராஜ்யஸ்ரீ!' என்று முனகித் தவித்தான்.





அவள் குனிந்து, "என்ன?" என்று கேட்டாள். அவன் கன்னத்துடன் தனது கன்னத்தை இழைத்தாள்.

"ராஜ்யஸ்ரீ! என்னைவிட அதிர்ஷ்டசாலி உலகத்தில் கிடையாது" என்றான் அவள் மடியில் முகத்தைப் புதைத்த வண்ணம்.

"இது எந்தப் புருஷனும் முதல் இரவில் சொல்லும் கதை" என்றாள் ராஜ்யஸ்ரீ.

"நான் சொல்வது கதையல்ல" என்றான் கிருகவர்மன்.

"காலம் சொல்லும்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

பிறகு பேசவில்லை இருவரும். பேச்சு முடிந்துவிட்டது. இருவரும் இணைந்த காலம்.

ஆனால் காலம் தொடர்ந்தது கதையை. தொடர்ந்த முறை, பாரதத்தின் சிறந்த சரித்திரத்தின் ஒரு பகுதி.

29

# மகிழ்ச்சி அலைகள்

முதல் நாளிரவின் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு களைத்துப் படுத்துவிட்ட ராஜ்யஸ்ரீ நீண்டநேரம் தூங்கினாளில்லை. விடியற்காலையில் நாலுபேர் கண்ணில் பட்டால் தனது நிலை வெட்கக்கேடாகிவிடுமே என்ற எண்ணத்தால் சுக்ரோதயத்துக்கு மிக முன்பே எழுந்து தனது பஞ்சணையை நோக்கினாள். பஞ்சணையும் கிருகவர்மனும் இருந்த அலங்கோல நிலை அவள் அழகிய இதழ்களில் புன்முறுவலைப் படரவிட்டதால், "சே! என்ன கேவலம்" என்று உள்ளூர சொல்லிக்கொண்டாள். ஆனால் அந்தக் கோலத்துக்குத் தானும் ஒரு காரணம் என்ற நினைப்பால் மெள்ள எழுந்து செல்ல முயன்றவளை கிருகவர்மன் கையொன்று எழுந்து இழுத்தது. "நீங்கள் தூங்குவதே இல்லையா?" என்று வினவிய ராஜ்யஸ்ரீ திமிறி எழுந்திருக்க முயன்றாள். ஆனால் கிருகவர்மன் பிடி உடும்புப் பிடியாயிருக்கவே எழுந்திருக்க முடியாமல் தவித்த ராஜ்யஸ்ரீயை நோக்கிய கிருகவர்மன், "ராஜ்யஸ்ரீ! நீ அருகிலிருக்கும்போது எனக்கு உறக்கம் எங்கிருந்து வரும்?" என்று கேட்டதன்றித் தனது கையை அவள் இடையைச் சுற்றவிட்டு, "தவிர, ராஜ்யஸ்ரீ" என்றும் துவங்கினான்.

"என்ன?" என்று எரிச்சலுடன் கேட்டாள் ராஜ்யஸ்ரீ.



"இந்த அறைக்கு உறங்கவா வந்தோம்?" என்று வினவிய கிருகவர்மன் மல்லாந்து படுத்து லேசாகச் சிரிக்கவும் செய்தான்.

அவன் சிரிப்பைக் கண்ட ராஜ்யஸ்ரீ, "எந்தப் புருஷனும் பெண் சம்பந்தப்பட்ட வரையில் அசடுதான் என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டு, "கன்னோசி மகாராஜா! இது இரவல்ல, விடியும் தருவாய் நெருங்கி விட்டது!" என்று வெளிப்படையாகவும் சொன்னாள்.

"விடியும் நேரம் நெருங்கிக்கொண்டுதானே இருக்கிறது?" என்று கேட்ட கிருகவர்மன் அவளை வலிய இழுத்துத் தனது மார்பின்மேல் தள்ளிக்கொண்டான்.

அவன் மார்பின்மீது நெளிந்து, "ஆம்" என்று சொன்னாள்.

"அப்படியானால் விடியவில்லை?"

"இல்லை."

"விடியட்டுமே."

"விடிந்த பின்பு நான் வெளியே போக முடியாது."

"ஏன்?"

"பார்ப்பவர்கள் சிரிப்பார்கள். எல்லோரும் எழுந்திருக்கு முன்பு தாயாரிடம் போய்விட வேண்டும்."

"அவளிடம் எதற்கு?"

"ஆறுதல் பெற."

"நான் தராத ஆறுதலை அவள் தர முடியுமா?"

"இரண்டும் வெவ்வேறு விதமான ஆறுதல். தஞ்சமென்றால் எந்தப் பெண்ணும் தாயை நோக்கித்தான் செல்வாள்."

இதைச் சொன்ன ராஜ்யஸ்ரீ எழுந்திருக்க முயன்றாள். கிருகவர்மன் அவளை விடவில்லை. "கொஞ்சநேரம் இரு ராஜ்யஸ்ரீ" என்றான்.

"எதற்கு?" என்று கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

அவள் காதில் அவன் ஏதோ ரகசியமாகச் சொன்னான். சொன்னபோது அவன் முகத்தில் கெஞ்சல்குறி அபரிமிதமாயிருந்தது. "சீ! சீ! முடியாது. என்ன வெட்கக்கேடு" என்று கூறினாள் ராஜ்யஸ்ரீ.

கிருகவர்மன் எழுந்து அவள் காலைப் பிடித்து, "முடியாதா?" என்று கெஞ்சினான்.

"கண்டிப்பாய் முடியாது" என்ற அவள் திமிறிக் கொண்டு பஞ்சணையில் இருந்து இறங்கிக் கதவை நோக்கி நடந்தாள். அவள் நடையில் தளர்ச்சியிருந்தது. அந்தத் தளர்ச்சியிலும் அவள் பின்னழகுகள் இன்பமாக இயங்கின. அந்த நடையை, அழகை, கிருகவர்மன் கட்டிலில் உட்கார்ந்தபடியே பருகினான். அவள் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றுவிட்டாள். கிருகவர்மன் படுக்கையில் விழுந்து குப்புறப் படுத்துக் கொண்டான்.

நிஷேத அறையிலிருந்து கிளம்பிய ராஜ்யஸ்ரீ மெதுவாகத் தனது தாயார் இருந்த அறையை நோக்கி நடந்தாள். அவள் தாய் அன்று வேண்டுமென்றே தனது அறையில் படுக்காமல் நிஷேத அறைக்கு நாலறைகள் தள்ளியிருந்த அறைப் பஞ்சணையில் துயின்றாள். மகள் வருவதை எதிர்பார்த்து விடியற்காலைக்கு முன்னமேயே விழித்துப் படுத்துக்கொண்டிருந்த மகாராணி மகளின் காலடி ஓசை கேட்டதும் எழுந்து உள்ளே வந்த மகளை மார்புற அணைத்துக்கொண்டாள். மகள் உள்ளே நடந்து வந்த தோரணையிலிருந்தும், தளர்ச்சியிலிருந்தும், இடையின் துவளலிலிருந்தும், முகத்தின் சோபையிலிருந்தும் கிருகவர்மன் மகளுக்கு எந்தவிதக் குறையையும் வைக்கவில்லையென்பதைப் புரிந்துகொண்டாலும் மகளை மார்புற அணைத்தவண்ணம் தனது கட்டிலில் உட்கார வைத்துக்கொண்டு, "மகளே சாதாரணமாயிருக்கிறாயா?" என்று வினவினாள்.



"உம்" என்றாள் ராஜ்யஸ்ரீ. மகாராணியின் மனத்திலிருக்கிறதைப் புரிந்துகொண்டாள் அவள். தான் பூர்ண புஷ்பவதியாகாததாக நினைத்துக்கொண்டதால் அவள் ஏற்கெனவே செய்த தடங்கல்கள் அவசியமில்லையென்பதைத் தெரியப்படுத்த ராஜ்யஸ்ரீ அன்னையின் மடியில் படுத்துக்கொண்டாள். மகாராணி நன்றாகக் குனிந்து ராஜ்யஸ்ரீயின் காதில் வினாக்களை வடித்தாள். "மகளே! நான் மிகவும் பயந்திருந்தேன். அப்படி ஏதும் இல்லையே?" என்று கேட்டாள்.

"அனாவசிய பயம் அம்மா" என்றாள் ராஜ்யஸ்ரீ.

திருப்திக்கு அறிகுறியாக மகாராணி பெருமூச்சு விட்டாள். "எதுவும் குறைவில்லையே ராஜ்யஸ்ரீ?" என்று கேட்கவும் செய்தாள்.

"எதுவும் குறைவில்லை அம்மா" என்று கூறித் தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

தாய் தனது மடியில் கிடந்த மகளின் தலையைத் தடவிக் கொடுத்தாள். முதுகையும் வருடிக்கொண்டே சொன்னாள் : "மகளே, எந்தப் பெண்ணுக்கும் இது புது அனுபவம். எனக்குத் திருமணமானபோது நான் மணவறைக்குள் பயந்துகொண்டே சென்றேன். என்ன செய்வாரோ, என்ன சொல்வாரோ என்று அச்சமுடன் போனேன். உன் தந்தைபோல் தங்கம் உலகில் இல்லை மகளே! என்னை ஆதரவுடன் ஏற்றுக்கொண்டார்! எந்தெந்த உலகுக்கெல்லாம் அழைத்துச் சென்றார்! உம்..." என்று ராஜமாதா தனது பழைய அனுபவங்களை எண்ணி உள்ளூர மகிழ்ச்சி கொண்டாள்.

பிறகு மேற்கொண்டு ஏதும் பேசவில்லை ராஜமாதா. "பெண்ணே! நீ சிறிதுநேரம் இங்கேயே படுத்துக்கொள். சேடிகள் வந்ததும் உனக்குத் தைல நீராட்டுவார்கள்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

"எங்கே அம்மா போகிறாய்?" என்று வினவினாள் ராஜ்யஸ்ரீ.

"உன் தந்தையிடம்" என்ற தாய் புன்முறுவல் கோட்டினாள்.

"எதற்கம்மா?" என்று ராஜ்யஸ்ரீ கேட்டாள்.

"உன் நலத்தைச் சொல்ல" என்றாள் ராஜமாதா.

"என் நலத்துக்கு என்ன குறைவு?"

"ஏதுமில்லை."

"அப்பொழுது அப்பாவிடம் நீ என்ன சொல்லப் போகிறாய்?"

"உன் நலத்திற்குக் குறைவில்லை. எனக்கு சௌபாக்கியம் பூர்த்தியாகிவிட்டது என்பதைச் சொல்ல வேண்டாமா?"

"அவருக்குத் தெரியாதா?"

"தெரியும். இருந்தாலும் கவலையுடனிருப்பார். ஆண்களின் சுபாவமே அப்படி அவரை சமாதானப்படுத்தி விட்டு வருகிறேன்." என்று சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினாள் ராஜமாதா.

அங்கிருந்து கிளம்பியவள் நேராக மகாராஜாவின் அறைக்குள் புகுந்தாள். "வா வா! உனக்காகத்தான் காத்திருக்கிறேன்" என்றார் மகாராஜா.

"எனக்காக ஏன் காத்திருக்க வேண்டும்?" என்று கேட்ட மகாராணி வெட்க நகை கோட்டினாள்.

"கதவைச் சாத்திவிட்டு வா சொல்கிறேன்" என்றார் மகாராஜா.

மகாராணி பதிலேதும் சொல்லாமல் கதவைச் சாத்திவிட்டு வந்தாள். மகாராஜா தமது பஞ்சணையில் நகர்ந்து மகாராணி உட்கார இடம் கொடுத்தார். மகாராணி



மெள்ள முகப்பில் உட்கார்ந்து "இதென்ன பஞ்சணை உட்கார வேண்டியிருக்கிறது?" என்று கேட்டாள்.

மகாராஜா தமது வலது கையை மகாராணியின் மடியில் போட்டார். "உட்கார இஷ்டமில்லாவிட்டால் படுத்துக்கொள்" என்றார்.

மகாராணி கோபச் சாயையை முகத்தில் காட்டி, "உங்களுக்கு ஒன்றும் பைத்தியமில்லையே!" என்று வினவினாள்.

"இல்லையென்று யார் சொன்னது?" என்று கேட்டார் மகாராஜா.

"அந்தக் காலம் போய்விட்டது" என்று மகாராணி சொல்லி அவர் கையைப் பிடித்துத் தள்ள முயன்றாள்.

மகாராஜா அத்தனை வயதிலும் இரும்பு உடலுடன் இருந்தாராகையால்கைஅசையவில்லை மகாராணியின் மடியை விட்டு. "நல்ல உலக்கை" என்று கையைக் கிள்ளினாள் மகாராணி.

"இருக்கட்டும். நல்லதுதானே?"

"எது?"

"சே, மட்டமாகப் பேசாதீர்கள்" என்ற மகாராணி நமக்கு வயதாகிவிட்டது என்று சுட்டிக் காட்டினாள்.

மகாராஜா நகைத்தார். "எனக்கு ஆகவில்லை. உனக்கும் ஆனதாகத் தெரியவில்லை" என்றார் நகைப்பின் ஊடே

"வெறும் மிடுக்கு" என்றாள் மகாராணி.

"அவசியமானால் பரீட்சை பார்க்கலாம்" என்ற மகாராஜாவைக் கடிந்து நோக்கிய மகாராணி, "உங்களுக்கு வெட்கமில்லாதிருக்கலாம் எனக்கு இருக்கிறது." என்றாள்.

"இருக்க வேண்டியதுதான்" என்றார் மகாராஜா.

"ஒப்புக்கொள்கிறீர்களா?"

"ஆகா, பிறரிடம் இருக்க வேண்டியதுதான்."

"உங்களிடம்?"

"என்னிடம் நீ வெட்கத்தை விட்டு நீண்ட நாளாயிற்றே. அதற்கு மூன்று அத்தாட்சிகளும் இருக்கின்றனவே!"

இதைக் கேட்ட மகாராணி, "உங்களுக்குப் புத்தியில்லை" என்றாள்.

"இருந்தால் இந்த சம்சாரக் கடலில் விழுந்திருப்பேனா?" என்று வினவிய மகாராஜா, "சரி! எங்கு வந்தாய்?" என்று வினவினார்.

"மகளைப் பற்றிச் சொல்ல வந்தேன்" என்று துவங்கிய மகாராணி மகாராஜாவைப் பார்த்து மோகனப் புன்முறுவல் செய்தாள்.

"சொல்" என்றார் மகாராஜா.

"அவளுக்கு ஒன்றும் குறைவில்லை" என்றாள் மகாராணி.

"எதற்கு?" என்று மகாராஜா வினவினார்.

"நேற்று இரவுக்கு" என்று சொல்லி மகாராஜாவை வெட்கத்துடன் பார்த்தாள் மகாராணி.

"அதுவா! அது தெரிந்ததுதானே" என்றார் மகாராஜா.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினாள் மகாராணி.

"நீ இங்கு வருமுன்பு சில விநாடிகளுக்கு முன்பு கிருக வர்மன் இங்கு வந்திருந்தான்" என்று விஷயத்துக்கு வந்தார் மகாராஜா.

"யார் மாப்பிள்ளையா?"

"வேறு கிருகவர்மன் இருக்கிறானா?"

"இல்லை."



"பின் ஏன் கேட்கிறாய்?"

"மாப்பிள்ளையை அவன், இவன் என்று அழைக்கலாமா நீங்கள்?" என்று மகாராணி கேட்டாள்.

"என் மகளின் அடிமையை என்னவென்று அழைக்கச் சொல்கிறாய்?" என்று வினவிய மகாராஜா பெரிதாகச் சிரித்தார்.

"மெள்ளப் பேசுங்கள்" என்றாள் மகாராணி.

"ஏன்? அந்த கிருகவர்மன் அசட்டுத்தனம் இன்று அரண்மனை பூராவும் பரவட்டும்" என்று மகாராஜா மீண்டும் நகைத்தார்.

"என்ன சொன்னார் மாப்பிள்ளை?" என்று ராணி கேட்டாள் சந்தேகத்துடன்.

"தனது அசட்டுத்தனத்தையெல்லாம் காட்டினார். என் மகளின் அழகை, கெட்டிக்காரத்தனத்தை எல்லாம் என்னிடமே சொன்னார். நல்ல பைத்தியமாகிவிட்டான் கிருகவர்மன்" என்ற மகாராஜா, "உன் மகளும் உன்னைப் போலக் கைகாரி" என்றும் சொன்னார். பிறகு சிந்தித்து விட்டு, "இல்லை உன்னைவிடக் கைகாரி" என்று திருத்தினார்.

"எப்படி?" என்று கேட்ட மகாராணி விஷமமாகப் புன்னகை பூத்தாள்.

மகாராஜாவும் விஷமமாகச் சிரித்துக்கொண்டே சொன்னார். "நான் உன்னிடம் பைத்தியமாகப் பத்து நாள் பிடித்தது. உன் மகள் ஒரே இரவில் கிருகவர்மனை சர்வ முட்டாளாக அடித்துவிட்டாள்." என்று.

கிருகவர்மன் ராஜ்யஸ்ரீ தாம்பத்ய ஒற்றுமை வெகு சீக்கிரம் அரண்மனை முழுவதும் பரவியது. ராஜ்யஸ்ரீயின் தோழிகள் அவளைக் கேலி செய்தார்கள். இத்தனை உற்சாகத்தில் கிருகவர்மன் பத்து நாட்கள் மனையாளுடன்

உல்லாசமாக இருந்துவிட்டுத் தனது நகரத்துக்குக் கிளம்பச் சித்தமானான். மகாராஜாவிடம் விடைபெற்று மனையாளுடன் கிளம்பவும் செய்தான். மருமகனையும் மகளையும் ராஜவாசல் வரை கொண்டு விட்ட மகாராஜா கண்களில் நீர் மல்க நின்றார். பக்கத்திலிருந்த மகாராணியிடம், "தானேசுவரத்தின் ராஜ்யஸ்ரீ அதோ போகிறாள்" என்று சொன்னார். மகாராணி பேசவில்லை. கண்களைத் துடைத்துக்கொண்டு விக்கினாள் லேசாக.

## 30

# மோக சாம்ராஜ்யம்

**தா**னேசுவர அரண்மனையிலிருந்து ராஜ்யஸ்ரீ கிளம்பியதும், "தானேசுவரத்தின் ராஜ்யஸ்ரீ போகிறாள்" என்று உணர்ச்சிப் பெருக்கால் சொன்ன பிரபாகர வர்த்தனன், ராஜ்யஸ்ரீயுடன் பாக்யஸ்ரீயும் போய் விட்டாளென்பதை உணர்ந்தாரில்லை. அடுத்த சில நாட்களை மனமுடைந்த நிலையிலேயே பெண்ணை எண்ணிக் கழித்தார். பெண்ணின் கல்யாணத்துக்கு முதலில் இடைஞ்சலாக நின்ற மகாராணிகூட, மகள் புக்ககம் சென்றபிறகு அரண்மனை வெறிச் சென்றிருந்ததாக நினைத்தாள். இருந்தாலும் மகாராஜாவின் துன்பத்தைப் பொறுக்க முடியாமல் அவருக்குத் தேறுதலும் சொன்னாள். மறுநாளிரவு மகாராஜா பால் அருந்த மறுத்தபோது மகாராணி கேட்டாள். "உடல்நிலை சரியில்லையா?" என்று.

"சரியாகத்தானிருக்கிறது" என்றார் மகாராஜா.

"மனநிலை?" மகாராணி கேட்டாள் வலுக் கட்டாயமாகப் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு.

"அதுதான் சரியில்லை" என்று மகாராஜா ஒப்புக் கொண்டார்.

"உங்கள் செல்லப் பெண்ணைப் பிரிந்ததாலா?"

"ஆம்."

"நல்ல அழகுதான் அவள்."

"அதைச் சொல்லவில்லை. உங்கள் போக்கைச் சொல்கிறேன்."

"என் போக்குக்கு என்ன?"

மகாராணி அவரைக் கருணை வழிந்த கண்களுடன் நோக்கி, "மகாராஜா! பெண் பிறந்தால் அவள் ஒருநாள் புக்ககம் போக வேண்டியதுதான். இதற்காக நீங்கள் சரியாக உணவருந்தாதிருந்தால் நியாயமா?" என்று கேட்டாள்.

"யசோவதி! மகளைப்பற்றி உனக்குத் தெரியாது. அவள் மகாலக்ஷ்மி. இந்த கிருகவர்மன் வந்து முளைத்திருக்கா விட்டால், தன்னந்தனியாக அவளைத் தோட்டத்தில் சந்தித்து அவளை மயக்கியிராவிட்டால்..." என்ற மகாராஜா வாசகத்தை முடிக்கவில்லை.

"என்ன செய்திருப்பீர்களாம்?" என்று மகாராணி கேட்டாள்.

"இந்த அரண்மனையிலேயே தங்கக்கூடிய ஒரு ஏழை க்ஷத்திரியனுக்கு அவளை மணமுடித்திருப்பேன்." என்ற மகாராஜா பெருமூச்சு விட்டார்.

மகாராணி சற்று சினத்துடன் நோக்கினாள் கணவனை. "பேசாமலிருங்கள். நாலுபேர் கேட்டால் சிரிக்கப் போகிறார்கள்" என்று பொய்யாகக் கடிந்து கொண்டாள்.

"நாலுபேர் கேட்டால் சிரிப்பார்களா?" அத்தனை மன வேதனையிலும் மகாராஜா விஷமமாகப் பேசினார்.

"ஆம்."

"நான் என்ன, இதைப் பற்றிச் சபையில் பிரசங்கமா செய்யப் போகிறேன்?"

"தேவையில்லை. உங்கள் முகத்தைப் பார்த்தே மற்றவர்கள் புரிந்துகொள்வார்கள்" என்று மகாராணி பாலைப் பலவந்தமாக மகாராஜாவுக்குப் புகட்டினாள்.



மகாராஜா மெள்ள மெள்ளப் பாலை அருந்தினார். பிறகு மெள்ள அவரைப் படுக்கச் சொல்லி, பக்கத்தில் உட்கார்ந்து, "இப்படி வருத்தப்பட்டு உங்கள் உடம்பை வீணாக்கிக் கொள்ளாதீர்கள். வேண்டுமென்றால் ராஜ்யஸ்ரீயை ஒருமுறை வரவழைப்போம்" என்று சமாதானம் சொன்னாள்.

மகாராஜா குதூகலத்துடன் எழுந்து உட்கார்ந்து "நல்ல யோசனை மகாராணி, அப்படியே செய். நாளைக்கே ஆள் அனுப்பு" என்றார்.

"மாப்பிள்ளை அவர் தலைநகரம் சேர்ந்து பத்து நாட்கள்கூட ஆகியிருக்காது. ஓலை அனுப்பினால் நன்றாயிருக்குமா?" என்று மகாராணி ஆட்சேபித்தாள்.

"ஏன் நன்றாயிருக்காது? திருமணமாகிப் புக்ககம் சென்ற பெண்ணை, பெண்ணும் மருமகப்பிள்ளையுமாகப் பெண் வீட்டார் அழைத்து வந்து சில காலம் வைத்துக் கொள்வதில்லையா? நான்கூட உங்கள் வீட்டிற்கு வந்திருந்தேனே?" என்று கேட்டார் மகாராஜா.

"நீங்கள் வந்த லக்ஷணம்" என்று மகாராணி பல்லைக் கடித்தாள்.

"ஏன் என்ன குறைச்சல் என் லக்ஷணத்துக்கு?" என்று மகாராஜா வினவினார்.

"வந்த ஐந்தாவது நாள் இங்கு வரத் துடித்தீர்கள். என் தந்தை இன்னும் ஐந்து நாட்கள் இருங்கள் என்று எத்தனை கெஞ்சினார்? இருந்தீர்களா? உடனே ரதத்தைச் சித்தம் செய்ய உத்தரவிட்டு, என்னையும் இழுத்துக் கொண்டு வந்து விட்டீர்கள். அதைச் சொல்வானேன். எனக்கு ஒரு நீதி. உங்கள் பெண்ணுக்கு ஒரு நீதி" என்று கூறிப் பெருமூச்செறிந்தாள் மகாராணி.

மகாராஜா சில விநாடிகள் தமது துன்பத்தை மறந்து, "நான் வந்தது பிசகு என்கிறாயா? உன்னை அழைத்துக்

கொண்டு வந்தது பிசகு என்கிறாயா? பின்னால் சொன்னதானால் ஆட்சேபணைக்கு இடமில்லை" என்ற மகாராஜா மகாராணியின் முதுகில் தட்டினார்.

மகாராணியின் முகத்தில் சினத்தின் சாயை படர்ந்தது. "நீங்கள் இழுத்து வராமல் நானாக ஓடிவந்தேனா?" என்று கேட்டாள் கோபத்துடன்.

"ஓடி வரவில்லை" மகாராஜா புன்முறுவல் செய்தார்.

"அதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?"

"ஆகா!"

"வேறு எப்படி வந்தேன்? இஷ்டமின்றி வந்தேனா?"

இதைக் கேட்ட மகாராஜா அந்தப் பழைய நாள் நிகழ்ச்சிகளுக்கு மனத்தைத் திருப்பி ஓட்டினார். அவர் கண்களில் கனவு விரிந்தது. "இல்லை யசோ" என்று பாதிப் பெயரைச் சொல்லிச் செல்லமாக அழைத்தார்.

"உம்" மகாராணியின் வதனம் சிவந்தது நாணத்தால்.

மகாராஜா கனவு கண்டுகொண்டே பேசலானார். "நீ ஓடி வரவில்லை. ஓடிவந்தால் அத்தனை அற்புதக் காட்சியை நான் கண்டிருக்கமாட்டேன். இடையை ஒடித்து ஒடித்து சிங்கார நடை நடந்து வந்தாய். உன் தோழிப் பெண்கள் செய்த நகையாடலுக்குப் பொய்க் கோபமும் உண்மை வெட்கத்தையும் இணைத்துக் காட்டினாய். மாளிகைப் படியிலிருந்து எனது ரதத்தில் ஏறுவதற்குள் எத்தனை மோகனாஸ்திரங்களை என்மீது ஏவிவிட்டாய்? நான் உன்னிடம் ஆயுள் முழுவதும் அடிமைப்பட்டுக் கிடப்பதற்கு அந்த அஸ்திரங்கள் போதாதா?" என்ற மகாராஜா மகாராணியின் இடையில் கையைச் செலுத்தி இழுத்தார்.

மகாராணியும் வளைந்து கொடுத்தாள். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அந்தச் சம்பவம் இருவர் மனத்திலும் பசுமையாய் இருந்தது. கடைசியாக பழைய



பல்லவிக்கு வந்த மகாராஜா, "அப்படித்தான் ராஜ்யஸ்ரீயும் நடந்து சென்றாள். அப்பொழுது நீயே போவது போலிருந்தது எனக்கு. உன்னை அப்படியே உரித்து வைத்தது போலிருக்கிறாள் ராஜ்யஸ்ரீ. உன் நடைதான் அவள் நடை" என்று ராஜ்யஸ்ரீயின் நினைப்பில் இறங்கினார். "இத்தனை நேரம் ராஜ்யஸ்ரீ கன்னோசியில் என்ன செய்து கொண்டிருப்பாள்?" என்றும் கேட்டார்.

"நான் இங்கு செய்ததைத்தான் அவளும் அங்கு செய்து கொண்டிருப்பாள்" என்றாள் மகாராணி.

"அப்படியேவா?" மகாராஜா சொல்லில் விஷமத்தை ஒலிக்கச் செய்தார்.

"வேறு எப்படியாம்? உங்கள் கேள்வியில் புதுமை இருக்கிறது."

"இந்த விஷயத்தில் பழமை ஏது?"

"இல்லை. ஆனால் வயது என்று ஒன்றிருக்கிறது."

"இல்லை. அது இருக்கவில்லை. துரிதமாக ஓடிக் கொண்டிருக்கிறது" என்று தத்துவமும் பேசினார் மகாராஜா.

"ஓகோ! தத்துவத்துக்கு திரும்புவதுபோல் தெரிகிறது" என்று மகாராணி சொல்லி நகைத்தாள்.

"ஆமாம்."

"வயதானால், உடல் தளர்ந்தால் தத்துவம் தானே வருகிறது."

"நான் சின்ன வயதிலிருந்தே தத்துவ சாஸ்திரி."

"படித்தீர்களா?"

"ஆம்."

"அதில் என்ன கண்டீர்கள்?"

"ஆயுள் என்பது குறைவு. அதனால் காலாகாலத்தில் சுகத்தை அனுபவித்துவிட வேண்டும் என்று கற்றுக் கொண்டேன். கூடியவரை நான் பின்வாங்கவில்லை."

இதைக் கேட்ட மகாராணி தலைகுனிந்து, "ஆம் ஆம் அதுதான் எனக்குத் தெரியுமே" என்றாள். மகாராஜாவின் இரு கரங்களும் மகாராணியின் உடலை வளைத்தன. "காதல் சிரஞ்சீவி, காலத்தால் அழியாதது" என்று முணுமுணுத்தார் மகாராஜா.

அதே சமயத்தில் கன்னோசியின் அரண்மனையில் ராஜ்யஸ்ரீயும் கிருகவர்மனும் உலகை மறந்து கிடந்தார்கள். தானேசுவரத்திலிருந்து திரும்பியதிலிருந்து மோக சாம்ராஜ்யத்தில் திளைத்திருந்தான் கிருகவர்மன். அரசாங்க அலுவல்களை மந்திரிகளிடம் அளித்துவிட்டான். சேனையைப் பார்வையிடுவதையும் நிறுத்திக்கொண்டான் கன்னோசி மன்னன். அன்று கட்டிலில் கிடந்த ராஜ்யஸ்ரீயை எடுத்துத் தன்மேல் போட்டுக்கொண்ட கிருகவர்மன், "ராஜ்யஸ்ரீ! சொர்க்கம் என்று தனிப்பட ஒன்றிருக்கிறதா?" என்று கேட்டான்.

அவள் பதில் சொல்லவில்லை. அவன்மீது புரண்டாள். "சொர்க்கத்தில் மலர் இருக்கும். இங்கு இருக்கிறது. அமுதம் இருக்கிறது. இங்கும் இருக்கிறது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். சொர்க்கத்தின் அமுதத்தை தேவர்கள் எல்லோரும் பங்கிட்டுக் கொண்டார்கள். இங்கு அமுதம் முழுவதும் ஒருவனுக்குத்தான் சொந்தம். அவன்தான் கிருகவர்மன்" என்று கூறி, மேலே புரண்ட அந்த அழகு உடலை ஆராய முற்பட்டான்.

அந்தச் சமயத்தில் அவனை மெதுவாகக் கேட்டாள் ராஜ்யஸ்ரீ. "நீங்கள் அந்தப்புரத்தைவிட்டே போகவில்லையே, ராஜ்ய காரியங்களை யார் கவனிப்பார்கள்?" என்று.

"பல மேதைகள் இருக்கிறார்கள். ராஜ்யத்தைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ராஜ்யஸ்ரீயைப் பற்றித்தான் கவலை" என்றான் கிருகவர்மன்.

அந்த விஷயத்தில் மிகத் திட்டமாயிருந்த கிருகவர்மன் மாதக் கணக்கில் அந்தப்புரத்திலேயே தங்கிவிட்டான். இந்தக்



காதலைப் பற்றிய பேச்சு எங்கும் பரவத் தொடங்கியது. மன்னன் அரசைக் கவனிக்கவில்லையென்பதை ஒற்றர்கள் சுற்றுப்பட்ட அரசுகளுக்குத் தெரிவித்தார்கள். இதைப்பற்றிப் பிரதான மந்திரியும் அறிந்ததால் அந்த வதந்தியைப் பொய்யாக்க மன்னனை நாடினார். ராஜ்யஸ்ரீயின் தோள்மீது கையைப் போட்டுக்கொண்டு வெளியே வந்து பிரதான மந்திரிக்கு தரிசனம் தந்த கிருகவர்மன் "என்ன பிரதான மந்திரி! என்ன விசேஷம்?" என்று கேட்டான்.

"வெளியே வதந்தி பலமாயிருக்கிறது" என்றார் பிரதான மந்திரி மெதுவாக.

"என்ன வதந்தி?"

"தாங்கள் அந்தப்புரத்தை விட்டு வருவதில்லையென்று வதந்தி."

"பரவட்டுமே."

"அது இங்கு மட்டும் பரவவில்லை. வெளிநாடுகளுக்கும் போயிருக்கிறது."

"என் மாமனாருக்கும் போயிருக்குமா?"

"கண்டிப்பாய் போயிருக்கும்."

"அப்படியானால் கவலைப்படாதீர் பிரதான மந்திரி. என் மாமனாரால் இந்த ராஜ்யத்தைக் காக்க முடியும். எனக்கு இரு மைத்துனர்கள் இருக்கிறார்கள். உலகத்தையே வெற்றி கொள்ளக்கூடிய மகாவீரர்கள். இத்தனை வலுவையும் அலட்சியம் செய்து கன்னோசிமீது யாராவது வருவானானால் அவன் ஆயுசு அல்பமானது. போய்வாரும் பிரதான மந்திரி" என்று கூறிவிட்டுத் தோளைப் பிடித்துத் திருப்பிக்கொண்டு உள்ளே சென்று கதவைச் சாத்திவிட்டான். மூடிய கதவைப் பார்த்துக்கொண்டே பல விநாடிகள் நின்ற பிரதான மந்திரி பெருமூச்சு விட்டார்.

31

# விதியும் திட்டமும்

நாட்கள் ஓடி மாதங்கள் வந்தன. ருதுக்கள் வந்தன. ருதுக்கள் இணைந்து இரண்டு ஆண்டுகள் உருவாயின. ஓடின. ஆனால் காலமாறுதலும் காலத்தின் ஓட்டமும் கிருகவர்மனின் இன்ப வாழ்க்கையை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லையே தவிர நாட்டைப் பாதிக்கவே செய்தது. அரசை அடியோடு கவனிக்காமல் காமாந்தகாரத்தில் கிருகவர்மன் மூழ்கியிருக்கும் செய்தி தானேசுவர சக்கரவர்த்தியின் காதிலும் விழுந்ததால் அவர் துயரத்தின் எல்லையை எய்தினார். இருப்பினும் மகளை நினைத்து நினைத்து உருகி நோய்வாய்ப்பட்டிருந்த வயோதிகனான பிரபாகரவர்த்தனரால் ஏதும் செய்ய முடியாததால் அவர் தமது புதல்வர் இருவரையும் அழைத்து யோசனை கேட்டார். அவருடைய அந்தரங்க அறையில் மகாராணி பக்கத்தில் உட்கார்ந்து அவருக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்த சமயத்தில் எதிரே நின்ற இரு இளஞ் சிங்கங்களை நோக்கி, "ராஜயவர்த்தனா! ஹர்ஷவர்த்தனா! உங்கள் சகோதரியின் கணவன் நடத்தும் ராஜ்ய பாரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டீர்களா?" என்று வினவினார். சோகப் பெருமூச்சும் விட்டார்.



ராஜ்யவர்த்தனனும் ஹர்ஷவர்த்தனனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். மகாராஜாவின் கால்களைப் பிடித்துக் கொண்டிருந்த மகாராணி திடீரென மகாராஜாவின் பாதத்தின் சிறப்பை ஆராய்வதுபோல் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரம் பதில் ஏதும் வராது போகவே மகாராஜாவே வினவினார். "நான் சொல்வது உங்களுக்குப் புரியவில்லையா?" என்று.

ஹர்ஷன் அடியோடு வாயைத் திறக்காததால் ராஜ்யவர்த்தனனே தந்தைக்குப் பதில் சொன்னான். "கிருகவர்மன் ராஜ்யத்தைக் கவனிக்கவில்லை என்று வதந்தி இருக்கிறது."

மைந்தனின் அடக்கமான பதிலைக் கேட்ட மகாராஜா மனத்துக்குள் அவனை சிலாகித்தார். "அதுமட்டுமல்ல" என்று எதையோ சொல்லத் துவங்கிப் பேச்சை அரை குறையாக விட்டார்.

"வேறென்ன தந்தையே?" என்று வினவினான் ராஜ்ய வர்த்தனன், எல்லாம் தந்தையின் வாயினாலேயே வரட்டும் என்ற காரணத்தால்.

"உன் சகோதரியை அதிகம் கவனிப்பதாகக் கேள்வி" என்று மகாராஜா மெதுவாகப் பேசினார். உடல் வியாதி சொற்களை வலு இல்லாமல் செய்திருந்தது.

தந்தையின் பலவீனமான சொற்களை வாங்கியதால் சற்றே சங்கடப்பட்ட ராஜ்யவர்த்தனன், "தந்தையே! சகோதரியிடம் கணவன் பிரியமாயிருப்பது நல்ல செய்திதானே?" என்று வினவினான்.

மகாராஜா அத்தனை வியாதியிலும் தமது சொரூபத்தைக் காட்டி, "அவ்விருவருக்கும் நல்லதுதான். நாட்டுக்கு நல்லதல்ல" என்று சுட்டிக்காட்டினார்.

"சகோதரியின் சிறந்த மணவாழ்க்கையால் நாடு எப்படி பாதிக்கப்படும்?" என்று வினவினான் ராஜ்யவர்த்தனன்.

"ராஜ்யம் இப்பொழுது பிறரால் ஆளப்படுகிறது!" மகாராஜா இதை மனக்கசப்புடன் சொன்னார்.

"பிறராலா!"

"ஆம்."

"வெளி நாட்டாரா?"

தற்சமயம் அப்படியில்லை. விஷயம் இப்படியே நீடித்தால் வெளிநாட்டார் அங்கு காலை வைக்க அதிக நாள் ஆகாது."

ராஜ்யவர்த்தனன் இதற்கு உடனடியாகப் பதில் சொல்ல வில்லை. "கன்யாகுப்ஜத்துக்கு (கன்னோசி) திறம் படைத்த மந்திரிகள், படைத்தலைவர்கள் இல்லையா?" என்று வினவினான் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

"இருக்கிறார்கள். அவர்கள்தான் ராஜ்யத்தை தற்சமயம் ஆள்கிறார்கள். ஆனால் ராஜ்யவர்த்தனா! அரசன் ஆளாத ராஜ்யம் தலைவனில்லாத குடும்பத்துக்குச் சமானம். வெகு சீக்கிரம் கலகலத்துப் போகும்" என்று சொன்ன மகாராஜா, "எதற்கும் உங்களில் ஒருவர் கன்னோசிக்குப் போய் நிலைமையை அறிந்து வருவது நல்லது. கன்னோசி பலமான ராஜ்யம்தான். ஆனால் அதன் எதிரிகளும் பலமானவர்கள். அதன் முதல் எதிரி மாளவம். அதன் அரசனை நீங்கள் நன்கு அறிவீர்கள். தேவகுப்தன் மகாவீரன். அவனால் கன்யாகுப்ஜத்துக்கு நேரடியான போர் ஏற்படும். அவனைப்பற்றி அஞ்ச வேண்டியதில்லை. கௌட நாட்டு சசாங்கன் இருக்கிறானே, அவன் நண்பன். அவன் விஷப்பாம்பு. கிராதகன். எந்த ஈனத் தொழிலிலும் ஈடுபடுவான். அவன் இப்பொழுதும் தேவகுப்தனின் உயிர் நண்பன். அவர்கள் இருவரும் ஏதோ சதி செய்வதாகக் கேள்வி" என்று மகாராஜா நிலைமையை விளக்கினார்.

ராஜ்யவர்த்தனனுக்கு மகாராஜா சொன்னது எதுவுமே புதிதல்ல. அரசாங்க ஒற்றர்கள்கூட இந்தச் செய்திகளைக்



கொண்டுவர அவசியமில்லாத நிலைமை இருந்தது. கிருகவர்மன் மோக சாம்ராஜ்யத்தைப் பற்றியும், தேவகுப்தன் சசாங்கன் நட்பைப் பற்றியும் வதந்திகள் பலமாக இருந்தன. இருந்தாலும் வதந்தியை வைத்துக்கொண்டு ஆதாரம் ஏதுமில்லாமல் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதென்பதை ராஜ்யவர்த்தனன் உணர்ந்திருந்ததால், "எனக்கு என்ன கட்டளை தந்தையே!" என்று வினவினான்.

மகாராஜா பரம சங்கடத்தில் ஆழ்ந்தார். மகாராணியும் சற்று சங்கடப்பட்டாலும் சமாளித்துக்கொண்டு, "ராஜ்யா, உன் தங்கையைப் பார்த்து நாளாகவில்லையா?" என்று பேச்சுக் கொடுத்தான்.

"ஆம் தாயே" என்றான் ராஜ்யவர்த்தனன்.

"மகனே! அரசகுலமும் மற்ற குலங்களைப் போலத்தான் சாதாரண வாழ்வில். உன் தந்தை உன் தங்கையை நினைத்துக் கொண்டு விட்டார். அவளைப் பார்த்தால் அவர் நோய் குணமாகிவிடும்." என்ற மகாராணி, "மகனே பெண் புக்ககத்துக்குப் போனதும் சிலநாள் கழித்து மறு மகிழ்ச்சிக்கு அவளையும் அவள் கணவனையும் பிறந்தகம் அழைக்கும் பழக்கமுண்டு" என்றும் சொன்னாள்.

ராஜ்யவர்த்தனன் சிறிது சிந்தனையில் இறங்கினான். "அழைத்துவரத் தடையில்லை தாயே! ஆனால் அழைப்பதற்குச் சூழ்நிலை சரியாயில்லையே!" என்றான்.

"என்ன சூழ்நிலை மகனே?" மகாராணி கேட்டாள் துன்பம் ஒலித்த குரலில், உண்மையை உணர்ந்திருந்தால் கூட

ராஜ்யவர்த்தனன் தனது பக்கத்தில் ஏதும் பேசாமல் இடித்த புளிபோல் நின்றிருந்த ஹர்ஷவர்த்தனனை நோக்கி, "தம்பீ! உனக்குத்தான் தெரியுமே, அம்மா கேட்பதற்குப் பதில் சொல்லேன்" என்றான்.

அதுவரை தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நடந்த உரையாடல்களையெல்லாம் உற்றுக் கேட்டுக்

கொண்டிருந்த ஹர்ஷவர்த்தனன் தலையை மெள்ள நிமிர்த்தினான். அவன் கண்களில் ஆழ்ந்த சிந்தனை இருந்தது. அந்தச் சிந்தனை குரலிலும் ஒலிக்கச் சொன்னான். "தலையிருக்க வால் ஆடுமா அண்ணா? நீயும் தந்தையும் இருக்க நான் சொல்வதற்கோ செய்வதற்கோ என்ன இருக்கிறது?" என்று.

தம்பியின் சாதுர்ய மொழிகளைக் கேட்டுப் புன்முறுவல் கொண்ட ராஜ்யவர்த்தனன், "நீ என்றும் சிறுவனாயிருக்க முடியாது தம்பி! இந்த ராஜ்ய நிர்வாகம் உன் தலையில் இறங்கினால் என்ன செய்வாய்?" என்று வினவினான் புன்முறுவலின் ஊடே.

விதி உந்தியதால் உருவான சொற்கள் அவை. அவற்றுக்கு அந்தச் சமயத்தில் பொருள் ஏதுமில்லை. பொருள் ஏற்பட்ட பிற்காலத்தில் ஹர்ஷன் அதைப் பலமுறை எண்ணினான். ஆனால் அன்று அந்தப் பேச்சை சாதாரணமாக நினைத்த ஹர்ஷன், "அண்ணா! நீயும் தந்தையுமிருக்கும்போது நான் எந்த யோசனையும் சொல்வது முறையாகாது. ஆனால் நீ கட்டளை யிடுவதால் சொல்கிறேன். இப்பொழுது ராஜ்யஸ்ரீயையோ அவள் கணவனையோ இங்கு அழைப்பது உசிதமல்ல. கௌட சசாங்கனும் மாளவ தேவகுப்தனும் கிருகவர்மனை எப்பொழுது வீழ்த்தலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கன்யாகுப்ஜத்தை விட்டு மன்னன் அகன்றால் அரசு கண் மூடிக் கண் திறப்பதற்குள் விழுங்கப்படும்" என்று நிலைமையை விளக்கினான்.

வியாதியாகப் படுத்திருந்த பிரபாகரவர்த்தனன் புருவங்கள் வியப்புக்கு அறிகுறியாக மேலே எழுந்தன. "ஹர்ஷா! இவ்வளவு தெரிந்திருக்கிறதா உனக்கு?" என்று வியப்புடன் வினவவும் செய்தார்.



ஹர்ஷன் தலை வணங்கினான் தந்தைக்கு மரியாதையாக. "தந்தையே இதில் வியப்பதற்கு ஏதுமில்லை. தானேசுவர மக்கள் எல்லோருக்குமே இது தெரிந்திருக்கிறது" என்று அடக்கமாகவும் பேசினான்.

பிரபாகரவர்த்தனன் பெரு மகிழ்ச்சி கொண்டு மகா ராணியை நோக்கினான். "யசோவதி! ராஜ்யஸ்ரீயை அழைப்பது உன் புதல்வர்களுக்கு இஷ்டமில்லை போலிருக்கிறதே?" என்று கேட்டார்.

யசோவதி தான் மகாராணியானாலும் பெண் என்பதைக் காட்டினாள். "எந்தச் சகோதரன் தனது சகோதரி பிறந்தகம் வருவதை வரவேற்பான்?" என்று வினவினாள். குற்றம் சாட்டும் பார்வையொன்றை இரு புதல்வர்கள்மீதும் வீசினாள்.

அந்த ஒரு பார்வை வர்த்தன சகோதரர்களின் மனத்தில் ஒரு முடிவை ஏற்படுத்திவிட்டது. "அம்மா நாங்கள் நீ சொல்லும் சகோதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களல்ல. உன் இஷ்டப்படி ராஜ்யஸ்ரீயை அழைக்க நாளையே பயணப்படுகிறேன்." என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டு அகன்றான் ராஜ்யவர்த்தனன்.

ஹர்ஷவர்த்தனன் அத்தனை துடிப்பைக் காட்டவில்லை. நின்ற இடத்திலேயே நின்றான். மகாராணி மீது தனது கண்களை ஓட்டி, "அம்மா! நீ உன் பிள்ளைகளைப் புரிந்துகொண்டது இவ்வளவுதானா?" என்று வினவினான்.

மகாராணி உடனடியாகப் பதில் சொல்லவில்லை. நீண்டநேரம் மௌனம் சாதித்தாள். பிறகு பேசியபோது அவள் சொற்களில் உணர்ச்சி பெரிதும் துலங்கியது. "குழந்தாய்! உங்களை வசை பாட எனக்கு உரிமையுண்டு என்பதால் சற்றுத் துடுக்காப் பேசிவிட்டேன். தாயுள்ளத்தை நீயோ உன் அண்ணனோ அறிய முடியாது. அது மட்டுமல்ல

மகனே! உன் தந்தையின் இந்த உடல் நிலைக்கும் நோயுக்கும் காரணமே ராஜ்யஸ்ரீயின் பிரிவுதான். அவள் வந்தாலொழிய இவர் உடம்பு தேறாது. ராஜ்யஸ்ரீதான் இவருக்கு மருந்து. அதனால் சொன்னேன்!" என்றாள் குரல் துக்கத்தால் அடைபட.

தாயின் வேதனையை ஹர்ஷன் கவனிக்கவே செய்தான். "அம்மா! கவலைப்படாதீர்கள். எப்படியும் ராஜ்யஸ்ரீயை இங்கு வரவழைக்கிறேன்!" என்று உறுதி கூறி வெளியே நடந்தான். அங்கிருந்து கிளம்பியவன் தனது தமையனின் அறைக்குச் சென்றான். அங்கிருந்த பஞ்சணையில் ராஜ்யவர்த்தனன் சோக பிம்பமாக உட்கார்ந்திருந்தான். தம்பி உள்ளே நுழைந்ததும் தலைதூக்கி அவனை நோக்கி, "ஹர்ஷா! என்ன விசேஷம்?" என்று வினவினான்.

"நான் நாளை கன்னோசிக்குப் போகிறேன்" என்று ஹர்ஷன் சுற்றி வளைக்காமல் பேசினான்.

"அப்படியா?" ராஜ்யவர்த்தனன் கேள்வியில் துன்பம் ஒலித்தது.

"ஆம்." ஹர்ஷன் உறுதியுடன் பதில் சொன்னான்.

"ஏன்? நான் போனால் என்ன?"

"நீ மூத்த மகன்."

"அதனால்?"

"பட்டத்தை ஏற்க வேண்டியவன்."

"அதற்கும் கன்யாகுப்ஜம் போவதற்கும் என்ன சம்பந்தம்?"

"கன்யாகுப்ஜத்தை ஆபத்து சூழ்ந்திருக்கிறது. அதன் எல்லைகள் கண்காணிக்கப்படுகின்றன. அங்கு எப்பொழுது என்ன நேரிடும் என்று சொல்ல முடியாது. கன்யாகுப்ஜம் திடீரெனத் தாக்கப்பட்டால் அங்கு இருக்கும் யாருக்கும் ஆபத்து. அந்த ஆபத்தில் நீ சிக்கக்கூடாது."



தம்பியின் சொல் கேட்ட ராஜ்யவர்த்தனன் பதிலேதும் சொல்லவில்லை. "இதைப்பற்றி நாளை யோசிப்போம்" என்றான் ராஜ்யவர்த்தனன் முடிவாக.

ஹர்ஷன், தமையனை உற்று நோக்கி, "அண்ணா! ஒரு பழமொழி உண்டு" என்று சொன்னான்.

"என்ன தம்பி அது?" என்று கேட்டான் ராஜ்யவர்த்தனன்.

"இன்றைக்கென்பதும் நாளைக்கு என்பதும் இல்லாததற்கு அடையாளம் என்றொரு பழமொழி உண்டு" என்றான் ஹர்ஷன்.

அவை விதி உதிர்த்த சொற்கள் என்பதை மறுநாள் ராஜ்யவர்த்தனனே உணர்ந்தான். கன்னோசிக்குப் போகச் சித்தமாகத் தந்தை முன்பு நின்ற சமயத்தில்தான் அந்த முதல் இடி இறங்கியது. அவசரமாக உள்ளே நுழைந்த ராஜ்யவர்த்தனனின் ஹூண அடிமை, "பிரபு! ஹூணர்கள் இமாலயத்திலிருந்து இறங்கிவிட்டார்கள். வடமேற்கில் நமது கிராமங்கள் சில அவர்கள் கையில் விழுந்துவிட்டன!" என்று செய்தி சொன்னான். ஓடிவந்ததால் இரைக்க இரைக்கப் பேசினான்.

ராஜ்யவர்த்தனன் ஏதும் பேசவில்லை. தம்பியை நோக்கித் திரும்பி, "ஹர்ஷா! நமது படை சித்தமாகட்டும். நாளையே நாம் புறப்படுகிறோம் ஹூணர்களை விரட்ட" என்று கட்டளையிட்டான்.

## 32

# சகோதரர் புறப்பாடு

வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் அதிர்ஷ்டமும் துரதிர்ஷ்டமும் கலந்ததேயென்றாலும், துன்பம் தலை தூக்கும் துரிதத்தில் இன்பம் தலை தூக்குவதில்லை. துரதிர்ஷ்டம் இறங்கும் வேகத்திலோ தொடர்ச்சியிலோ அதிர்ஷ்டம் இறங்குவதில்லை. இந்த நியதிக்கு பிரபாகரவர்த்தனன் குடும்பமே அத்தாட்சியானதை சரித்திரமே நிருபித்திருக்கிறது.

ராஜ்யஸ்ரீயையும் அவள் கணவனையும் தானேசுவரத்துக்குச் சில நாட்கள் அழைத்துவர ஹர்ஷன் ஒப்புக்கொண்ட சில நாழிகைக்குள் ஹூணர்களைப் பற்றி பயங்கரச் செய்தி வருமென்று யார் எதிர்பார்த்திருக்க முடியும்? அந்தச் செய்தி வந்ததும் வராததுமாக ராஜ்யத்தைக் காப்பாற்ற வடமேற்கு எல்லைக்கு ராஜ்யவர்த்தனன் ஹர்ஷனோடு புறப்பட அவசியம் நேரிடுமென்று யார் எதிர்பார்த்திருக்க முடியும்? அப்படி எதிர்பாராத நிகழ்ச்சிகள் குறுக்கே வந்ததால் பிரபாகரவர்த்தனன் குடும்பமே கலகலத்துப் போகும் சந்தர்ப்பம் வரத்தான் செய்தது.

ராஜ்யவர்த்தனனின் ஹூண அடிமை ஹூணர்களைப் பற்றிய செய்தியைக் கொண்டு வந்தபோது ராஜ்யவர்த்தனன் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பக்கத்திலிருந்த



ஹர்ஷவர்த்தனனுடன், ராஜ்யஸ்ரீயை அழைத்து வருவதால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களைப் பற்றிப் பேசவும் முற்பட்டு "தம்பி! தாயின் ஆசைக்காக நாம் ராஜ்யஸ்ரீயை அழைத்து வந்தால் கிருகவர்மனும் கூட வருவான். இப்பொழுது மன்னனும் ராணியும் நாட்டிலிருக்கும்போதே கன்யாகுப்ஜத்தின் நிலை பலவீனமாயிருக்கிறது. அரசனும் இல்லையென்று ஆகிவிட்டால் தேவகுப்தனும் சசாங்கனும் உடனடியாகத் தங்கள் படைகளை கன்னோசி எல்லைகளுக்குள் புக விடுவார்கள்" என்று கூறினான்.

ஹர்ஷன் அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்து, "அண்ணா! நீ சொல்வது ராஜ்ய நிலைமை! தாய் சொல்வது பாசத்தை முன்னிட்டு. பாசம் ராஜவிதிகளை உணராது. சரியான சிந்தனைக்கும் இடம் தராது" என்று சுட்டிக் காட்டினான்.

ராஜ்யவர்த்தனன் அதை ஒப்புக்கொண்டு, "சரி தம்பீ! நீ போய் வா. உடனடியாக ராஜ்யஸ்ரீயையும் கிருகவர்மனையும் அழைத்து வந்துவிடாதே. அங்குள்ள ராஜ்ய நிலைமையையும் கவனித்துப் பார். அப்படித் தங்கையும் கிருகவர்மனும் வருவதாயிருந்தால், நீ அங்கு தங்கி அரசைக் கவனி" யோசனை சொன்னான்.

அந்த யோசனை ஹர்ஷனுக்கும் சரியென்று பட்டு அவன் பதில் சொல்ல முயன்ற சமயத்தில்தான் ஹூண அடிமை முன்னறிவிப்பு இல்லாமல் உள்ளே நுழைந்து வணங்கினான் இரு ராஜகுமாரர்களையும். "என்ன விசேஷம்? நீ வருவதைப்பற்றிச் செய்தி ஏதும் அனுப்பவில்லையே?" என்று ராஜ்யவர்த்தனன் கேட்டான்.

"பிரபு! செய்தியனுப்ப அவகாசமில்லை. ஹூணர்கள் சாரிசாரியாக இமாலயத்திலிருந்து சமதரையில் இறங்கி விட்டார்கள். நமது ராஜ்யத்தின் எல்லைகளைப் பிடித்தும் விட்டார்கள். பயிர்கள் நாசம் செய்யப்பட்டன. குடி மக்களின்

வீடுகள் கொள்ளையிடப்பட்டன. சீக்கிரம் நாம் அவர்களைத் தடுக்காவிட்டால் விரைவில் முன்னேறவும் செய்வார்கள்" என்றான் ஹூண அடிமை.

"அவர்கள் படை பலம் எவ்வளவு?" என்று ராஜ்ய வர்த்தனன் கவலையுடன் விசாரித்தான்.

"எங்கும் கொலையும், கொள்ளையும், தீ வைத்தலும் நடக்கிறபடியால் அவர்களை வேவு பார்க்க முடியவில்லை. ஆகையால் நிச்சயமாகப் படை பலம் எத்தனை என்று தீர்மானிக்க முடியவில்லை. வடமேற்கு எல்லை கிராமங்களை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக் கிறார்கள்" என்று அடிமை சொன்னான்.

மேற்கொண்டு யோசிக்கவில்லை ராஜ்யவர்த்தனன். "ஹர்ஷா! படைகளைச் சித்தம் செய். நான் தந்தையிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு வருகிறேன். மாலைக்குள் நாம் புறப்பட வேண்டும். ஆசார்ய பண்டியிடமும் விஷயத்தைச் சொல்" என்று கூறிவிட்டு, தனது அறையிலிருந்து கிளம்பி முதல் உப்பரிகையிலிருந்த மன்னர் அறைக்குச் சென்றான். அங்கு பிரபாகரவர்த்தனர் நோயினால் வாடி வதங்கிப் படுத்திருந்தார். அவர் நிலையைக் கண்ட ராஜ்யவர்த்தனன் செய்தி சொல்லச் சிறிது தயங்கினான்.

அத்தனை நோய்வாய்ப்பட்ட நிலையிலும் பிரபாகர வர்த்தனர், தனயன் தயக்கத்தைக் கவனிக்கவே செய்தார். "ராஜ்யா என்ன? ஏதாவது விசேஷமுண்டா?" என்று வினவினார்.

"உண்டு நல்ல விசேஷமில்லை" என்றான் ராஜ்ய வர்த்தனன்.

"நல்லதும் பொல்லாததும் வாழ்க்கையில் சகஜம் மகனே! நல்லது வரும்போது அதிக மகிழ்ச்சியையும் பொல்லாதது வரும்போது அதிக துன்பத்தையும் காட்டுவது அரசர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை" என்றார் மகாராஜா.



"அரச குடும்பத்தாரும் மனிதர்கள்தானே?" என்றான் ராஜ்யவர்த்தனன்.

"மனிதர்களாயிருந்தாலும் பொறுப்பு அதிகம். மக்களுக் கில்லாத பெரும் சுகம், வசதி மன்னர்களுக்கு இருக்கிறது. அந்த வசதியை ஒட்டிக் கடமைகளும் உண்டு. அந்தக் கடமையிலிருந்து அரசகுலத்தார் வழுவ முடியாது. எதுவாயிருந்தாலும் சொல்" என்றார் மகாராஜா.

ராஜ்யவர்த்தனன் மெதுவாகச் சொன்னான். "வட மேற்கில் ஹூணர்கள் இறங்கிவிட்டார்கள் சில கிராமங்களையும் பிடித்துவிட்டார்களாம்" என்று.

இதைக் கேட்ட மகாராஜா அதிர்ச்சி சிறிதும் அடைந் தாரில்லை. "முன்பு நான் சென்று அவர்களை மலைக்குத் துரத்தி வந்தேன். இப்பொழுது எனக்குச் சக்தியில்லை" என்றார் துன்பம் துளிர்த்த குரலில்.

"எந்தத் தந்தையும் கடைசிவரை பணியாற்ற முடியாது. முதுமை இயற்கையானது. ஆனால் உங்கள் கடமையை நிறை வேற்ற நாங்களிருக்கிறோம். நானும் ஹர்ஷனும் உடனடியாகப் புறப்படுகிறோம்" என்ற ராஜ்யவர்த்தனன், "உங்கள் ஆசியால் வெற்றியுடன் திரும்புவோம்" என்றும் சொன்னான்.

மகாராஜா சிறிது சிந்தித்தார். "ஹர்ஷனையும் அழைத்துப் போகிறாயா?" என்று கேட்டார்.

"ஆம் தந்தையே, நான் முன்னேறிப் போரிடும்போது பின்னாலிருக்கும் பகுதிகளைக் காத்து நிற்க ஒருவர் வேண்டும் அதற்கு ஹர்ஷனிருந்தால் நல்லது" என்றான் ராஜ்யவர்த்தனன்.

மகாராஜா ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். "அது சரிதான். ஹூணர்கள் எந்தப்பக்கம் வந்து தாக்குவார்கள் என்று சொல்லமுடியாது. நாடோடி

ஜாதியார், முறையான போர் இருக்காது. ஆனால் மகா வீரர்கள். ஆகையால் எச்சரிக்கையுடன் இருப்பதுதான் நல்லது" என்றார்.

ராஜ்யவர்த்தனன் மகாராஜாவின் முன்பு மண்டியிட்டுப் பாதங்களில் வணங்கினான். பிறகு பக்கத்தில் அமர்ந்திருந்த தாயின் திருவடிகளிலும் தலை வைத்து வணங்கினான். மகாராஜா உறுதியான குரலில், "சென்று வா ராஜ்யா, வெற்றியுடன் திரும்ப உனக்கு ஆண்டவன் அருள் புரியட்டும்" என்று கூறினார்.

மகாராணி ஏதும் பேசவில்லை. துக்கம் தொண்டையை அடைத்ததால் அவன் தலைமீது கையை வைத்து ஆசீர்வாதம் செய்தாள்.

அந்தச் சமயத்தில் ஹர்ஷனும் உள்ளே நுழைந்தான் போர்க்கோலம் அணிந்து, "அண்ணா! படைகளைச் சித்தம் செய்யக் கட்டளை அனுப்பிவிட்டேன். ஆசார்ய பண்டியே படைகளைச் சித்தம் செய்கிறார். புரவிப் படையும் காலாட் படையுமாகக் கலந்து ஐம்பதினாயிரம் வீரர்கள் நம்மைப் பின்பற்றுவார்கள்" என்றான். ராணுவ பாணியில் மன்னர், மகாராணி, தமையன் மூவருக்கும் தலை வணங்கினான். அந்தச் சமயத்தில் அரசாங்க முரசு பலமாகச் சப்தித்தது வெளியே. படைகள் துரிதமாகத் திரட்டப்படும் ஒலிகள் தானேசுவரத் தலைநகரத்தை நிரப்பின.

அன்று மாலையே ராஜ்யவர்த்தனனும் ஹர்ஷ வர்த்தனனும் ஹூணர்களுடன், போரிடச் சன்னத்தமாகக் கிளம்பினார்கள். ராம லக்ஷ்மணர்களைப்போல் போர்க்கோலம் பூண்டு அக்கம் பக்கத்துப் புரவிகளில் அமர்ந்திருந்த இரு பிள்ளைகளையும் அரண்மனை உப்பரிகையிலிருந்து கவனித்த மகாராஜா புளகாங்கிதம் அடைந்தார். பக்கத்திலிருந்த மகாராணியை நோக்கி, "யசோவதி, உன் மக்களைப் பார். திருஷ்டி பட்டுவிடும்



போலிருக்கிறது. மகா வீரர்களைப் பெற்றிருக்கிறாய்" என்று சொன்னார். அவர் வீர வதனத்தில் பெருமை விரிந்து கிடந்தது.

மகாராணி உடனடியாகப் பதில் சொல்லவில்லை. போருக்குச் செல்ல ஆயத்தமாக நிற்கும் புதல்வர்களைப் பார்த்துக்கொண்டே நின்றாள். கடைசியில் அவள் பேசியபோது வீரமாதாவாகப் பேசினாள். "வீரனுக்குப் பிறந்திருக்கும் புதல்வர்கள் வேறெப்படி இருப்பார்கள்?" என்றாள். அதுவரை குரலிலிருந்த உதறல் மறைந்து விட்டது. உறுதியுடன் மகாராணி சொற்களை உதிர்த்தாள்.

கீழே அரண்மனைப் பெரும் சதுக்கத்தில் இரண்டு இளம் வர்த்தனர்களும் புரவிகளில் அமர்ந்து புறப்படச் சித்தமா யிருக்கையில் அரண்மனைப் பெண்கள் ஆலத்தி சுற்றி ஆலத்தியிலிருந்து சிவப்பு நீர் எடுத்து இருவர் நெற்றிகளிலும் திலகம் இட்டார்கள். உடனே முரசுகள் பலமாக முழங்கின. வெண்சங்கங்கள் சப்தித்தன. அரண்மனையிலிருந்து வெகுதூரம் பரவியிருந்த படையின் முகப்பு வரிசை பயணப் பட்டதைப் புரவியின் அடர்த்தியான குளம்பொலிகளும் வீரர்களின் பாதக்குறடுகளின் சப்தமும் நிரூபித்தன. முகப்பிலும் இடையிலும் அணி வகுப்பு கலையாதிருக்க ஊதப்பட்ட தூரிய வாத்யங்களின் ஒலியுமாகச் சேர்ந்து நகரத்தையும் புற நிலத்தையும் ஒலிமயமாக அடித்தன.

உப்பரிகையில் நின்ற வண்ணமே மகாராஜா அத்தனை ஒலிகளையும் காதில் வாங்கி மகிழ்ச்சி அடைந்தார். தூரத்தே படைகள் நகர்ந்ததால் கிளம்பிய பெரும் புழுதியையும் கவனித்தார். தாம் தமது இளமைக் காலத்தில் போருக்குச் சென்ற நினைப்பெல்லாம் அவருக்கு அந்தச் சமயத்தில் எழுந்ததால் பெருமூச்சும் விட்டார். பக்கத்திலிருந்த மகாராணியைப் பார்த்து, "யசோவதி! குழந்தைகளுடன்

நானும் செல்லக் கொடுத்து வைக்கவில்லையே!” என்று அங்கலாய்த்தார்.

“எதற்கும் ஒரு வயது உண்டு” என்றாள் மகாராணி.

மகாராஜா எதையோ நினைத்துக்கொண்டு அபசகுனமாகப் பேசினார். “யசோவதி! எந்த மன்னனும் கிழவயது வரையில் இருக்கக்கூடாது” என்றார்.

அந்த மகாவீரனின் மனத்திலோடும் எண்ணங்களைப் புரிந்துகொண்ட மகாராணி, “ஏனிப்படிப் பேசுகிறீர்கள்? நீங்கள் பெரும் சாதனைகளைப் புரிந்தாகிவிட்டது. இனி உங்கள் பிள்ளைகளின் சாதனைகளைப் பார்த்துப் பெருமையடையுங்கள். அதற்காவது நீங்கள் இருக்க வேண்டாமா? இருப்பதும் இருக்காததும் நமது கையிலா இருக்கிறது?” என்றாள்.

மகாராஜா ஏதோ மேலும் பேசப் போனார். அந்தச் சமயத்தில் இரு தாரைகள் பெரிதாக சப்திக்க, கீழே புரவியில் அமர்ந்திருந்த வர்த்தன சகோதரரிருவரும் தங்கள் தலைகளை அண்ணாந்து பெற்றோர்களை நோக்கிவிட்டு கரங்களையும் குவித்தார்கள். மகாராஜா மேலிருந்தே இரைந்து சொன்னார், “ஜயவிஜயீபவா” என்று. அதே கோஷம் கீழேயிருந்த உதவிப் படைத் தலைவர்களாலும் கிளப்பப்பட்டுத் திருப்பி ஒலிக்க, அந்த ஒலிகளுடன் இரண்டு சகோதர்களின் புரவிகளும் நகர்ந்தன.

அவர்கள் போவதை, போவதிலிருந்த கம்பீரத்தை, மகாராஜாவும் மகாராணியும் பார்த்து மகிழ்ந்துகொண்டிருந் தார்கள்.. பிள்ளைகளின் தலைகள் வெளி மதின்களுக்கு அப்பால் மறைந்ததும் மகாராஜாவின் மனம் சோபை இழந்தது. மகாராணி கண் கலங்கினாள். மகாராஜா மகாராணிக்குத் தைரியம் சொன்னார். “யசோவதி! கலங்காதே. இது அரசகுலத்தாரின் நியதி” என்று.





“நீங்கள்தான் அதிகமாகக் கலங்கியிருக்கிறீர்கள்” என்று மகாராணி மகாராஜாவுக்குத் தைரியம் சொன்னாள்.

இப்படிப் பரஸ்பரம் தைரியம் சொல்லிக்கொண்டு அந்தத் தம்பதிகள் கடத்திய நாட்களில் முப்பது ஓடிவிட்டன. இமயமலைச் சாரலை முதல் பத்து நாட்களில் அடைந்துவிட்ட ராஜ்யவர்த்தனன் ஆரம்ப திட்டத்தைச் சிறிது மாற்றினான். அந்த மாறுதலால் தானேசுவரம் பிழைத்தது. ஆனால் கன்னோசி பிழைக்கவில்லை.

## 33

# கௌட சசாங்கன்

தானேசுவரத்திலிருந்து புறப்பட்ட ராஜ்யவர்த்தனன் இரண்டு நாட்களுக்கு ஓர் இரவு வண்ணம் படைகளுக்கு ஓய்வு அளித்து, மற்ற சமயங்களில் படைகளை நடத்தி, பத்தாவது நாள் மாலையில் இமயமலைச் சாரலின் ஆரம்பக் காட்டுப்பகுதியில் பாசறை அமைத்தான். அன்றிரவு படைகளுக்கு ஓய்வு அளித்த ராஜ்யவர்த்தனன், இரவில் எங்கும் விளக்குகள் ஏற்றப்பட்டதும் தனது கூடாரத்து முகப்பில் நின்று நீண்ட தூரம் பரவிக் கிடந்த தனது பெரும் படையைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் படைகளை ஒருமுறை பார்வையிட நிச்சயித்து தனது புரவியையும் தம்பியின் புரவியையும் கொண்டுவரச் சொல்லி, "தம்பி! வா படையை ஒரு முறை பார்த்து வருவோம்" என்று கூற, என்ளென்பதற்கு முன்பு எண்ணெய் என்று நிற்கும் ஹர்ஷனும் புரவிமீது ஏறினான். தம்பி பின்தொடர படைப் பிரிவுகளுக்கு இடையே சென்ற ராஜ்யவர்த்தனன், ஆசார்ய பண்டி படைகளைப் பிரிக்கும் திறமையை நினைத்து வியந்தான். ஐம்பதினாயிரம் புரவிப் படைகளும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இடையே பாதை விட்டுத் தங்கும்படியாகச் செய்திருந்தார் பண்டி. ஒவ்வொரு படைப் பிரிவின் புரவிகளை நிறுத்த ஆங்காங்கு



தனி இடங்களையும் ஏற்பாடு செய்தார். புரவிக் கூட்டமும் படைப்பிரிவுக் கூட்டமும் தனித்தனியாக அக்கம் பக்கத்திலிருந்ததால், எந்த நிமிஷத்திலும் படைவீரர், புரவிகளுக்குச் சேணம் அணிவித்துப் புறப்படச் சித்தமாயிருந்தனர். இந்த ஏற்பாட்டையும், துயிலும் நேரத்திலும் படைகள் துடித்தெழச் சித்தமாயிருந்ததையும் கண்ட ராஜ்யவர்த்தனன், "தம்பி! ஆசார்ய பண்டி படைகளை நிர்வகிக்கக் கிடைத்தது தானேசுவரத்தின் அதிர்ஷ்டம்" என்றான்.

"ஆம் அவரைவிட படைகளை நிர்வகிக்கக் கூடியவர் வடபாரதத்தில் இல்லை என்ற பேச்சும் பரவியிருக்கிறது" என்றான் ஹர்ஷன்.

சில விநாடிகள் சிந்தனையில் இறங்கிய ராஜ்ய வர்த்தனன், "தம்பி! இத்தனை பெரிய படை ஹூணர்களை அடக்கத் தேவையா?" என்று வினவினான்.

"அதைத் தீர்மானிக்க வேண்டியது நீயும் ஆசார்ய பண்டியும் அண்ணா!" என்று ஹர்ஷன் அடக்கத்தைக் காட்டினான்.

படை மர்மங்கள், போர்த் தந்திரங்கள் இத்தனையும் அறிந்த ஹர்ஷன் அடக்கத்தைக் காட்டுவதைக் கண்ட ராஜ்யவர்த்தனன், "தம்பி! உன் அடக்கத்தை மெச்சுகிறேன். ஆனால் இந்தப் படை முழுவதும் முன்னேறுவதும் முன்னேறாததும் ஆசார்ய பண்டி எதிரிப் படைபலத்தை அறிய அனுப்பியுள்ள ஒற்றர்கள் கொண்டுவரும் செய்தியைப் பொறுத்தது" என்றான்.

இப்படிப் பேசிக்கொண்டே முதல் ஜாமம் முடிய படைகளைப் பார்வையிட்ட ராஜ்யவர்த்தனன் இரண்டாம் ஜாம முடிவில் தனது கூடாரத்தை அடைந்தான். இருவரும் உணவருந்தியபிறகு அக்கம் பக்கத்தில் வால்மீகி ஆசிரமத்தில் படுத்த குசலவர்களைப்போல் படுத்துக் கொண்டார்கள்.

படுத்ததும் உடனடியாக நித்திரை வசப்படாத ராஜ்ய வர்த்தனன் மேலும் பேச்சுக் கொடுத்தான். "தம்பி! இந்த இமாலய அடிவாரத் தரை நன்றாயிருக்கிறது பார்த்தாயா!" என்று வினவினான்.

"தரைக்கு இணை தரைதான். தாய் மண்ணுக்கு இணையாக வேறு எதைச் சொல்ல முடியும்?" என்று வினாத் தொடுத்தான் ஹர்ஷன்.

ராஜ்யவர்த்தனன் மேலும் பேசத் துவங்கி, "தம்பி, ஹர்ஷா!" என்று செல்லமாக அழைத்தான்.

"என்ன அண்ணா!" தம்பியின் கேள்வியில் அன்பு சொட்டியது.

"நமது பெற்றோர்களுக்கிருப்பது நாம் இருவர்தான்" என்றான் ராஜ்யவர்த்தனன். பேச்சை முடித்தானில்லை.

தமையன் எதற்காகப் பாசறையில் குடும்பப் பேச்சைக் கிளப்புகிறானென்பதை அறியாத ஹர்ஷன், "ஏன் அண்ணா ராஜ்யஸ்ரீ இல்லையா?" என்று கேட்டான்.

"பிறர் வீட்டைச் சேர்ந்தவள். திருமணமான அன்றே அவள் பெயர், குலம் எல்லாமே மாறிவிட்டது தம்பி. அவள் நமது தங்கைதான். ஆனால் இன்னொருவனை அணைந்தவள். ஆகவே இன்னொரு அரசைச் சேர்ந்தவள்" என்ற ராஜ்ய வர்த்தனன், "தம்பி! நீயும் நானும்தான் இனி பெற்றோரைப் பார்க்க வேண்டியவர்கள்" என்றும் சொன்னான். இதைச் சொன்ன ராஜ்யவர்த்தனன் சோகப் பெருமூச்சு விட்டான்.

ஹர்ஷன் அவன் சோகத்தைக் காணவே செய்தான். ஆகவே கேட்டான், "அண்ணா! பாசறையில் பேச வேண்டிய பேச்சல்ல இது. இப்பொழுது யோசிக்க வேண்டியதெல்லாம் நமது குடிமக்களைப்பற்றி, ஹூணர்களின் அட்ட காசத்தைப்பற்றி, போரைப்பற்றி இல்லையா அண்ணா?" என்று.



ராஜ்யவர்த்தனன் தம்பியின் சொற்களைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்தான். "உண்மை தம்பி! இருப்பினும் நாம் மனிதர்கள், பெற்றோரைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய கடமை நமக்கிருக்கிறது" என்ற ராஜ்யவர்த்தனன் பேச்சை நிறுத்தினான்.

ராஜ்யவர்த்தனன் காரணமில்லாமல் எந்தப் பேச்சையும் துவங்கமாட்டான் என்பதை உணர்ந்திருந்த ஹர்ஷன், "அண்ணா!" என்று மெதுவாக அழைத்தான்.

"என்ன தம்பி!"

"அண்ணா. நீ காரணமில்லாமல் எதையும் பேசமாட்டாய்–"

"ஆம்."

"இப்பொழுதும் மனத்தில் எதையோ வைத்துக் கொண்டு பேசுகிறாய்."

"அத்தனை கபடனா நான்?"

"இல்லை அண்ணா. நீ கபடன் இல்லை வீரன். வீரன் கபடனாயிருக்க முடியாது. ஆனால் எதையோ மறைக்கப் பார்க்கிறாய். மனம் விட்டுச்சொல்"

ராஜ்யவர்த்தனன் மெதுவாகப் பேசினான். "தம்பி! போர் என்றால் அதில் எந்த நாசத்தையும் எதிர்பார்க்கலாம்" என்று துவங்கினான்.

ராஜ்யவர்த்தனன் மனத்தை அவிழ்க்க முன்வந்து விட்டானென்று புரிந்துகொண்ட ஹர்ஷன், "ஆம் அண்ணா" என்று ஆமோதித்தான்.

"போரில் யார் உயிரும் நிலையல்ல" என்றான் ராஜ்ய வர்த்தனன்.

"இது தெரிந்ததுதானே?" என்றான் ஹர்ஷன்.

"தந்தை தாய்க்கு நமது இருவரில் ஒருவர் துணை தேவை. தவிர, சில நாட்களாகப் பல அபசகுனங்கள் குடும்பத்தில்

ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே நம்மிருவரில் ஒருவராவது தந்தையின் தூது எட்டும் இடத்தில் இருக்க வேண்டும்" என்ற ராஜ்யவர்த்தனன் சிறிது நிதானித்தான்.

"அதனால்?"

"நீ இந்த இமயமலையின் அடிவாரத்தில் தங்கிவிடு."

"இதைக் கேட்ட ஹர்ஷன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான். "என்ன சொன்னாய் அண்ணா?" என்று சீறினான்.

"சொன்னது புரியவில்லையா? தெளிவாகத்தானே சொன்னேன்."

"மிகத் தெளிவு அண்ணா! நீ போருக்குச் செல்ல நான் இங்கு தங்கி சுகப்பட வேண்டும்?"

"சுகப்பட உன்னை இங்கிருக்கச் சொல்லவில்லை. எந்தப் படைக்கும் பின் பாதுகாப்புத் தேவை. கிட்டத்தட்ட ஹூணர் களுக்கு அருகில் வந்துவிட்டோம். அவர்கள் எங்கு தாக்குவார்கள். எப்படித் தாக்குவார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே என் முதுகுக்கு நீ பாதுகாப்பு அளித்துக் கொண்டிரு. எந்தச் செய்தி வந்தாலும் எந்த நிகழ்ச்சி வந்தாலும் எனக்குத் தெரியப்படுத்து." இப்படிக் கூறிய ராஜ்யவர்த்தனன் மேற்கொண்டு மௌனம் சாதித்தான். ஹர்ஷன் தமையன் முடிவை மாற்றச் செய்த முயற்சிகள் பயனற்றுப் போயின.

மறுநாள் தனது முடிவுக்கு உருக்கொடுத்த ராஜ்ய வர்த்தனன் ஆசார்யரையும் உபதலைவர்களையும் கூட்டிப் பேசினான். "ஆசார்யரே? உபதலைவர்களே! நமது படையில் முக்கால்வாசி ஹூணர்களை எதிர்த்துச் செல்லும். கால்வாசி இங்கிருந்து நமது பின்புறம் தாக்கப்படாதிருக்கப் பாதுகாப்பு அளிக்கும். அந்தக் கால்வாசிப் படைக்கு ஹர்ஷன் தலைமை வகிப்பான்." என்று அறிவித்தான்.



இரண்டொரு படைத் தலைவர்கள் ஏதோ ஆட்சேபிக்க முயலவே அவர்களைக் கையமர்த்தி உட்காரச் செய்த ராஜ்யவர்த்தனன், "ஹர்ஷன் இங்கிருப்பதில் இரண்டு சௌகரியங்கள் இருக்கின்றன. ஒன்று படைக்குப் பின்னணிப் பாதுகாப்பு. இன்னொன்று நமது தலைநகரச் செய்திகளை அவ்வப்பொழுது அறிந்து முன்னணிக்குச் செய்தி அனுப்புவது. ஆகவே ஹர்ஷன் இங்கு தங்குவான்" என்று முடிவாகச் சொன்னான். மற்றவர்கள் சொன்ன யோசனைகளைக் காதிலும் வாங்கிக் கொள்ளவில்லை அவன். அன்று உணவு நேரத்தில் ஹர்ஷன் கேட்டான். "அண்ணா! இந்த முடிவு உனக்கு தானேசுவரத்தில் இல்லையே!" என்று.

"இருந்தது தம்பி! நான் சொல்லத்தான் இல்லை. தம்பி எனக்கு உள்ளூர ஓர் அச்சம் ஏற்படுகிறது. நேற்றிரவு தூங்கிய போது கிட்டத்தட்ட விடியற்காலையில் நமது தந்தையின் நோய் தீவிரப்பட்டுவிட்டதாகக் கனவு கண்டேன். அதனால் எதற்கும் உன்னை தானேசுவரத்திலிருந்து அழைக்கும் தூரத்தில் இருத்திவிடத் தீர்மானித்தேன்" என்று ராஜ்யவர்த்தனன் காரணத்தை விளக்கினான்.

ஹர்ஷனுக்கு அண்ணன் பேச்சு மிக விசித்திரமா யிருந்தது. "அண்ணா! கனவுக்கா அஞ்சுகிறாய்?" என்று வினவினான்.

"கனவுக்கு அர்த்தமுண்டு தம்பி!" என்றான் தமையன்.

"அண்ணா! அனாவசியமாக அஞ்சுகிறாய். நமது பெற்றோர்க்கு எந்தக் கெடுதலும் வராது. என்னை இங்கு விட்டு நீ போருக்குப் போகாதே" என்று வேண்டினான் ஹர்ஷன்.

"ஹர்ஷா! நான் முடிவு செய்துவிட்டேன்." இதைத் திட்டமாகச் சொன்னான் ராஜ்யவர்த்தனன்.

"அண்ணா! உன்னைத் தனியே ஹூணர்களிடம் அனுப்பமாட்டேன்" என்றான் ஹர்ஷன்.

"சொல்வதைக் கேள். நீ என் தம்பி."

"தர்மமானதைத்தான் கேட்கலாம். ராமன் சொன்னதை லட்சுமணன் கேட்கவில்லை! ராமனுடன் வனம் சென்றான்" என்று புராண உவமை காட்டினான் ஹர்ஷன்.

ராஜ்யவர்த்தனன் புன்முறுவல் கொண்டான். "ஹர்ஷா! நீ லட்சுமணன் அல்ல" என்று சொன்னான்.

"ஏன் எனக்கு வீரமில்லையா? உன்னிடம் பக்தி யில்லையா?"

"இருக்கிறது. ஆனால் லட்சுமணன் பக்தியைவிட பரதன் பக்தி சிறந்தது என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். ராமன் சொன்னதை சிரமேல் வகித்த தம்பி பரதன், நீயும் பரதனாயிரு. இந்த இடம்தான் உனக்கு நந்திக்கிராமம்" என்ற ராஜ்யவர்த்தனன் உணவை உண்டு முடித்துக் கையலம்ப வெளியே சென்றான்.

ஹர்ஷன் தீவிர சிந்தனையில் இறங்கினான். "இதெல்லாம் எங்கு கொண்டு போய்விடுமோ" என்று எண்ணினான். ஆனால் அண்ணன் முடிவு மாறாது என்ற காரணத்தால் பேசினானில்லை. அண்ணன் முடிவுக்குத் தலை வணங்கினான்.

அன்று மாலைக்குள் ஹூணர்கள் படைத்தளம் பற்றி தூதர்கள் செய்தி வந்ததும் ராஜ்யவர்த்தனன் வடமேற்கு நோக்கித் தனது படைகளை நகர உத்தரவிட்டான். போகு முன்பு பாசறைக் கூடாரத்தில் தம்பியைக் கட்டியணைத்து, "தம்பி! எதற்கும் அஞ்சாதே. சீக்கிரம் வெற்றியுடன் வருவேன்" என்று கூறி வெளியே செல்ல ஓர் அடி எடுத்து வைத்தபோது அவனது தலை கூடாரத்தில் இடித்தது லேசாக.

"அண்ணா! சற்று உட்கார்ந்துவிட்டுப் போ. தடையா யிருக்கிறது" என்றான் ஹர்ஷன்.



ராஜ்யவர்த்தனன் பெரிதாக நகைத்தான். "தம்பி! கூடாரத்தை இன்னும் சற்று உயர்த்திப் போட்டிருந்தால் தலையில் இடித்திராது. இதற்கெல்லாம் பார்த்தால் மனிதன் சஞ்சாரமே கஷ்டமாகிவிடும்" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுக் கூடாரத்தைவிட்டு வெளியே வந்து புரவியில் தாவி ஏறினான். பிறகு கையை உயர்த்த முரசு ஒலித்தது. படைகள் நகர்ந்தன.

அண்ணன் போவதை ஹர்ஷன் கூடாரத்துக்குப் பக்கச் சீலையைப் பிடித்துக்கொண்டே பார்த்திருந்தான். அவனது இடக்கண் துடித்தது. ஹர்ஷன் நிம்மதி இழந்து நின்றான். ஏதோ பெரிய விபரீதம் தனது குடும்பத்துக்குக் காத்திருக்கிறது என்று நினைத்தான்.

உண்மையில் பெரிய விபரீதத்துக்கு அப்பொழுது கௌட ராஜ்யத்தில் வித்து ஊன்றப்பட்டு வந்தது. கௌட மன்னனான சசாங்கனும் மாளவ மன்னனான தேவகுப்தனும் கௌட அரண்மனையில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். "சசாங்கா! உன் மூளை சகுனியின் மூளையைவிடச் சிறந்தது" என்று கூறி நகைத்தான் தேவகுப்தன்.

"உன்னுடைய விரோதம் துரியோதனன் விரோதத்தை விட ஆழமானது" என்றான் சசாங்கன் பதிலுக்கு. விழுந்து விழுந்து சிரிக்கவும் செய்தான்.

"அப்படியானால் வேட்டைக்கு எப்பொழுது கிளம்பலாம்?" என்று தேவகுப்தன் கேட்டான்.

"மதியூகி வரட்டும். நிலை அறிந்து பாணம் தொடுப்போம்" என்றான் சசாங்கன்.

அந்தச் சமயத்தில் உள்ளே நுழைந்த பணிமகன் ஒருவன் இரு மன்னர்களுக்கும் தலைவணங்கி, "தங்களைக் காண மதியூகி வந்திருக்கிறார்" என்று அறிவித்தான்.

34

# மஞ்சள் உடை

பணிமகன் அறிவிப்பைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த கௌட ஒற்றனான மதியூகி இரு மன்னர்களுக்கும் தலை வணங்கி நின்றான். கௌட சசாங்கனின் சதிக்கண்கள் மதியூகியைக் கூர்ந்து நோக்கின. 'காற்று எப்படி இருக்கிறது' என்று சங்கேத பாஷையில் வினவின சசாங்கன் உதடுகள்.

மதியூகி வளவளவென்று சொற்களைக் கொட்டவில்லை. "அனுகூலமாகத்தான் இருக்கிறது" என்று அவனும் பதில் சொன்னான் இரண்டே சொற்களில்.

"எப்படி?" என்று கௌடன் வினவினான்.

"தானேசுவர மகாராஜா மிகவும் நோய் வாய்ப்பட்டிருக்கிறார். அதிக நாள் இருக்கமாட்டார் என்று தெரிகிறது" என்று இழுத்தான் மதியூகி.

அதுவரை வாளாவிருந்த தேவகுப்தன், "மேலே சொல். காலதாமதம் செய்யாதே" என்று உஷ்ணத்துடன் பேசினான்.

நண்பனைத் திரும்பி நோக்கிய கௌட சசாங்கன், "தேவகுப்தா! அவசரப்படாதே. மதியூகிக்கு விஷயத்தை எப்படிச் சொல்வது என்பது தெரியும்" என்று சொல்லி விட்டு மதியூகிமீது மீண்டும் கண்களை நிலைக்க விட்டான்.



மதியூகியின் கிருத்திரமக் கண்கள் தேவகுப்தனை விஷமத்துடன் நோக்கின. பிறகு சசாங்கனை நோக்கித் திரும்பின. மகாராஜா! தானேசுவர மன்னர் படுத்த படுக்கையாயிருக்கிறார். அவருடைய இரு குமாரர்களும் ஹூணர்களை அடக்க வடமேற்கு எல்லைக்குப் போய் விட்டார்கள். கிருகவர்மன் ராஜ்யத்தைப் பிரதான மந்திரி கவனித்து வருகிறார்" என்று சொன்னான் நிதானமாக.

"அப்படியானால் தானேசுவர ராஜ்யத்தைத் தாக்கினால் என்ன?" என்று தேவகுப்தன் கேட்டான்.

மதியூகி தனது கண்களை தேவகுப்தனை நோக்கித் திருப்பினான். "முடியாது மகாராஜா, நமது இரு ராஜ்யங்களையும் சேர்த்து முறியடிக்கவல்ல வலுவான படை பலம் தானேசுவரத்தினிடமிருக்கிறது. பிரபாகவர்த்தனன் புத்திரர்கள் இல்லாவிட்டாலும், படுத்த படுக்கையிலிருந்து படைகளை நடத்த வல்லவர், படைத்தலைவர்களும் பல போர்களைக் கண்டவர்கள்" என்று கூறினான்.

"கன்னோசியைத் தாக்கினால்?" மீண்டும் எழுந்தது தேவகுப்தன் குரல்.

"தானேசுவரம் உடனடியாக அதைப் பாதுகாக்க வரும்" என்றான் மதியூகி.

இருவர் உரையாடலிலும் அதுவரை தலையிடாத சசாங்கன் மெதுவாகக் கேட்டான். "மதியூகி! இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்யலாம்?" என்று.

மதியூகியின் கண்கள் சசாங்கனை நோக்கின அர்த்த புஷ்டியுடன். "மகாராஜா! கொஞ்ச நாளாக கிருகவர்மர் அரண்மனையின் அந்தப்புரத்தில் மறைந்து கிடக்கவில்லை" என்று மெதுவாகப் பேசினான்.

சாசங்கன் அவனை இடைமறிக்கவில்லை. அனாவசியமான கேள்விகளைக் கேட்கவுமில்லை. "சொல் மதியூகி" என்று மட்டும் சொன்னான்.

மதியூகி தொடர்ந்தான். "மகாராஜா! ராஜ்யஸ்ரீயின் தூண்டுதலின்மேல் கிருகவர்மர் அடிக்கடி வேட்டைக்குப் போகிறார். ராஜ்யஸ்ரீயும் உடன் செல்லுகிறாள். கிருகவர்மன் மோகத்தால் ஏற்பட்ட வதந்திகளை அலச முயலுகிறாள். சில சமயங்களில் அவளே படைகளைப் பார்வையிடுகிறாள். ஆனால் இத்தனைக்கும் கிருகவர்மன் மசியாததால் வேட்டை எனும் வியாஜத்தை வைத்து அவர் புத்தியை மாற்றப் பார்க்கிறாள். அடிக்கடி வேட்டைக்குப் போய் காட்டில் பல நாள் இருவரும் தங்குகிறார்கள். அங்கும் கிருகவர்மன் உல்லாசமாகப் பொழுதைப் போக்குகிறான்; அவள் வேட்டைக்குப் போகும்போது இவன் ஜலக்கிரீடை செய்கிறான். அவன் புத்தி இப்பொழுது ராஜ்யத்தில் இல்லை. ராஜ்யஸ்ரீயின் கேளிக்கையில் இருக்கிறது" என்று கூறினான். அத்துடன் மேலும் சொன்னான் : "அவனுக்கு வேட்டை ஸ்தலங்களைச் சொல்லும் வேடன் நமக்கு வேண்டியவன். நமது நாட்டை அடுத்த கங்கைக் காடுகளில் வேட்டை நிரம்ப இருப்பதாகவும், கங்கா ஜலமும் கிரீடைக்கு உகந்ததென்றும் அவனை விட்டு கிருகவர்மரிடம் சொல்லச் செய்தேன். கிருகவர்மர் துள்ளியெழுந்தார் ஆவலுடன். ஆனால் ராஜ்யஸ்ரீ சந்தேகித்தாள். அது கன்யாகுப்ஜத்தின் தெற்குக் கோடியிலிருப்பதாலும், கௌட ராஜ்யத்தின் எல்லையின் அருகேயிருப்பதாலும் அங்கு செல்வது உசிதமில்லையென்று நிராகரித்து விட்டாள். ஆனால் கிருகவர்மர் ஜலக்கிரீடை ஆசையால் நமது எல்லைக் காட்டுக்கு வருவதாகத் தீர்மானித்திருக்கிறார். மெள்ள அவர் ஆசையை உந்த நமது வேடன் இருக்கிறான்" என்று.

சசாங்கன் குரூரமாகப் புன்முறுவல் செய்தான். "நமது நாட்டு எல்லைக் காட்டுக்கு வந்துவிட்டால் கிருகவர்மனை நாம் சந்திக்கலாம்" என்று குரூரமான குரலில் சொன்னான்.

இருவர் உரையாடலையும் கேட்ட தேவகுப்தன் உள்ளூர மகிழ்ந்தான். இருப்பினும் வீரனான அவனுக்கு



சசாங்கன் முறை பிடிக்காததால், "சசாங்கா! இந்தமாதிரி சூழ்ச்சியைத் தவிர வேறு வழியில்லையா?" என்று வினவினான்.

"இது சூழ்ச்சியல்ல. இந்த மாதிரி விஷயங்களுக்கு ராஜதந்திரம் என்றும் ஒரு பெயர் உண்டு" என்று கூறி நகைத்தான் சசாங்கன் விபரீதமாக.

"சரி மதியூகி! கிருகவர்மன் இங்கு வரும் சமயம் அறிந்து சொல். நாமும் வேட்டையாடுவோம்" என்று தனது ஒற்றனுக்கு விடை கொடுக்க மதியூகி வெளியே சென்றான்.

அவன் சென்றதும் தேவகுப்தன் வினவினான். "சசாங்கா! நாம் ஏன் வேட்டையாட வேண்டும்?" என்று.

"நாம் வேட்டையாடப் போவது மிருகங்களை அல்ல" என்றான் சசாங்கன்.

"வேறு யாரை?"

"கிருகவர்மனை"

"ராஜ்யஸ்ரீ உடனிருப்பாளே?"

"இருந்தாலென்ன?"

"அவள் வாளைச் சுழற்றுவதில் நிகரற்றவள்."

"நான் செயல்படும்போது அவளிடம் வாளிருக்காது" என்ற சாசங்கன், "பொறுத்திரு தேவகுப்தா! உன்னை வாட்போரில் தோற்கடிக்க அந்தக் கர்வம் பிடித்தவளை உன் காலடியில் கொண்டுவந்து கிடத்துகிறேன்" என்றும் கூறினான்.

அவன் மனத்திலோடிய எண்ணங்கள் திட்டமாகத் தெரியவில்லை தேவகுப்தனுக்கு. இருப்பினும் ஏதோ பெரிய விபரீதத்துக்கு சசாங்கன் அடிகோலுகிறான் என்பது மட்டும் தெரிந்தது. பரம துஷ்டனான தேவகுப்தனுக்குக்கூட சசாங்கன் போக்கு அடியோடு பிடிக்காவிட்டாலும்

ராஜ்யஸ்ரீயிடம் அடைந்த அவமானத்துக்கு வேறு பரிகாரம் தெரியாததால் சசாங்கன் வழியிலேயே சகலத்தையும் விட்டு மாளவத்துக்குப் புறப்பட்டான்.

சசாங்கன் மிகவும் பயங்கரமான ஒரு திட்டத்தைச் சித்தம் செய்தான். அதைச் செயல்படுத்தும் வேலைகளில் மதியூகியைப் பெரிதும் பயன்படுத்தினான். தானேசுவரத்தின் கெட்ட காலம் சசாங்கனுக்குப் பெரிதும் துணை செய்தது. பிரபாகர வர்த்தனனுக்குக் கொடிய சுரம் அடிக்கடி வந்து காலக்கிரமத்தில் அவனைத் துரும்பாக அடித்துவிட்டது. வைத்தியர்கள் எத்தனையோ முயன்றும் அடிக்கடி வந்த அந்த விஷக்காய்ச்சலை நிறுத்த முடியாததால் மகாராணியிடம் சொன்னார்கள். "மகாராணி! மன்னர் உடல்நிலை திருப்திகரமாக இல்லை" என்று.

மகாராணி மிகுந்த வேதனையிலிருந்தாள். இருப்பினும் இயற்கையாக இருந்த துணிவைக் கைவிடாமல், "சரி! பிள்ளைகளுக்குச் சொல்லியனுப்புகிறேன்" என்றாள். அன்றே ஒரு தூதனையும் அனுப்பினாள். தூதனால் ராஜ்யவர்த்தனனை அணுக முடியவில்லை. ஹர்ஷ வர்த்தனனையே சந்தித்தான்.

அப்பொழுது பகல் நேரம். ராஜ்யவர்த்தனன் உத்தரவுப்படி இமயமலைச் சாரலில் தங்கிய ஹர்ஷன் பொழுது போக வேட்டையாடிக் கொண்டிருந்தான். தூதன் வந்த சமயத்தில் தோளில் தான் அடித்த ஒரு காட்டு மான்குட்டியைப் போட்டுக்கொண்டு தனது பாசறைக் குடிலுக்கு வந்தான். அவனுக்குத் தலைவணங்கிய தூதன், "மகாராணி அனுப்பினார்கள்" என்றான்.

ஹர்ஷன் தோளிலிருந்து மான் குட்டியைக் கீழே போட்டான். "மகாராணியா!" என்று வினவினான் சந்தேகத்துடன்.

"ஆம் இளவரசே" என்றான் தூதுவன்.



"என்ன விஷயம்? மகாராஜாவும் மகாராணியும் நலந்தானே?" என்று சந்தேகத்துடன் வினவினான் ஹர்ஷன், தூதுவன் முகத்திலிருந்த சோகத்தைக் கவனித்து.

"மகாராணி நலந்தான்...." தூதன் சொற்களை விழுங்கினான்.

"மகாராஜா?" கேட்டான் ஹர்ஷன்.

தூதன் பதிலுக்குத் தன் மடியிலிருந்த முத்திர ஓலையைக் கொடுத்தான். அதைப் பிரித்துப் படித்த ஹர்ஷன் அதிர்ச்சியடைந்தான். அதில் மகாராணி இரண்டே வரிகளை எழுதி இருந்தாள். "மகனே ஹர்ஷா! உன் அண்ணனையும் அழைத்துக்கொண்டு வா. உன் தந்தை உடல்நிலை திருப்தியாக இல்லை" என்று.

ஹர்ஷன் ஓலையைப் பலமுறை படித்து ஸ்தம்பித்து நின்றான். "யாரங்கே என் புரவியைக் கொண்டுவா" என்று உத்தரவிட்டான்.

"அவசரமில்லை ராஜபுத்ரா! நீராடி உணவருந்தி வாருங்கள்" என்றான் தூதன்.

ஹர்ஷன் பதில் சொல்லவில்லை. வீரனொருவன் கொண்டு வந்த தனது புரவியில் தாவி ஏறினான். "படை இங்கேயே இருக்கட்டும். அண்ணன் கேட்டால் உதவிக்கு விரையட்டும்" என்று தனது படைத்தலைவனுக்கு உத்தரவிட்டுப் புரவியை வாயு வேகத்தில் செலுத்தினான் தானேசுவரப் பாதையில்.

வழியில் எங்கும் தாமதிக்கவில்லை. ஹர்ஷன் இரண்டே நாளில் தானேசுவரத்தை அடைந்து அதன் வீதிகளில் புகுந்தான். எப்பொழுதும் மகிழ்ச்சியுடனிருக்கும் தானேசுவரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்தது. வேகமாக அரண்மனை அடைந்து உள்ளே ஓடி, "மன்னர் எப்படியிருக்கிறார்?" என்று கேட்டான்.

அவனை எதிர்கொண்ட மகாமந்திரி, "அரச குமாரனே! முதலில் மகாராணியைப் பாருங்கள்; மன்னரைப் பார்க்க அவகாசமிருக்கிறது" என்றார்.

ஹர்ஷன் ஓடினான் அந்தப்புரத்துக்கு. அங்கு மகாராணி நின்றிருந்தாள் மஞ்சள் ஆடையணிந்து மகாலஷ்மிபோல், அவள் கண்களில் சோகம் ததும்பி நின்றது.

"அம்மா!" என்று அவளை நெருங்கினான் ஹர்ஷன்.

மகாராணி அவனை அணைத்துக்கொண்டாள். "ஹர்ஷா! சமயத்தில் வந்துவிட்டாய். உன் அண்ணன் வரவில்லையா?" என்று வினவினாள்.

"இல்லை, போர் முனையில் இருக்கிறான்" என்றான் ஹர்ஷன்.

"நல்லது, நீயாவது வந்தாயே" என்ற மகாராணி, வா உன் தந்தையைப் பார்ப்போம்" என்றாள்.

"அம்மா!" ஹர்ஷன் துவங்கினான் பேச்சை.

"என்ன ஹர்ஷா?"

"இந்த மஞ்சள் உடை?"

"மஞ்சள் உடையா? உன் தந்தை விளக்குவார். வா போகலாம்" என்றாள்.

அது தீக்குளிக்கும் ஸதியின் உடை என்பதை ஹர்ஷன் அறிந்திருந்தான். அவன் உள்ளம் குருதி பெருக்கி அலறியது. ஆனால் ராஜமாதா சிறிதும் முகம் சுளித்தாள் இல்லை. திட்டமாக நடந்து சென்றாள் மன்னன் அறையை நோக்கி.

35

# கங்கைக் கரை பர்ணசாலை

மகாராணியை ஸதியின் உடையில் பார்த்த ஹர்ஷன் உள்ளம் பெரும் துக்கத்தால் வெடித்துக்கொண்டிருந்தது. அவள் அணிந்திருந்த மஞ்சள் சேலையுடன் கழுத்தைச் சுற்றிச் சிவப்பு நிறத் துணியொன்றை (ரத்த பத்தாம்ஸுக) அணிந்திருந்தாள். அவள் உடல் முழுவதும் குங்குமப்பூ அப்பப்பட்டிருந்தது. அவள் கழுத்து சிவப்புத் துணியின் ஒரு மூலையில் சிவந்த புஷ்பக்கொத்து ஒன்று முடியப் பட்டிருந்தது. தீக்குளிக்க இருந்த அவள் தீயின் நிறத்திலேயே சிவப்பு அணிகலன்களை அணிந்திருந்தாள். அவள் கையில் மகாராஜாவின் சூலாயுதம் ஒன்றும் இருந்தது. அதன் நுனியில் ஒரு சிவந்த கொடியும் காணப்பட்டது. இப்படி *ஸதி உடை அணிந்தவளின் காலில் விழுந்து கோவென்று கதறினான் ஹர்ஷன். மகாராணி குனிந்து மைந்தனை வாரியெடுத்து, "ஹர்ஷா! கலங்காதே நீ புஷ்பவதி வம்சத்தில் வந்தவன். மகாவீரரான பிரபாபகரவர்த்தனன் மகன். ஆகவே, அழுகையை விடு. வீரனாக நடந்துகொள்" என்றாள்.

---

* For full description of Yasovathi's Sathi Garments see BANA'S Harsha charihra and also the Deeds of **Harsha** - By **Prof. Vasudev S. Agarwala** Chapter V - Page 123

ஹர்ஷன் தாயின் மார்புமீது தலையை வைத்துக் கதறினான், "என்னைவிட்டுப் போகிறாயா அம்மா?" என்று.

"இல்லை ஹர்ஷா! நான் போனபின்னும் உன் அருகில் இருப்பேன். இந்த மானிட உடல் என்றும் அழியக்கூடியது. அதை உன் தந்தைக்கு முன்னால் அக்னிக்கு அளிக்கிறேன். நான் விதவையாக வாழ விரும்பவில்லை. இது புதிதுமல்ல ஹர்ஷா. எனக்கு முன்பு நமது பாரதத்தின் வீர நாரீமணிகள் பலரும் ஸதியின் அந்தஸ்தை அடைந்திருக்கிறார்கள். வீரனாக நடந்துகொள்" என்று உறுதியுடன் கூறி மன்னன் அறையை நோக்கி நடந்தாள் மகாராணி.

அழுத்தும் இதயத்துடன் ஹர்ஷன் ராஜமாதாவைத் தொடர்ந்தான். மன்னன் அறைக்குள் நுழைந்த மகாராணி ஹர்ஷனைக் கையில் பிடித்து அழைத்துக்கொண்டு மகாராஜாவின் பஞ்சணை அருகில் சென்று பிள்ளையின் கையை மகாராஜாவின் கையில் வைத்தாள். ஹர்ஷன் தந்தையை நோக்கினான். பிரபாகரவர்த்தனன் உடல் துரும்பாயிருந்தது. சுர வேகம் அப்பொழுதுமிருந்ததால் தந்தையின் கை தணலெனச் சுட்டது ஹர்ஷனுக்கு. தந்தையின் கையை விட்டுத் தாள்களைத் தொட்டான் ஹர்ஷன். மகாராஜா மெள்ளக் கண் விழித்து யசோவதியைப் பார்த்தார். அவர் கண்களில் சோகம் கலந்த பெருமையின் சாயை படர்ந்து கிடந்தது. அவளைக் குனியும்படி சைகை காட்டினார். மகாராணி மெதுவாகக் குனிந்தவுடன், யசோவதி! இது அவசியமா?" என்று அவள் ஸதி உடையைக் காட்டிக் கேட்டார் பலஹீனமான குரலில்.

"உங்களுக்குப் பின் நான் இருக்க விரும்பவில்லை" என்றாள் மகாராணி.

புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார் மகாராஜா. "உங்கள் மகன் வந்திருக்கிறான்" என்றாள் மகாராணி.



"யார் ராஜ்யவர்த்தனனா?" என்று வினவிய மகாராஜா, "ஏன் போர் முடிந்துவிட்டதா?" என்று கேட்டார். மரணத் தருவாயிலும் ராஜ்யத்தின் நலனை நினைக்கும் கணவனை நோக்கிக் கண்ணீர் விட்டாள் மகாராணி.

"இல்லை. ஹர்ஷன் வந்திருக்கிறான்" என்று கூறி ஹர்ஷனை மகாராஜாவின் காலடியிலிருந்து இழுத்து மகாராஜா பார்க்கும்படி நிற்க வைத்தாள். மன்னன் லேசாகப் புன்முறுவல் செய்தார் மகனை நோக்கி. "வா ஹர்ஷா! சமயத்தில் வந்தாய்! உன் தாயை சொர்க்கத்துக்கு அனுப்பிவிட்டு வா. நான் அடுத்துப் போகிறேன். அவள் முன்னால் சென்று என்னை வரவேற்கத் தயாராயிருப்பாள். எப்பொழுதும் இப்படித்தான். அவள்தான் முன்பு" என்று தட்டுத் தடுமாறிய மகாராஜா அசதியால் கண்களை மூடினார்.

மகாராணி திடுக்குற்று மகாராஜாவைக் கவனித்தாள். அறை மூலையிலிருந்த வைத்தியர் ஓடி வந்து மன்னர் நாடியைப் பார்த்து, "ஒன்றுமில்லை மகாராணி! மகாராஜா மூர்ச்சையாயிருக்கிறார்" என்று தைரியம் சொல்ல மகாராணி கணவன் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு கிளம்பினாள். ஹர்ஷனும் உடன் செல்ல முற்படவே, "வேண்டாம் ஹர்ஷா! தந்தையின் பக்கத்தில் இரு. நீ இருக்க வேண்டிய இடம் அதுதான்" என்ற மகாராணி மெள்ள அறையை விட்டுக் கிளம்பினாள்.

வெளியே அவள் சேடிகள் அவளை சூழ்ந்துகொள்ள அந்தக் கூட்டம் அரண்மனை வாயிலை அடைந்தது. அங்கு அவளைக் காண மக்கள் திரண்டு நின்றார்கள். உப்பரிகைகளிலிருந்த மாதர்கள் கண்களில் நீரைப் பெருக்கினார்கள். பலர் விம்மினார்கள். இந்தத் துன்ப அலைகள் உந்த மகாராணி ரதத்தில் ஏறினாள். மரணத்தை நாடிச் சென்ற அவள் முகம் மலர்ந்து கிடந்தது.

பதிவிரதைகளுக்குக் கிடைக்கும் மகாபாக்கியம் தனக்குக் கிடைக்கப் போவதை எண்ணிச் சென்றாள் ரதத்தில். சரஸ்வதி நதிக்கரையில் அவள் தீக்குளிக்க ஏற்படுத்தப் பட்டிருந்த சிதையை நோக்கி உறுதியுடன் நடந்து சென்றாள். உறுதியுடன் அதில் ஏறித் திரும்பி அரண்மனையை நோக்கிக் கை குவித்தாள். சிதை மூட்டப்பட்டது. தீக்கதிர்கள் அவளைச் சூழ்ந்துகொண்டன. அவள் எதையும் லட்சியம் செய்யாமல் தன்னை அணைத்துக்கொண்ட தீயின் நடுவில் அக்னி தேவதைபோல் ஜொலித்தாள். அதை அடுத்த சில நிமிடங்களில் அரண்மனையின் அழுகை குரல்கள் ஆகாயத்தைப் பிளந்தன. மகாராணி போவதற்குக் காத்திருந்தவரைப் போல மகாராஜாவும் ஹர்ஷன் மடியில் தலையை வைத்து வீரசுவர்க்கம் புகுந்தார்.

எத்தனையோ வீர மரணங்களைப் பார்த்த அந்த தானேசுவர மாநகர் துன்பக் கோலம் பூண்டது. தந்தையின் பக்கத்தில் நின்ற ஹர்ஷன் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. அவனை அணுகிய மகாமந்திரி சொன்னார். "இளவரசே, உலகத்தில் யாரும் தப்பமுடியாத நியதி இந்த மரணம். ஆகையால் தைரியத்தை வரவழைத்துக் கொள்" என்று.

ஹர்ஷன் பதிலேதும் சொன்னானில்லை. தலை குனிந்து அந்த அறையிலிருந்து வெளியேறினான் மகாமந்திரியின் வேண்டுகோளின்படி. மகாமந்திரி சொன்னார்: "ஹர்ஷ வர்த்தனா! மன்னரை அலங்கரித்து அழைத்துப் போக ஏற்பாடு செய்ய வேண்டும். குறித்த காலத்தில் ஈமக் கடன்களைச் செய்ய நீ அழைக்கப்படுவாய். போய் உன் அறையில் இரு" என்று கூற ஹர்ஷன் புறப்பட்டான் அந்த அறையிலிருந்து. தனது அறைக்குள் நுழைந்ததும் அசையாத அவன் மனமும் அசைய கோவென்று கதறிப் பஞ்சணையில் தொப்பென்று விழுந்தான். அன்று முதல் உயிரற்றவனைப் போல் நடந்துகொண்டான்.



தந்தையின் ஈமக்கடன்களைப் புரோகிதரும் மந்திரிகளும் சொன்னபடி செய்து முடித்தான். பதினைந்து நாட்களைச் சுரணையின்றிக் கழித்தான். அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்தவர்களை ஏதோ பிரதிமையைப் போல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் யாருடனும் பேச வில்லை. பதினாறு நாட்கள் கழிந்ததும் முதன் முதலாக மகாமந்திரியுடன் பேசினான். மகாமந்திரி ஹர்ஷனை அணுகி, "ராஜபுத்ரா! ராஜ்யம் அரசனில்லாமல் கிடக்கிறது. அதனால் உண்டாகும் விபரீதங்கள் பல. நீ கிரீடத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார்.

"அண்ணனிருக்கின்றான் போர் முனையில்" என்றான் ஹர்ஷன்.

"அவன் இங்கில்லை."

"சொல்லியனுப்புங்கள். வருவான்."

"நாட்டு எல்லையில் எதிரிகள் படை பலம் திரட்டுவதாகக் கேள்வி."

"யார் பலமும் தானேசுவரத்தை அசைக்க முடியாது. அண்ணனுக்குச் சொல்லியனுப்புங்கள்." பிடிவாதமாக இருந்தான் ஹர்ஷன். உடனடியாகத் தானே ஓலை எழுதி ராஜ்யவர்த்தனனுக்கே அனுப்பி வைக்கவும் செய்தான்.

அண்ணனிடம் ராஜ்யத்தை ஒப்படைத்துவிட்டால் தனது கடமை தீர்ந்தது என்று நினைத்தான். "அண்ணன் அரசை ஏற்றதும் நான் திரும்பவும் இமயமலைச் சாரல் வேட்டைக்குப் போய்விடுவேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இது ஹர்ஷன் முடிவு. சரித்திரம் செய்த முடிவு வேறு. தாயை இழந்து தந்தையை இழந்து விரக்தி வசப்பட்டு ஹர்ஷன் அரண்மனையில் உலாவிக் கொண்டிருந்த அதே நேரத்தில், இமாலய வேட்டையைப் பற்றி அவன் சிந்தித்துக்கொண்டிருந்த அதே வேளையில்

கங்கைக்கரைக் காட்டில் வேறொரு வேட்டையும் நடந்து கொண்டிருந்தது.

கங்கைக்கரையின் அடர்த்தியான காட்டில் வேட்டைக்குப் பர்ணசாலை அமைத்துக்கொண்டிருந்த கிருகவர்மன், "இது என்ன ரம்யமான இடம் பார்த்தாயா ராஜ்யஸ்ரீ?" என்று மனைவியை நோக்கிக் கேட்டான்.

"இந்தப் பர்ணசாலையா? என்றாள் ராஜ்யஸ்ரீ.

"பர்ணசாலையில் ராமனும் சிதையும் சுகம் கண்டார்கள். கோதாவரி நீரில்தான் அவர்கள் துளைந்து விளையாடி இன்பம் கண்டார்கள்" என்று புராணத்தைச் சுட்டிக் காட்டிய கிருகவர்மன், "அடீ! ராஜ்யஸ்ரீ! இந்தத் தனிமையிலிருந்கும் சுகம் அரண்மனையில் ஏது? நாம் வாழ்க்கையை இங்கேயே கழித்தால் என்ன?" என்று கேட்டு அணைத்துக்கொண்டான். "இங்கு யாரும் நம்மைப் பிரிக்க முடியாது" என்றும் கூறினான் காமா வேசத்துடன்.

ஆனால் ராமாயணத்தின் இன்னொரு பகுதியை அவன் நினைத்துப் பார்க்கவில்லை. மனைவியை அணைத்துத் தரையில் படுத்துக் கிடந்த சமயத்தில் அவர்களைப் பிரிக்கப் புகுந்தன விதியின் கைகள். தானேசுவரத்துக்கு ஏற்பட்டுவிட்ட பெருநஷ்டத்துடன் இன்னொரு இடியையும் அவன் தலையில் இறக்க, அந்தக் காதலர்களைப் பிரிக்க, அங்கும் ஒரு மாரீசன் இருந்தான். அவன் மெதுவாகக் குரலும் கொடுத்தான். "கிருகவர்மரே, கன்னோசியின் சக்கரவர்த்தி!" என்று.

## 36

# மற்றுமொரு பேரிடி

ராஜ்யஸ்ரீயை அணைத்த கையை விலக்கி எழுந்த கிருகவர்மன் பர்ணசாலையை விட்டு வெளியே வந்தான். அங்கு நின்ற வேட்டுவன், "நல்ல வேட்டை அடுத்த காட்டில் உலாவுகிறது" என்று சொன்னான்.

"அது கௌட ராஜ்யத்தின் எல்லை அல்லவா?" என்றான் கிருகவர்மன்.

"இல்லை, அது தங்கள் வசமாகி நெடுநாளாகிறது" என்றான் வேட்டுவன்.

"சரி, விடியற்காலையில் போவோம். வேட்டுவரைச் சித்தப்படுத்து" என்று கூறிய கிருகவர்மன் பர்ணசாலைக்குள் நுழையத் திரும்பினான்.

"மகாராஜா!" என்றான் வேட்டுவன்.

"என்ன?" - திரும்பி நோக்கினான் கிருகவர்மன்.

"இன்றிரவு விட்டால் வேட்டை ஓடிவிடும்" என்றான் வேட்டுவன்.

ராஜ்யஸ்ரீயிடம் செல்லத் திரும்பிய கிருகவர்மன், "சரி எங்களிருவர் புரவியையும் கொண்டு வ ா" என்று உத்தர விட்டு உள்ளே சென்றான்.

வெளியே நின்ற வேடன் புன்முறுவல் செய்தான். எட்ட இருந்த வீரர்களை அழைத்து, மன்னன் புரவியையும்

மகாராணியின் புரவியையும் கொண்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

உள்ளே நுழைந்த கிருகவர்மனை நோக்கிய ராஜ்யஸ்ரீ "இப்பொழுது வேட்டை அவசியமா?" என்று கேட்டாள்.

"ஆம்" என்று அவளைக் கையில் தூக்கிக்கொண்ட கிருகவர்மன், "ஆமாம் ராஜ்யஸ்ரீ. இந்த வேட்டை முடிந்ததும் கங்கையில் நீயும் நானும் நீராடுவோம்" என்று சொல்லி அவள் கழுத்தில் இதழ்களைப் புதைத்தான். அவளையும் வேட்டுவ உடையை அணியச் செய்தான். வேட்டுவச்சிபோல் நின்ற ராஜ்யஸ்ரீயைப் பார்த்து மயங்கிய கிருகவர்மன், "ராஜ்யஸ்ரீ! எந்த உடையிலும் நீ அழகாயிருக்கிறாய். இந்த வேட்டைகூட வரவர எனக்குப் பிடிக்கவில்லை. இது முடிந்ததும் நான் வேறு வேட்டையாடப் போகிறேன்" என்ற கிருகவர்மன் அந்த வேட்டுவச்சியை அணைத்துக் கொண்டான். வெளியே இருந்த வேடன் குரல் கொடுத்தான். "மகாராஜா" என்று. கிருகவர்மன் கிளம்பினான் ராஜ்யஸ்ரீயுடன்.

கங்கையை அடுத்தக் காட்டில் பெரு வேட்டை காத்திருந்தது அவர்களுக்கு! ஆனால் எத்தனை விபரீதமான வேட்டை!

தனி மனிதன் வாழ்க்கையிலும் சரி, குடும்ப வாழ்க்கையிலும் சரி, ஏன் அரசுகளின் வாழ்வில்கூட, சம்பத்தோ விபத்தோ, அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ தனியாக வருவதில்லை. தொடர்ச்சியாகவே இறங்குகின்றது. அத்தகைய ஒரு நிலை தானேசுவர அரசுக்கும் ஏற்படத்தான் செய்தது. ராஜ்யஸ்ரீ இருந்த வரையில் தானேசுவரமே வட பாரதத்தின் ராஜ்யஸ்ரீயாக விளங்கியிருந்ததால் அவள் அங்கிருந்து அகன்ற பிறகு அதை துரதிர்ஷ்டம் பிடித்துக் கொண்டது. அவள் கணவன் வீட்டுக்குச் சென்றபோது, 'தானேசுவரத்தின் ராஜ்யஸ்ரீ அதோ போகிறாள்" என்ற மகாராஜா பிரபாகர வர்த்தனன் சொன்ன வார்த்தை ஒரு தந்தையின் பிரிவினை சோகத்தைத்தான் குறித்ததென்றாலும்



அதன் பொருள் அத்தனை விபரீதமாகத் திரும்பும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

விதியின் சொற்கள் போன்ற அந்தச் சொற்களை உதிர்த்த மகாராஜா அதற்குப் பின்பு நோய்வாய்ப்பட்டு மகளை ஒருமுறை அழைக்க வேண்டுமென்று விரும்பியும் அழைக்காமலே போய்விட்டார். மகாராணியும் ஸதியாகத் தீக்குளித்தாள். விபத்துக்கள் இத்துடன் நின்றிருந்தால் வர்த்தனர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். ஆனால் விதி அத்துடன் தனது கரத்தை இழுத்துக் கொள்ளவில்லையென்பதை அடுத்து வந்த கோரமான விளைவுகள் தெரியப்படுத்தின. அந்த விளைவுகளை வரலாறும் விவரமாகப் பறைசாற்றியிருக்கிறது. கவி பாணனும் அவற்றுக்கு இலக்கிய முத்திரையை வைத்தான்.

மகாமந்திரியின் யோசனைப்படி அரச முத்திரையையும் கிரீடத்தையும் ஏற்க மறுத்த ஹர்ஷன் அண்ணனைத் துரிதமாகத் தலைநகர் திரும்பும்படி ஓலை விடுத்தான். ஹூணர்களை வெற்றி கொண்டு வீரத்துடன் தானேசுவரத்துக்குள் புகுந்த ராஜ்யவர்த்தனன் தன்னை வரவேற்கும் மகிழ்ச்சி கோஷங்கள் இல்லாததைக் கவனித்தான். அதற்குக் காரணம் புரியாமல் குழம்பிய மனத்துடன் அரண்மனையை நோக்கித் தனது வீரர்கள் பின்தொடரப் புரவியில் வந்து ஆசார வாசலில் குதித்த ராஜ்யவர்த்தனனை மகாமந்திரியும் ஹர்ஷனும் மற்றும் பிரதானி முதலிய அரசாங்கப் பிரமுகர்களும் எதிர்கொண்டனர்.

"புரவியிலிருந்து இறங்கிய ராஜ்யவர்த்தனன் காலில் முடிவைத்து வணங்கினான் ஹர்ஷன். அவனை வாரி அணைத்துக்கொண்ட ராஜ்யவர்த்தனன் தோள்மீது முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மினான் ஹர்ஷன். தம்பியை நன்றாக அணைத்து, "தம்பீ இது நமது மரபு அல்ல. க்ஷத்திரியர்கள் எதற்கும் அழுவதில்லை" என்று தைரியம் சொன்னான்.

இந்தச் சமயத்தில் மகாமந்திரி இடை புகுந்து, "நன்றாகச் சொன்னாய் மன்னவா! மகாவீரன் பேச வேண்டிய வார்த்தைகளைப் பேசினாய்" என்றார்.

மகாமந்திரி தன்னை மன்னவா என்று அழைத்ததைக் கண்டு வியந்த ராஜ்யவர்த்தனன், "மகாமந்திரி! தவறாக அழைக்கிறீர். தகாத வார்த்தைகளைச் சொல்கிறீர்" என்று கடிந்துகொண்டான்.

"மகாமந்திரி இதுவரை சத்தியத்தைத் தவிர வேறெதையும் பேசியதில்லை. உள்ளே வா, ராஜ்யவர்த்தனா" என்றார் மகாமந்திரி.

ராஜ்யவர்த்தனன் சிலையென நின்றான். "என் தந்தை?" என்று சற்று தளர்ந்த குரலில் கேட்டான்.

அப்பொழுது பீறிட்டு அழுதான் ஹர்ஷன். "அண்ணா! நாம் தந்தை தாயற்ற அனாதைகள்" என்று.

ராஜ்யவர்த்தனன் அதிர்ச்சியின் விளைவாக அழும் சக்தியை இழந்தான். நடந்ததை ஓரளவு ஊகித்துக்கொண்டு ஹர்ஷனை இழுத்துக்கொண்டு யாருடனும் பேசாமல் அரண்மனைக்குள் வேகமாக நுழைந்து சென்றுவிட்டான்! அன்று முழுவதும் சகோதரர் இருவரும் மகாராஜாவின் அறையை விட்டு வெளியே வரவில்லை. இரவு வரை பொறுத்திருந்த மகாமந்திரி இரவு சற்று ஏறியதும் மகாராஜாவின் அறையைத் தட்டினார். பதில் ஏதுமில்லை; கதவும் திறக்கப்படவில்லை.

மகாமந்திரி சற்று இரைந்து, "ராஜ்யவர்த்தனா! ஹர்ஷவர்த்தனா!" என்று சீற்றத்துடன் அழைத்தார்.

"என்ன?" சற்று அதிகாரத்துடன் வந்தது ராஜ்ய வர்த்தனன் கேள்வி.

"தங்களைப் பார்க்க வேண்டும்." மந்திரியும் அதிகாரத்துடன் பேசினார்.

"என்ன விஷயம்?" ஹர்ஷன் கேட்டான் உள்ளிருந்து.



"உன் குடும்ப விஷயங்களை மகாவீரரான பிரபாகர வர்த்தன மகாராஜாவிடம் கூடப் பேசியது கிடையாது. இப்பொழுது ராஜ்யத்தைப் பற்றிப் பேச வந்தேன்" என்றார் மகாமந்திரி.

"நாளை காலையில் பேசலாம்" என்றான் ராஜ்ய வர்த்தனன். அவன் குரல் உறுதியாயிருந்தது. ஆனால் அதில் வெறுப்பு கலந்திருந்தது.

இரண்டையும் கவனிக்கவே செய்தார் மகாமந்திரி. கடைசியில் சொன்னார்: "மகாராஜா ராஜ்யவர்த்தனா! உங்கள் தந்தையை அவருடைய சயன அறையிலும் பலமுறை எழுப்பியிருக்கிறேன். மறுநாள் பார்ப்பதாக ஒருநாள்கூடச் சொன்னது கிடையாது. நீ இஷ்டப்பட்டாலும் இஷ்டப்படா விட்டாலும் பழைய மகாராஜாவுக்குப் பிறகு மூத்த மகனான நீதான் மன்னன். தானேசுவரத்தின் அதிபதி. ராஜா இல்லாமல் ஒருநாள்கூட ராஜ்யமிருக்க முடியாது. நினைவில் வைத்துக்கொள். அறையில் பதுங்கினால் அரசு உன்னை விட்டுவிடாது. இன்றிலிருந்து ஐந்தாவது நாள் உனது ராஜ்யாபிஷேகம்" என்று திட்டமாக அறிவித்துவிட்டு வேகமாக அந்த இடத்திலிருந்து வெளியேறினார்.

மறுநாள் காலையில் மகாமந்திரி அரண்மனை வந்த மற்ற மந்திரிப் பிரதானிகளையும் அரண்மனை சோதிடரையும் கலந்து பட்டாபிஷேகத்துக்கு நாள் வைத்து அதற்கான கொண்டாட்டத்துக்கும் ஏற்பாடு செய்தார். அன்று முதல் தானேசுவர மாநகர் மங்கள கோலம் பூண்டது. தூதர்கள் ஓலைகளை ஏந்திச் சென்றனர், முக்கியமான அரசுகளுக்கு. அத்தனை குறுகிய காலத்தில் பிற அரசர்கள் வரமுடியாதென்பதை அறிந்து இருந்தும் மகாமந்திரி சம்பிரதாயத்தை முன்னிட்டு ஓலைகளை அனுப்பினார்.

அடுத்த சில தினங்கள் ராஜ்யவர்த்தனன் துறவியைப் போலவே காலம் கழித்தான். அரண்மனைச் சேடிகள் அவனுக்கு மங்கள ஸ்நானம் செய்விக்க வந்தார்கள்.

"வேண்டாம், ஹர்ஷனுக்குச் செய்யுங்கள்" என்றான் மூத்தவன்.

ஹர்ஷனுக்கும் ஏதும் புரியவில்லை. அண்ணனை அணுகி, "அண்ணா! எனக்கெதற்கு மங்கள ஸ்நானம்?" என்று குழப்பத்துடன் கேட்டான்.

"அண்ணன் சொன்னதை பரதன் கேட்டான். நீயும் கேள். இதுதான் பாரதத்தின் மரபு" என்று கூறிவிட்டான் ராஜ்ய வர்த்தனன்.

பட்டாபிஷேக தினத்தன்று ஹர்ஷன் சகல அலங்காரத்துடன் அலங்கார மண்டபத்துக்கு வந்தபோது ராஜ்யவர்த்தனன் தனது வாளை அணிந்து வீரக் கோலத்துடன் மண்டபத்தில் நுழைந்தான். அவன் பின்னால் இரண்டு பணிப்பெண்கள் பெரிய பொன் தட்டில் எதையோ பட்டால் மூடி எடுத்துக்கொண்டு அவனைத் தொடர்ந்து வந்தார்கள்.

அந்தத் தட்டில் என்ன இருக்குமென்று எல்லோரும் வியந்தபோது ராஜ்யவர்த்தனன் மகாசபையைச் சுற்றிப் பார்த்து, "இன்று தானேசுவர மன்னனாக ஹர்ஷன் முடி சூடுவான். அவன்தான் அரசாளப் பிறந்தவன்" என்றான்.

சபையில் சலசலப்பு ஏற்பட்டது. அதை ஒரு கையின் சைகையால் அடக்கி, "அண்ணா, இது தகாது. நமது மரபுக்கு விரோதம். உனக்குத்தான் ராஜ்ய விரக்தி என்று நினைக்காதே. எனக்கும் விரக்தி உண்டு" என்றான் ஹர்ஷன்.

சபையில் சலசலப்பு நின்று பயங்கர அமைதி குடி கொண்டது. அந்த அமைதியில் பேசினான் ராஜ்ய வர்த்தனன். "மகாமந்திரி, நான் அணியக்கூடிய உடை இதோ" என்ற கூறிப் பணிப்பெண்கள் தாங்கிய பெரும் தட்டைச் சுட்டிக் காட்டியதன்றி அதன் மீதிருந்த சீலையையும் நீக்கினான். அதிலிருந்த உடையைக் கண்டு அதிர்ச்சி யடைந்தது சபை.



"மரவுரி! முனிவர்கள் அணிவது" என்றார் மகாமந்திரி.

"ஆம் மகாமந்திரி. இதைத்தான் நான் அணியப் போகிறேன். ஹர்ஷன் மணிமுடி தரிப்பான்" என்று திட்டமாக அறிவித்தான் ராஜ்யவர்த்தனன்.

மகாமந்திரி எழுந்து நின்றார் தமது ஆசனத்திலிருந்து. உயர்ந்த கம்பீரமான அவர் உருவம் அனைவரையும் ஈர்த்தது. அவருடைய சொற்கள் திட்டமாக வந்தன. "ராஜ்யவர்த்தனா! நீ என்ன செய்யலாம், எதை மறுக்கலாமென்பது உன் இஷ்ட மல்ல. அது பிரஜைகளின் இஷ்டம். மரபின் விதிகளின்படி தான் எதையும் செய்ய முடியும்" என்றார். அவர் குரல் கணீரென்று அந்த மண்டபத்தில் எதிரொலி செய்தது.

அப்பொழுது வெளியே இருந்து வந்தது விதியின் குரல். "உண்மைதான் பிரபு! உங்களிஷ்டப்படி நடக்க முடியாது. பிரபு. மரவுரியைத் தூர எறியுங்கள். எடுத்துக் கொள்ளுங்கள் வீரவாளை" என்று குரல் ஒலித்துக்கொண்டே வந்தது. அந்தக் குரலுக்கு உடைய ஸம்வாதகன் என்ற தூதன் உள்ளே ஓடி வந்தான். அவன் கண்களில் நீர் வழிந்தது. "ஸம்வாதனா! என்ன நடந்துவிட்டது?" என்று கேட்டான் ராஜ்யவர்த்தனன்.

பதிலுக்கு ஸம்வாதகன் விம்மினான். மகாமந்திரி அவனருகில் வந்து, "இது பட்டாபிஷேக சமயம். விம்மலுக்கும் அழுகைக்கும் இது சமயமல்ல" என்றார்.

ஸம்வாதகன் எழுந்து நின்றான். "இதுதான் சமயம் மகாமந்திரி; இந்த பட்டாபிஷேகம் இன்று நடக்காது" என்றான் விம்மலுக்கிடையில்.

"ஏன்?" மகாமந்திரியின் குரலிலும் சந்தேகம் ஒலித்தது.

யாரும் சொப்பனத்திலும் எதிர்பார்க்காத அதிர்ச்சி தரும் செய்தியைச் சொன்னான் ஸம்வாதகன். தானேசுவர ராஜ்ய குடும்பத்தின்மீது மற்றொரு பேரிடி இறங்கிவிட்டதை மகாமந்திரி உணர்ந்துகொண்டார்.

# 37

# வஞ்சக நாடகம்

ராஜ்யவர்த்தனன் ஏன் மரவுரி தரிக்கக்கூடாது என்பதற்கு இரண்டாம் முறையாகக் காரணம் கேட்ட மகா மந்திரி தூதனான ஸம்வாதகனை நோக்கி, "எதுவாயிருந்தாலும் சொல். அஞ்சாதே" என்று ஊக்கப் படுத்தியும் ஸம்வாதகன் பதில் சொன்னானில்லை. மறுபடியும் முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதான். அவன் அழுகையைக் கண்ட அந்த ராஜசபை அதிர்ச்சியடைந்தது. நேரிட்டது என்னவோ ஏதோ என்று. ஏதும் புரியாததால் பூர்ண அமைதியும் அந்தச் சபையில் உலாவலாயிற்று. அந்தச் சமயத்தில் விம்மலை நிறுத்திக் கண்களை மூடியிருந்த கைகளையும் அகற்றி அந்தச் சபையை ஏறெடுத்து நோக்கினான் ஸம்வாதகன். பிறகு அவன் பார்வை இரு சகோதரர் மீதும் நிலைத்தது. அதைச் சிறிதுநேரம் நீடிக்கவிட்டு மெதுவாகப் பேச்சைத் துவங்கினான் ஸம்வாதகன். "ராஜகுமாரர்களே! நான் சொல்லப்போகும் செய்தியை நீங்கள் எப்படித் தாங்கிக்கொள்வீர்களோ தெரியாது. உங்களுக்குப் போதிய தைரியத்தைக் கொடுக்கும்படி ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன். வர்த்தன சிங்கங்களே! உங்கள் சக்தியை அறியாத நரிகள் மகாராஜா கிருகவர்மன் மௌகாரியை



வஞ்சகத்தால் அழித்துவிட்டன. வேட்டையாடுவதற்காக கௌட காட்டில் நுழைந்த கிருகவர்மன் திடீரென கௌட, மாளவ படைகளால் சூழப்பட்டுக் கொல்லப்பட்டார். தேவகுப்தன் மகாராணி ராஜ்யஸ்ரீயை கேவலம் கொள்ளைக்காரன் மனைவிபோல், கை கால்களைச் சங்கிலியால் பிணைத்துச் சிறையில் தள்ளிவிட்டான். புஷ்பபூதி வம்சத்தின் குழந்தை மாளவன் சிறையில் வாடுகிறாள். கன்யாகுப்ஜம் கௌடவன் வசமாகிவிட்டது. இந்த நாட்டுக்கு மன்னன் இல்லாததால் இதன்மீதும் படை எடுக்க ஏற்பாடு ஆகியிருக்கிறது." இதைச் சொன்ன ஸம்வாதகன் அதுவரை உள்ளத்தை ஆட்டிக் கொண்டிருந்த உணர்ச்சிக்கு இலக்காகித் திடீரென மயக்கமுற்று ராஜசபையின் தரையில் விழுந்துவிட்டான்.

திடீரென அறிவிக்கப்பட்ட செய்தியின் அதிர்ச்சியின் காரணமாக அவனைத் தூக்கக்கூட யாரும் போகவில்லை. சபையே ஸ்தம்பித்து நின்றது. ஹர்ஷன் கண்களில் நீர் கரைந்து ஆறாக ஓடியது. ராஜ்யவர்த்தனன் மட்டும் உணர்ச்சி அற்ற கல்லாக நின்றிருந்தான். பிறகு மெதுவாக நடந்து சென்று சபை நடுவே தரையில் கிடந்த ஸம்வாதகனைத் தனது இரு கைகளிலும் தூக்கிக் கொண்டான். சபையில் இருந்த இரு பிரபுக்களை விளித்து, 'இவனை எடுத்துச் சென்று சிகிச்சை செய்யுங்கள்" என்று அவர்களிடம் ஸம்வாதகனைக் கொடுத்துவிட்டுத் தனது ஆசனத்தருகே வந்து திரும்பி நின்றுகொண்டான். நீண்ட வாளின் பிடியின் மேலிருந்த அவன் கை லேசாகத் துடித்தது. கண்கள் நெருப்பைக் கக்கின. புருவங்கள் ஒருமுறை மேலெழுந்து சுளித்துக் கீழே இறங்கின. உதடுகள் இறுகிக் கடுமையுடன் காட்சியளித்தன. பல விநாடிகளுக்குப் பிறகு அந்த உதடுகள் திறந்து பேசத் தொடங்கின. "மகாமந்திரி! விதியின் வழிகளை மனிதன் அறிய முடிவதில்லை. மனிதன் வகுக்கும் எந்தத் திட்டத்தையும் அது மாற்றிவிடுகிறது.

இன்றைய பட்டாபிஷேக நாடகம் இத்துடன் முடிவடைகிறது. இனி எனக்குப் பட்டாபிஷேகமில்லை. துறவறம் பூண எண்ணினேன். அதுவுமில்லை. மீதியிருப்பது புஷ்பபூதி வம்சத்துக்கு ஏற்பட்ட அவமானத்தை அழிக்கும் பணி ஒன்றுதான். மாளவனையும் கௌடனையும் கொன்று தீர்த்த பிறகுதான் நான் திரும்புவேன்" என்ற ராஜ்யவர்த்தனன் தம்பியை நோக்கித் திரும்பி. 'ஹர்ஷா! இந்த ராஜகுலம், இந்த ராஜ்யம், இந்த நமது மக்கள் எல்லோரையும் கவனித்து நல்லாட்சி செய்யும் பொறுப்பை நீ ஏற்றுக்கொள். நான் மாளவத்தை தானேசுவரத்தின் காலடியில் வீழ்த்தக் கிளம்புகிறேன்" என்று கூறினான்.

ஹர்ஷன் உதடுகள் துடித்தன. "அண்ணா! நானும் உன்னுடன் வருகிறேன்" என்றான் துடிக்கும் உதடுகளுடன்.

"ஹர்ஷா! இருவரும் போனால் அரசைக் கவனிப்பது யார்?" என்று வினவினான். மேலும் சொன்னான். "ராஜா இல்லாத நகரம் அராஜகத்தின் வழிக்கு மாறும். அதனால் உண்டாகும் விபரீதங்கள் பல. மகாமந்திரியைக் கேள். விவரமாகச் சொல்வார். இந்த வீட்டுக்கு மூத்தபிள்ளை என்ற முறையில் என் கடமையைச் செலுத்த நான் போகிறேன். எதற்கும் குறுக்கே பேசாதே" என்று ஆணையிட்ட ராஜ்யவர்த்தனன் "பண்டி!" என்று இரைந்து கூவினான் சபா மண்டபமே அதிரும்படியாக.

மண்டப வாயிலில் பண்டி தோன்றினார். அவரைப் பார்த்த ராஜ்யவர்த்தனன், "பண்டி! எனக்கு யானைப் படை, காலாட் படை இரண்டும் வேண்டாம். புரவிப் படையைச் சேர்ந்த பதினாயிரம் வீரர்களை அழைத்துக்கொள்ளும். இப்பொழுதே நாம் கான்யாகுப்ஜம் போகிறோம்" என்று கூறிவிட்டு ஹர்ஷனை ஒருமுறை கட்டியணைத்துவிட்டு வேகமாக அந்தச் சபையிலிருந்து வெளியேறினான். வெளியே படைகள் புறப்பட யுத்தப் பேரிகை முழங்கியது.



புரவி வீரர்கள் அணிவகுத்து விரைந்து வந்து ராஜவீதிகளை அடைத்துக்கொண்டனர். அவர்கள் முன்னணியில் ஆசார்ய பண்டி தோன்றினார். ராஜ்யவர்த்தனன் வெளியே வந்து தனது போர்ப் புரவிமீது தாவி ஏறினான். பிரளய காலப் புயல்போல் ராஜ்யவர்த்தனன் புரவிப்படை நகர்ந்தது.

ஒரு புரவியைப்போல் பத்தாயிரம் புரவிகள் நடைபோட, ஒரே விதமாகச் சிலைகள் போல் வாட்களை உருவிய வீரர்கள் உட்கார்ந்திருக்க, பத்தாயிரம் பேர் கொண்ட புரவிப்படை யந்திரம்போல் நகர்ந்தது.

அடுத்த இரண்டு நாட்கள் ராஜ்யவர்த்தனன் எங்கும் நிற்காமல் பயணம் செய்து கன்யாகுப்ஜத்தை அடைந்தான். ஆனால் அந்த ராஜ்யத்தில் எதிரிப் படைகள் எதையும் காணோம். கன்யாகுப்ஜம் படைத்தலைவர் ராஜ்யவர்த்தனனை எதிர்க் கொண்டு, "தாங்கள் வருவதைப் பற்றிக் கேள்விப்பட்டதும் தேவகுப்தனும் சசாங்கனும் தங்கள் துருப்புகளை அழைத்துக்கொண்டு கௌட தேசம் போய்விட்டார்கள்" என்று தெரியப்படுத்தினார். "தாங்கள் அரண்மனைக்கு வந்தால் மீதி விவரங்களைச் சாவதானமாகப் பேசலாம்" என்றும் சொன்னார்.

ராஜ்யவர்த்தனன் தனது புரவியில் அமர்ந்தபடியே, "கன்யாகுப்ஜத்தின் படைத்தலைவரே! அரண்மனையில் நான் பார்க்கக்கூடிய ரத்தினங்கள் இரண்டும் இல்லை. நான் நகரத்துக்குப் புறம்பே காட்டில் தங்குகிறேன். நீர் அங்கு வாரும் பேசலாம்" என்று கூறிவிட்டுப் புரவியைத் திருப்பினான். அவன் படையும் அவனைத் தொடர்ந்தது. கன்னோசி நகரத்துக்குப் புறம்பேயுள்ள காட்டில் பாசறை அமைத்த ராஜ்யவர்த்தனன் அன்றிரவு கன்யாகுப்ஜத்தின் மந்திரிகளோடும் படைத் தலைவர்களோடும் பேசினான். அந்த ராஜ்யத்தை தானேசுவரம் ஏற்கும் வரையில் ஆள அந்த நாட்டின் பிரதான மந்திரியையே நியமித்தான். "பிரதான

மந்திரி! இந்த ராஜ்யத்தை இனி என் தங்கை ராஜ்யஸ்ரீ அரசாள்வாள். அவள் வரும்வரை நீர் இந்த ராஜ்யத்தைக் கவனித்துக்கொள்ளும்" என்றான். படைத் தலைவரையும் அழைத்து ராஜ்யத்தைப் பாதுகாக்க வேண்டிய முறைகளைக் கூறிவிட்டு மறுநாளே மாளவம் நோக்கிக் கிளம்பினான்.

அவன் வருவதைக் கண்ட மாளவத்தின் எல்லைப்புறப் படைகள் பறந்தன. நகரத்துக்குப் பின் மற்றொரு நகரமாக விழத் தொடங்கின. ராஜ்யவர்த்தனன் சூறாவளி வேகத்தில் முன்னேறினான். மாளவத்தின் பிரதானப் படை அவனை கங்கைக் கரையில் எதிர்கொண்டது. அதுவும் பத்தாயிரம் வீரர்கள் கொண்ட படைதான். முகப்பில் யானைப் படையும் இருந்தது. அதைக் கண்ட ராஜ்யவர்த்தனன் பண்டியை அருகில் அழைத்து, "பண்டீ! இந்த யானைப்படையை நீர் இடதுபுறத்தில் தாக்கும். நமது வீரர்கள் வேல்களை யானைகளின் கண்களைப் பார்த்து வீசட்டும். யானைகள் உம்மீது திரும்பும் சமயத்தில் எனது புரவிப் படை மாளவன் புரவிப் படைக்குள் நுழைந்துவிடும்" என்றான்.

பண்டி சொன்னபடி செய்தார். சுமார் இரண்டாயிரம் புரவி வீரர்களுடன் கங்கைக் கரையோரமாகச் சென்று யானைப் படையைத் தாக்க அது அவர் பக்கமாகத் திரும்பியது. ஆனால் திரும்பிய அதே தருணத்தில் வேல்கள் வீசப்பட்டதால் அவை திமிறியபடி ஓட ஆரம்பித்தன. சில யானைகள் வேல் வீச்சால் கண்ணிழந்ததால் கங்கைப் பிரவாகத்திலும் இறங்கிப் பெரிதாகப் பிளிறின. அந்தச் சமயத்தில் எதிரியின் புரவிப் படைகளிடை வேகமாகப் புகுந்துவிட்ட ராஜ்யவர்த்தனன் புரவிப்படை எதிரிகளை நிர்மூலம் செய்யத் தொடங்கியது. மகாசூரர்களான ஹூணர்களையே முறியடித்த ராஜ்யவர்த்தனன் புரவிப் படை எதிரிகளிடை இரண்டு மூன்றிடங்களில் புகுந்து படையைப் பிளந்தது. அடுத்து திரும்பி ஒன்றுபட்டு



எதிரிகளை வளைத்து சாடலாயிற்று. சாயங்காலத்திற்குள் தனது படை நிர்மூலமாகி விட்டதை தூரத்தில் யானையின் அம்பாரியில் அமர்ந்த வண்ணம் கண்ட தேவகுப்தன் யானையைத் திருப்பினான் ஓடவிட. அந்தச் சமயத்தில் அவன் யானையை இன்னொரு அம்பாரி யானை சந்தித்தது. "தேவகுப்தா! ஓட இது சமயமல்ல" என்றான் இரண்டாவது யானை மீதிருந்த கௌட சசாங்கன்.

"வேறு என்ன செய்வது? பிராணனை விடுவதா?" என்று எரிந்து விழுந்தான் தேவகுப்தன்.

"நீங்கள் பிராணனை விடும் இனமல்ல. பிராணனை விடுவதாயிருந்தால் ராஜ்யஸ்ரீ உம்மை வாட்போரில் வெற்றி கண்ட நாளன்றே பிராணனை விட்டிருக்க வேண்டும். சொல்வதைக் கேளுங்கள். பிராணன் ஒரு முறை போனால் திரும்பாது ஆகவே அதைக் காப்பாற்றுவோம்" என்றான் கௌடன்.

"எப்படி?"

"ராஜ்யவர்த்தனனும் மீறமுடியாத முறை ஒன்றிருக்கிறது."

"எது?"

"சரணாகதி." இதைச் சொன்ன சசாங்கன் நஞ்சு நகை நகைத்தான்.

"சரணாகதியா? ஒருக்காலும் முடியாது." என்றான் தேவகுப்தன்.

"சரி; பிராணனை விடும். நான் வருகிறேன்" என்ற கௌடன் திரும்ப முயன்றான்.

"எங்கு போகிறாய் சசாங்கா?" என்று தேவகுப்தன் வினவினான்.

"சரணாகதி செய்ய. பிராணனை உடலிலேயே நிறுத்திக் கொள்ள" என்ற சசாங்கன் தனது யானையை ராஜ்ய

வர்த்தனன் இருந்த இடத்தை நோக்கிச் செலுத்தினான். அவன் இருந்த இடத்தை அணுகியதும் "ஜெய விஜயீ பவ" என்று கோஷமிட்டுப் போரை நிறுத்துமாறு கொம்பு ஒன்றை ஊதிவிட்டு யானை யிலிருந்து இறங்கினான். நேராக ராஜ்யவர்த்தனனிடம் சென்று அவன் காலில் விழுந்தான்.

ராஜ்யவர்த்தனன் அவனை எழுந்திருக்கச் சொல்லி உத்தரவிட சசாங்கன் எழுந்தது நின்றான்.

அவனைச் சுட்டுவிடுவது போல் நோக்கிய ராஜ்ய வர்த்தனன், "ராஜ்யஸ்ரீ எங்கே?" என்று வினவினான்.

"சௌக்கியமாக இருக்கிறார்கள்" என்றான் சசாங்கன்.

"அவள் கைகால்களை சங்கிலியால் பிணைத்திருப்ப தாகக் கேள்விப்பட்டேன்." ராஜ்யவர்த்தனன் குரல் தரையில் விழுந்த இரும்புச் சலாகைபோல் ஒலித்தது.

"மூர்க்கனான தேவகுப்தன் அப்படித்தான் செய்தான். ஆனால் நான் ராஜபுத்திரியை விடுவித்து என் அரண்மனைக்கு அழைத்துச் சென்றுவிட்டேன். அங்கு கணவனை நினைத்து ஏங்கிக்கொண்டிருக்கிறாள் கன்னோசி மகாராணி" என்று கூறிய சசாங்கன் துக்கப் பெருமூச்சு விட்டான்.

"அவளை நான் எப்பொழுது பார்க்கலாம்?" என்று கேட்டான் ராஜ்யவர்த்தனன்.

"போர்க்களத்திலிருந்து கிளம்பியதும் நீராடி நல்லுடை அணிந்ததும் வாருங்கள். உங்களையும் போர்க்கோலத்தில், ரத்தம் பூசிய இந்தக் கோலத்தில் மகாராணி பார்க்க வேண்டாம்"என்றான்.

அம்மாதிரியே போரை நிறுத்தி ராஜ்யஸ்ரீயின் நினைப்பால் களத்திலிருந்து மறைந்துவிட்ட தேவகுப்தனைக் கூடப் பார்க்காமல் சசாங்கனுடன் கிளம்பினான் ராஜ்யவர்த்தனன். கௌட ராஜ்யத்தின் மூகப்பு மாளிகையில்



தங்க வைக்கப்பட்ட ராஜ்யவர்த்தனனுக்கு நீராடவும் உண்ணவும் வசதிகள் செய்தபிறகு இரவு புகுந்ததும் "தானேசுவர மன்னவா! வாருங்கள் தங்கையை சந்திக்க" என்றழைத்தான்.

ராஜ்யவர்த்தனன் தனது வாளை எடுத்தான் இடையில் அணிந்துகொள்ள.

"தங்கையைச் சந்திக்க வாளெதற்கு மன்னவா?" என்று கௌடன் கேட்க, வாளை பழையபடி மூலையில் வைத்துவிட்டுக் கிளம்பினான் ராஜ்யவர்த்தனன்.

மாளிகையின் இரண்டு கட்டுகளைக் கடந்து மூன்றாவது கட்டை அடைந்ததும், "உள்ளே செல்லுங்கள் மகாராஜா" என்ற சசாங்கன் பின்னால் தங்கினான்.

உள்ளே சென்ற ராஜ்யவர்த்தனன் ராஜ்யஸ்ரீயைக் காணவில்லை. அவளுக்குப் பதில் தேவகுப்தன் நின்றிருந்தான். ஏதோ வஞ்சக நாடகத்தில் தான் சிக்கிவிட்டதை ராஜ்ய வர்த்தனன் உணர்ந்துகொண்டான். அத்துடன் அவனும் நாடக பாத்திரமாகி, "யார்? மாளவ மன்னரா?" என்று வியப்புடன் கேட்டுக்கொண்டே அவனை அணுகுவதுபோல் இரண்டடி எடுத்து வைத்துப் பக்கத்திலிருந்த மாளவ வீரன் வாளை வெகு லாவகமாகக் கையில் எடுத்துக்கொண்டான். அந்த வாள் சுழன்றிருந்தால் கதை வேறு திசையில் திரும்பியிருக்கும் . அந்த வாள் சுழல்வதற்குள் வேறொரு வாள் அவன் முதுகை நோக்கி வந்தது.

## 38

## கண்ணீர் எனும் தீ

ராஜ்யவர்த்தனனை விருந்துக்கு அழைத்து நிராயுத பாணியாய் இருந்தபோது முதுகில் வாளைப் பாய்ச்சி கௌட மன்னன் கொன்றுவிட்டான் என்ற செய்தியைப் புரவிப்படையின் தலைவர்களில் ஒருவனான குந்தளன் என்பவனே கொண்டு வந்தான். போருக்குச் சென்ற அண்ணன் நாட்கள் ஆகியும் திரும்பாததைப் பற்றிய கவலையுடன் பொதுஜனங்களுக்குப் பேட்டி கொடுக்கும் பாஹ்யாஸ்தான மண்டபத்தில் ஹர்ஷன் காலையில் அமர்ந்ததும் அமராததுமாக அந்தக் கொடிய செய்தியுடன் மன்னனை நோக்கி நடந்தான் குந்தளன்.

செய்தி அதிர்ச்சி தரும் செய்தியாகையாலும் ஹர்ஷன் மனோநிலை எப்படியிருக்குமோ என்ற அச்சத்தாலும் குந்தளன் அந்தப் பெரிய அவை நடுவே நீண்டநேரம் தலை குனிந்து மௌனமாக நின்றான். அவன் மௌனமும் தலை குனிந்து நின்ற நிலையும் எல்லோருக்குமே சந்தேகம் விளைவித்ததால் சபையே மௌனத்தை அடைந்தது.

குந்தளன் ஏதோ அதிர்ச்சி தரும் செய்தியைக் கொண்டு வந்திருக்கிறானென்பதைப் புரிந்துகொண்ட ஹர்ஷன், “குந்தளரே! ஏன் மௌனம் சாதிக்கிறீர்? எதுவாயிருந்தாலும் சொல்லும்” என்றான்.



குந்தளன் குனிந்தபடியே சொன்னான், “ராஜ்யவர்த்தனர் வீரர்கள் புகும் இடத்துக்குச் சென்றுவிட்டார்” என்று.

ஹர்ஷன் முகத்தில் துன்பம் துளிர்த்தது. “போரில் மாண்டுவிட்டானா அண்ணன்? அவன் எப்பொழுதும் முன்னணிக்குச் சென்று போரிடுவான். ஆபத்தை வரவேற்கும் சுபாவமுள்ளவன்” என்ற ஹர்ஷன், இதயத்தை இடிபோல் உணர்ச்சிகள் தாக்கியதால் சிம்மாசனத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

“போரில் மாளவில்லை ராஜ்யவர்த்தனர். மாளவத்தின் படைகளைச் சிதற அடித்த பின்புதான் மாண்டார்” என்ற குந்தளன் தலையை லேசாக நிமிர்த்தி தானேசுவர சேனாதிபதி சிம்ஹநாதனைப் பார்த்தான்.

வயது அதிகமானாலும் வயிரம் பாய்ந்த மரம்போல் திடமாக மன்னன் பக்கத்தில் அமர்ந்திருந்த சிம்ஹநாதன் “குந்தளா! விளக்கமாகச் சொல். மாளவப் படைகளை முறியடித்த பின்பு ராஜ்யவர்த்தனர் எப்படி இறக்க முடியும்?” என்று வினவினார்.

குந்தளன் அவருக்கும் நேரிடையாகப் பதில் சொல்லவில்லை. “பாம்பு கடித்து இறந்தார்” என்றான்.

“பாம்பு கடித்ததா?” என்று வியப்புடன் கவலையுடனும் நெஞ்சு பிளக்கும் துன்பத்துடனும் கேட்டான் ஹர்ஷன்.

“கௌடன் என்ற பாம்பு. மனிதர்களில் விஷப் பாம்புகள் இருக்கின்றன மன்னவா. ராஜ்யவர்த்தனரை விருந்துபசாரத்துக்கு அழைத்து முதுகில் வாளைப் பாய்ச்சினான் பாதகனான கௌடன். இதை ஒருநாள் கழித்துத்தான் நாங்கள் அறிந்தோம். உடனே மாளவத் தலைநகரைக் கொளுத்திவிடத் துடித்தோம். தங்கள் உத்தரவில்லாமல் எதையும் செய்யக்கூடாதென பண்டி

தடுத்துவிட்டார். செய்தியையும் அவர்தான் சொல்லி யனுப்பினார் என்றான் குந்தளன்.

இதைக் கேட்டதும் சிம்மாசனத்திலிருந்து ஹர்ஷன் மெதுவாக எழுந்து மண்டப மேடைமீது நிமிர்ந்து நின்றான். அவன் முகத்தில் துன்பமிருந்த இடத்தைக் கோபாக்கினி பிடித்துக்கொண்டது. அவன் நின்ற தோரணையில் மூவுலைகையும் அழிக்கக்கூடிய நரசிம்ம மூர்த்திபோல் காட்சியளித்தான். அவன் உடல் ஒருமுறை உணர்ச்சியால் நடுங்கினாலும் அமைதி கலந்து பயங்கரத்தால் விறைத்து நின்றுவிட்டது. ஹர்ஷன் வாயிலிருந்து மெல்ல சொற்கள் உதிர்ந்தன. "குந்தளரே! இதோ கிளம்புகிறேன் கௌடனை நெருப்பிலிட. அவன் சடலத்தை உண்ணும் தீயின் ஜ்வாலையை நான் பார்க்கும் வரையில் என் மனத் தீ அடங்காது. படைகள் உடனடியாகப் புறப்படட்டும்" என்ற ஹர்ஷன், "இங்கேயே எனது போர் உடை வரட்டும். இங்கிருந்தே கிளம்புகிறேன்" என்றான்.

இப்படிப் பேசிக்கொண்டு பிரளயகால ருத்திரன் போல் நின்ற ஹர்ஷவர்த்தனனை நோக்கினார் தானேசுவர சேனாதிபதி சிம்ஹநாதன். மெதுவாக எழுந்து தமது ஆலோசனைகளைச் சொல்லவும் முற்பட்டார். "ஹர்ஷவர்த்தனா உன் துயரம் எனக்குத் தெரிகிறது. உனது துடிப்பையும் என்னால் உணர முடிகிறது. ஆனால் நான் ஆலோசனை சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது. உன் தகப்பனார் காலத்திலிருந்து நான் சேனாதிபதியாக இருக்கிறேன். நீ இருக்கும் நிலையில் நானிருந்தாலும் இப்படித்தான் துடித்து எழுவேன். ஆனால் சிந்தித்துப்பார். மகாவீரனான கிருகவர்மனை வஞ்சகத்தால் அழித்தான் கௌடன். உன் அண்ணனையும் அழித்தான் அதே வஞ்சகத்தால். ஆனால் நீ அழிக்க வேண்டியது இந்த கௌடனை மட்டுமல்ல. தேவகுப்தன்தான் இந்த



வஞ்சகத்துக்கு அஸ்திவாரம். ஆகவே மாளவத்தையும் நீ வெற்றி கொள்ள வேண்டும். தவிர பக்கத்து நாடான கன்னோசியும் உன் வசமாக வேண்டும். இவை எல்லாம் வசமானால் உன் ராஜ்யம் வடபாரதம் முழுமையும் ஆக்கிரமித்த பெரிய சாம்ராஜ்யமாகும். ஆகவே கௌடனை மட்டும் அழிக்கக் கிளம்பாதே. அவன் மாண்டால் இன்னொருவன் முளைப்பான். நமது சமுதாயத்தில் சதிகாரர்களுக்குக் குறைவில்லை. ஆகவே திக்விஜயத்தை மேற்கொள். மாற்றரசர்களிடமெல்லாம் கப்பம் கேட்டு ஓலை அனுப்பு. மறுப்பவர்களைப் பணிய வைத்து சாம்ராஜ்யத்தை விரிவாக்கிக்கொள். அப்பொழுது யாரும் உனக்குத் தீங்கு விளைவிக்க வரமாட்டார்கள்" என்று மெதுவாகச் சொன்னார். அத்துடன், "திக்விஜயத்தின் முதல்படி கௌட நாடு. அடுத்து மாளவம்; இடையே பக்கத்தில் இருக்கும் கன்னோசியை நிர்வகிக்க ஒரு படைப்பிரிவை அனுப்பிவை" என்றும் யோசனை சொன்னார்.

ஹர்ஷன் நின்ற நிலையிலேயே சேனாதிபதியை நோக்கினான் பல நிமிடங்கள். பிற பக்கத்திலிருந்த யானைப் படைத் தலைவனான ஸ்கந்தகுப்தனை நோக்கி, "சேனாதிபதி சொன்னதைக் கேட்டீரா ஸ்கந்தகுப்தரே! என் குடும்பத்தில் இரண்டு விளக்குகளை அணைத்துவிட்டவர்களை ஒழிக்கும் வரை என் மனம் ஒரு நிலையில் இருக்காது. யானைப்படை சித்தமாக எத்தனை நாளாகும்?" என்று வினவினான்.

ஸ்கந்தகுப்தன் எழுந்து மன்னனுக்குத் தலை வணங்கினான். "யானைப் படை இன்னும் மூன்று நாளில் நகரும்" என்றான்.

"சரி!" என்ற ஹர்ஷன் சிம்ஹநாதனை நோக்கி, "சேனாதிபதி! நமது எதிரிகளுக்கு ஓலையனுப்பும், நமக்குப் பணிந்து கப்பம் கட்டும்படி. இல்லையேல் அவர்கள்

நாட்டில் நமது படைகள் பிரவேசிக்கும் என்றும் அறிவித்து விடும்" என்று கூறிவிட்டு அந்த மண்டபத்திலிருந்து கிளம்பி அரண்மனை அந்தப்புரத்துக்குள் நுழைந்துவிட்டான்.

மூன்று நாட்கள் மன்னனை யாரும் பார்க்கவில்லை. யாரையும் பார்க்க மறுத்தான் ஹர்ஷன். அவனை வளர்த்த தாதி மட்டும் அவனைப் பார்க்க முடிந்தது. அவன் தலையை மடியில் வைத்துக்கொண்டு முகத்தோடு முகம் வைத்து அழுதாள்! "ஹர்ஷா! நீ ஒருவனிருக்கிறாய் இந்தக் குலத்துக்கு விளக்கேற்ற. துக்கத்துக்கு இடங்கொடாதே. இதே மடியில் ராஜ்யஸ்ரீயும் வளர்ந்தாள். அவளை முதலில் காப்பாற்று." என்று சொல்லி விம்மினாள்.

ஹர்ஷன் தனது தலையைத் தனது செவிலித் தாயின் மடியில் புரட்டினான். "தாயே! ராஜ்யஸ்ரீயின் கண்ணைத் துடைப்பதுதான் எனது வாழ்வின் லட்சியமாக இருக்கும். அவளை மீண்டும் கன்யாகுப்ஜ ராஜ்யத்தின் ராணியாகப் பார்த்த பின்புதான் நான் இங்கு வருவேன்" என்று விம்மினான்.

"விம்மாதேடா ஹர்ஷா! நீ மாற்றரசர்களை விம்ம வைக்கப் பிறந்தவன். யாரும் காணமுடியாத சாம் ராஜ்யத்தைச் சமைக்கப் போகிறாய். ஆகவே தைரியத்துடனிரு" என்றாள் செவிலித்தாய். அவள் அவனுக்குப் புத்தி சொன்னாளே தவிர, அவள் "கண்ணே ராஜ்யவர்த்தனா! கண்ணே ராஜ்யஸ்ரீ" என்று விம்மத்தான் செய்தாள்.

அதே சமயத்தில் மாளவத்தின் சிறையில் ராஜ்யஸ்ரீயும் விம்மிக் கொண்டிருந்தாள். பலமான காராக்கிருகத்துக்குள், பெரும் காவலுக்குள் கை கால்களில் சங்கிலி மாட்டப்பட்டு நிலத்தின் தேவதைபோல் தரையில் கிடந்த ராஜ்யஸ்ரீ கணவனுடன் தான் நடத்திய வாழ்க்கையையும் நினைத்து நினைத்து நிலத்தைக் கண்ணீரால் நனைத்துக்



கொண்டிருந்தாள். அப்பொழுது சிறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த துஷ்ட மகாப்பிரபு தேவகுப்தன், "அடீ ராஜ்யஸ்ரீ! நன்றாக அழு! என்னை வாட்போரில் தோற் கடிக்கவும் அவமானப்படுத்தவும் இது தானேசுவரமல்ல. என்னை அவமானப்படுத்திய உன் குடும்பத்தில் இன்னும் ஒருவனிருக்கிறான் மீதி. அந்த ஹர்ஷனும் சீக்கிரம் மாளவச் சிறைக்கு வருவான்" என்று கூறினான். ஏளனமாக நகைக்கவும் செய்தான். மேலும் சொன்னான். "ஹர்ஷன் இங்கு வந்தாலும் உன்னைப் பார்க்க முடியாது. உன்னை மாளவத்தின் தென் கோடிச் சிறைக்கு அனுப்புகிறேன் நாளைக்கு" என்று. அத்துடன் வெளியே சென்றான். அங்கு காத்திருந்த கௌடன், "நன்றாகச் சொன்னீர்கள்" என்று பாராட்டினான். சிறைக்குள்ளே எட்டியும் பார்த்தான்.

ராஜ்யஸ்ரீ நிலத்தில் விழுந்த நிலையில் விம்மிக் கண்ணீரைத் தரையில் மேலும் உகுத்துக்கொண்டிருந்தாள். அந்த விம்மலைப் பார்த்த இரு அயோக்கியர்களும் நகைத்தார்கள்.

அந்தக் கற்புக்கரசியின் கண்ணீர் எந்த நிலத்தை நனைத்ததோ அது நிர்மூலமாகும் நாள் அதிக தூரத்திலில்லை என்பதை அந்த இருவரும் அறியவில்லை. அவள் சிந்திய கண்ணீரின் ஒவ்வொரு துளியும் அந்த இரு நாடுகளையும் பொசுக்க ஏற்பட்ட நெருப்பு என்பதை அறியாத அவர்கள் நகைத்துக்கொண்டே நடந்தார்கள்.

தேவகுப்தன் தான் சொன்னபடி செய்தான். மாளவத்தின் தென்கோடியிலுள்ள சிறைக்கு ராஜ்யஸ்ரீயை மாற்றிவிட்டான். அதுதான் அவன் செய்த தவறு. அந்த ஒரு மாற்றம் மாளவத்தின் அதிர்ஷ்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து அழிவுக்கு அடி கோலியது. 'விநாச காலே விபரீத புத்தி' என்ற பழமொழிக்கு இலக்கணமாக விளங்கினான் தேவகுப்தன்.

39

## விந்திய மலைச்சாரல்

கிருகவர்மனையும் ராஜ்யவர்த்தனனையும் அழித்து விட்டதால் புஷ்பபூதியின் வம்சத்தையே அழித்து விட்டதாகக் கனவு கண்ட தேவகுப்தன், சிறையில் தரையில் கிடந்த ராஜ்யஸ்ரீயின் கண்ணீர் பெரும் நெருப்பாக மாறி மாளவத்தின் எல்லைகளையும் கௌட நாட்டு எல்லைகளையும் பொசுக்கத் துவங்கிவிட்டதை உணராமலே தனது தீய செயல்களில் மேலும் இறங்கலானான். ராஜ்யஸ்ரீயைக் கண்டு, அவள் துயரத்தைக் கண்டு நகைத்து விட்டு வஞ்சகனான சசாங்கனுடன் வெளியே வந்த தேவகுப்தன், "சசாங்கா! இந்த ராஜ்யஸ்ரீயை மாளவத்தின் தலைநகரச் சிறையில் வைத்திருப்பதில் ஆபத்திருக்கிறது. ஹர்ஷன் இவளை மீட்கத் துணிந்தாலும் துணிவான். ஆகவே அவன் என்ன முயன்றாலும் கிடைக்காத மாளவத்தின் கோடிச் சிறைக்கு இவளை அனுப்பிவிடுகிறேன். என்ன சொல்கிறாய்?" என்று வினவினான்.

"தாங்கள் என்னை மிஞ்சிவிட்டீர்கள்" என்றான் சசாங்கன் திருப்தியுடன்.

"எதில்?" தேவகுப்தன் கேட்டான் குதூகலத்துடன்.

"இந்தமாதிரி தந்திரங்களில்" என்று பாராட்டினான் சசாங்கன்.



தேவகுப்தன் உச்சி குளிர்ந்தான். "சசாங்கரே! மாளவத்தின் கோடிச் சிறை விந்திய மலைச்சாரலின் காட்டை அடுத்து நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் பலமான சிறை. என்னுடைய அனுமதியில்லாமல் யாரும் அங்கு நுழைய முடியாது" என்று கூறினான் தேவகுப்தன்.

"இந்தத் திமிர் பிடித்தவளுக்கு அதுதான் தகுந்த இடம்" என்று சசாங்கன் தாளம் போட்டான்.

இதனால் பெரிதும் பெருமையடைந்த தேவகுப்தன் அரண்மனைக்கு வந்ததும் தனது அந்தரங்க படைத் தலைவர்களில் ஒருவனைத் தனது அந்தரங்க அறைக்கு அழைத்து, "படைத் தலைவரே! நானே செய்யவேண்டிய ஒரு பணியை உமக்கு அளிக்கப்போகிறேன்" என்று துவங்கினான்.

"அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாவதே பெரும் பாக்கியம்" என்றான் படைத்தலைவன்.

"நமது சிறையில் கிருகவர்மன் மனைவி இருக்கிறாள்" என்றான் தேவகுப்தன்.

"அவள் முக்கியமானவள்" என்று சசாங்கனும் குறிப்பிட்டான்.

படைத் தலைவன் அவர்கள் இருவர் பேச்சுக்கும் பதிலேதும் சொல்லவில்லை. கட்டளையை எதிர்பார்த்து நின்றான். தேவகுப்தன் மெதுவாகவும் அந்தரங்கமாகவும் பேசினான். "படைத்தலைவரே! இன்று நள்ளிரவில் ராஜ்யஸ்ரீயை இந்தச் சிறையிலிருந்து வெளியே கொண்டு வாரும். அவளைத் தலையிலிருந்து கால்வரை மறைத்து ஒரு மூடு ரதத்தில் ஏற்றி நமது மாளவத்தின் தெற்குக் கோடி சிறைக்குக் கொண்டு செல்லும். அங்கும் இங்கு போலவே கை கால்களுக்குச் சங்கிலி மாட்டிச் சிறைக் காவலரிடம் ஒப்படைத்து வாரும். எனது முத்திரை மோதிரமோ அல்லது கடிதத்தையோ பார்க்காத வரையில் அவளைச் சிறையிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கக்

கூடாதென்று சிறைத் தலைவனை எச்சரித்து வாரும். தப்ப அவள் ஏதாவது முயற்சியில் இறங்கினாலும், அவளுக்கு உதவ யாராவது வந்தாலும் உடனடியாக வெட்டிப் போட எனது அனுமதி இருக்கிறது." இதைத் திட்டமாகச் சொன்னான் தேவகுப்தன்.

படைத்தலைவன் ஒரு விநாடி சிந்தித்தான். பிறகு தலைவணங்கி, "உத்தரவு மகாராஜா" என்று கூறி அறையை விட்டுச் செல்லத் திரும்பினான்.

அவனை "படைத்தலைவரே!" என்ற சசாங்கன் குரல் தடுத்தது.

படைத்தலைவன் சட்டென்று திரும்பினான். "கௌட பிரபு! தங்கள் ஆணை என்ன?" என்று வினவவும் செய்தான்.

"ஆணை ஏதுமில்லை. மாளவ மன்னர் உத்தர விட்டதும் எதோ சிறிது சிந்தித்தாகத் தோன்றியது" என்றான் சசாங்கன்.

"சிந்தனைக்கு இடமிருந்தது. சிந்தித்தேன்" என்றான் படைத்தலைவன்.

"சிந்தனைக்கு இடமா படைத்தலைவரே? ஏதாவது சந்தேகமிருந்தால் இப்பொழுதே கேட்கலாம்" என்ற தேவகுப்தன் குரலில் சிறிது சினம் ஒலித்தது.

சினத்தைக் கவனிக்கவே செய்த படைத்தலைவன் சற்று சுருதியை மாற்றினான். "பிரபு! இந்த ஒரு சிறைப் பறவையை வேறு சிறைக்கு மாற்றவும் காவல் புரியவும் இத்தனை பாதுகாப்பும் ஏற்பாடுகளும் தேவையா என்று சிந்தித்தேன். சிறையிலிருப்பவரை மாற்று என்று மன்னர் உத்தரவிட்டால் தானாக மாற்றமாட்டோமா என்று நினைத்தேன்" என்றான் படைத்தலைவன்.

அதைக் கேட்ட தேவகுப்தன் முகத்தில் மகிழ்ச்சி படர்ந்தது. "படைத்தலைவரே! நீர் சிறை மாற்றப்போவது



சாதாரணப் பெண்ணல்ல. கன்யாகுப்ஜத்தின் மகாராணி. புஷ்பபூதி வம்சத்தின் பெண். ஹர்ஷவர்த்தனன் இவளைத் தேடி வரலாம். அவன் கைக்கு எட்டாத இடத்துக்கு இவளை அனுப்புகிறேன். ஆகையால் நீர் பெரிய அக்னியை எடுத்துச் செல்கிறீர், கவனமாகப் பணியைச் செய்து முடியும்" என்றான்.

படைத்தலைவன் வணங்கி வெளியே சென்றான். மாளவ அரண்மனையில் நடப்பது எதையும் அறியாத ராஜ்யஸ்ரீ கை கால்களைக்கூட அசைக்க முடியாமல் மாளவப் பெரும் சிறையின் தரையில் கிடந்தாள். அவள் நடமாட அவசியம் ஏற்படும்போது அவள் தளைகளைக் கழற்றிவிட தேவகுப்தன் நியமித்த இரண்டு பணிப்பெண்கள் மட்டுமே அவளுடன் சிறையில் இருந்தனர்.

இரவு நேரம் ஏற ஏற ராஜ்யஸ்ரீயின் பழைய நினைப்புகளும் அவள் மனத்தில் தலைகாட்டத் தொடங்கின. தானேசுவர அரண்மனையிலும் நந்தவனக் கொடி வீட்டிலும் தான் கிருகவர்மனுடன் அடைந்த இன்பங்களை நினைத்துப் பார்த்தாள். பிறகு கன்னோசி அரண்மனையில் கணவன் அரசாங்கக் கடமைகளையும் கைவிட்டுத் தன்னைப் பிரியாமல் கிடந்த நிலையையும் எண்ணிப் பார்த்தாள். 'கடமையை கணவன் செய்ய முடியாமல் என்னிடமே கட்டிப் போட்டேனே, அதன் விளைவா இந்த நிலை?' என்று எண்ணினாள். எண்ணி விம்மினாள், கண்ணீரையும் பெருக்கினாள். இப்படி உறக்கமே இல்லாமல் துன்பத்தில் சிக்கிக் கிடந்த ராஜ்யஸ்ரீ நள்ளிரவு தாண்டியதும் சிறைக் கதவு திறக்கப்படுவதை உணர்ந்து மெள்ள எழுந்து உட்கார்ந்தாள். பூட்டு சத்தத்துடன் திறக்கப்பட்டு சங்கிலிகளும் இழுக்கப்பட்டதும் உள்ளே நுழைந்த படைத் தலைவன் அங்கிருந்த பணிப்பெண்களை நோக்கி, "கன்னோசி மகாராணியின் சங்கிலித் தளைகளை நீக்குங்கள்" என்று உத்தரவிட்டான்.

அவர்கள் சங்கிலித் தளைகளை நீக்கியவுடன் எழுந்திருக்க முயன்ற ராஜ்யஸ்ரீ கால்கள் மரத்திருந்ததால் மீண்டும் தரையில் விழுந்தாள். படைத்தலைவன் பணிப்பெண்களை நோக்கி, "மகாராணியின் கால்களைச் சுரணை வரச் செய்யுங்கள்" என்று உத்தரவிட, பணிப் பெண்கள் ராஜ்யஸ்ரீயின் கால்களைப் பிடித்தும் தேய்த்தும் விட்டனர். ராஜ்யஸ்ரீ மெதுவாக எழுந்து நின்று, "வீரரே! தாங்கள் யார்? என்னை எதற்கு விடுதலை செய்தீர்கள்?" என்று வினவினாள்.

படைத்தலைவன், சிறையிலும் ராஜ்யஸ்ரீயின் ராஜ தோரணையைக் கவனித்தான். "விடுதலையல்ல மகாராணி! தங்களை வேறு சிறைக்கு மாற்ற உத்தரவு!" என்று படைத் தலைவன் உணர்ச்சியற்ற குரலில் பதில் சொன்னான்.

"எந்தச் சிறைக்கு?" என்று வினவினாள் ராஜ்யஸ்ரீ.

"சொல்ல உத்தரவில்லை" படைத்தலைவன் பரிதாபக் குரலில் பேசினான்.

"ஏன், இந்தச் சிறைக்கென்ன? இங்குள்ள கொடுமை போதாதென்று தேவகுப்தன் நினைக்கிறானா?" என்று ராஜ்யஸ்ரீ சினம் தொனித்த குரலில் வினவினாள்.

"மகாராணி! உத்தரவு கிடைக்கும் போது வீரனா யிருப்பவன் காரணம் கேட்பதில்லை. ரதம் சித்தமா யிருக்கிறது. புறப்படுங்கள்!" என்ற படைத்தலைவன் ராஜ்யஸ்ரீக்குத் தலைவணங்கினான்.

கடமையில் நேர்மையுள்ள அந்த வீரனைப் பார்த்த ராஜ்யஸ்ரீ அத்தனை துக்கத்திலும் சோகப் புன்முறுவல் கோட்டி, "இந்த மாளவ துஷ்டனுக்கும் சிறந்த பணிமக்கள் இருக்கிறார்கள்" என்று நினைத்துப் படைத்தலைவன் வழிகாட்டிச் செல்ல அவனைத் தொடர்ந்தாள்.

சிறை வாயிலில் சித்தமாய் நின்ற மூடு ரதத்தின் சீலையை நீக்கி ராஜ்யஸ்ரீயை ஏறச் செய்ததும் ரதத்திற்கு முன்னால் ஏறிக் கடிவாளங்களைக் கையிலேந்தித் தானே ரதத்தைச் செலுத்தலானான் படைத்தலைவன். அந்த ரதத்தைச் சுற்றி வாளேந்திய பத்து புரவி வீரர்கள் வந்தார்கள்.



சிறையிலிருந்து கிளம்பிய மூன்றாவது நாள் மாளவத்தின் தென் எல்லைச் சிறையை அடைந்தது ராஜ்யஸ்ரீயின் ரதம். வழியில் ஒவ்வோர் இரவிலும் தங்கச் சிறந்த ஏற்பாடுகளைப் படைத்தலைவன் செய்திருந்தான். ஆங்காங்கிருந்த அரண்மனை விடுதிகளில் ராஜ்யஸ்ரீயையும் தங்க வைத்து அவளை மிகுந்த மரியாதையுடன் நடத்தினான். நடமாட பூரண சுதந்திரமும் அளித்தான். இப்படி மூன்று நாட்கள் சுதந்திரத்தை ஓரளவு அனுபவித்த ராஜ்யஸ்ரீயை மூன்றாவது நாளிரவு தென் சிறையில் புகவிட்ட படைத்தலைவன் அவளை மீண்டும் வணங்கி, "அம்மணி! தங்களுடைய திருக்கால்களுக்கு மீண்டும் தளைகளைப் பூட்ட வேண்டிய கடமையைச் செய்ய வேண்டியவனாக இருக்கிறேன்" என்றான்.

"வீரனே! நீ கடமையைச் செய்கிறாய். அதுவும் கடமையைக் கண்ணியத்துடன் செய்கிறாய். உன் மாதிரி வீரர்கள் இன்னும் சிலர் இருந்தால், உன் கண்ணியத்தில் சிறிதளவாவது உன் மன்னனுக்கு இருந்தால், இத்தகைய சீர்கேடு மாளவத்துக்கு வந்திருக்காது" என்று அன்புடன் கூறினாள். அடுத்து அந்தச் சிறையில் பணிப்பெண்கள் தனக்குச் சங்கிலிகளைப் பூட்ட வந்தபோது கைகால்களைத் திருப்தியுடன் நீட்டவும் செய்தாள் ராஜ்யஸ்ரீ.

நாட்கள் ஓடின. அந்தச் சிறையில் எத்தனை நாள் இருந்திருப்பாளோ, மற்றவர்கள் அறியாவிட்டாலும் ராஜ்யஸ்ரீ அறிந்தே இருந்தாள். நாட்களை எண்ண, சிறையின் சுவரில் தனது காலைப் பிணைத்திருந்த சங்கிலியின் நீள முனை யொன்றைக் கையில் சிரமத்துடன் பிடித்துக் கோடுகளை இழுத்தாள். ஒவ்வொரு கோட்டை

இழுக்கும்போதும் ஹர்ஷன் மாளவத்தின் எல்லைகளை விழுங்கிக் கொண்டிருந்தான் என்பதை உணராத ராஜ்யஸ்ரீ தான் அந்தச் சிறைக்கு வந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டதை உணர்ந்து, இனி தனக்கு விமோசனமில்லை என்று தீர்மானித்து ஒரு நாளிரவு கணவனையும் ஹர்ஷனையும் நினைத்துக் கண்ணீர் விட்டாள். அந்த சோகத்திலேயும் உறங்கியும் விட்டாள்.

அவள் உறக்கத்தை ஒரு நீண்ட வாளின் நுனி கலைத்தது. கண் விழித்த ராஜ்யஸ்ரீ தன் எதிரே தலையிலிருந்து கால்வரை கறுப்புப் போர்வையால் தன்னை மறைத்துக்கொண்டிருந்த ஒருவன் நிற்பதைக் கண்டாள். "யார் நீ?" என்று கேட்கவும் செய்தாள்.

அவன் மெல்லப் பதில் சொன்னான். "எதையும் கேட்காதே" என்று. அவனே உட்கார்ந்து அவள் கைகால் தளைகளையும் நீக்கினான். தன்னைப் பின்பற்றி வரும்படி சைகையும் செய்து முன்னால் நடந்தான்.

அடுத்து நடந்தவை எல்லாமே விசித்திரமாயிருந்தது ராஜ்யஸ்ரீக்கு. சிறைக் காவலர் யாரும் வந்தவனையோ அவளையோ தடை செய்யவில்லை. சிறைக் காவலர் தலைவன் கேட்டதற்கு மட்டும் விடை சொன்னான் வந்தவன், "இவளை அழித்துவிடும்படி மகாராஜா உத்தரவு" என்று. அத்துடன் தனது கையிலிருந்த மோதிரத்தைக் காட்டினான்.

ராஜ்யஸ்ரீ புரிந்துகொண்டாள். தன்னைப் பகிரங்கமாக வெட்டினாலோ, வேறுவிதமாகக் கொலை செய்தாலோ மக்களின் எதிர்ப்போ மற்ற அரசர்களின் வெறுப்போ ஏற்படலாமென்பதால் தந்திரத்தால் தன்னை அழித்துவிட தீர்மானித்துவிட்டான் தேவகுப்தன் என்று தீமானித்தாள். ஆனால் தனக்கு வாழ்க்கையில் பிடிப்பு ஏதுமில்லததால் மரணம் வரவேற்கத்தக்கது என்ற உவகையும் அடைந்தாள்.



அந்த எண்ணத்துடன் வந்தவனைப் பின்பற்றிய ராஜ்யஸ்ரீ, நேரம் ஏற ஏற வியப்பையே அடைந்தாள். தன்னை ஒரு புரவியில் ஏற்றி, அவனும் ஒரு புரவியில் ஏறிக்கொண்டதும் அந்த மனிதன், எதிரே பெரிதாகக் கிடந்த விந்திய மலைச் சரிவை நோக்கிப் பயணம் செய்வதைக் கண்டாள். சரி, காட்டு முகப்பில் தன்னைத் தீர்த்துவிடுவான் என்று அவள் எண்ணினாள். காட்டு முகப்பில் அவன் இறங்கித் தனது குறுவாளை எடுத்துக்கொண்டான். "சரி முடித்துவிடு" என்றாள் ராஜ்யஸ்ரீ. பதிலுக்கு அவன் நகைத்தான். தனது குறுவாளையும் அவள் கையில் கொடுத்து, "ராஜ்யஸ்ரீ! இந்தப் புரவியில் தப்பிவிடு. உன்னைப் பாதுகாக்க இந்தக் குறுவாள் இருக்கட்டும்" என்றான்.

ராஜ்யஸ்ரீக்கு ஏதும் புரியவில்லை. "ஐயா, நீங்கள் யார்?" என்று வினவினாள்.

"உன் சகோதரன்" என்றான் அவன்.

"ஹர்ஷா!" என்று கூவினாள் ராஜ்யஸ்ரீ.

"ஹர்ஷனல்ல" என்றான் அவன். அத்துடன் தனது முகத்தை மூடியிருந்த போர்வையையும் நீக்கினான். விவரிக்க இயலாத வியப்புக்கு ராஜ்யஸ்ரீ இலக்கானாள். உணர்ச்சி மிகுதியால் ராஜ்யஸ்ரீ மூர்ச்சையுற்றாள். விந்திய மலைச் சாரல் மரங்கள் கிளைகளை ஆட்டி அவளுக்கு மெதுவாக விசிறின.

# 40

# ஆளப் பிறந்தவன்

சிறையிலிருந்து தன்னை மீட்டு வந்து தனது பாதுகாப்புக்காகத் தனது குறுவாளையும் கொடுத்தவன் மாதவகுப்தன் என்பதை அவன் போர்வையை நீக்கியதுமே கண்ட ராஜ்யஸ்ரீயின் சித்தத்தில் கடந்த கால சம்பவங்கள் நினைவுக்கு வந்ததாலும், அவை உணர்ச்சிகளை உந்தியதாலும் மூர்ச்சையடைந்துவிட்டாள். மாதவகுப்தன் தானேசுவர அரண்மனை நந்தவனத்தில் தான் தன்னந் தனியாக அங்கிருந்த மரத்தடியில் உட்கார்ந்திருந்த சமயத்தில் தன்னைச் சந்தித்ததையும் தனக்காக கிருகவர்மனுக்கு ஓலை எடுத்துத் தூது செல்லச் சம்மதித்ததையும் கொண்ட நிகழ்ச்சி பிரத்யக்ஷ நாடகம்போல் அவள் மனத்தில் எழுந்தது. தனது விவாகத்தை ஒத்திப்போடத் தனது தாய் செய்த ஏற்பாடுகளைத் தகர்க்க மாதவகுப்தன் முன்வந்ததும் அவன் தனக்கு மூன்றாவது சகோதரன் எனத் தான் உறவு கொண்டாடியதையும் எண்ணிய ராஜ்யஸ்ரீ அதற்குமேல் நினைவை அடியோடு இழந்தாள்.

அப்படி மூர்ச்சையுற்று நிலத்தில் சரிந்துவிட்ட ராஜ்யஸ்ரீயைச் சில விநாடிகள் உற்றுப் பார்த்துக்கொண்டு நின்ற மாதவகுப்தன் ஒரு முடிவுக்கு வந்து ராஜ்யஸ்ரீயைத் தனது புரவியின் முதுகில் தூக்கிப் போட்டுக் கடிவாளத்தைக்



கையில் பிடித்துக்கொண்டு புரவியை நிதானமாக நடத்திக்கொண்டு விந்திய மலையின் அடர்ந்த காட்டுக்குள் புகுந்துவிட்டான். அந்தக் காட்டை அவன் அணுஅணுவாக அறிந்திருந்தபடியால் குறுக்கு வழிகளில் சென்று மலை அடிவாரத்திலிருந்த ஓர் ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தான். பெண்களே நிரம்பியிருந்த அந்த ஆசிரமம் புரவியின் குளம்படிகளைக் கண்டதும் விழித்துக்கொள்ள, பலர் பந்தங்களை ஏந்தி மாதவகுப்தனை நோக்கி ஓடிவந்தனர். அவர்களில் மூதாட்டியாயிருந்தவள் மாதவகுப்தனைப் பார்த்ததும் வியப்பு நிரம்பிய விழிகளை விரித்து ஏதோ பேச முற்பட்டதும், ஏதும் பேச வேண்டாமெனக் கண்ணால் சைகை காட்டினான் மாதவகுப்தன். அதனால் மௌனமாகி விட்ட மூதாட்டி மற்ற பெண்களை நோக்கி, "அந்தப் புரவியின் மீதிருக்கும் பெண்ணை எடுத்துக் கொண்டு ஆசிரமத்துக்குச் செல்லுங்கள்" என்று உத்தரவிட மற்ற பெண்கள் அவளைத் தூக்கி ஆசிரமத் தலைவியின் குடிலுக்குக் கொண்டு சென்றார்கள்.

அவர்கள் சென்றதும் மாதவகுப்தன் ஆசிரமத் தலைவியை நோக்கி, "இவளை ஒரு மகாராணியைப் போல் நடத்துங்கள், வாழ்க்கையில் துன்பச் சுமையைப் பெரிதும் அனுபவித்தவள்" என்றான்.

"மாதவகுப்தா! உன்னைப்போல் உன் தமையனிருந்தால் இந்த மாளவ ராஜ்யம் எத்தனைசிறப்பாயிருந்திருக்கும்!" என்று கேட்டுப் பெருமூச்செறிந்தாள் ஆசிரமத் தலைவி.

"மாளவம் நாசமடைய வேண்டுமென்றால் இவள் கண்ணீர் தான் அதற்குக் காரணமாகும். இவளை நான் இங்கு கொண்டுவந்தது யாருக்கும் தெரிய வேண்டாம். இந்தப் பெண் கண்விழித்துக் கேட்டாலும் ஏதோ அந்தப் புரவி கொண்டு வந்ததாகக் கூறிவிடுங்கள்" என்று சொல்லி விடை பெற்றான் மாதவகுப்தன்.

மூர்ச்சையாயிருந்த ராஜ்யஸ்ரீ சுய உணர்வை அடைய இரண்டு நாட்கள் ஆயின. அல்லும் பகலும் அவளை ஆசிரமப் பெண்கள் கவனித்தார்கள். மூதாட்டி ஏதேதோ பச்சிலைகளைப் பிழிந்து அவள் வாயில் புகட்டினாள். மூன்றாவது நாள் காலையில் கண்விழித்த ராஜ்யஸ்ரீ மிரள மிரள விழித்தாள். "நான் எங்கிருக்கிறேன்?" என்றும் பலவீனமான குரலில் வினவினாள்.

---

"மாதா மாதங்கினியின் ஆசிரமத்திலிருக்கிறீர்கள்?:" என்றாள் சுற்றி உட்கார்ந்திருந்த பெண்களில் ஒருத்தி.

"நீங்கள்?" பெண்கள்மீது விழிகளைச் சுழலவிட்டாள் ராஜ்யஸ்ரீ.

"நாங்கள் ஆசிரமவாசிகள்" என்றாள் ஒரு பணிப்பெண்.

"இந்த ஆசிரமத்தை நடத்துவது?" தட்டுத்தடுமாறிக் கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

"சந்நியாசின மாதங்கினி தேவி" என்று பதில் சொன்னாள் மற்றுமொரு பெண்.

அந்தச் சமயத்தில் அங்கு மூதாட்டியே வந்து சேர்ந்தாள்.

"குழந்தாய்! உன் மயக்கம் எப்படி இருக்கிறது?" என்று மதுரமான குரலில் விசாரித்தாள் மூதாட்டி மாதங்கினி.

"எத்தனை நாள் மயக்கமாக இருந்தேன்?" -பேச முடியாததால் முணுமுணுத்தாள் ராஜ்யஸ்ரீ.

"இரண்டு நாட்களாக.." மூதாட்டி சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னாள்.

"என்னுடன் வந்தவர் எங்கே?"

"யாரும் வரவில்லையே. அதோ அந்தப் புரவி முதுகின் மீது படுத்தவண்ணம் வந்தாய். இங்கே வந்ததும் சரிந்து நிலத்தில் விழுந்தாய்" என்று கூறிய மூதாட்டி தனது



குடிலுக்கு வெளியே மேய்ந்துகொண்டிருந்த புரவியைக் காட்டினாள்.

மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை ராஜ்யஸ்ரீ. மூர்ச்சையடைந்த தன்னைப் புரவிமீது போட்டு அனுப்பியவன் மாதவகுப்தனாகத்தான் இருக்க வேண்டுமென்பதை சந்தேகமறப் புரிந்துகொண்டாள். அன்று முதல் அவள் பேசுவதை அறவே நிறுத்தினாள். நாட்கள் நகர்ந்தன. அவள் பேசவுமில்லை யாருடனும் கலந்துகொள்ளவுமில்லை. ஆசிரம வேலைகளை முடிந்தவரையில் செய்து வந்தாள். தான் நிர்க்கதியாகி விட்டதால் உலகத்தில் இருக்க வேண்டியது அவசியந்தானா என்று தன்னைத்தானே பலமுறை கேட்டுக் கொண்டாள். அவசியமில்லை என்ற முடிவுக்கு வந்ததால் அது சம்பந்தமாக ஆசிரமத் தலைவியிடம் பேசலானாள் மெதுவாக. ஆசிரமத் தலைவி பூசை செய்து முடித்த ஒரு சமயம், "அம்மா! என் மனதில் சில சந்தேகங்கள் இருக்கின்றன. கேட்கலாமா?" என்று கேட்டாள்.

"கேள் குழந்தாய்!" அன்புடன் வந்தது ஆசிரமத் தலைவியின் பதில்.

"கணவனை இழந்ததும் மனைவி செய்யவேண்டுவது என்ன?" இதைத் தலைகுனிந்த வண்ணம் கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

மாதங்கினி சொன்னாள். "சாஸ்திரம் பலவிதம். ஆனால் உடன்கட்டை ஏறும் பழக்கம் பரவலாக இருந்து வருகிறது" என்று. "அதைப்பற்றி இப்பொழுது என்னம்மா?" என்று பரிவுடன் கேட்கவும் செய்தாள்.

ராஜ்யஸ்ரீ தனது கண்களை மூதாட்டியின் கண்களுடன் உறவாட விட்டாள். "நான் கணவனை இழந்தவள்" என்று கூறினாள் ராஜ்யஸ்ரீ உறுதியான குரலில்.

மாதவகுப்தனிடமிருந்து அவள் யாரென்பதை உணர்ந்திருந்த மாதங்கினி, "அப்படியா!" என்று வியப்பும் துக்கமும் கலந்த குரலில் கேட்டாள்.

"ஆம் அம்மா! அத்தகைய அபாக்கியவதிதான் நான். அதுமட்டுமல்ல. கணவன் உடலும் எனக்குக் கிடைக்கவில்லை உடன்கட்டை ஏற. அப்படிப்பட்டவள், உயிர் வாழ இஷ்டப்படாதவள். என்ன செய்யலாம்?" என்று வினவினாள் ராஜ்யஸ்ரீ.

"அதையெல்லாம் நினைக்காதே அம்மா. செய்வது என்னவென்பதை குருவிடம் கேட்போம்" என்றாள் மாதங்கினி.

"யார் குரு?"

"திவாகரமித்ரர் என்ற மகான். அவர்தான் நிர்க்கதியானவர்களுக்கு வழிகாட்டுகிறார்" என்றாள் மாதங்கினி. அந்தப் பெயரைக் கேட்டதும் துடித்தெழுந்த ராஜ்யஸ்ரீ, "எனக்குச் சிதை மூட்டுங்கள். நான் தீக்குளிக்கத் தீர்மானித்துவிட்டேன்" என்றாள்.

அதற்குப் பிறகு யார் சொல்வதையும் அவள் கேட்கவில்லை. திவாகரமித்ரர் கிருகவர்மனின் நண்பர், அவரைப்பற்றி கிருகவர்மன் பலமுறை அவரிடம் சொல்லியிருக்கிறான். "அவர் ஆசிரமத்துக்கு ஒருநாள் அழைத்துப் போகிறேன்" என்றும் கூறியிருக்கிறான். "அருமையான ஆசிரமம் ராஜ்யஸ்ரீ, அங்கு உன் நடையைப் போலச் சாயலுள்ள மயில்கள் இருக்கின்றன. உன் குரலைப்போல் கூவும் குயில்கள் இருக்கின்றன. உன் விழிகளைப்போல் மருண்ட விழிகள் உள்ள மான்களும் இருக்கின்றன" என்றெல்லாம் கிருகவர்மன் வர்ணித்திருக்கிறான். அந்த ஆசிரமத் தலைவரைக் கணவனில்லாமல் பார்க்க இஷ்டப்படாத ராஜ்யஸ்ரீ, "மாதங்கினி தேவி! நான்



நாளை மாலையில் தீக்குளிக்கத் தீர்மானித்துவிட்டேன். ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்று அரச தோரணையில் கூறி பூஜை அறையிலிருந்து வெளியேறினாள். அன்று முதல் தீக்குளிப்பதற்கு முன்பு கடைப்பிடிக்க வேண்டிய ஆசாரங்களையும் கடைப்பிடித்தாள். கணவனில்லாததால் மஞ்சள் உடைக்குப் பதில் தீயைப் போன்ற சிவந்த ஆடையணிந்தாள்.

மறுநாள் மாலை சிதை சித்தமாகயிருந்தது. ஆசிரமப் பெண்கள் ராஜ்யஸ்ரீயைச் சூழ்ந்து நின்றார்கள். மாதங்கினி அவளைத் தோளில் சாத்திக்கொண்டு,"இது அவசியமா?" என்று வினவினாள்.

ராஜ்யஸ்ரீ புன்முறுவல் கொண்டு, "ஆம்" என்றாள்.

அந்திவானம் சிவந்தது. அதற்குப் போட்டி போடுவது போல் சிதையின் மூலைகளில் மூட்டிய தீ கொழுந்து விடலாயிற்று. மாதங்கினியை அடிபணிந்து சிதையில் ஏறினாள் ராஜ்யஸ்ரீ. ஆசிரமப் பெண்கள் அலறினார்கள். சிதையில் நின்றபடி "அழாதீர்கள்! என் கணவனைச் சந்திக்கப் போகிறேன். மகிழ்ச்சியடைய வேண்டிய காலம் இது" என்றாள் ராஜ்யஸ்ரீ.

சிதை மூலைகளில் பிடித்த தீ மெதுவாய்ப் பரவலாயிற்று. அவளைச் சூழ்ந்துகொள்ளவும் தீ நாக்குகள் கிளம்பின. அந்தச் சமயத்தில் திடீரென இரு புரவிகள் விரைந்து சிதையை அணுகின. பலமான இரு கரங்கள் ராஜ்யஸ்ரீயை அப்படியே தூக்கி வெளியே கொண்டு வந்தன. தன்னைத் தூக்கியவனைக் கண்ட ராஜ்யஸ்ரீ "அண்ணா!" என்று அலறினாள். அந்த அலறலை அந்தக் காடே எதிரொலி செய்தது.

உணர்ச்சிப் பெருக்கால் ஹர்ஷன் தன் தங்கையைத் தழுவி நின்றான். அவனுக்குப் பின்னால் நின்ற மாதவகுப்தன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

ராஜ்யஸ்ரீயின் தலையைக் கோதிவிட்ட ஹர்ஷன், "ராஜ்யஸ்ரீ! என்ன சாகசச் செயலில் ஈடுபட்டாய்!" என்று வினவினான் உதறல் தெரிந்த குரலில். "இதோ நிற்கும் மாளவ மன்னன் உதவியில்லாவிட்டால் உன்னை இழந்திருப் பேனே!" என்றும் சொன்னான்.

"அண்ணா! நான் இனி எதற்காக உயிர் வாழ வேண்டும்? என் இதயத்தை ஆட்சி செய்த அவரே போய்விட்டார்" என்று தேம்பினாள் ராஜ்யஸ்ரீ.

"ராஜ்யஸ்ரீ! பிறப்பவர் இறப்பது உலக நியதி. அவர்களுடன் இறப்பது முடியுமா? தவிர எனக்கு யார் இருக்கிறார்கள் உன்னை விட்டால்?" என்று தழுதழுத்த குரலில் கேட்டான் ஹர்ஷன்.

"அண்ணா உடன்கட்டை ஏறுவது ஸ்திரீ தர்மம். அது முடியவில்லை. இப்பொழுதாவது இந்த உடலை நீத்துவிடலாமே என்று பார்த்தேன்" என்றாள் ராஜ்யஸ்ரீ.

ஹர்ஷன் தனது தோள்மீது படுத்துக் கிடந்த சகோதரியின் முதுகைத் தடவிக் கொடுத்தான். "ராஜ்யஸ்ரீ! உடன்கட்டை ஏறுவது தர்மமாயிருக்கலாம். அநாதையான உடன்பிறப்பை உதறுவது கடமையல்லவே. நன்றாகச் சிந்தித்துப் பார். புஷ்பபூதி வம்சத்தில் நாம் இருவர்தான் மீதி. நீ அழிந்தால் நானும் அழிந்துவிடுவேன். நம்முடன் வம்சமும் அழிந்துவிடும். தேவகுப்தனை அடுத்து மாதவகுப்தனுக்கு மாளவ அரசை அளித்ததும் பயனற்றதாகிவிடும். உன் இன்னொரு சகோதரனும் உன்னை இழக்க விரும்பவில்லை. அதோ பார்" என்று தோளிலிருந்த அவள் முகத்தை எடுத்து மாதவகுப்தனைக் காட்டினான்.

மாதவகுப்தன் அவள் பாதங்களில் விழுந்தான். "தாயே! நீ மாளக்கூடாது" என்று கூறி ராஜ்யஸ்ரீயின் பாதங்களில் இரண்டு துளி கண்ணீரை உகுத்தான்.



"ஏன் மாளக்கூடாது?" என்று கண்ணீர்க்கிடையில் கேட்டாள் ராஜ்யஸ்ரீ.

மாதவகுப்தன் எழுந்து நின்றான். "நீ ஆளப்பிறந்தவள், மாளப் பிறந்தவள் அல்ல. பெரிய சாம்ராஜ்யம் உனக்காகக் காத்திருக்கிறது" என்றான்.

"என் சாம்ராஜ்யம் அவரோடு அழிந்துவிட்டதடா தம்பி" என்றாள் ராஜ்யஸ்ரீ. அவள் குரல் அடைத்துக் கொண்டது.

ஹர்ஷன் சொன்னான், "ராஜ்யஸ்ரீ! உன் எதிரிகள் முறியடிக்கப்பட்டார்கள். நானும் தானேசுவரம் திரும்பப் போவதில்லை. அங்கு நம்மை வரவேற்க யாருமில்லை. தந்தையில்லை. தாயில்லை. அண்ணனுமில்லை. கன்னோசியில் நாமிருவரும் சரிசமானமாக அரியணையில் உட்கார்ந்து அரசாளுவோம். இல்லையேல் சொல்லிவிடு. நானும் துறவறம் பூண்டு இங்கேயே தங்கிவிடுகிறேன். உன் கணவனின் பால்ய நண்பர் திவாகரமித்ரர் அதிக தூரத்தில்லை. அவர் ஆசிரமம் எனக்கு இடம் தரும்" என்றான். அந்தச் சமயத்தில் காட்டின் மறைவிலிருந்து வெளியே வந்த திவாகரமித்ரர், "உன்னை உயிருக்கு மேலாக நேசித்த உன் கணவனும் நீ மாள்வதை விரும்பமாட்டான். உன் உடல் தீயில் கருகுவதைச் சகிக்க மாட்டான் கிருகவர்மன். ஹர்ஷனுடன் செல். அவனுக்குத் துணையாயிரு" என்று சொன்னார்.

ராஜ்யஸ்ரீயும் ஹர்ஷனும் அக்கம்பக்கத்தில் கைகளைப் பிடித்துக்கொண்டு நின்று எட்ட எரிந்துகொண்டிருந்த தீயைக் கவனித்தார்கள். லேசாக எதிர்ப்புறமிருந்து அடித்த காற்றில் அக்னி ஜ்வாலை அவர்களிடமிருந்து எதிர்த் திக்கில் சாய்ந்தது.

திவாகமித்ரர் சொன்னார். "ராஜ்யஸ்ரீ! தீயும் விலகிச் செல்கிறது பார். உனக்கு இன்னும் உலகத்தில் கடமை இருக்கிறது. ஹர்ஷனைக் கைவிடாதே" என்றார்.

அவர் சொன்னதை ஆமோதிப்பதுபோல் ஹர்ஷன் கையை அவள் கை இறுகப் பற்றியது. அதுவரை எதற்கும் மனம் நெகிழாதவனும் பெரும் போர்களை நடத்தியவனும், பெரிய சாம்ராஜ்யத்தை நிறுவிய மகாவீரனுமான ஹர்ஷன் கண்களிலும் இரண்டு நீர்த்துளிகள் பளபளத்தன. அத்துடன் ஹர்ஷன் தங்கையின் கையைப் பற்றிய வண்ணம் தூரத்தே நின்றிருந்த ரதத்தை நோக்கி நடந்தான்.

## முற்றும்

**பி.கு :**

ஹர்ஷனுடன் சரிசமமாக அரியணையில் அமர்ந்து வடபாரதத்தை ராஜ்யஸ்ரீ ஆண்டாள் என்பது சரித்திரம்.